இது பண்ணுருட்டி என்னும் ரெயில் நிலையத்திலிருந்து இரண்டுமைல் தூரத்தில் கெடில நதியின் வடகரையிலிருக்கிறது. 'வீசுங்கெடில வடகரைத்தே யெந்தை வீரட்டமே' என்பது தேவாரம்.

சுவாமி—திரிபுராந்தகேசுவரர். **தேவியார்**—திரிபுரசுந்தரி.

அஷ்டவீரட்டத்தி லொன்று. திரிபுர தகனஞ் செய்த ஸ்தலம். திருநாவுக்கரசு நாயனாருடைய தமைக்கையாராகிய திலகவதியார் சிவபெருமானை வழிபட்ட திருப்பதி. அந்நாயனார் ஜைனமதத்தை விட்டுச் சைவராய், "கூற்றாயினவாறு விலக்ககிலீர்" என்னும் திருப்பதிகம் பாடி, சூலைநோய் தீர்ந்த இடம். காடவன் என்னும் சமணராஜன் சைவசமயம் மெய்யெனத் தெளிந்தபின், பாடலீ புத்திரத்திலிருந்த சமணருடைய பள்ளிகளையும், பாழிகளையும் இடித்து அவைகளின் கற்களைக் கொண்டு கட்டிய "குணதர வீச்சுரம்" என்னும் ஆலயமும் இந்தத் தலத்திலிருக்கிறது.

நம்பனே யெங்கள் கோவே நாதனே யாதிமூர்த்தி
பங்கனே பரம யோகி யென்றென்றே பரவி நானும்
செம்பொனே பவளக் குன்றே திகழ்மலர்ப் பாதங் காண்பான்
அன்பனே யலந்து போனே னதிகைவீ ரட்ட னீரே.

6. அம்பர் பெருந்திருக்கோயில் (மாயவரம்—அரந்தாங்கி மார்க்கம்)

இது பூந்தோட்டம் ரயில்நிலையத்திலிறங்கி இரண்டு மைல் சென்றால் இத்தலத்தை அடையலாம். சோமாசிமாற நாயனார் முத்தியடைந்த ஸ்தலம்.

சுவாமி—பிரம்மபுரி நாதர். **தேவியார்**—பூங்குழல் நாயகி.

சுவாமி சந்நிதி கட்டுமலைமேல் இருக்கிறது. சுவாமிக்குப் பின்புறத்திற் பார்வதி பரமேசுரருடைய உருவங்கள் இருக்கின்றன. இங்குள்ள ஆலயத்துக்குப் பெருந்திருக்கோயில் என்று பெயர். 'அம்பர் நகர்ப் பெருங்கோயி லமர்கின்றான்காண்' என்

பது தேவாரம். இத்தலத்திலுள்ள ஆலயம் கோச்செங்கட் சோழ ராஜாவாற் கட்டப்பட்டது. இவர் திருவானைக்காமுதல் அம்பர் பெருந்திருக் கோயிலீருகவுள்ள 64 மாடக்கோயில்கள் கட்டுவித்தார்.

'மாடக்கோயில்' என்பது கட்டுமலையையும் யானைகள் செல்லக் கூடாதிருக்குஞ் சந்நிதியையும் உடைய ஸ்தலம்.

அழகரை யடிகளை யம்பர் மேவிய
நிழறிகழ் சடைமுடி நீல கண்டரை
உமிழ்திரை யுலகினி லோது வீர்கொண்மின்
தமிழ்கெழு விரகினன் றமிழ்செய் மாலையே.

7. அம்பர்மாகாளம் (மாயவரம்-அரந்தாங்கிமார்க்கம்)

சுவாமி—காளகண்டேசுவரர். தேவியார்—பக்ஷநாயகி.

இது பூந்தோட்டம் ரயில் நிலையத்திலிரங்கி 1மைல் சென்ருல் இத்தலத்தை அடையலாம். இது கோயில் திருமாகாளம் என்று வழங்குகிறது. அம்பர் (6) என்னும் ஸ்தலத்துக்கு மேற்கே ¾-மைல் தூரத்திலுள்ளது. அம்பரிலிருந்து அம்பர்மாகாளம் வரும் வழியில் சோமாசிமாற நாயனுர் யாகம் செய்த மண்டபம் இருக்கிறது. யாக உற்சவம் வைகாசி மாதத்தில் நடந்து வருகிறது.

அம்பன், அம்பாசூரன் என்னும் இராக்ஷதர்களைக் கொன்ற பாவந்தீரக் காளி பூஜைசெய்த ஸ்தலம். பாண லிங்கம். உருவம் சிறிது. குவளை சாத்தியிருக்கிறது.

காளிகோயில் வெளிப்பிரகாரத்தில் தென்பக்கம் இருக்கிறது. மஹாகாள ருஷியும் பூஜை செய்த ஸ்தலம்.

அடையார் புரமூன்று மனலாய் விழவெய்து
மடையார் புனலம்பர் மாகாளம் மேய
விடையார் கொடியெந்தை வெள்ளைப் பிறைசூடும்
சடையான் கழலேத்தச் சாரா வினைதானே.

8. அரசிலி அல்லது ஒழுந்தியாப்பட்டு (விழுப்புரம் புதுச்சேரி மார்க்கம்)

புதுச்சேரி ரயில் நிலையத்திலிருந்து வடகிழக்கு 5 மைல் தூரஞ் சென்று இரும்பை மாகாளம் என்னும் ஸ்தலத்தைச் சேர்ந்து அங்கிருந்து வடமேற்கு 2 மைல் தூரஞ் சென்ருல் அரசிலியை அடையலாம்.

உ
சிவமயம்

தலம் 4. திருஅண்ணாமலை.

சிவகங்கை விநாயகர் சந்நிதி தரிசனமும், வல்லாளன் கோபுரமும்.



துவஜஸ்தம்ப மண்டபமும், அண்ணாமலை காட்சியும்.





(மேலே) தலம் 4. திருவண்ணமலை உள்ளிருந்து தெரியும் கிழக்கு கோபுர வாயில்.

தலம் 26. திருவாலங்காடு.

(நடுவில்) முன் பெரிய கோபுரம்.

(கீழே) கோயிலின் உட்புறத்தோற்றமும், சபாநாயகர் விமானமும்.



சுவாமி—அரசிலிநாதர். தேவியார்—பெரியநாயகி.

வாமதேவ முனிவர் பூசித்த ஸ்தலம்.

பாடல் வண்டறை கொன்றை பான்மதி பாய்புனற்கங்கை
கோடல் கூவிள மாலை மத்தமுஞ் செஞ்சடைக் குலாவி
வாடல் வெண்டலை மாலை மருவிட வல்லியந் தோன்மேல்
ஆடன் மாசுண மசைத்த வடிகளுக் கிடமர சிலியே.

9. அரதைப்பெரும்பாழி அல்லது **அரித்துவாரமங்கலம்**
(தஞ்சாவூர்-நாகூர் மார்க்கம்)

கோயில் வெண்ணி ரயில் நிலையத்திலிருந்து 4 மைல்.

சுவாமி—பாதாளேசுரர். தேவியார்—அலங்காரநாயகி.

சிவபெருமான் வராக அவதாரங் கொண்ட விஷ்ணுவினுடைய கொம்பை முறித்து தம்முடைய மார்பிலணிந்தருளிய ஸ்தலம்.

பைத்தபாம் போடரைக் கோவணம் பாய்புலி
மொய்த்தபேய் கண்முழக் கம்முது காட்டிடை
நித்தமா கந்நட மாடிவெண் ணீறணி
பித்தர்கோ யில்லர தைப்பெரும் பாழியே.

10. அரிசிற்கரைப்புத்தூர் **(மாயவரம்-தஞ்சாவூர் மார்க்கம்)**
கும்பகோணம் ரயில் நிலையத்திலிருந்து $4\frac{1}{2}$ மைல். வண்டி வசதி உண்டு.

சுவாமி—படிக்காசளித்த ஈசுரர் தேவியார்—அழகம்மையார்.

இஃது அழகார்புத்தூர் என வழங்கிவருகிறது. "அலைக்கும் புனல்சேர் அரிசிற் றென்கரை அழகார் திருப்புத்தூ ரழகனீரே" எனத் தேவாரத்திலேயே கூறப்பட்டிருக்கிறது.

உண்மையாநந்த முனிவர் பூசித்த ஸ்தலம். புகழ்த்துணை நாயனர் சிவபெருமானை பூசித்து முத்தியடைந்த க்ஷேத்திரம்.

இதே பாதையில் இன்னும் 1 மைல் தூரஞ்சென்ருல் திருநறையூர்ச் சித்தீச்சுரம் (161) என்னும் ஸ்தலமிருக்கிறது.

மின்னுஞ் சடைமே லிளவெண் டிங்கள் விளங்கவே
துன்னுங் கடனஞ் சிருடோய் கண்டர் தொன்மூதூர்
அன்னம் படியும் புனலா ரரிசி லலைகொண்டு
பொன்னும் மணியும் பொருதென் கரைமேற் புத்தூரே.

11. அவளிவணல்லூர் (தஞ்சாவூர்-நாகூர் மார்க்கம்)

கோவில்வெண்ணி ரயில் நிலையத்திலிருந்து 5 மைல் தூரம்.

சுவாமி—சாக்ஷிநாதர். *தேவியார்*—சௌந்தரவல்லி.

இது இங்கு தம்மைப் பூசிக்கும் ஆதிசைவரது மூத்த குமாரத்தியை விவாஹஞ்செய்து கொடுக்கப்பெற்றவர் தீர்த்த யாத்திரை போய்த் திரும்புங்காலையில் தம் மனைவி வைசூரியினால் உருமாறி நிறமாறிக் கண்ணிழந்திருப்பவும், அவளுக்கு இளையாளும் பின்னர் விவாஹஞ்செய்து வயதடைந்திருக்கவும் கண்டு பின்னவளே தம்மனையாளெனவும் முன்னவளைத் தம் மனைவியென்று ஏமாற்றுகின்றனரெனவும் வழக்கிட்டகாலையில் சுவாமி இடபாரூடராய்த் தோன்றி சர்க்ஷி பகன்று நீ விவாஹஞ்செய்த அவள் இவள் எனக் காட்டிய காரணத்தால் இப்பெயரெய்தியதென்ப. சுவாமியும் சாக்ஷிநாதர் ஆயினர். சுவாமி அப்பெண்ணைத் தீர்த்தத்தில் மூழ்கச்செய்து கண் சரீர வனப்பு முதலிய கொடுத்து அநுக்கிரஹித்தனர். மூலஸ்தானத்தில் இலிங்கமூர்த்தியின் பின்னர் இவ்வைதிஹ்யம் அமைக்கப்பெற்றிருக்கிறது. "தம்பரிசறிவார்" எனவும் சுவாமிக்கு ஒரு நாமமுண்டு. மேற்கே பூளைவனமும் (திருவிரும்பூளை) கிழக்கே பாடலீவனமாகிய இதுவும் இதன் கிழக்கே சமீவனமாகிய திருவரதைப் பெரும்பாழியும் அதன் கிழக்கே வில்வவனமாகிய திருக்கொள்ளம்பூதூரும் ஆக நான்கு தலங்களும் ஒன்றின் கிழக்கு ஒன்றாய் நேர்நேராக உள்ளனவென்பது காண்க. வராகமூர்த்தியும் காஸ்யபராதியோரும் பூசித்து வழிபட்டது, சோம சூர்ய அக்கினிப்பெயரால் மூன்று தீர்த்தங்கள் உண்டு,

ஊக்கினான் மலையை யோடி யுணர்விலா வரக்கன் றன்னைத்
தாக்கினான் விரலி னாலே தலைபத்துந் தகரவூன்றி
நோக்கினா னஞ்சத் தன்னை நோன்பிற வூன்று சொல்லி
ஆக்கினா ரமுத மாக வவளிவ ணல்லூ ராரே.

12. அவிநாசி (ஈரோடு-கோயமுத்தூர் மார்க்கம்)

சுவாமி—அவிநாசியப்பர். *தேவியார்*—பெருங்கருணைநாயகி.

திருப்பூர் ரயில் நிலையத்திலிருந்து 8 மைல்.

அவிநாசி என்றால் விநாசமில்லாத ஸ்தலம் என்று பொருள்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் முதலை வாயினின்றும் பிராமணப் பிள்ளையை மீட்டுக் கொடுத்தருளிய ஏரியும் இருக்கிறது. ஏரிக்கரையின்கீழ் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் கோவில் இருக்கிறது. அக்கோயிலில் முதலை வாயினின்றும் பிள்ளையை அழைப்பித்த பாவனை காட்டப்பட்டிருக்கிறது.

கோயிலில் ஒரு பழைய பாதிரி விருக்ஷத்தின்கீழ் ஒரு அம்மன் இருக்கிறது. அம்மன் அங்கே தவஞ்செய்ததாகச் சொல்லுகிறார்கள். 63 நாயன்மார்களுடைய விக்கிரகங்கள் செப்பில் செய்யப்பட்டிருக்கின்றன. நந்தி பெரிய உருவம்.

எற்றான் மறக்கே னெழுமைக்கு மெம்பெரு மானையே
உற்றாயென் றுன்னையே யுள்குகின்றே னுணர்ந் துள்ளத்தால்
புற்றா டரவா புக்கொளி யூரவி நாசியே
பற்றாக வாழ்வேன் பசுபதி யேபர மேட்டியே.

13. திருவழுந்தூர் அல்லது தேரழுந்தூர் (மாயவரம்-தஞ்சாவூர் மார்க்கம்)

குற்றாலம் ரயில் நிலையத்திலிருந்து 3 மைல்.

சுவாமி—வேதபுரீசர். *தேவியார்*—சௌந்தர்யாம்பிகை.

வேதங்களும், விண்ணவர்களும், அஷ்டதிக்கு பாலகர்களும் பூசித்த ஸ்தலம். அழுந்தை மறையவரின் பெருமையைத் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் "அழுந்தை மறையோர் வழிபாடு செய்மாமட மன்னினையே" என விஷேடித்துப் பதிகச் செய்யுள்தோறும் கூறியிருத்தல் காண்க.

தொழுமா றுவல்லார் துயர்தீ ரநினைந்
தெழுமா றுவல்லா ரிசைபா டவிம்மி
யழுமா றுவல்லா ரழுந்தை மறையோர்
வழிபா டுசெய்மா மடமன் னினையே.

14. அறையணிநல்லூர் (விழுப்புரம்-காட்பாடி மார்க்கம்)

சுவாமி—அறையணிநாதர். *தேவியார்*—அருள்நாயகி.

திருக்கோயிலூர் ரயில்நிலையத்திலிருந்து $\frac{1}{2}$ மைல் சென்றால் பெண்ணையாற்றின் வடகரையி லிருக்கிறது. கோயில் ஒரு சிறு குன்றின்மேற் கட்டப்பட்டிருக்கிறது. சந்நிதி மேற்குப் பார்த்தது. பெரிய கோபுரம். கோயிலுக்குக், கிழக்கிலும் தெற்கிலும் பாறையில் ஒரு பெருங்குளம் இருக்கிறது. பிரசண்டருஷி பூசித்த ஸ்தலம். இதற்கெதிரில், பெண்ணையாற்றில் தென்கரையில், திருக்கோவல் வீரட்டம் (124) இருக்கிறது.

பீடினாற்பெரி யோர்களும் பேதைமைகெடத் தீதிலா
வீடினாலுயர்ந் தார்களும் வீடிலாரின வெண்மதி
சூடினார்மறை பாடினார் சுடலைநீறணிந் தாரழல்
ஆடினாரறை யணிநல்லூ ரங்கையாற்றொழு வார்களே.

15. அனேகதங்காபதம் (லக்ஸார்-டேராடூன் E.I.R., O.R மார்க்கம்)

ரிஷீகேஷத்திலிருந்து 52 மைல்

சுவாமி—அருண்மன்னேசுரர். தேவியார்—மனோன்மணியம்மை.

இது வடநாட்டுத்தலங்கள் ஐந்தினில் ஒன்று. இ∴து அம்பிகை தவஞ்செய்த தலமாகிய கௌரிகுண்டம் என்று சொல்லப்படுகிறது.

சூரியனும் சந்திரனும் பூசித்த தலம்.

நீடன் மேவுநிமிர் புன்சடை மேலொர் நிலாமுனே
சூடன் மேவுமறை யின்முறை யாலொர் சுலாவழல்
ஆடன் மேவுமவர் மேயவ னேகதங் காவதம்
பாடன் மேவுமனத் தார்வினை பற்றறுப் பார்களே.

16 அன்பிலாலந்துறை (விருத்தாஜலம்-திருச்சி மார்க்கம்).

லால்குடி ரயில் நிலையத்திலிருந்து 5 மைல். இந்தத் தலம் கொள்ளிடத்துக்கு வடகரையில் உள்ளது.

சுவாமி—ஸத்யவாகீசர். தேவியார்—சௌந்தரநாயகி.

பிரமன் முதலியோரும், வாகீச முனிவரும் பூசித்த தலம்.

வானஞ் சேர்மதி சூடிய மைந்தனை
நீநெஞ் சேகெடு வாய்நினை கிற்கிலை
ஆனஞ் சாடியை யன்பிலா லந்துறைக்
கோனெஞ் செல்வனைக் கூறிடக் கிற்றியே.

17. திருஅன்னியூர் அல்லது **பொன்னூர்** (விழுப்புரம்-மாயவரம் மார்க்கம்)

திருநீடூர் ரெயில் நிலையத்திலிருந்து மேற்கே 3 மைல்

சுவாமி—ஆபத்சகாயர். தேவியார்—பெரியநாயகியம்மை.

வருணன் பூசித்த தலம்.

இதற்கு மேற்கே 2½மைல் தூரத்தில் திருவேள்விக்குடி (271) இருக்கிறது.

பாற லைத்த படுவெண் டலையினன்
நீற லைத்தசெம் மேனிய னேரிழை
கூற லைத்தமெய் கோளர வாட்டிய
ஆற லைத்த சடையன்னி யூரரே.

தலம் 28. திருஆலவாய் (மதுரை).



(மேலே) ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேஸ்வரர் கோபுரமும், பொற்றாமரைக் குளமும்.

(நடுவில்) மதுரை மீனாக்ஷி அம்மன் கோபுர வாயிலும், சுந்தரேஸ்வரர் ஆலய கீழ்க்கோபுரமும்.

(கீழே) மதுரை மாரியம்மன் தெப்பக் குளம். குளத்திற்கு நடுவில் தெரியும் சோலையும், மண்டபங்களும் காணுங்கள்.





தலம் 28.
திருஆலவாய்
(மதுரை)



மதுரை மீனுக்ஷியம்மன் மூன் கோபுர வாயில் அருமையான சிற்பங்களை கண்டு களியுங்கள்.

தலம் 105.
திருக்குற்ருலம்.

குறும்பலா ஈசுரர் ஆலயம். பின்புறமுள்ள மலைச்சாரலும், அடர்ந்து காணும் மரங்களும் நம்மை ஆனந்த மூட்டுகின்றன.

தலம் 31. திருவானைக்கா
(ஜம்புகேஸ்வரம்).

ஜம்புகேஸ்வரர் ஆலய கோபுரமும், திருக்குளமும். இத்தலத்தின் பெருமையே பெருமை திருக்குளத்தின் சுற்றுமண்டபங்களும், நீறிட்டான் மதில்களுமுள்ள பெரிய கோயில்.



18. ஆக்கூர் (மாயவரம்-தரங்கம்பாடி மார்க்கம்)
ஆக்கூர் ரயில்நிலையம்.

சுவாமி—சுயம்புநாதர். தேவியார்—வாணெடுங்கண்ணியம்மை.

இந்தத் தலத்திலுள்ள ஆலயத்துக்குத் தான்தோன்றிமாடம் என்று பெயர். அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவராகிய சிறப்புலி நாயனாருடைய தலம். இத்தலத்து வேளாளர்களைத் திருஞானசம்பந்த சுவாமிகள் சிறப்பித்துக் கூறியிருக்கின்றார்.

ஒரு ராஜா 1000 பிராமணர்களுக்கு சுவாமிகளின் கட்டளைப் படி சந்தர்ப்பணை செய்வித்ததாகவும், அவர்களில் சுவாமியும் ஒருவராய் வந்து புசித்ததாகவும், பின்பு அரசனுக்கு வெளிப்பட்ட தாகவும் சொல்லுகிறார்கள். ஒரு தனி சந்நிதியில் "ஆயிரத்தி லொருவ" ருடைய உற்சவ விக்கிரகம் இருக்கிறது.

ஆக்கூரிலிருந்து 3 மைல் கிழக்கே திருக்கடையூர் (63) இருக்கிறது.

அக்கிருந்த வாரமு மாடரவு மாமையும்
தொக்கிருந்த மார்பினான் றோலுடையான் வெண்ணீற்றான்
புக்கிருந்த தொல்கோயில் பொய்யிலா மெய்ந்நெறிக்கே
தக்கிருந்தா ராக்கூரிற் றான்றோன்றி மாடமே.

19. திருஆடானை (திருச்சி-இராமநாதபுரம் மார்க்கம்)
காரைக்குடி ரயில் நிலையத்திலிருந்து 38 மைல்.

பரமகுடி ரயில் நிலையத்திலிருந்து 32 மைல். இராமநாத புரத்திலிருந்தும் 32 மைல். அரந்தாங்கியிலிருந்து 30 மைல். காளையார்கோவிலுக்குக் கிழக்கு 21 மைல். எல்லாவற்றிற்கும் பஸ் வசதி உண்டு.

சுவாமி—ஆடானைநாதர். தேவியார்—சிநேகவல்லி.

கோயில் பெரிது. நீலரத்தினத்தாற் சிவலிங்கஞ் செய்து சூரியன் பூசித்த தலம். அதனாற் சுவாமிக்கு ஆதிரத்தினேசுரர் என்று பெயர். துர்வாசர் வந்தபோது பிருகு முனிவர் அவருக்கு மரியாதை செய்யாமையால் துர்வாசர் அவரை ஆட்டுத் தலையும், யானையின் உடலும் உள்ள உருவெய்தும்படிச் சபித்தார். அந்தச் சாபம் இந்தத் தலத்தில் நிவாரணமாகியது. சாபத்தோடு பிருகு முனிவர் வழிபட்டமையால் இந்தத் தலத்துக்கு ஆடானை என்றும், சுவாமிக்கு ஆடானைநாதர் (அஜகஜேஸ்வரர்) என்று பெயர்.

மாதொர் கூறுகந் தேற தேறிய, வாதியா னுறை யாடானைப்
போதி னாற்புனைந் தேத்து வார்தமை, வாதியா வினை மாயுமே.

20. திருஆப்பனூர் அல்லது **திருஆப்புடையார்கோவில்:**
(மதுரை ரயில் நிலையம்)

சுவாமி—ஆப்பனூரீசுரர். **தேவியார்**—அம்பிகையம்மை.

மதுரை ஸ்ரீ மீனுக்ஷியம்மை கோயிலுக்கு வடக்கே 1 மைல். மதுரைக்கும் இதற்கும் மத்தியில் வைகையாறு ஓடுகிறது.

சோழாந்தகன் என்னும் பாண்டிய ராஜன் நிமித்தம் பெருமான் ஓர் ஆப்பினிடத்தில் தோன்றிய தலம்.

முற்றுஞ் சடைமுடிமேன் முதிரா விளம்பிறையன்
ஒற்றைப் படவரவ மதுகொண் டரைக்கணிந்தான்
செற்றமில் சீரானைத் திருவாப்ப னூரானைப்
பற்று மனமுடையார் வினைபற் றறுப்பாரே

21. திருஆப்பாடி (மாயவரம்-தஞ்சாவூர் மார்க்கம்)
ஆடுதுரை ரயில் நிலயத்திலிருந்து $6\frac{1}{2}$ மைல். வண்டி வசதி உண்டு.

சுவாமி—பாலுகந்தீசுரர். **தேவியார்**—பெரியநாயகியம்மை.

மண்ணி ஆறு கோயிலுக்கு வடக்கே சமீபத்திலிருக்கிறது. க்ஷீரபுஷ்கரணி தீர்த்தம். சண்டேசுரர் பூஜைசெய்த தலம்.

இங்கிருந்த இடையன் ஒருவன் பாலைக் கறந்து வீட்டுக்குக் கொண்டுபோகும்போது வழியில் தினந்தோறும் கால் தடுக்கி பால் கவிழ்ந்துக்கொண்டு வருதலை யுணர்ந்து கையிலுள்ள கொடுவாளால் அவ்விடத்திலோச்ச, அங்கிருந்து இரத்தம் வெளிப்பட்டதைக் கண்டு மனமிரங்கிப் "பாலுகந்தநாதரோ" என்று தொழ சுவாமி அநுக்கிரகஞ் செய்த தலம்.

22. திருஆமாத்தூர் (விழுப்புரம் சந்திப்பு).

விழுப்புரம் ரெயில் நிலயத்திலிருந்து வடமேற்கே 3 மைல். இது பம்பை என்னும் ஒரு சிற்றாற்றின் வடகரையிலுள்ளது.

சுவாமி—அபிராமேசுரர். **தேவியார்**—அழகியநாயகி.

பசுக்களுக்குத் தாயகமான தலம். இராமர் பூசித்த தலம். இந்தத் தலத்துக்கு இரட்டைப் புலவர்கள் கலம்பகம் ஒன்று பாடியிருக்கிறார்கள்.

குன்ற வார்சிலை நாணராவரி வாளிகூரெரி காற்றின் மும்மதில்
வென்ற வாறெங்ஙனே விடையேறும் வேதியனே
தென்ற லார்மணி மாடமாளிகை சூளிகைக்கெதிர் நீண்ட பெண்
அன்றில் வந்தணையும் ஆமாத்தூ ரம்மானே.

[ஊனமேலி

23. திருவாரூர் (மாயவரம்-காரைக்குடி மார்க்கம்).

திருவாரூர் சந்திப்பு ரயில் நிலையத்திலிருந்து கோயில் 1 மைல்

சுவாமி—வன்மீகநாதர். *தேவியார்*—அல்லியங்கோதையம்மை.

"நிறைசெல்வத் திருவாரூர்" என்க. ஆலயத்துக்குத் திருமூலட்டானம் என்று பெயர். "பூங்கோயில்" என்றும் பெயர். "தேங்காவினூறுந் திருவாரூர்த் தொன்னகரிற், பூங்கோயிலுண் மகிழ்ந்து போகாதிருந்தாரே"—தேவாரம்.

சப்த விடங்கத் தலங்களுள் முதன்மையான தலம்.

திருவாரூர்த் தேரழுகு என்பார்கள். திருவாரூரில் கோயில், குளம், செங்கழுநீரோடை இவை ஒவ்வொன்றும் ஐயைந்து வேலி.

"அஞ்சனை வேலியாரூர் ஆதரித்திடங்கொண்டாரே' என்பது தேவாரம். இலக்குமி பூசித்த தலம். பிறக்க முத்தியளிக்கும் தலம். மநுநீதிகண்ட சோழருடைய பட்டணம். சிதம்பரத்தில் இருந்த தேவாரப் பதிகங்களைக் கண்டெடுத்து அவைகளை ஏழு திருமுறைகளாக்கி அவற்றையும், எட்டாந் திருமுறையாகிய திருவாசகம், திருக்கோவையாரையும், ஒன்பதாந் திருமுறையாகிய திருவிசைப்பா· திருப்பல்லாண்டையும், பத்தாந் திருமுறையாகிய திருமந்திரத்தையும், திரு ஆலவாயுடையார், காரைக்காலம்மையார், சேரமான்பெருமாள்நாயனர், நக்கீரர், பட்டினத்துப் பிள்ளையார், நம்பியாண்டார் நம்பி முதலிய பன்னிருவர் செய்த பிரபந்தங்களாகிய பதினேராந் திருமுறையையும், செப்பேடுசெய்து தியாகேசர் சந்நிதியில் ஏற்றுவித்த அபயகுலசேகர சோழ மகாராஜரும், அதற்குப்பின் சேக்கிழார் நாயனர் அருளிச்செய்த பெரிய புராணத்தைப் பன்னிரண்டாந் திருமுறையென வகுத்து அதனையும் செப்பேடு செய்து தியாகேசர் சந்நிதியில் ஏற்றுவித்த அநபாயசோழ மகாராஜரும், அரசாட்சி செய்த அரும்பதி. சுந்தரமூர்த்தி நாயனர் திருத்தொண்டத் தொகை அருளிச்செய்த 'தேவாசிரியன்' என்னும் ஆயிரக்கால் மண்டபத்தையும், அந்நாயனர் விருத்தாசலத்தில் மணிமுத்தா நதியில் இட்ட பொன்னைப் பரவையாருக்கு எடுத்துக்கொடுத்த 'கமலாலயம்' என்னுந் திருக்குளத்தையும் உடைய தலம். சுந்தரமூர்த்தி நாயனர் பொருட்டுத் தியாகேசர் நள்ளிருளிற் பரவையாரிடம் தூது சென்ற பழம்பதி. "அடியேற் கெளிவந்த தூதனை"—சுந்தரர் தேவாரம்.

காஞ்சீபுரத்தில் ஒரு கண்பார்வை பெற்ற சுந்தரமூர்த்தி நாயனர் "மீளா அடிமை" என்னும் திருப்பதிகம் பாடி மற்ருெரு கண்பார்வையும் பெற்ற தலம்.

சேரமான் பெருமாள் நாயனர் வந்து சுந்தரமூர்த்தி நாயனருடன் சிநேகமான தலம்.

விறன்மிண்ட நாயனர், நமிநந்தியடிகள் நாயனர், செருத்துணை நாயனர், தண்டியடிகள் நாயனர், கழற்சிங்க நாயனர் முதலிய அடியார்கள் முத்திபெற்ற தலம்.

ஆடகேச்சுரம் என்னும் ஆலயம் கோயிலுக்குள் இருக்கிறது. அதில் பிலம் ஒன்று கல்லினல் மூடப்பட்டிருக்கிறது. பிலம் புற்றிடங் கொண்டார் கோயிலுக்குத் தென்கீழ்த்திசையி லிருக்கிறது. நாகபிலம் என்று பெயர். அதில் எழுந்தருளியுள்ள ஆடகேசரைத் தரிசித்துப் பூமியிலுள்ளார் எல்லோரும் சுவர்க்கத்தை அடைந்தமையால் அவ்வுலகம் இடமில்லாமற் போனதை யுணர்ந்த இந்திரன் அரதனசிருங்கம் என்கிற மலையொன்ருல் மேற்கூறிய பிலத்தை அடைத்தனன் என்பது வரலாறு. இதனைத் திருவாரூர்ப் புராணத்தா லறியலாகும்.

கமலாம்பாள் சந்நிதி பிரத்தியேகமா யிருக்கிறது. நீலோற்பலாம்பாள் அல்லது அல்லியங்கோதை என்னும் அம்மை சந்நிதி வேறே இருக்கிறது. மேற்குக் கோபுரத்துக்கு எதிரில் மாற்றுரைத்த பிள்ளையார் ஆலயம் இருக்கிறது. தெற்கு கோபுரத்துக் கருகாமையில் பரவை நாச்சியார் கோயிலிருக்கிறது. மநுச்சோழன் மகன் தேர் ஏறிச் சென்றதும், பசுவின் கன்று இறந்ததும், தன் மகன் மீது சோழன் தேரை ஊர்ந்ததும் ஆன ஐதிஹ்யங்களைக் காட்டக் கல்லினல் தேர் முதலியவை செய்யப் பட்டிருக்கின்றன. இது கீழைக் கோபுரபாடசாலையினுள் இருக்கிறது. கமலாலய திருக்குளம் பெரியது. அதன் மத்தியில் நந்தவனங்களோடு கூடிய ஒரு சிறு கோயிலிருக்கிறது.

மீளா வடிமை யுமக்கே யாளாய்ப் பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போ லுள்ளே கனன்று முகத்தான் மிகவாடி
ஆளா யிருக்கு மடியார்தங்க ளல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவா ரூரீர் வாழ்ந்து போதீரே.

24. திருஆரூர் அரநெறி (மாயவரம்-காரைக்குடி மார்க்கம்)

சுவாமி—அகிலேசர். **தேவியார்**—அகிலேசுவரி.

இச்சந்நிதி திருவாரூர் திருமூலட்டானம் (23) என்னும் பெரிய ஆலயத்தின் இரண்டாம் பிரகாரத்தில் மேற்குப் பார்த்த சந்நிதி.

நமிநந்தியடிகள் தண்ணீரால் திருவிளக்கேற்றி வைத்த தலம். இதனைத் திருநாவுக்கரசு சுவாமிகள் தாமருளிச்செய்த

தலம் 38. இராமேச்சுரம்.



ரயிலடியிலிருந்து போரும்போது
தரிசனம் கொடுக்கும்
மேற்குக் கோபுரம்.



அக்னி தீர்த்தத்திற்கு எதிரிலிருக்கும்
கிழக் கோபுரம்.
வெளியில் தெரிவது வெள்ளி ரதம்.



ஸ்ரீ பர்வத வர்த்தினி சமேதராய் வீற்றிருக்கும்
ஸ்ரீ இராமநாதேசுரர் சந்நிதான விமான தரிசனம் கண்டு களியுங்கள்.
இவ்விமானத்திலுள்ள சிற்பங்கள் மிக அற்புதமானவை.



தலம் 47. எருக்கத்தம்புலியூர்

(மேலே) கோயில் வெளிப்புறத் தோற்றமும், திருக்குளமும்.

தலம் 52. ஓணகாந்தன்றளி.

(நடுவே) ஓணகாந்தேசுரர் ஆலய உட்புறத் தோற்றம். சுந்தரமூர்த்தி சுவாமிகள் "நெய்யும் பாலும்" என்னும் பதிகம் பாடிய தலம்.

தலம் 57. திருவொற்றியூர்.

கண்டு களியுங்கள்.

(கீழே) சுந்தரர் சங்கிலி நாச்சியாரை மணக்கும் பொருட்டு மகிழ மரத்தடியில் சபதம் செய்துகொடுத்த இடமும், கோயில் சுற்றுப் பிராகாரமும்



திருவாரூரரநெறித் திருத்தாண்டகத்தில் "நந்திபணி கொண் டருளு நம்பன்" எனவும், திருவாரூர்த் திருவிருத்தத்தில்,

ஆராய்ந் தடித்தொண்ட ராணிப்பொ ணாரு ரகத்தடக்கிப்
பாரூர் பரிப்பத்தம் பங்குனி யுத்திரம் பாற்படுத்தான்
நாரூர் நறுமலர் நாத னடித்தொண்ட னம்பிநந்தி
நீராற் றிருவிளக் கிட்டமை நீணா டறியுமன்றே.

எனவுஞ் சிறப்பித்துப் பாராட்டிக் கூறியுள்ளார்.

25. திருஆரூர்ப் பரவையுண்மண்டளி (மாயவரம்-காரைக் குடி மார்க்கம்)

சுவாமி—மண்டலேசுரர். *தேவியார்*—பஞ்சின்மெல்லடியாள்.

இவ்வாலயம் திருவாரூர்ப் பெரியகோயிலின் மஹாரத நிலைக்குச் சமீபத்தில் தென்மேற்கில் உள்ளது. இது துலா நாயனர் (தூவாய் நாயனர்) கோயில் என்று சொல்லப்படுகிறது. வருணன் ஒருகாலத்து இந்நகர்மீது அனுப்பிய கடலை உண்டமை பற்றி இத்தலத்துக்குப் பரவையுண் மண்டளி என்னும் பெய ரெய்தியது.

துருவாச மாமுனி பூசித்த தலம். சுவாமியின் உருவம் மிகவும் பளபளப்பாயிருக்கிறது. தீபாராதனை செய்யும்போது கண்ணாடியில் தெரிவதுபோல் ஒளி தெரிகிறது. துர்வாசருடைய உருவம் விநாயகர் பக்கத்திலிருக்கிறது.

26. திருஆலங்காடு (சென்னை-அரக்கோணம் மார்க்கம்)

திருஆலங்காடு ரெயில்நிலையத்திலிந்து வடகிழக்கே 3 மைல். கோயில் புதுப்பித்து ரொம்பவும் அழகாய் இருக்கிறது.

சுவாமி—தேவர்சிங்கப்பெருமான். *தேவி*—வண்டார்குழலியம்மை.

பஞ்ச சபைகளில் ஒன்ருகிய ரத்னசபையையுடைய தலம். சிவபெருமான் காளியுடன் நிருத்தஞ் செய்த தலம். 'ஆடினார் காளிகாண ஆலங்காட் டடிகளாரே' என்பது தேவாரம்.

காரைக்காலம்மையார் கைலாசகிரியிலிருந்து தலையாலே நடந்துவந்து சுவாமியைத் தரிசித்து அவருடைய குஞ்சிதபாதத் தின் கீழ்ச் சிவாநந்தத்தை யநுபவித்துக்கொண்டிருக்கும் தலம்.

ஒரு செட்டிப்பிள்ளைக்குத் தாங்கள் கொடுத்த வாக்கைக் காப்பாற்றும் நிமித்தம் தங்கள் உயிரைக்கொடுத்த வேளாள குலத்தார் வசிக்கும் பழையனூர் இதற்குக் கிழக்கே 1 மைல்

தூரத்திலிருக்கிறது. இங்கும் ஒரு சிவாலயம் உண்டு. இங்ஙனம் பழையனூரார் இயம்புமொழி காத்த கதை' யினைத் திருஞான சம்பந்தர் 'துஞ்சவருவாரும்' என்னும் திருவாலங்காட்டுப் பதிகத்திற் சிறப்பித் தோதியுள்ளார்.

முத்தா முத்தி தரவல்ல முகழ்மென் முலையா ளுமைபங்கா
சித்தா சித்தித் திறங்காட்டுஞ் சிவனே தேவர் சிங்கமே
பத்தா பத்தர் பலர்போற்றும் பரமா பழைய னூர்மேய
அத்தா ஆலங் காடாவுன் னடியார்க் கடியே னாவேனே.

27. திருஆலம்பொழில் (மாயவரம்-திருச்சி மார்க்கம்)

தஞ்சாவூர் ரயில் நிலையத்திலிருந்து வடக்கே 9 மைல். வழியில் திருக்கண்டியூர், திருப்பூந்துருத்தி ஆகிய தலங்கள், இருக்கின்றன. பஸ் வசதி யுண்டு.

சுவாமி—ஆத்மநாதேசுரர். **தேவியார்**—ஞானம்பிகை.

அஷ்ட வசுக்கள் பூசித்த தலம். மேற்குப் பார்த்த சன்னதி. கோயிலுக் கெதிரில் பெரிய தாமரைத் தடாகம் இருக்கிறது.

28. திருஆலவாய் என்பது மதுரை (மதுரை ரயில் சந்திப்பு நிலையம்)

சுவாமி—சொக்கநாதர். **தேவியார்**—மீனாக்ஷியம்மை.

பாண்டிய நாட்டின் இராசதானி. சோமசுந்தரக் கடவுள் 64 திருவிளையாடல்களைச் செய்தருளிய தலம். கபிலர், பரணர், நக்கீரர், முதலிய பொய்யடிமையில்லாத புலவர்களாகிய சங்கத்தார் இருந்த இடம். விபூதி, ருத்திராக்ஷம், சடைமுடி என்னும் மூன்றையுந் தரித்து மூர்த்தி நாயனார் அரசாட்சி செய்த க்ஷேத்திரம். அரிமர்த்தன பாண்டியராஜன் காலத்தில் மாணிக்க வாசக சுவாமிகள் 'தென்னவன் பிரமராயன்' என்னும் பெயருடன் மந்திரியாயிருந்த பட்டணம். திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் சமண சமயத்திற் பிரவேசித்திருந்த கூன் பாண்டியருடைய நோயை "மந்திரமாவது நீறு" என்னும் திருநீற்றுப் பதிகம் ஓதித் தீர்த்தருளியும், "போகமார்த்தப் பூண்முலையாள்" என்னுந் திருநள்ளாற்றுப் பதிகம் எழுதியிருந்த ஏட்டைக் கனலிலிட்டு வேகாம லெடுத்தும், "வாழ்க அந்தணர்" என்னும் திருப்பாசுரம் எழுதிய ஏட்டை வைகையாற்றிலேவிட்டு நீறை யெதிர்த்துக் கொண்டு செல்லும்படியாகச் செய்தும், பாண்டியனுடைய கூனை நீக்கி, அவரையும் சைவராக்கிப் பாண்டியநாடு முழுவதும் பரவியிருந்த சமண் இருளைப் போக்கிச் சைவ ஒளியைப் பரப்பிய திருப்பதி. மேற்சொன்ன கூன்பாண்டியன் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரால் திருநீறு சாத்தப்பட்டு, கூன்நிமிரப்பெற்று,

நெடுமாற நாயனார் என்னும் பெயருடன் அரசாண்ட நகரம். அவருடைய மனைவியாரும் சைவ சிரோன்மணியுமாகிய மங்கையர்க்கரசியாரும், மந்திரியாகிய குலச்சிறை நாயனாரும் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாராலே "மங்கையர்க்கரசி" என்னும் தேவாரத் திருப்பதிகத்திலே சிறப்பித்துப் பாடப்படும்படியான பெரும்பாக்கியத்தைப் பெற்று வாழ்ந்திருந்த ஊர். பஞ்ச சபைகளில் ஒன்றாகிய ரஜதசபையை (வெள்ளியம்பலத்தை) உடைய ஸ்தானம்.

மீனாக்ஷியம்மன் சந்நிதிக்கருகிலுள்ள கிளிமண்டபத்தில் ஸ்தல விநாயகராகிய சித்தி விநாயகர், சுப்பிரமணியர் சந்நிதி இருக்கின்றன. பொற்றாமரைக் குளம் கோயிலுக்குள் இருக்கிறது. கோவிலுக்கு கிழக்கே 1½ மைல் தூரத்தில் மாரியம்மன் தெப்பக் குளம் இருக்கிறது. பக்கத்தில் வைகையாறு ஓடுகிறது. திருமலை நாயக்கர் மஹால் கோயிலுக்கு 2 பர்லாங் தூரத்தில் இருக்கிறது. டவுன் பஸ் ஓடுகிறது. மதுரை நகரம் சென்னைக்கு இரண்டாவதாக சொல்லலாம். இவ்விடம் சித்திரைத் திருவிழா விசேஷம். மதுரையிலிருந்து பழமுதிர்சோலை என்கிற அழகர்மலை 12 மைல். பஸ் வசதி உண்டு.

மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை வரிவளைக் கைம்மடமானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி பணிசெய்து நாடொறும் பரவப்
பொங்கழ லுருவன் பூதநா யகனால் வேதமும் பொருள்களு மருளி
யங்கயற் கண்ணி தன்னொடு மமர்ந்த வாலவா யாவது மிதுவே.

29. திருஆவடுதுறை (மாயவரம்-தஞ்சாவூர்).

நாரசிங்கன்பேட்டை ரயில் நிலையத்திலிருந்து 1 மைல்.

சுவாமி—மாசிலாமணீசுரர். **தேவியார்**—ஒப்பிலாமுலையம்மை.

திருமூல நாயனார் வருஷத்திற்கு ஒவ்வொரு பாடலாக மூவாயிரந் திருப்பாடல்களால் 'திருமந்திரம்' என்னும் அருமையான நூலைச் செய்தருளிய தலம். கோயிலில் மேலண்டை பிரகாரத்தில் அவர் சந்நிதி இருக்கிறது.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தம்முடைய பிதா யாகஞ் செய்யும் பொருட்டு "இதுவோ வெமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையே, லதுவோ வுனதின்னரு ளாவடு துறையானே"—என வரும் பதிகம்பாடிப் பொற்கிழி பெற்றதலம். இவ்விஷயத்தை அப்பர் சுவாமிகள் திருவாடுதுறை- திருநேரிசைப் பதிகத்தில், "காயிரும் பொழில்கள் சூழ்ந்த கழுமல வூரர்க்கம்பொன், ஆயிரம் கொடுப்பர் போலும் ஆவடு துறைய னாரே" என்று



பாராட்டியுள்ளார். விநாயகருக்கு அழகிய விநாயகர் என்று பெயர்.

> இடரினுந் தளரினும் எனதுறுநோய்
> தொடரினும் உன்கழல் தொழுதெழுவேன்
> கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
> மிடறினில் அடக்கிய வேதியனே
> இதுவோஎமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
> அதுவோ வுனதின்னருள் ஆவடுதுறை யானே.

30. ஆவூர் (மாயவரம்—தஞ்சாவூர் மார்க்கம்)

கும்பகோணம் ரயில் நிலையத்திலிருந்து 8½ மைல். வழியில் 4-வது மைலில் பட்டீச்சுரம் என்னும் தலமிருக்கிறது.

சுவாமி—பசுபதீசுவரர். தேவியார்—மங்கள நாயகி.

இந்தத் தலத்திலுள்ள ஆலயத்துக்குப் பசுபதீச்சுரம் என்று பெயர். இது பசுக்கள் பூசித்த தலம்.

31. திருஆனைக்கா அல்லது ஜம்புகேஸ்வரம்.

திருச்சி ரயில்நிலையத்திலிருந்து 2½ மைல்.

சுவாமி—ஜம்புகேசுரர். தேவியார்—அகிலாண்ட நாயகி.

வெள்ளையானை வழிபட்ட தலமாதலால் இதற்கு 'ஆனைக்கா' (=யானைவனம்) என்னும், ஜம்புநாவல் (வெள்ளைநாவல்) மரத்தடியில் சுவாமி எழுந்தருளி யிருப்பதால் "ஜம்புகேஸ்வரம்" என்றும் பெயர் உண்டாயிற்று. "விறன்மிக்க கரிக் கருள்செய்தவனே," "வெண்ணாவலின் மேவிய எம்மழகா" என்பது தேவாரம். ஜம்பு நாவல் மரம் சுவாமிக்குச் சமீபத்தில் கர்ப்பக் கிரஹத்துக்கு வெளியிலிருக்கிறது.

பஞ்சபூத தலங்களில் ஒன்றாகிய அப்புஸ்தலம். கோயிலின் மூலட்டாதானத்தில் எப்போதும் ஜலம் நிரம்பிவிடுவதால் அதை அடிக்கடி இறைத்து விட்டுச் சுவாமிக்குப் பூஜை நடக்கிறது. "செழுநீர்த் திரளைச் சென்றாடினேனே" என்னும் தேவாரம் இங்கு உணரற்பாலது. முன்ஜென்மத்தில் சிலந்தியாயிருந்து சிவபெருமானை வழிபட்டு, அப்பெரும் புண்ணியத்தினால் அரசராய்ப் பிறந்த கோச்செங்கட் சோழ நாயனாராலே கட்டுவிக்கப்பட்ட ஆலயத்தையும், அவ்வாலயத்திலே சிவபெருமான் சித்தரா யெழுந்தருளிவந்து திருநீற்றையே கூலியாகக் கொடுத்துக் கட்டுவித்த காரணத்தால் 'நீறிட்டான்மதில்' என்று சொல்லப்படும் திருமதிலையும், கர்ப்பக் கிருஹத்தின் வாயில் மிகவும் சிறிதுமாகிய தலம்.



தலம் 23. திருவாரூர்

(மேலே) கோயிலின் வெளிப்பிரகாரமும், ஆராய்ச்சி மணிக்கூண்டும்

(நடுவில்) கோயில் பெரிய கோபுரம். இக் கோபுரத்தின் அமைப்பே ஒரு தனிச் சிறப்பு.

(கீழே) உட்பிரகாரத்தின் ஒரு தோற்றம்.





தலம் 160. திருநள்ளாறு.

ஆலய கிழக்கு கோபுர காட்சியின் வெளித் தோற்றம்.



ஆலய உட்புறத்தி லுள்ள சனிபகவான் சந்நிதி

தலம் 237. திருமுதுகுன்றம் (விருத்தாசலம்)

மணிமுத்தா நதியின் காக்ஷியும் கிழக்கு கோபுரமும். காசிக்குச் சமான மாகச் சொல்லப் படும் க்ஷேத்திரம்.

"ஆழித்தேர் மறுகிற்பயில் மெய்த்திரு நீறிட்டான்மதிள் சுற்றிய பொற்றிரு ஆனைக்கா" எனவரும் தேவாரமும், திருப்புகழும் உணரலாகும்.

சுவாமியை அம்மன் பூசித்த ஐதிஹயத்தைக்காட்ட, இப்போதும் உச்சிக்காலத்தில் அம்மன் கோயில் குருக்கள் அம்மனைப் போல வேஷம் போட்டுக்கொண்டு சுவாமி கோயிலுக்கு வந்து அர்ச்சனை செய்துவிட்டுப் போகிறார்.

உறையூர்ச் சோழ மகாராஜா பதக்கந் தரித்துக்கொண்டு காவிரியில் ஸ்நானஞ் செய்தபோது அது நதியில் விழுந்துவிட ராஜா 'சிவபெருமானே கொண்டருளும்' என்று பிரார்த்திக்க, அந்தப்பதக்கம் திருமஞ்சனக்குடத்திலே அகப்பட்டு அபிஷேகஞ் செய்யும்பொழுது அது சுவாமி மேல்விழ அதனை சுவாமி அணிந்து அரசருக்குத் திருவருள்புரிந்த ஸ்தலம். இதனைச் சுந்தரமூர்த்தி நாயனார் இத்தலத் தேவாரப்பதிகத்தில்,

"தார மாகிய பொன்னித் தண்டுறை யாடி விழுத்து
நீரி னின்றடி போற்றி நின்மல கொள்ளென வாங்கே
ஆரங் கொண்டவெம் மானைக் காவுடை யாதியை நாளு
மீர முள்ளவர் நாளு மெம்மையு மாளுடை யாரே."

என்று ஏழாம் பாசுரத்திற் சிறப்பித்துப் பாடியிருக்கிறார். "ஆர நீரோ டேந்தின ஞானைக் காவு சேர்மினே" என்பது ஸ்ரீசம்பந்த சுவாமிகள் தேவாரம். கோயில் மிகப் பெரியது. இலிங்கம் பள்ளத்தில் இருக்கிறது.

திருஆனைக்காவுக்கு மேற்கு 1 மைல் தூரத்தில் ஸ்ரீரங்கம் என்னும் விஷ்ணு க்ஷேத்திரம் இருக்கிறது.

32. இடும்பாவனம் (மாயவரம்-அரந்தாங்கி மார்க்கம்)

தில்லைவிளாகம் ரயில் நிலையத்திலிருந்து 4 மைல்.

சுவாமி—சற்குணநாதேசுரர். *தேவியார்*—மங்களநாயகி.

இடும்பன் பூசித்த தலம். விநாயகர் வெண்மைநிறமா யிருக்கிறார். வெள்ளை விநாயகர் என்று பெயர். வேதாரணியத்திலிருப்பதுபோல இங்கும் சுவாமிக்குப் பின்புறத்தில் பார்வதி பரமேசுரர் மணவாள கோலமா யிருக்கிறார்கள். கோயிலுக்குக் கிழக்கிற் சீத புஷ்கரணி என்ற திருக்குள மிருக்கிறது.

33. திருஇடைச்சுரம் அல்லது திருவடிசூலம் (சென்னை-செங்கல்பட்டு மார்க்கம்)

செங்கல்பட்டு ரயில்நிலையத்திலிருந்து திருப்போரூருக்குப் போகும் வழியில் 3 மைல் தூரம் போய் வடக்கே திரும்பி ½



மைல் போனால் இந்தத் தலமிருக்கிறது. பஸ் வசதி உண்டு.
சுவாமி—இடைச்சுரநாதர். தேவியார்—இமையமடக்கொடியம்மை.

சனற்குமாரமுனிவர் பூசித்த தலம்.

34. திருவிடைமருதூர் (மாயவரம்-தஞ்சாவூர் மார்க்கம்)

திருவிடைமருதூர் ரயில் நிலையத்திலிருந்து கோவில் 2 பர்லாங்.

சுவாமி—மருதப்பாசுரர். தேவியார்—பெருநலமாமுலைநாயகி.

காவிரியின் தென்கரையிலுள்ளது. திருவிடைமருதூர் காவிரித் துறையில் தைப்பூசத்தில் ஸ்நானஞ் செய்வது மிகவும் விசேஷம். திருநாவுக்கரசர் "பாசமொன்றிலராய்" என்னுந் திருக்குறுந்தொகையில் பூசஸ்தானத்தைச் சிறப்பித்துப் பாடியிருக்கிறார். வரகுண பாண்டியனுடைய பிரம்மஹத்தியைப் போக்கியருளிய தலம். அவர் அநேகம் தொண்டுசெய்து முத்திபெற்ற அரும்பதி. உருத்திரர், உமையம்மை, விநாயகர், முருகர், பிரம்மா, விஷ்ணு முதலியோர் பூசித்த தலம். மூகாம்பிகையம்மன் சந்நிதி பிரத்தியேகமாயிருக்கிறது. மௌனமாயிருந்து தபசு செய்தபடியால் இப்பெயருண்டாயிற்று. "திருவிடைமருதூர்த் தெரு வழகு", என வழங்குவார்கள். கோயில் பெரிது.

பறையி னோசையும் பாடலி னோசையும்
மறையி னோசையும் வைகும யலெலாம்
இறைவ னெங்கள்பி ரானிடை மருதினில்
உறையு மீசனை யுள்குமென் னுள்ளமே.

35. இடையாறு (விழுப்புரம்-திருச்சி காட்லயன் மார்க்கம்)

திருவெண்ணெய்நல்லூர் ரோட் ரயில் நிலையத்திலிருந்து 6 மைல். போகும் வழியில் 4-வது மைலில் திருவெண்ணெய்நல்லூர் என்னும் (266) தலம் இருக்கிறது. வண்டி வசதி உண்டு.
சுவாமி—இடையாற்றீசுரர். தேவியார்—சிற்றிடைநாயகி.

சுகர் பூசித்த தலம்.

36. இந்திரநீலபருப்பதம் (நார்க்கட்டியசன்ஜ் - பிக்னதொரி மார்க்கம்) B. N. W. Ry.

சுவாமி—நீலாசலநாதர். தேவியார்—நீலாம்பிகை.

இது வடநாட்டுத் தலங்கள் ஐந்தினில் ஒன்று. தேவேந்திரனால் பூசிக்கப்பட்ட தலம். இதனைத் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் இத்தலத்தேவாரத்தில் திருக்கடைக்காப்பிலே "இந்திரன் கைதொழு நீல பர்ப்பதம்" என்று கூறியிருக்கிறார்.

37. இராமனதீச்சுரம் (*மாயவரம்-அரந்தாங்கி மார்க்கம்*)

நன்னிலம் ரயில் நிலையத்திலிருந்து 5 மைல். வழியில் 4-வது மைலில் திருப்புகலூர் (203) க்ஷேத்திரம் இருக்கிறது. இராமனதீச்சுரத்திற்கு 1 மைல் தூரத்தில் திருச்செங்காட்டங்குடி (137) இருக்கிறது. வண்டி வசதி உண்டு.

சுவாமி—இராமநாதேசுரர். **தேவியார்**—கருவார்குழலியம்மை.

இராமர் பூசித்த ஸ்தலம்.

இராமனதீச்சுரத்துக்கு மேற்கே திருக்கண்ணபுரம் என்னும் விஷ்னுஸ்தலம் இருக்கிறது. இராமனதீச்சுரமும், கண்ணபுரமும் சேர்ந்திருக்கின்றன.

38. இராமேச்சுரம் (*சென்னை-தனுஷ்கோடி மார்க்கம்*)

ரயில் நிலையத்திலிருந்து கோயில் ½ மைல். எல்லா வசதிகளும் உண்டு. கடற்கரைக்கு சமீபத்தில்தான் கோயிலிருக்கிறது.

சுவாமி—இராமநாதேசுரர். **தேவியார்**—பர்வதவர்த்தினியம்மை.

இராவணன் முதலானவர்களை கொன்றதால் உண்டான பிரம்மஹத்தி தோஷம் நீங்கும்பொருட்டு ஸ்ரீராமர் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து பூசித்த ஸ்தலம். சகலபாவமும் தீரும்படியான க்ஷேத்திரம். கோவிலுக்குள் அநேக தீர்த்த கட்டங்கள் இருக்கின்றன.

கோயில் மிகவும் பெரியது. உலகிலேயே பெரிய பிரகாரம். பிரகாரங்கள் சொக்கட்டான்போல் வெகு அழகாக இருக்கின்றன. சேதுமாதவர் சந்நிதி பிரத்தியேகமாய் இருக்கிறது. அநுமார் கொண்டுவந்த லிங்கத்துக்குக் 'காசி விசுவநாதர்' என்று பெயர். இதற்குத்தான் முதலில் பூஜை நடக்கிறது. சீதை ஸ்தாபித்து இராமர் பூசித்த லிங்கம் 'இராமலிங்கம்'. கோயிலுக்கு 2 மைல் தூரத்தில் கந்தமானகிரி என்ற மணல் மேடு இருக்கிறது. அதில் ஸ்ரீராமர் பாதங்கள் போன்று பிரதிஷ்டை செய்து ஒரு சிறு கோயில் இருக்கின்றன.

இராமேச்சுரத்திலிருந்து 2 மணி நேரம் தெற்கே படகில் 18 மைல் தூரஞ் சென்றால் தநுஷ்கோடி என்று சொல்லப்படும் ஸ்நான கட்டம் இருக்கிறது. இராமேச்சுரத்திலிருந்து தனுஷ்கோடி வரை ரயிலும் போகிறது. மணற்பாங்கான ஊர்.

பாசமுங் கழிக்க கில்லா வரக்கரைப் படுத்துத் தக்க
வாசமிக் கலர்கள் கொண்டு மதியினன் மால்செய் கோயில்
நேசமிக் கன்பி னுலே நினைமினீர் நின்று நாளும்
தேசமிக் கானி ருந்த திருவி ராமேச் சுரமே.

39. திரு இரும்பூளை அல்லது **ஆலங்குடி** (தஞ்சாவூர்-நாகூர் மார்க்கம்)

நீடாமங்கலம் ரயில் நிலையத்திலிருந்து கும்பகோணம் போகும் வழியில் 4-வது மைலில் இருக்கிறது. பஸ் வசதி உண்டு.

சுவாமி—காசி ஆரணியேசுரர். **தேவியார்**—ஏலவார்குழலியம்மை.

விசுவாமித்திரர் முதலியோர் பூசித்த தலம்.

40. இரும்பைமாகாளம் அல்லது **இரும்பை** (விழுப்புரம்-புதுச்சேரி மார்க்கம்)

புதுச்சேரி ரயில் நிலையத்திலிருந்து 8 மைல்.

சுவாமி—மாகாளேசுரர். **தேவியார்**—குயில்மொழியம்மை.

மாகாளர் பூசித்த தலம்.

41. இலம்பையங்கோட்டூர் (சென்னை-அரக்கோணம் மார்க்கம்)

கடம்பத்தூர் ரயில் நிலையத்திலிருந்து 7 மைல். அங்கிருந்து திருவிற்கோலமாகிய (260) கூவம் தென்மேற்கில் $1\frac{1}{2}$ மைல் தூரத்திலுள்ளது.

சுவாமி—சந்திரசேகரேசுரர். **தேவியார்**—கோடேந்துமுலையம்மை.

அரம்பையர் பூசித்த ஸ்தலம். சுவாமிக்கு பிரதிதினம் ஒருகால பூஜை நடக்கிறது.

42. இன்னம்பூர் (மாயவரம்-தஞ்சாவூர் மார்க்கம்.)

சுவாமிமலை ரயில் நிலையத்திலிருந்து $3\frac{1}{2}$-மைல்.

சுவாமி—எழுத்தறிநாதேசுரர். **தேவியார்**—சௌந்தரநாயகி.

அகஸ்தியர் பூசித்து இலக்கணம் உபதேசிக்கப் பெற்ற ஸ்தலம். ஐராவதம் பூஜை செய்த தலம். கருப்பக்கிருஹத்தின் மேல் யானை போலச் செய்திருத்கிறது. கோயிலுக்கெதிரில் ஐராவத தீர்த்தம் இருக்கிறது.

என்னி லாரு மெனக்கினி யாரில்லை
என்னி லும்மினி யானொரு வன்னுளன்
என்னு ளேயுயிர்ப் பாய்ப்புறம் போந்துபுக்
கென்னு ளேநிற்கு மின்னம்ப ரீசனே.

43. திருஈங்கோய்மலை *அல்லது* **திருலிங்கநாதமலை** (திருச்சி-ஈரோடு மார்க்கம்.)

குளித்தலை ரயில் நிலையத்திலிருந்து 9-மைல். வழியில் திருக்கடம்பந்துறை (61) வருகிறது, பிறகு அகன்ற காவிரியைக் கடந்து சென்றால் அக்கரையில் திருஈங்கோய்மலை இருக்கிறது.

சுவாமி—மரகதாசலேசுரர். *தேவியார்*—மரகதவல்லியம்மை.

அகஸ்திய முனிவர் ஈ ரூபமாய்ச் சென்று சுவாமியைத் தரிசித்த ஸ்தலம். கோயில் சிறிய குன்றின்மேல் இருக்கிறது.

ஒரே தினத்தில் காலையில் கடம்பர் கோயிலையும் (61), மத்தியானத்தில் இரத்தினகிரியையும் (251), மாலையில் திருஈங்காய் மலையையும் தரிசித்தால் விசேஷ பலன் உண்டென்றும், கார்த்திகை சோமவாரத்தில் இந்தப்படி தரிசிப்பது அதிக விசேஷமென்றும் சொல்லப்படுகிறது.

44. திருஉசாத்தானம் *அல்லது* **கோயிலூர்** (மாயவரம்-அரந்தாங்கி மார்க்கம்.)

முத்துப்பேட்டை ரயில் நிலயத்திலிருந்து 2 மைல்.

சுவாமி—மந்திரபுரீசுவரர். *தேவியார்*—பெரியநாயகியம்மை.

கோயில் பெரிது. கோபுரம் உயரம். மதில்கள் கருங்கல் கட்டிடம். ஸ்ரீராமர், லக்ஷ்மணர், ஜாம்புவான், சுக்ரீவன், அநுமார் முதலியோர் பூசித்த தலம்.

இராமர் இலங்கைக்குப் போவதன்முன் இங்கு உபதேசம் பெற்றனர். அதனால்தான் சுவாமிக்கு 'மந்திரபுரீசுரர்' என்று பெயர். சுவாமி வெண்மை நிறம். சுயம்பு மூர்த்தி. காக்ஷி கொடுத்த நாதரும் இருக்கிறார். கோபுரவாசலில் அதிகாரநந்தி இருக்கிறார். இந்த இடம் முன் மாமரக் காடாக இருந்ததாம். தலத்துக்குச் 'சூதவனம்' என்றும் பெயர். விநாயகருக்குச் சூதவனப்பிள்ளையார் என்று பெயர்.

45. திருஊறல் *அல்லது* **தக்கோலம்** (செங்கல்பட்டு அரக்கோணம் மார்க்கம்)

தக்கோலம் ரயில் நிலயத்திலிருந்து 4 மைல். வண்டி வசதி உண்டு.

சுவாமி—உமாபதீசுரர். *தேவியார்*—உமையம்மை.

நந்திதேவரது வாயிலிருந்து தீர்த்தம் எப்போதும் கொட்டிக் கொண்டிருக்கும். ஆகையினால் இவ்வூருக்குத் திருவூறல் என்று பெயர். ஆனால் இப்போது தீர்த்தம் கொட்டுவதில்லை.

46. எதிர்கொள்பாடி அல்லது மேலைத்திருமணஞ்சேரி.

(மாயவரம்-கும்பகோணம் மார்க்கம்)

குற்றாலம் ரயில் நிலையத்திலிருந்து $2\frac{1}{2}$ மைல் வழியில் திருவேள்விக்குடி (271) தலம் இருக்கிறது. எதிர்கொள்பாடிக்குக் கிழக்கே $\frac{1}{4}$ மைல் தூரத்தில் கீழைத் திருமணஞ்சேரி என வழங்குந் திருமணஞ்சேரி (222) இருக்கிறது.

சுவாமி—ஐராவதேசுரர். தேவியார்—மலர்குழல்மாதம்மை.

ஐராவதம் பூசித்த தலம். வேள்விக்குடியில் திருமணஞ் செய்துகொண்ட இராசகுமாரன் மனைவியுடன் தன் நகர்செல்லும் போது, சிவபெருமான் அவனுடைய அம்மானைப்போல் இந்தத் தலத்திலிருந்து எதிர்கொண்டு அவனை அழைத்துக்கொண்டு போனதினாலே இதற்கு எதிர்கொள்பாடி என்னும் பெயர் உண்டாயிற்று.

47. திருஎருக்கத்தம்புலியூர் அல்லது ராஜேந்திரபட்டணம்.

(விழுப்புரம்-திருச்சி கார்ட் லயன் மார்க்கம்) விருத்தாசலம் சந்திப்பு ரயில் நிலையத்திலிருந்து 7 மைல்.

சுவாமி—நீலகண்டேசுரர். தேவியார்—நீலமலர்க்கண்ணம்மை.

கோயிலுக்குள் வெள்ளெருக்கஞ்செடி இருக்கிறது. திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிச்செய்த தேவாரத் திருப்பதிகங்களை யாழிலிட்டு வாசித்த திருநீலகண்டப்பெரும்பாண நாயனர் திருவவதாரஞ் செய்த தலம். இதற்குக் கிழக்கே 4 மைல் தூரத்தில் ஸ்ரீமுஷ்ணம் என்னும் பிரபலமான விஷ்ணு க்ஷேத்திர மிருக்கிறது.

48. திருஎறும்பியூர் அல்லது திருவெறும்பூர் (தஞ்சாவூர்-திருச்சி மார்க்கம்)

திருவெறும்பூர் ரயில் நிலையத்திலிருந்து கோயில் $\frac{1}{2}$ மைல்.

சுவாமி—எறும்பீசுரர். தேவியார்—நறுங்குழல்நாயகி.

தேவர்கள் எறும்பு ரூபம் எடுத்துவந்து பூசித்த தலம். கோயில் மலைமேலிருக்கிறது. மலை உயரமில்லை. லிங்கம் வடபுறமாய் சாய்ந்திருக்கிறது. பழைய அம்மன் சிறிது பின்னமுற்றதால் வெளியில் ஒருபுறத்திலிருக்கிறது. பிரம்மனும் நைமிச முனிவர்களும் பூசித்த தலம். "நான்முகனை அல்லல் தீர்க்கும் அருமருந்தை"-; நிமிர்ந்து முனிக் கணங்களேத்தும் சீரெறும்பியூர்"- என்பது தேவாரம்.

49. திருஏடகம் (திண்டுக்கல்-மதுரை மார்க்கம்)

சோழவந்தன் ரயில் நிலையத்திலிருந்து 2½ மைல்.

சுவாமி—ஏடகநாதேசுரர். *தேவியார்*—சுகந்தகுந்தளாம்பிகை.

கோயில் பெரிது. கோயிலுக்குப்பின் பக்கம் வைகையாறு ஓடுகிறது.

திருஞான சம்பந்தமூர்த்தி நாயனுர் சமணர்களுடன் வாது செய்தபோது "வாழ்க அந்தணர்" என்னும் திருப்பாசுரம் எழுதி விட்ட ஏடு வைகையாற்றின் நீரை யெதிர்த்துச்செல்ல, நாயனுர் "வன்னியுமத்தமும்" என்னும் திருப்பதிகம் பாடினவுடன் அவ்வேடு தனக்கருகாமையில் ஒதுங்கி நிற்கப் பெற்ற தலம்.

வன்னியும் மத்தமும் மதிபொதி சடையினன்
பொன்னியல் திருவடி புதுமல ரவைகொடு
மன்னிய மறையவர் வழிபட அடியவர்
இன்னிசை பாடலார் ஏடகத் தொருவனே.

50. திருவையாறு (மாயவரம்-திருச்சி மார்க்கம்)

தஞ்சாவூர் ரயில் நிலையத்திலிருந்து 8 மைல் பஸ் வசதி உண்டு.

சுவாமி—பஞ்சநதீசுரர். *தேவியார்*—அறம்வளர்த்தநாயகி.

சுவாமி திருநாவுக்கரசு நாயனுருக்குக் கைலாச தரிசனம் கொடுத்தருளிய ஸ்தலம். இந்த ஐதிஹ்யத்தைக்காட்டும் உற்சவம் ஆடி அமாவாசையில் நடக்கிறது. அங்ஙனம் தரிசனம் கொடுத்த மூர்த்தி தெற்கு பிரகாரத்தி லிருக்கிருர். அவருக்குத் தனி சந்நிதி. அப்பர் சுவாமிகளும் அங்கிருக்கிருர். அப்பர் சுவாமிகள் எழுந்துவந்ததாகச் சொல்லுங் குளம் கோயிலுக்கு வடமேற்கில் இருக்கிறது.

சப்தஸ்தானம் என்று வழங்கும் 7 தலங்களில் முதன்மை யானது. சுந்தரமூர்த்தி நாயனுருக்காகவும், சேரமான்பெருமாணுயனுருக்காகவும் சுவாமி காவிரியின் பெருக்கைத் தவிர்க்க நாயன்மாரிருவரும் அடியார் கூட்டத்துடன் ஆற்றைக் கடந்து சென்று தரிசனஞ் செய்த தலம். தலவிநாயகருக்கு ஆதிவிநாயகர் என்று பெயர். சுந்திரமூர்த்தி சுவாமிகள் காவேரிக்குத் தென்கரையிலிருந்து, ஆற்றில் மிகுந்த வெள்ளமாயிருந்ததால் "ஐயாறுடைய அடிகளோ" என்றழைத்தபொழுது, இவ்விநாயகர் 'ஓலம் ஓலம்' என்று சொன்னதாகச் சொல்லுகிருர்கள். இவ்விநாயகருக்குப் பக்கத்தில் ஆட்கொண்டார் சந்நிதி இருக்கிறது. ஒரு பிராமணப் பிள்ளையை இயமன் தொடர்ந்து வந்ததாயும், அப்

போது சுவாமி வெளிப்பட்டு இயமனை விலக்கி அப்பிள்ளையை ஆட்கொண்டதாயும், சோதி சொரூபமாய்த் தோன்றி சுவாமி ஆட்கொண்டபடியால் அவர் சந்நிதிக்கெதிரில் ஒரு சிறு குழி ஒன்று உண்டாக்கி அதிற் குங்கிலியம் போட்டுக்கொண்டு வருவதாயும் சொல்லுகிறார்கள். அநேகர் பிரார்த்தனை செய்துகொண்டு அதிற் குங்கிலியம் போடுகிறார்கள்.

அம்மையார் அறம்வளர்த்த நாயகியின் திருவுருவம் அதிக கெம்பீரமா யிருக்கிறது. இந்திரன், வாலி முதலியோர் பூசித்த தலம். 'எண்ணிலி தேவர்கள் இந்திரன் வழிபட',—'இந்திர னுணர்ந்துபணி எந்தையிடம்'–, 'வாலியார் வணங்கியேத்தும் திருவையாறமர்ந்ததேன்'–,என்பது தேவாரம்.

மாதர்ப் பிறைக்கண்ணி யானை மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவா ரவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடு படாமல் ஐயா றடைகின்ற போது
காதன் மடப்பிடி யோடுங் களிறு வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன்.

51. திருவொற்றியூர் (*மதராஸ்-பொன்னேரி மார்க்கம்*)

திருவொற்றியூர் ரயில் நிலையத்திலிருந்து ½ மைல்.

சுவாமி—மாணிக்கத்தியாகர். *தேவியார்*—வடிவுடையம்மை.

சென்னைக்கு வடக்கு 5 மைல். திருவிளக்குத்தொண்டு செய்துவந்த கலியநாயனாருடைய ஸ்தலம். சுந்தரமூர்த்தி நாயனார் சங்கிலிநாச்சியாரை மணம்புரிந்த ஸ்தலம். அவர் சங்கிலியாருக்கு மகிழமரத்தின்கீழ் பிரமாணஞ்செய்துகொடுத்த ஐதிஹ்யத்தை முன்னிட்டு 'மகிழடி உற்சவம்' மாசிமாதத்தில் பிரபலமாக நடக்கிறது. தியாகேசரது விசேஷ சந்நிதியையுடைய தலம். கோயில் பெரிது. கோயிலுக்குள் அநேக இலிங்கங்கள் இருக்கின்றன புற்றிடங் கொண்டார் சந்நிதிக்கு வடக்கே ஆதி லிங்கேஸ்வரர் ஆலயம் ரொம்பவும் அழகான வேலைப்பாடுடன் செய்திருக்கிறது. இவ்விலிங்கம் வெகு பளபளப்பாயிருக்கிறது. சுந்தரர், சங்கிலியார் இவர்களுடைய உற்சவ விக்கிரங்கள் மணக்கோலமாய் இருக்கின்றன. முற்றுந் துறந்தவராகிய பட்டினத்தடிகள் முத்தியடைந்த பட்டினத்தாருக்கும், அப்பர் சுவாமிகளுக்கும் தனி ஆலயங்கள் கோயிலுக்கு கிழக்கே 1 மைல் தூரத்தில் கடற்கரை அருகே இருக்கின்றன.

ஒற்றி யூரு மொளிமதி பாம்பினை
ஒற்றி யூருமப் பாம்பும் அதனையே
ஒற்றியூர வொருசடை;வைத்தவன்
ஒற்றி யூர்தொழ நம்வினை யோயுமே.

தலம் 88. சீர்காழி.



தரிசியுங்கள். தோணியப்பர் வீற்றிருக்கும் மாடக் கோயில். சம்பந்தர் அவதாரம் செய்த தலம்.



இதோ தெரியும் உச்சிக் கோபுரத்தை பிரம தீர்த்த கரையினின்று சுட்டிகாட்டி "தோடுடைய செவியன்" என்ற பதிகம் பாடியது. இங்கே தான் தெய்வத் தமிழ் பிறந்தது.



திருஞான சம்பந்தர் தனி ஆலயம் கோயில் உள் நுழைந்ததும் தமிழ் மணம் கமழ்கின்றது

தலம் 44. திருஉசாத்தானம் (கோயிலூர்).



சூதவனப் பிள்ளையார் ஆலயம்.
என்ன அருமையான தோற்றம்!



மந்த்ரபுரீசுரர் ஆலய உட்பிரகாரத் தோற்றம்.

தலம் 114. திருக்கொள்ளம்பூதூர்.



வில்வாரண்ய சுவாமி ஆலய முன் கோபுரம்.



வெட்டாற்றின் அக்கரையில் தெரியும் நம்பர் கோயில்.

52. திருஓணகாந்தன்தளி (செங்கல்பட்டு-அரக்கோணம் மார்க்கம்.)

காஞ்சீபுரம் ரயில் நிலையம்.

இவ்வாலயம் காஞ்சீபுரத்துக்கு மேற்கிலுள்ள சர்வதீர்த்தத்துக்கு வடக்கே 3 பர்லாங்கு தூரத்திலிருக்கிறது.

சுவாமி—ஓணகாந்தேசுரர். **தேவியார்**—காமாட்சியம்மை.

ஓணன், காந்தன் என்னும் இரண்டு அசுரர்கள் பூசித்த ஸ்தலம். சுந்தரமூர்த்தி நாயனர்

நெய்யும்பாலுந் தயிருங்கொண்டு நித்தம்பூசனை செய்யலுற்றார்
கையிலொன்றுங் காணமில்லைக் கழலடிதொழு துய்யினல்லால்
ஐவர்கொண்டிங் காட்டவாடி யாழ்குழிப்பட் டழுந்துவேனுக்
குய்யுமாறென் றருளிச்செய்யீ ரோணகாந்தன் றளியுளீரே.

என்னும் திருப்பதிகம் பாடித் துதித்துப் பொன் பெற்ற ஸ்தலம்.

53. திருவோத்தூர் (செங்கல்பட்டு-அரக்கோணம் மார்க்கம்)
காஞ்சீபுரம் ரயில் நிலையம்.

காஞ்சீபுரத்திற்குத் தென்மேற்கே 19 மைல். பஸ் வசதி உண்டு.

சுவாமி—வேதநாதேசுரர். **தேவியார்**—இளமுலைநாயகி.

கோயிலுக்கு மேற்புறத்திற் சேயாறு ஓடுகிறது. கோயில் பெரியது. கோபுரமும் பெரியது.

இஃது ஆண்பனை பெண்பனையான ஸ்தலம். இதனைக் "குரும்பை யாண்பனை யீன்குலை யோத்தூர்" என்னும் திருஞான சம்பந்த சுவாமிகள் தேவாரத்தின் திருக்கடைக்காப்பால் அறிக. கல்லினல் ஒரு பனைமரம் செய்திருக்கிறது. அது பாதி ஆணும் பாதி பெண்ணுமாக இருக்கிறது.

சிவபெருமான் வேதத்தின் பொருளை முனிவர்களுக்கும், தேவர்களுக்கும் அருளிச்செய்த ஸ்தலம். ஆதிகேசவப் பெருமாள் சந்நிதியும் உள்ளே இருக்கிறது.

பூத்தேர்ந் தாயன கொண்டுநின் பொன்னடி
யேத்தா தாரில்லை யெண்ணுங்கா
லோத்தூர் மேய வொளிமழு வாளங்கைக்
கூத்தீ ரும்ம குணங்களே.

54. ஓமாம்புலியூர் (விழுப்புரம் - மாயவரம் மார்க்கம்)

சிதம்பரம் ரயில் நிலையத்திலிருந்து 19 மைல். பஸ் வசதி உண்டு. வழியில் காட்டுமன்னார்குடி என்னும் ஊர் இருக்கிறது.

சுவாமி—துயர்தீர்த்தநாதர். தேவியார்—பூங்கொடிநாயகி.

புலிக்குப் பயந்து வில்வமரத்தி லேறிக்கொண்ட ஒரு வேடன் இரவு முழுதும் அவ்வில்வ இலைகளைப் பறித்துப் போட்டுக்கொண்டிருக்க, அவை மரத்தடியிலிருந்த சிவலிங்கத்தின் மேல்விழ, சிவபெருமான் மனமிரங்கி, காலையில் அவ்வேடனுக்குப் பிரத்தியக்ஷமாகி அவனுக்கு முத்தியளித்த ஸ்தலம்.

பூங்கொடி மடவா ளுமையொரு பாகம் புரிதரு சடைமுடி யடிகள்
வீங்குரு ணட்ட மாடுமெம் விகிர்தர் விருப்பொடு முறைவிடம் வினவில்
தேங்கமழ் பொழிலிற் செழுமலர் கோதிச் செறிதரு வண்டிசை பாடும்
ஓங்கிய புகழா ரோமமாம் புலியூ ருடையவர் வடதளி யதுவா.

55. திருக்கச்சி அநேகதங்காபதம் (செங்கல்பட்டு - அரக்கோணம் மார்க்கம்)

காஞ்சீபுரம் ரயில் நிலையம்.

சுவாமி—அநேகதங்காபதேசுரர். தேவியார்—காமாக்ஷியம்மை.

இவ்வாலயம் காஞ்சீபுரத்துக்கு வடமேற்கிலுள்ள புத்தேறித் தெருவுக்கு மேற்கே கழனிவெளியின் மத்தியிலிருக்கிறது.

கணபதியும், குபேரனும் பூசித்த ஸ்தலம்.

56. திருக்கச்சி ஏகம்பம் (செங்கல்பட்டு - அரக்கோணம் மார்க்கம்)

காஞ்சீபுரம் ரயில் நிலையம்.

சுவாமி—ஏகாம்பரநாதர். தேவியார்—காமாக்ஷியம்மை.

பஞ்சபூத ஸ்தலங்களிற் பிருதிவி ஸ்தலம். உமாதேவியார் சிவபெருமானைப் பூசித்து முப்பத்திரண்டறமும் வளர்த்தருளிய ஸ்தலம்.

சிதம்பரம் முதலிய சிவஸ்தலங்கள்தோறுஞ் சென்று திருப்பணி செய்து ஸ்தலத்துக்கு ஒவ்வொரு திருவெண்பா வீதம் க்ஷேத்திர வெண்பா பாடின ஐயடிகள் காடவர்கோனாயனார் அரசாட்சி செய்திருந்த ஸ்தலம், திருவொற்றியூர் எல்லையைக் கடந்தவுடன் இரண்டு கண்ணின் பார்வையையும் இழந்த சுந்தரமூர்த்தி நாயனார் இடதுகண் பார்வையைப் பெற்ற ஸ்தலம். திருக்குறிப்புத்தொண்ட நாயனார், சாக்கிய நாயனார் இவர்கள் முத்தியடைந்த

ஸ்தலம். முத்தி ஸ்தலங்கள் ஏழினுள் ஒன்ருகிய விசேஷ ஸ்தலம். உள் பிரகாரத்தில் சுவாமிக்குப் பின்புறம் மாமரத்தின் கீழ் கம்பா நதி ஐதீகம் இருக்கிறது. இங்கே பங்குனி மாதத்தில் நடைபெறும் உற்சவத்தில் வெள்ளி ரதம், மாவடிசேர்வை முதலியன விசேஷம். காமாட்சியம்மை ஆலயமாகிய காமகோட்டம், முருகக்கடவுளின் ஆலயமாகிய குமரகோட்டம் முதலிய அநேக ஆலயங்கள் நிறைந்த மகா க்ஷேத்திரம். ''நகரேஷுகாஞ்சி'' என்று நகரங்களுள் விசேஷமாகக் கொண்டாடப்படும் பெருமையையுடைய ஸ்தலம். கோயில் பெரிது. கோபுரம் பெரிது. ஸ்ரீ ஏகாம்பர நாதர் ஆலயத்திலிருந்து 3 மைல் தூரத்தில் சின்ன காஞ்சீபுரத்தில் பிரசித்திபெற்ற ஸ்ரீ வரதராஜப்பெருமாள் ஆலயம் இருக்கிறது. கோயில் பெரிது. இங்கே வைகாசி மாதத்தில் நடக்கும் பிரம்மோற்சவத்தில் கருடசேவை விசேஷம்.

கோவிலுக்கு மேற்கே சர்வதீர்த்த குளம் பெயர் பெற்றது. சற்றுத் தூரத்தில் கழனி வெளியில் கைலாசநாதர் ஆலயம் பார்க்கத்தகுந்தவை.

இவ்வூரிலிருக்கும் எல்லா சிவாலயங்களிலும் தனியாக அம்மன் சந்நிதி கிடையாது.

கருவுற்ற நாள்முத லாகவுன் பாதமே காண்பதற்கு
உருகிற்றெ னுள்ளமு நானுங் கிடந்தலந் தெய்த்தொழிந்தேன்
திருவொற்றி யூரா திருவால வாயா திருவாரூரா
ஒருபற்றி லாமையுங் கண்டிரங் காய்கச்சி யேகம்பனே.

57. கச்சிநெறிக்காரைக்காடு. (*செங்கல்பட்டு-அரக்கோணம் மார்க்கம்) காஞ்சீபுரம் ரயில் நிலையம்.*

சுவாமி—காரைத்திருநாதேசுரர். *தேவியார்*—காமாட்சியம்மை.

இது திருக்காலீசுரன் கோயில் என்று வழங்கி வருகிறது. இவ்வாலயம் காஞ்சீபுரத்தில் ஹாட்சன்பேட்டை தேரடிக்குக் கிழக்கில் ஒரு மைல் தூரத்திற் கொல்லைவெளியிலிருக்கிறது. வேப்பங்குளம் என்று சொல்லப்படும் பிரபலமான நல்ல தண்ணீர் குளம் இந்த ஆலயத்திற்குத் தெற்கே சற்று தூரத்திலிருக்கிறது. காரைவனம் இருத்தலினுற் காரைக்காடு என்று பெயர் வழங்கியது.

இந்திரன் பூசித்த ஸ்தலம்.

58. திருக்கச்சிமேற்றளி. *என்பது* **திருமேற்றளி.** (*செங்கல்பட்டு-அரக்கோணம் மார்க்கம்) காஞ்சீபுரம் ரயில்நிலையம்.*

சுவாமி—திருமேற்றளிநாதர். *தேவியார்*—காமாட்சியம்மை.

இந்த ஆலயம் காஞ்சீபுரம் பிள்ளைப்பாளையத்தி லிருக்கிறது.

மகாவிஷ்ணு சிவசொரூபம் பெறும்பொருட்டுத் தவம்செய்துக் கொண்டிருந்து திருஞானசம்பந்த சுவாமிகளின் திருப்பதிகத் தாற் சிவசொரூபம் பெற்ற ஸ்தலம், இரண்டு சந்நிதி; ஒன்று ஓதவுருகீசுரர் சந்நிதி, அவர் விஷ்ணு ரூபமாயிருந்தவர், திரு ஞானசம்பந்தர் பாடலால் சிவலிங்க ரூபமாய் உருகினர். மற் றென்று திருமேற்றளியீசுரர் சந்நிதி. வீதி முனையில் சம்பந்தர் கோயிலிருக்கிறது. அதற்கருகில் அவர் பாடலை உற்றுக்கேட்ட முத்தீசுரர் கோயிலிருக்கிறது,

59. திருக்கச்சூர்-ஆலக்கோயில். (மதராஸ் - செங்கல்பட்டு மார்க்கம்.)

சிங்கபெருமாள் கோயில் ரெயில் நிலையத்திலிருந்து $1\frac{1}{2}$ மைல்.

சுவாமி—விருந்திட்டஈசுரர். **தேவியார்**—உமையம்மை.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் பசியால் வருந்தி யிருந்தபோது சுவாமி பிராமண வீடுகள்தோறும் சென்று அன்னம் யாசித்துக் கொண்டுவந்து அவருக்கு அளித்தருளிய ஸ்தலம். லிங்கம் மிக வும் சிறியது. அமுதம் திரண்டு வருவதற்காக விஷ்ணு கூர்மமா யிருந்து பூசித்த ஸ்தலம். கூர்ம தீர்த்தம். தியாகராஜர் சந்நிதி யிருக்கிறது, அமுர்த தியாகர்.

இவ்வாலயத்திற்கு மேற்கே கால் மைல் தூரத்தில் மலையடி வாரத்தில் மருந்தீசர் ஆலயமிருக்கிறது. தேவியார் இருணீக்கித் தாயார். அருகிலிருக்கும் மலைக்கு ஔஷதகிரி என்று பெயர். மரு ந்தீசர் ஆலயம் புதுப்பித்து நன்றாக இருக்கிறது.

முதுவாயோரி கதறமுதுகாட் டெரிகொண்டாடல் முயல்வானே
மதுவார்கொன்றைப் புதுவீசூடும் மலையான்மகடன் மணவாளா
கதுவாய்த் தலையிற் பலிநீகொள்ளக் கண்டாலடியார் கவல்ாரே
அதுவேயாமா றிதுவோகச்சூ ராலக்கோயி லம்மானே.

60. கஞ்சனூர் (மாயவரம்-தஞ்சாவூர் மார்க்கம்)

நாரசிங்கன் பேட்டை ரயில் நிலையத்திலிருந்து 2 மைல்

சுவாமி—அக்கினீசுரர். **தேவியார்**—கற்பகநாயகி.

நடராஜர், சிவகாமியம்மை இவர்கள் உருவங்கள் சிலாரூப மாக இருக்கின்றன. ஹரதத்த சிவாச்சாரியார் சைவத்தின் மேன் மையை ஸ்தாபித்த தலம். அவருக்குத் தனி ஆலயம் இருக்கிறது. அவர் பூசித்த லிங்கமும் பக்கத்திலிருக்கிறது. அக்கினியும், பிரமனும் பூசித்த தலம். கோயிலுக்குக் கிழக்கில் அக்கினி தீர்த்தம் இருக்கிறது.

61. திருக்கடம்பந்துறை அல்லது **கடம்பர்கோயில்** (திருச்சி-ஈரோடு மார்க்கம்)

குழித்தலை ரயில் நிலையத்திலிருந்து 2 மைல்.

சுவாமி—கடம்பவனநாதேசுரர். தேவி—முற்றிலாமுலையம்மை.

கண்ணுவ முனிவருக்கும் தேவர்களுக்கும், சிவபெருமான் கடம்ப விருக்ஷத்தின் கீழ் தோன்றி காக்ஷிகொடுத்த தலம்.

நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்க டம்பைத்தி ருக்கரக் கோயிலான்
தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்துகி டப்பதே.

62. திருக்கடம்பூர் (விழுப்புரம்-மாயவரம் மார்க்கம்)

சிதம்பரம் ரயில் நிலையத்திலிருந்து 15 மைல். வண்டி வசதி உண்டு.

சுவாமி—அமிர்தகடேசுரர். தேவியார்—சோதிமின்னம்மை.

ஆலயத்துக்குக் "கரக்கோயில்" என்று பெயர். தேவேந்திரன் பூசித்து அமிர்தம் உண்டாகும்படி வரம்பெற்ற தலம்.

63. திருக்கடவூர் அல்லது **திருக்கடையூர்** (மாயவரம்-தரங்கம்பாடி மார்க்கம்.)

திருக்கடையூர் ரயில்நிலையத்திலிருந்து ½ மைல்.

சுவாமி—அமிர்தகடேசுரர். தேவியார்—அபிராமியம்மை.

கோயில் பெரிது. மேற்குப் பார்த்த சந்நிதி. அஷ்ட வீரட்டத்தில் ஒன்று. மார்க்கண்டருக்காக இயமனை உதைத் தருளிய தலம். காலசம்ஹார மூர்த்திக்குப் பிரத்தியேக சந்நிதி இருக்கிறது. குங்குலியக்கலய நாயனாரும், காரிநாயனாரும் வசித் திருந்து முத்திபெற்ற தலம். பிள்ளையார்-கள்ளவாரணப் பிள்ளை யார். கோயிலில் வில்வாராணியேசுரர், பாபஹரேசரர், புண்ணிய வர்த்தனேசுரர் என்னும் லிங்கங்கள் உள்ளன.

பொடியார் மேனியனே புரிநூலொரு பால்பொருந்த
வடியார் மூவிலைவேல் வளர்கங்கையின் மங்கையொடும்
கடியார் கொன்றையனே கடவூர்தனுள் வீரட்டத்தெம்
அடிகே ளென்னமுதே யெனக்கார்துணை நீயலதே.

64. திருக்கடவூர்மயானம் (மாயவரம்-தரங்கம்பாடி மார்க் கம்)

திருக்கடையூர் ரயில் நிலையத்திலிருந்து 1½ மைல்.

சுவாமி—பிரமபுரீசுரர். தேவியார்—மலர்க்குழல்மின்னம்மை.

திருமெய்ஞ்ஞானம் என வழங்குகிறது. திருக்கடையூருக் குக் (63) கிழக்கு 1 மைல் தூரம். மணல்வழி. இந்தத் தலத்



துக்குத் தெற்கு ½ மைல் தூரத்தில் ஒரு கிணறு இருக்கிறது. அது மிகவும் விசேஷமானது. அதிலிருந்துதான் திருக்கடையூர் அமிர்தகடேசுரருக்குப் பிரதிதினமும் திருமஞ்சனம் கொண்டு போகப்படுகிறது. பங்குனிமீ சுக்கிலபக்ஷம், அசுவினி. நக்ஷத்திரத்தில் இவ்விடத்தில் ஸ்நானஞ் செய்வது பிரபலமாயிருக்கிறது. மற்றக்காலத்தில், மேற்சொன்ன திருமஞ்சனம் தவிர வேறெதற்கும் இந்த ஜலத்தை உபயோகிப்பதில்லை. சிவபெருமான் பிரமதேவரை நீருக்கி அவரை மறுபடியும் உயிர்ப்பித்து, அவருக்குச் சிருஷ்டித் தொழிலைக் கொடுத்தருளிய தலம்.

65. கடிக்குளம் அல்லது கற்பகனூர்கோயில் (மாயவரம்-அரந்தாங்கி மார்க்கம்)

தில்லைவிளாகம் ரயில் நிலையத்திலிருந்து 4 மைல்.

சுவாமி—கற்பகேசுரர். **தேவியார்**—சௌந்தரநாயகி.

கோயில் பெரியது. கற்பகப் பிள்ளையார் சிவபெருமானைப் பூசித்து மாம்பழம் பெற்ற தலம். கோயிலுக்கு வெளியில் தென் பக்கத்தில் மேலண்டைக் கோடியில் கற்பகப் பிள்ளையார் இருக்கிறார். கோயிலுக்கு வடகீழ்ப் பக்கத்தில் விநாயக தீர்த்தம் இருக்கிறது.

தனமலிபுகழ் தயங்குபூந் தராயவர் மன்னனற் சம்பந்தன்
மனமலிபுகழ் வண்டமிழ்மாலை கண்மாலதாய் மகிழ்வோடும்
கனமலிகட லோதம்வந் துலவிய கடிக்குளத் தமர்வானை
இனமலிந் திசைபாட வல்லார்கள்போ யிறைவனோ டுறைவாரே.

66. திருக்கடுவாய்க்கரைப்புத்தூர் அல்லது ஆண்டாங்கோயில் (மாயவரம்-தஞ்சாவூர் மார்க்கம்)

கும்பகோணம் ரயில் நிலையத்திலிருந்து 6 மைல். வண்டி வசதி உண்டு.

சுவாமி—சொர்ணபுரீசுரர். **தேவியார்**—சிவாம்பிகை.

காசிபருஷி முதலியோர் பூசித்த தலம்.

67. திருக்கடைமுடி அல்லது கீழூர் (மாயவரம்-தரங்கம்பாடி மார்க்கம்)

செம்பொன்னார்கோயில் ரயில் நிலையத்திலிருந்து 3 மைல்.

சுவாமி—கடைமுடிநாதேசுரர். **தேவியார்**—அபிராமியம்மை.

பிரமன் பூசித்த தலம்.

அருத்தனை யறவனை யமுதனைநீர்
விருத்தனைப் பாலனை வினைவுதிரேல்
ஒருத்தனை யல்லதிங் குலகமேத்துங்
கருத்தவன் வளநகர் கடைமுடியே.

68. திருக்கண்டியூர் (மாயவரம்-தஞ்சாவூர் மார்க்கம்)

தஞ்சாவூர் ரயில் நிலையத்திலிருந்து திருவையாற்றுக்குப் போகும் வழியில் 6 மைல். திருவையாறு (50) இதற்கப்பால் 2 மைல் தூரத்திலிருக்கிறது. பஸ் வசதி உண்டு.

சுவாமி—வீரட்டானேசுரர். *தேவியார்*—மங்களநாயகி.

திருக்கண்டியூர் அஷ்ட வீரட்டங்களில் ஒன்று. பிரமாவின் சிரஸைக் கொய்த தலம்.

ஸப்த ஸ்தான க்ஷேத்திரங்களில் ஐந்தாவது தலம்.

சதானந்தர் பூசித்த தலம். அவருடைய திருவுருவமும், பிரமா, சரஸ்வதி இவர்கள் திருவுருவங்களும் கோயிலுள் இருக்கின்றன.

பண்டங் கறுத்ததோர் கையுடை யான்படைத் தான்றலையை
உண்டங் கறுத்தது மூமொடு நாடவை தானறியும்
கண்டங் கறுத்த மிடறுடை யான்கண்டி யூரிருந்த
தொண்டர் பிரானைக்கண் டீரண்ட வாணர் தொழுகின்றதே.

69. திருக்கண்ணார்கோயில் அல்லது **குறுமாணக்குடி.**
(விழுப்புரம்-மாயவரம் மார்க்கம்)

வைத்தீச்சுரன்கோயில் ரயில் நிலையத்திலிருந்து $1\frac{1}{2}$ மைல்.

சுவாமி-கண்ணாயிரேசுரர். *தேவியார்*-முருகுவளர்கோதையம்மை.

தேவேந்திரன் சாபம் நீங்கப்பெற்று ஆயிரம் கண் பெற்ற தலம்.

70. ஸ்ரீகயிலாயம் அல்லது **நொடித்தான்மலை** (லக்ஸார்-டேராடூன் E. I. R. & O. R. Section)

ரிஷிகேசத்திலிருந்து சுமார் 230 மைல்.

சுவாமி—கயிலாயநாதர். *தேவியார்*—பார்வதியம்மை.

நொடித்தான்மலை என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடியிருப்பது இதுவே. "விண்ணுலகத்தவர்கள் விரும்ப வெள்ளை யானையின்மேல் என்னுடல் காட்டுவித்தான் நொடித் தான்மலை உத்தமனே"-என்பது தேவாரம். அப்பர் சுவாமிகளுக்கும் இந்தத் தல தரிசனத்தை திருவையாற்றில்தான் பரமசிவன் கொடுத்தருளினார்.

பொடிகொளுருவர் புலியினதளர் புரிநூ றிகழ்மார்பில்
கடிகொள்கொன்றை கலந்தநீற்றர் கறைசேர் கண்டத்தார்
இடியகுரலா லிரியமடங்க லொடுங்கு முழைச்சாரல்
கடியவிடைமேற் கொடியொன்றுடையார் கயிலை மலையாரே.

71. கரவீரம் அல்லது **கரையபுரம்** (தஞ்சாவூர்-நாகூர் மார்க்கம்)

குழிக்கரை ரயில் நிலையத்திலிருந்து $3\frac{3}{4}$ மைல்.

சுவாமி—கரவீரேசுரர். தேவியார்—பிரத்தியக்ஷமின்னம்மை.

இது கரம் (கழுதை) பூசித்த காரணத்தால் கரயபுரம் என்று வழங்குகிறது. கௌதமரிஷி பூசித்த தலம்.

72. திருக்கருகாவூர் அல்லது **திருக்களாவூர்** (மாயவரம்-தஞ்சாவூர் மார்க்கம்)

ஐயம்பேட்டை, பாபநாசம் இந்த இரண்டு ரயில் நிலையங்களில் எங்கு இறங்கினுலும் கோயில் 4 மைலில் இருக்கிறது. வெட்டாறு என்னும் நதியின் தென்கரையிலிருக்கிறது.

சுவாமி—முல்லைவனேசுரர். தேவியார்—கரும்பனையாளம்மை.

கோபுரம் சிறிது. விநாயகர்-கற்பகவிநாயகர். சுப்பிரமணியசுவாமி உருவம் ஆறுமுகத்துடன். மிகவும் அழகாயிருக்கிறது. தேவியார், ஆதரவற்ற ஒருத்திக்கு மருத்துவம் பார்த்து அவள் கருவைக் காத்தபடியால் திருக்கருகாவூர் என்னும் பெயர் வந்தது. தேவியாருக்கும் இக்காரணத்தால் 'கர்ப்பரக்ஷிகி' என்று பெயர் உண்டாயிற்று. தேவியார் சந்நிதி பிரத்தியேக மாயிருக்கிறது. மணல் லிங்கம். காஞ்சீபுரத்து லிங்கத்தைப் பார்க்கிலும் உயரமுள்ளது. சந்திரன் பூசித்த தலம்.

73. திருக்கருக்குடி அல்லது **மருதாந்தநல்லூர்** (மாயவரம்-தஞ்சாவூர் மார்க்கம்)

கும்பகோணம் ரயில் நிலையத்திலிருந்து $2\frac{1}{2}$ மைல். வழியில் திருக்கலயநல்லூர் [77] இருக்கிறது.

சுவாமி—சற்குணலிங்கேசுரர். தேவி—சர்வாலங்க்ருத அம்மையார்.

பிரமன் பூசித்த தலம். சற்குணன் என்னும் அரசன் பூசித்த தலம், இராமர் பூசித்ததாகச் சொல்லுகிறார்கள். கோயில் சிறிது. மணல் லிங்கம். சுவாமி உருவமும் அம்மன் உருவமும் சிறியன. ஒரு செட்டி, தன் தாயென்றறியாது புணர்ந்த தோஷம் இந்தத் தலத்தில் நீங்கிற்றும். அவன் உருவம் தேவி சந்நிதிக்கெதிரில் இருக்கிறது.

சாக்கியர் சமண்படு கையர் பொய்ம் மொழி
யாக்கிய வுரைகொளே லருந்தி ருந்நமக்
காக்கிய வரனுறை யணிக ருக்குடிப்
பூக்கமழ் கோயிலே புடைபட் டுய்ம்மினே.

தலம் 89. திருக்காளத்தி.





(மேலே) வெளிப்பிரகாரத்தி லுள்ள மூலஸ்தான கோபுர வாயில். ஒருபக்கம் மலையடிவாரம். இக் கோயிலில் மூன்று பக்கங் கள்தான் வெளிப்பிர காரம்.

(நடுவில்) மலைமேலிருந்து தெரியும் பெரிய கோபுர மும், சுவர்ணமுகி நதியின் காட்சியும்.

தலம் 179. திருநெல்வேலி.

அம்மன் சந்நிதிக்கு முன் உள்ள பெரிய கோபுரமும், தேர் நிலையமும். தாம்பிர சபையையுடைய தலம்.

தலம் 229. திருமறைக்காடு (வேதாரணியம்).





(மேலே) சுவாமி கோபுர வாயிலும், மணிகர்ணிகா தீர்த்தமும்.

(நடுவில்) அம்மன் சந்நிதி கோபுர தரிசனம். இங்கு அம்மன் சந்நிதி விசேஷம்.

(கீழே) ஆடி அமாவாசையில் மணிகர்ணிகா தீர்த்தத்தில் ஸ்நான காட்சி. வேதங்கள் பூசித்த ஸ்தலமல்லவா !

74. கருப்பறியலூர் (தலைஞாயிறு) (விழுப்புரம்-மாயவரம் மார்க்கம்)

வைத்தீசுரன்கோயில் [207] ரயில் நிலையத்திலிருந்து 5 மைல். திருப்புன்கூர் (211) போகும் வழியில் 2 மைலில் இருக்கிறது.

சுவாமி—குற்றம்பொறுத்தநாதேசுரர். தேவி—கோல்வளையம்மை.

சீகாழியைப் போலவே சட்டைநாதர் இங்கும் இம்மலையுச்சியில் எழுந்தருளி யிருக்கிறார், அழகான சிற்பங்கள் பல காட்சியளிக்கின்றன. இதற்கு மேலைக்காழி என்ற பெயரும் உண்டு. ஆதிசேடனும் வாயுவும் ஒருகாலத்தில் சண்டையிட்டுக் கொண்ட போது ஆதிசேடன் தன் படங்களால் கயிலைச் சிகரங்களை அழுக்கிக்கொண்டான். வாயு பெரும் புயலாகமாறிச் சிகரங்களைப் பிய்த்தெறிந்து தன் வலிமையைக் காட்டினானாம். அப்படி எறியப்பட்ட சிகரங்களுள் இம்மலையும் ஒன்று.

தக்கன் யாகத்திற்குச் சென்று பல் இழந்த சூரியன் இங்கு வழிபட்டுத் தலைஞாயிறானான். அகத்தியர், அநுமன், இராவணன் முதலியோர்களும் வணங்கிப் பேறு பெற்றிருக்கிறார்கள். அன்று முதல் வழிபடுவார் குற்றங்களையெல்லாம் பொறுத்துக் குற்றம்பொறுத்த நாதராக கோல்வளை யம்மையாருடன் வீற்றிருக்கின்றார் பெருமான்.

அகத்தியரது கமண்டலநீரை காகவடிவு கொண்டு விநாயகர் கவிழ்த்தபோது பெருகி ஓடிவந்த நதி விநாயக நதி என்ற பெயருடன் மேல்பாலும் வடபாலும் அழகுசெய்கிறது. இதுவும் ஒரு தீர்த்தம். இதில் மூழ்கிப் பெருமானை வழிபட்டால் மிகுந்த பயன் உண்டு.

இத்தலப்பெயர் திருக்கருப்பறியலூர் எனத் தேவாரத்தில் குறிப்பிடப்பெறுகிறது.

நீற்றாரு மேனியராய் நினைவார்தம் முள்ளத்தே நிறைந்துதோன்றுங்
காற்றானைத் தீயானைக் கதிரானை மதியானைக் கருப்பறியலூர்க்
கூற்றானைக் கூற்றுதைத்துக் கோள்வளை யாளவளொடும்
கொகுடிக்கோயி
லேற்றானை மனத்தினால் நினைந்தபோ தவர்நமக் கினியவாறே.

75. கருவிலி (மாயவரம்-தஞ்சாவூர் மார்க்கம்)

கும்பகோணம் ரயில்நிலையத்திலிருந்து $11\frac{1}{2}$ மைல். வழியில் 6 வது மைலில் நறையூர்ச்சித்தீச்சுரம் (161)-ம்,

ரபல விஷ்ணு க்ஷேத்திரமான நாச்சியார்கேயிலும் இருக்கின் றன. பஸ்வசதி உண்டு.

கருவிலியிலிருந்து வடகிழக்கு $2\frac{1}{2}$ மைலில் திருநல்லம் (157) என்னும் கோனேரி ராஜபுரம் இருக்கிறது.

சுவாமி—சற்குணநாதேசுரர். தேவியார்—சர்வாங்க நாயகி.

ஆலயத்துக்குக் 'கொட்டிட்டை' என்று பெயர்,

இந்திரனும், தேவர்களும் பூசித்த ஸ்தலம். சற்குணன் என்னும் அரசன் பூசித்துப் பிறவிக்கடலைக் கடந்த ஸ்தலம். தேவாரத்தில் உருத்திர கணங்கள் பூசித்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

76. கருவூர் என்கிற கரூர் (திருச்சி-ஈரோடு மார்க்கம்)

கரூர் ரயில்நிலையத்திலிருந்து $\frac{1}{2}$ மைல்.

சுவாமி—பசுபதீசுரர். தேவியார்—கிருபாநாயகி.

இவ்வூர் ஆலயத்துக்கு ஆநிலை என்று பெயர். கோயில் பெரிது. கோபுரம் பெரிது. தேவியார் சந்நிதி இரண்டு உள்ளன. எறிபத்தநாயனருடைய ஸ்தலம். கொங்குதேசத் தரசராகிய புகழ்ச்சோழ நாயனருடைய இராசதானி. சிவபெருமானுக்குப் பூமாலை கட்டிக்கொடுக்கும் திருத்தொண்டு செய்துவந்த சிவகாமியாண்டார் என்னும் பெரியவர் இருந்த இடம். திருவிசைப்பா பாடிய சந்தான குரவர்களில் ஒருவராகிய கருவூர்த்தேவர் அவதரித்து முத்தியடைந்த க்ஷேத்திரம். அவருடைய சந்நிதியுமிருக்கிறது.

77. திருக்கலயநல்லூர் அல்லது சாக்கோட்டை (மாயவரம்-தஞ்சாவூர் மார்க்கம்)

கும்பகோணம் ரயில்நிலையத்திலிருந்து $1\frac{1}{2}$ மைல். நீடாமங்கலம் போகும் மார்க்கம்.

சுவாமி—அமிர்தகலேசுரர். தேவியார்—அமிர்தவல்லி.

இஃது அரிசில் நதியின் தென்கரையில் உள்ள ஸ்தலம். அரி சொல்லி வந்தபடியால் "அரிசொல் நதி" என்று பெயர். 'அரிசொல்' என்பது 'அரிசில்' என மருவியது. கோயில் சிறியது. கோயிலைச் சுற்றித் தாமரைப்பொய்கை இருக்கிறது. இதற்குத் தென்கிழக்கு 1-மைல் தூரத்தில் திருக்கருக்குடி (73) யிருக்கிறது. வண்டி வசதி உண்டு.

குரும்பைமுலை மலர்க் குழலி கொண்டதவங் கண்டு
குருப்பிறெடுஞ் சென்றவள் தன் குணத்தினைநன் கறிந்து
விருப்புவரங் கொடுத்தவளை வேட்டருளிச் செய்த
விண்ணவர்கோன் கண்ணுதலோன் மேவியவூர் வினவில்
அரும்பருகே சுரும்பருவ அறுபதம் பண்பாட
அணிமயில்க ணடமாடு மணிபோழில்சூ ழயலின்
கரும்பருகே கருங்குவளை கண்வளருங் கழனிக்
கமலங்கண் முகமலருங் கலய நல்லூர் காணே.

78. கலிக்காமூர் அல்லது அன்னப்பன்பேட்டை (விழுப்புரம்-மாயவரம் மார்க்கம்)

சீர்காழி ரயில்நிலையத்திலிருந்து 7 மைல். வண்டி வசதி உண்டு.

சுவாமி—சுந்தரேசுரர். தேவியார்—அழகுவனமுலையம்மை.

பராசருஷி பூசித்த ஸ்தலம்.

79. திருக்கழிப்பாலை (விழுப்புரம்-மாயவரம் மார்க்கம்)

சுவாமி—பால்வண்ணநாதேசுரர். தேவியார்—வேதநாயகி.

ஆனால் இத்தலத்தில் கோயில் கொண்டெழுந்தருளியிருந்த சுவாமி இப்போது சிதம்பரத்திற்கு 3 மைல் தூரத்திலுள்ள சிவபுரி (நெல்வாயில்-176) என்னும் ஸ்தலத்தில் ஒரு தனி ஆலயத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. இவ்வாலயம் சிறியது. சிவலிங்கம் சிறிதாய் வெண்ணிறமாயிருக்கிறது,

வன்மீக ரிஷி பூசித்த தலம்.

சுரும்பார் விண்டமல ரவை தூவித் தூங்கு கண்ணீ
ரரும்பா நிற்குமனத் தடி யாரொடு மன்பு செய்வன்
விரும்பே னுன்னை யல்லா தொரு தெய்வ மென் மனத்தாற்
கரும்பா ருங்கழனிக் கழிப் பாலைமே யானே.

80 திருக்கழுக்குன்றம் (மதராஸ்-செங்கல்பட்டு மார்க்கம்)

செங்கல்பட்டு ரயில் நிலையத்திலிருந்து தென்கிழக்கு 9 மைல். பஸ் வசதி உண்டு.

சுவாமி—வேதகிரீசுரர். தேவியார்—பெண்ணினல்லாளம்மை.

பிரதிதினமும் மலையின்பேரில் உச்சிக்காலத்தில் இரண்டு கழுகுகள் வந்து தங்களுக்குக் கொடுக்கப்படும் அன்னத்தையும்,



நெய்யையும் புசித்து மலையை வலமாகச் சுற்றிக்கொண்டு போகிறது. மலையின் உயரம் சுமார் 500 அடி. 12-வருஷத்துக் கொருவிசை சங்கு பிறக்குங் காரணத்தால் 'சங்கு தீர்த்தக் குளம்' என்று சொல்லப்படும் மகிமையான திருக்குளத்தையுடையது. குளத்தில் ஸ்நானம் செய்து, ஒரு மண்டலம் (40) நாள் கிரி பிரதக்ஷணம் நியமமாகச் செய்யும் அடியார்களுடைய எவ்வித பிணியையும் போக்கியருளும் அருமையான தலம். ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகளுக்குச் சிவபெருமான் குருவடிவமாய் எழுந்தருளி தரிசனங் கொடுத்த மேன்மையான க்ஷேத்திரம். அங்கிருந்து 9 மைல் மகாபலிபுரம், இங்கே அழகிய சிற்பங்கள் அநேகம் இருக்கிறது. கடற்கரை அருகில் உள்ளது. இப்போது அரசாங்கத்தாரால் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

பையுடைய பாம்போடு நீறு பயில்கின்ற
மெய்யுடையான் வெண்பிறை சூடி விரிகொன்றை
மையுடைய மாமிடற் றண்ணன் மறிசேர்ந்த
கையுடையான் காதல்செய் கோயில் கழுக்குன்றே.

81. திருக்களர் என்கிற **பாரிஜாதவனம்** (மாயவரம்-அரந்தாங்கி மார்க்கம்)

திருத்துறைப்பூண்டி ரயில் நிலயத்திலிருந்து 4½ மைல்.

சுவாமி—களர்முளைநாதேசுரர். **தேவியார்**—அழகேசுரியம்மை.

கோயிலும், கோபுரமும் பெரிதாக இருக்கின்றன். கோபுரம் அழகாயிருக்கிறது. அதில் அநேக பதுமைகளிருக்கின்றன. பராசர முனிவரும், காளவ முனிவரும் பூசித்த தலம். துருவாச முனிவருக்கு நடன தரிசனம் கொடுத்தவர் இத்தலத்திலுள்ள நடராஜ மூர்த்தி. துருவாச முனிவருடைய விக்கிரகம் நடேசமூர்த்திக் கெதிரி லிருக்கிறது. வலம்புரி விநாயகர்.

82. திருக்கள்ளில் (சென்னை-அரக்கோணம் மார்க்கம்)

தின்னனூர் ரயில் நிலயத்திலிருந்து 13 மைல். இஃது இப்போது 'திருக்கள்ளம்' என வழங்கி வருகிறது. வழியில் குசஸ்தலை ஆற்றைக் கடக்கவேண்டும்.

சுவாமி—சிவாநந்தேசுரர். **தேவியார்**—ஆனந்தவல்லியம்மை.

பிருகு முனிவர் பூசித்த தலம்.

83. திருக்கற்குடி அல்லது உய்யக்கொண்டான்.

திருச்சி சந்திப்பு ரயில் நிலயத்திலிருந்து 1½ மைல். கோயில் ஒரு சிறிய மலைமேலிருக்கிறது.

சுவாமி—முத்தீசுரர். தேவியார்—அஞ்சனாக்ஷியம்மை.

இம்மலைக் கோயில் நந்திவர்மப் பல்லவனது திருப்பணி. பெருமான் கற்பநாதராக வீற்றிருப்பதைக் கண்டிருக்கிறார்போலும் அப்பர் சுவாமிகள். "கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன்" என்று அவர் ஆனந்தமடைகிறார். எல்லாப் பொருளிலும் சிறந்த பொருள் பரம்பொருளல்லவா! பரம்பொருளை விழுமிய பொருளாகக்கண்ட திருஞானசம்பந்தர் "கற்குடியில் விழுமியானே" என்று கூப்பிடுகின்றார். விழுமிய நாயனார், விழுமிய தேவர் என்ற தொடர்கள் கல்வெட்டுக்களிலும் காணப்படுகின்றன. மலையினுச்சியில் பெருமான் விளங்குவதால் உச்சிநாதர் எனவும் அழைக்கப்படுகிறார்.

வடந்திகழ் மென்முலை யாளைப் பாகம தாக மதித்துத்
தடந்திரை சேர்புனல் மாதைத் தாழ்சடை வைத்த சதுரர்
இடந்திகழ் முப்புரி நூலர் துன்பமோ டின்பம தெல்லாம்
கடந்தவர் காதலில் வாழுங் கற்குடி மாமலை யாரே.

84. கன்றாப்பூர் (திருவாரூர்-திருதுறைப்பூண்டி மார்க்கம்)

திருநாட்டியத்தான்குடி ரயில் நிலயத்திலிருந்து 4½ மைல்.

சுவாமி—நடுதறியப்பர். தேவியார்—மாதுமையம்மை.

கன்றாப்பூர் சிறிய ஊர். கோயில் நாட்டியத்தான்குடி கோயிலைப்போலிருக்கிறது. முன்கோபுரம் இல்லை. சுவாமி கன்றுக் குட்டி கட்டும்படியான ஆப்பு அல்லது குச்சிலிருந்து உற்பத்தியானவர். சைவன் வீட்டுப் பெண் ஒருத்தி வைணவனுக்கு வாழ்க்கைப்பட்டு மாமியார் வீட்டார் காணாதபடி கன்றுக்குட்டி கட்டியிருந்த ஆப்பையே சிவமாகப் பாவித்துப் பூஜை செய்துவர, ஒரு நாள் புருஷன் அதைக் கண்டு அந்த ஆப்பைக் கோடாரியால் வெட்ட சிவபிரான் அவ்வாப்பிலிருந்து வெளிப்பட்டார். அக்காரணத்தால் அவ்வூருக்குக் கன்றாப்பூர் என்றும், சுவாமிக்கு நடுதறிநாதர் என்றும் பெயர் வந்தது. கோடரியால் வெட்டினது போன்ற குறி சாமிமேலிருக்கிறது.

இடும்பன் என்னும் அசுரன் பூசித்த ஸ்தலம்.

85. கீழைத்திருக்காட்டுப்பள்ளி என்கிற **ஆரணீர்வரர் கோயில்** (விழுப்புரம்-மாயவரம் மார்க்கம்)

சீர்காழி ரயில் நிலையத்திலிருந்து காவிரிப்பூம்பட்டினம் போகும் மார்க்கமாய் 7 மைல் சென்று திருவெண்காட்டைச் [263] சேர்ந்து அங்கிருந்து மேற்கே 2 மைலிலுள்ளது. வண்டி வசதி உண்டு.

சுவாமி—ஆரணியசுந்தரேசுரர். தேவியார்—அகிலாண்டநாயகி.

விருத்திராசுரனைக்கொன்ற பழி பற்றித் திரிந்த தேவேந்திரன் அப்பழி நீங்கிவந்து தேவலோகத்தைப் ஆளவேண்டும் என்றறிந்து தேவர்கள் பூசித்த தலம்.

86. மேலைத்திருக்காட்டுப்பள்ளி (தஞ்சாவூர்-திருச்சி மார்க்கம்)

பூதலூர் ரயில் நிலையத்திலிருந்து 5 மைல். இது குடமுருட்டியாற்றின் தென்கரையி லிருக்கிறது. வண்டி வசதி உண்டு.

சுவாமி—தீயாடியப்பர். தேவியார்—வார்கொண்டமுலையம்மை.

உறையூர் நந்தவனத்தில் திருடிய செவ்வந்திமலரை அரசன் தன் பத்தினிகளுக்குக் கொடுக்க, அவர்களில் மூத்தாள் மாத்திரம் அதை அரண்மனையிலிருந்த சிவபெருமானுக்கு அணிந்து வந்தாள். உறையூரில் மண்மாரிபெய்யவே, மூத்தாள் மாத்திரம் அதற்குத் தப்பி, மேலைத் திருக்காட்டுப்பள்ளிக்கு வர, அவளுக்காக இரங்கி சுவாமி கானல் வெப்பம் தணித்தருளிய தலம்.

87. காவிரிப்பூம்பட்டிணம் அல்லது **பல்லவனீச்சுரம்** (விழுப்புரம்-மாயவரம் மார்க்கம்)

சீர்காழி ரயில் நிலையத்திலிருந்து தென்கிழக்கு 10 மைல். கடற்கரை சமீபத்தில் இருக்கிறது. வழியில் 8-வது மைலில் திருவெண்காடு [263] இருக்கிறது. மாயவரம்- தரங்கம்பாடி மார்க்கத்திலுள்ள ஆக்கூர் ரயில் நிலையத்திலிருந்து காவிரிப்பூம் பட்டிணம் 4 மைல். வண்டி வசதி உண்டு.

சுவாமி—பல்லவனேசுரர். தேவியார்—சௌந்தரநாயகி.

பல்லவராஜன் பூசித்த தலம்.

இயற்பகை நாயனர், பட்டினத்துப்பிள்ளையார் இவர்கள் திருஅவதாரஞ் செய்தருளிய தலம்.

பரசு பாணியர் பாடல் வீணையர் பட்டி னத்துறை பல்லவ னீச்சரத்
தரசு பேணி நின்றார் இவர்தன்மை யறிவா ரார்.

88. ஸ்ரீகாழி. (விழுப்புரம்-மாயவரம் மார்க்கம்)

சீர்காழி ரயில் நிலையத்திலிருந்து கோயில் 2-மைல். இவ் வூரிலேயே திருக்கோலக்கா (123) என்னும் ஸ்தலமிருக்கிறது ½ மைல்.

சுவாமி—பிரமபுரீசுரர். *தேயியார்*—திருநிலைநாயகி,

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர், காழிக்கங்கை மெய்கண்டார், சீகாழிச் சிற்றம்பல நாடிகள், சண்பை ஞானப்பிரகாசர், திரு அவதாரஞ் செய்தருளிய திருப்பதி. திருஞானசம்பந்த சுவாமிகள் குழந்தைப் பருவத்தில் குளக்கரையிலிருந்து அழுதபோது சிவபெருமான் தேவியாரோடு இடபாருடராய்த் தோன்றி ஞானப்பால் கொடுத்தருளிய திவ்விய ஸ்தலம். இத்தலத்துச் சுவாமியும், அம்மையும் தம்மை ஆட்கொண்டதை ஸ்ரீ சம்பந்த சுவாமிகள் சிறப்பித்துப் பாடி யிருக்கின்றார். திருநீலகண்டப் பெரும்பாண நாயனர் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனரைச் சேர்ந்து அவர் அருளிச் செய்யும் தேவாரத் திருப்பதிகங்களை யாழில் வாசிக்கும்படியான பாக்கியத்தை பெற்ற ஸ்தலம், கண நாத நாயனர் வசித்திருந்த ஸ்தலம். ஆலயங்களை சமீபத்தில் புதுப்பித்திருக்கிறது. சீகாழி கட்டுமலை உச்சிக் கோயிலில் ஒரு தோணியில் பெரிய நாயகர், பெரிய நாயகி சந்நிதி இருக்கின்றது. தோணியப்பர் சிகரத்திற்குத் தெற்குப் பக்கத்தில் சட்ட நாதர் கோயில், பைரவ வடிவம்.

திருஞானசம்பந்தருக்குத் தனியாக ஆலயம் இருக்கிறது.

ஸ்ரீகாழி, பிரமபுரம், தோணிபுரம், வேணுபுரம், சிரபுரம், புகலி, வெங்குரு, பூந்தராய், புறவம், சண்பை, கொச்சைவயம், கழுமலம் ஆகிய 12-பெயர்களையுடைய ஸ்தலம், பிரமன் பூசித்ததால் பிரமபுரம் எனவும், அமரர்கள் புகலிடமாகப் புகுந்த காரணத்தாற் புகலி எனவும், பிரளய காலத்தில் தோணிபோல் மிதந்த காரணத்தால் தோணிபுரம் என்றும் இத்தலத்துக்குப் பெயர்கள் வந்தன என்பது "தாமரை நான்முகத்தான், பெரியான் பிரமன் பேணியாண்ட பிரமபுரத்தானே", "அமரர் புகலால் மலிந்த பூம் புகலி", "ஒருவரிவ்வுலகில் வாழ்கிலா வண்ண மொலிபுனல் வெள்ளமுன் பரப்பக் கருவரை சூழ்ந்த கடலிடை மிதக்குங் கழுமல நகரெனலாமே" எனவருந் தேவாரத்தினின்றும் அறியலாகும்.

தோடுடைய செவி யன்விடை யேறியோர் தூவெண் மதிசூடிக்
காடுடைய சுட லைப்பொடி பூசியென் னுள்ளங் கவர்கள்வன்
ஏடுடைய மல ரான்முன நாட்பணிந் தேத்த வருள்செய்த
பீடுடைய பிர மாபுர மேவிய பெம்மா னிவனன்றே.



89. திருக்காளத்தி அல்லது **ஸ்ரீகாளஹஸ்தி** (ரேனிகுண்டா-கூடூர் மார்க்கம்)

காளஸ்த்திரி ரயில்நிலையத்திலிருந்து 2 மைல். கோயில் சுவர்ணமுகி நதியின் கீழ்க்கரையில், காளத்தி மலையடிவாரத்தில் இருக்கிறது.

சுவாமி—காளத்தீசுரர். *தேவியார்*—ஞானப்பூங்கோதை.

இது பஞ்சபூத ஸ்தலங்களில் ஒன்றாகிய வாயுஸ்தலம். அதற்கு உதாரணமாக சுவாமி சந்நிதானத்தில் எரியும் தீபங்களில் ஒன்று காற்றினால் மோதப்பட்டாற்போல் எக்காலமும் அசைந்து கொண்டே இருக்கிறது.

ஸ்ரீகாளஹஸ்தி என்பது (ஸ்ரீ =)சிலந்தி, (காளம் =)பாம்பு, (ஹஸ்தி =)யானை இம்மூன்றும் பூசித்து முத்தி பெற்ற ஸ்தலம். திருக்காளத்தி மலையிலுள்ள சிவலிங்கப் பெருமானை அன்புடன் வழிபட்டுக் கண்ணப்ப நாயனார் ஆறுநாளிலே மோட்சமடைந்தார், காளத்தியப்பரைப் பூசித்து வந்த சிவகோசரியார் என்ற உத்தமர் இத்தலத்திலே மோட்சமடைந்துள்ளார். நக்கீர தேவரும் வழி பட்டுப் பேறு பெற்றார். ஸ்ரீகாளஹஸ்தி தென் கைலாசம் என்று சொல்லப்படுகிறது. வெளிப்பிரகாரத்தில் பாதாள விநாயகர் சந்நிதி 25 அடியின் கீழ் உள்ளன. மலையின்பேரில் கண்ணப்பர் ஆலயம் சிறிதாக இருக்கிறது.

சந்தமார் அகிலொடு சாதிதேக் கம்மரம்
உந்துமா முகலியின் கரையினில் உமையொடும்
மந்தமார் பொழில்வளர் மல்குவண் காளத்தி
எந்தையார் இணையடி யென்மனத் துள்ளவே.

90. திருக்காறாயில் அல்லது **திருக்காறைவாசல்** (மாயவரம்-காரைக்குடி மார்க்கம்) திருநாட்டியத்தான்குடி ரயில் நிலையத்திலிருந்து தென்கிழக்கு 3 மைல்.

சுவாமி—கண்ணாயிரநாதேசுரர். *தேவியார்*—கைலாயநாயகி.

இது சப்தவிடங்க ஸ்தலங்களில் ஒன்று. தேவேந்திரன், முசுகுந்த சக்ரவர்த்தி முதலியோர் பூசித்த ஸ்தலம். கோயில் சிறியது; கோபுரமும் சிறிது. புரட்டாசி பௌர்ணமியில் தேவேந்திரன் பூசித்ததாக ஐதீகம். கோயிலுக்கு வடபுறத்தில் இந்திர தீர்த்தம் இருக்கிறது. குளத்தின் வடகரையில் கடுக்காய்ப் பிள்ளையார் என்றொரு விக்கினேசுரர் இருக்கிறார்.

தலங்கள் 96, 97. கும்பகோணம்.



நாகேஸ்வர சுவாமி கோயிலும், குளமும். என்ன அற்புதமான தரிசனம்.



கும்பேசுர சுவாமி கோயிலின் பெரிய கோபுரமும், முன் மகா மண்டபக் காக்ஷியும்.



கும்பகோணம் மாமாங்க குளம். இங்குதான் 12 ஆண்டுகட் கொருமுறை விசேஷ உற்சவங்கள் நடைபெறுகின்றன

தலம் 213. திருபூவனம்.

தமிழ்நாட்டு மூவேந்தர்கள் பூசித்த தலம். இக்கோபுரத்தின் சாயலே ஒரு தனிக் காட்சி





தலம் 252. திருவாய்மூர்.

சப்தவிடங்க ஸ்தலங்களில் ஒன்று. தியாகேசர் சந்நிதியின் உட்பிரகாரம்.

தலம் 254. திருவான்மியூர்.

வான்மீகரிஷி பூசித்த தலம். மருந்தீசர் முன் மகாமண்டபம்.



91. திருக்கானப்பேர் அல்லது **காளையார்கோயில்** (திருச்சி-மானாமதுரை மார்க்கம்)

நாட்டரசன்கோட்டை ரயில் நிலையத்திலிருந்து தென் கிழக்கே 6 மைல். மானாமதுரை ரயில் நிலையத்திலிருந்து வடக்கே 11 மைல். பஸ், வண்டி முதலிய வசதிகள் உண்டு.

சுவாமி—காளையீசுரர். *தேவியார்*—சொர்ணவல்லி.

சுவாமி காளை வடிவமாக வந்து திருச்சுழியல் என்னும் தலத்திலிருந்து சுந்தரமூர்த்தி நாயனாருக்குத் தோன்றி "நம்முடைய வாசஸ்தலம் கானப்பேர்" என்று சொல்லி, அவரையும், சேரமான் பெருமாணாயனாரையும் அழைத்துக்கொண்டு போய்த் தரிசனங் கொடுத்தருளிய தலம்.

சாபத்தினாற் காட்டானையாய்ச் சமைந்த ஐராவதம் பூசித்த தலம். "மானமா மடப்பிடி வன்கையா லலகிடக், கானமார் கடகரி வழிபடும் கானப்பேர்" என்பது தேவாரம்.

கோயில் பெரிது. மூன்று சந்நிதிகள் இருக்கின்றன:— சோமேசர் - சௌந்தரநாயகி; காளீசர் - சொர்ணவல்லி; சுந்தரேசுரர் - மீனாக்ஷி. கோபுரம் மதுரை கோபுரத்தைப்போலப் பெரிது. மருது பாண்டியன் கட்டினதாம். அது சோமேசர் சந்நிதிக்கு நேரே இருக்கிறது.

பிடியெலாம் பின்செலப் பெருங்கைமா மலர்தழீஇ
விடியலே தடமூழ்கி விதியினால் வழிபடும்
கடியுலாம் பூம்பொழிற் கானப்பே ரண்ணனின்
அடியலா லடைசர ணுடையரோ வடியரே.

92. திருக்கானாட்டு முள்ளூர் என்கிற **கானாட்டம்புலியூர்** (விழுப்புரம்-மாயவரம் மார்க்கம்)

சிதம்பரம் ரயில் நிலையத்திலிருந்து 10 மைல். வண்டி வசதியுண்டு.

சுவாமி—பதஞ்சலிநாதேசுரர். *தேவியார்*—கோல்வளைக்கையம்மை.

பதஞ்சலி முனிவர் பூசித்த தலம்.

93. திருக்கானூர் (தஞ்சாவூர்-திருச்சி மார்க்கம்)

பூதலூர் ரயில் நிலையத்திலிருந்து வடக்கே 7 மைல். போகும் மார்க்கத்தில் 5-வது மைலில் திருக்காட்டுப்பள்ளி (86) என்னும் தலமிருக்கிறது. கோயில் பூமி மட்டத்திற்குந் தாழ்ந்திருக்கிறது.

சுவாமி—செம்மேனிநாதேசுரர். தேவியார்—சிவயோகநாயகி.

உமாதேவியார் சிவயோகம் செய்துக்கொண்டிருக்கும்போது சிவபெருமான் அக்கினி சொருபமாய் அவருக்குத் தரிசனங் கொடுத்தருளிய தலம்.

திருவி னுதனுஞ் செம்மலர் மேலுறை
உருவ னுயுல கத்தி னுயிர்க்கெலாங்
கருவ னுகிமு ளைத்தவன் கானூரில்
பரம னுயப ரஞ்சுடர் காண்மினே.

94. கீழ்வேளூர் (தஞ்சாவூர்-நாகூர் மார்க்கம்)

கீவளூர் ரயில் நிலையத்திலிருந்து கோயில் ¾ மைல். ஓடம்போக்கி ஆறு வடக்கே ஓடுகிறது.

சந்நிதி கட்டுமலேமே லிருக்கிறது. எல்லாம் கருங்கல் வேலை. ஸ்தூபி முழுவதும் கருங்கல் கட்டிடம். கோயில் பெரியது. பெரிய கோபுரங்கள். சமீபத்தில் ஆலயம் புதுப்பித்திருக்கின்றன.

சுவாமி—அக்ஷயலிங்கேசுரர். தேவியார்—வனமுலைநாயகியம்மை.

சுப்ரமணிய சுவாமி பூசித்த தலம். அவர் சந்நிதி விசேஷமாயிருக்கிறது. பக்கத்தில் தேவிமாரில்லை. அவருடைய பூஜைக்கும், தவத்துக்கும் இடையூறு நேரிடாதபடி அம்பிகை பத்ரகாளி ரூபமாக விளங்கி ஆகாயத்திலிருந்தும், நான்கு திக்குகளிலிருந்தும் அபாயம் வராமல் காவல் புரிந்ததால் அந்த அம்மைக்கு அஞ்சவட்ட அம்மை என்று பெயர். இந்த அம்மன் சந்நிதி முதல் பிரகாரத்தில் இருக்கிறது. இது விசேஷ சந்நிதியாயிருக்கிறது. தீர்த்தம்-சரவணப் பொய்கை. குளக்கரையின் மேற்பாகத்தில் ஒரு சிவாலயம் இருக்கிறது. விருக்ஷம்-இலந்தை. இரண்டாம் பிரகாரத்திலிருக்கிறது. பெரிய பழைய மரம். இந்தத் தல நடராஜமூர்த்தி அகத்தியருக்கு வலதுபாத தரிசனங் கொடுத்தவர். அகத்தியர் பூசித்த இலிங்கம் இலந்தை மரத்துக்கு வடக்கில் இருக்கிறது. பிரகாரத்தில் குபேரனுடைய சந்நிதியும், சுந்தர கணபதியின் சந்நிதியும் இருக்கின்றன. தேவேந்திரன், குபேரன் இவர்கள் விக்கிரகங்களும் இருக்கின்றன.

95. திருக்குடந்தைக்காரோணம் அல்லது கும்பகோணத்திலுள்ள காசி விசுவநாதர் கோயில் (மாயவரம்-தஞ்சாவூர் மார்க்கம்)

கும்பகோணம் ரயில் நிலையத்திலிருந்து ½ மைல்.

சுவாமி—காசிவிசுவநாதர். தேவியார்—காசிவிசாலாக்ஷி.

இவ்வாலயம் மகாமககுளத்தின் வடகரையி லிருக்கிறது. நவநதிகளும் நவ கன்னிகைகளாகப் பூசித்த தலம். அவர்கள்

உருவங்கள் கோயிலுள் இருக்கிறது. உமையவள், மாந்தாதா முதலியோர் பூசித்த தலம்.

96. திருக்குடந்தைக்கீழ்க்கோட்டம் *அல்லது கும்பகோணத்திலுள்ள* **நாகேசுரஸ்வாமி கோயில்** *ஊர்மத்தியிலிருக்கிறது. (மாயவரம்-தஞ்சாவூர் மார்க்கம்) கும்பகோணம் ரயில் நிலையத்திலிருந்து $\frac{3}{4}$ மைல்.*

சுவாமி—நாகேசுரசுவாமி. **தேவியார்**—பெரியநாயகியம்மை.

கோயில் பெரியது. சூரியன் பூசித்த தலம். இங்கே பிரதி வருஷமும் சித்திரை மாதம் 11, 12, 13—இந்த தேதிகள் காலையிற் சூரியகிரணம் சுவாமிமேற் படுகின்றது. கங்கைக் கணபதியார் விக்கிரஹம் மிக நன்ருயிருக்கிறது. அர்த்தநாரீசுரர் விக்கிரஹமும், பிரளயகால ருத்திரர் விக்கிரஹமும் இருக்கின்றன.

97. திருக்குடமூக்கு *என்கிற* **கும்பேஸ்வரர்கோயில்.** *(மாயவரம்-தஞ்சாவூர் மார்க்கம்)*

கும்பகோணம் ரயில் நிலையத்திலிருந்து 1 மைல்.

சுவாமி—கும்பேசுரர். **தேவியார்**—மங்களநாயகி.

ஏமருஷி முதலியோர் பூசித்த தலம். பன்னிரண்டு வருஷத்துக் கொருவிசை மாசிமகத்தின்போது காசிகங்கை வருகிறது என்ற ஐதீகத்தால் அதிக சிறப்பையுடைய மகாமக தீர்த்தத்தையுடைய தலம். கோயில் மிகவும் பெரியது.

கும்பகோணம் பெரிய ஊர். அநேக சத்திரங்களும், கோயில்களும், குளங்களும் நிறைந்த க்ஷேத்திரம். சிவாலயம், விஷ்ணுலயம், மடங்கள் பல உண்டு. கும்பகோணத்தின் ஒருபுறத்தில் காவிரியாறும், மற்றொரு புறத்தில் அரசிலியாறும் ஓடுகின்றன. பஸ், வண்டி வசதி உண்டு.

பூவ ணத்தவன் புண்ணிய எண்ணியங்
காவ ணத்துடை யானடி யார்களைத்
தீவ ணத்திரு நீறுமெய் பூசியோர்
கோவ ணத்துடை யான்குட மூக்கிலே.

98. திருக்குடவாயில் *என்கிற* **கொடவாசல்.** *(தஞ்சாவூர்-நாகூர் மார்க்கம்)*

கொரடாச்சேரி ரயில் நிலையத்திலிருந்து 6மைல். பஸ் வசதி உண்டு.

சுவாமி—கோணேசுரர். தேவியார்—பெரியநாயகியம்மை.

திருணபிந்து முனிவர் பூசிக்க ஸ்வாமி திருக்குடத்திலிருந்து வெளிப்பட்டு அவருடைய குட்டநோயைத் தீர்த்தருளிய தலம்.

99. குரக்குக்கா (விழுப்புரம்-மாயவரம் மார்க்கம்)

வைதீஸ்வரன் கோயில் ரயில் நிலையத்திலிருந்து 6 மைல். வண்டி வசதி உண்டு.

கருப்பறியலூருக்கு [74] வடக்கு 1 மைல்.

சுவாமி—கொந்தளேசுரர். தேவியார்—கொந்தளநாயகி.

ஹநுமார் பூசித்த தலம்.

100. குரங்கணின்முட்டம் (செங்கல்பட்டு-அரக்கோணம் மார்க்கம்)

காஞ்சீபுரம் ரயில் நிலையத்திலிருந்து 5 மைல். பஸ் வசதி உண்டு.

சுவாமி—வாலீசுரர். தேவியார்—இறையார்வளையம்மை.

பாலாற்றின் தென்கரையிலிருக்கிறது. குரங்கு (வாலி), அணில், முட்டம் (காக்கை) இவைகள் பூசித்த தலம்.

101. வடகுரங்காடுதுறை (மாயவரம்-தஞ்சாவூர் மார்க்கம்)

ஐயம்பேட்டை ரயில் நிலையத்திலிருந்து $2\frac{1}{2}$ மைல்.

போகும்வழியில் $\frac{1}{2}$ மைலில் திருச்சக்கரப்பள்ளி [127] இருக்கிறது. வடகுரங்காடுதுறைக்கு மேற்கே 3 மைல் தூரத்தில் திருப்பழனம் [187] இருக்கிறது.

சுவாமி—குலைவணங்கீசுரர். தேவியார்—அழகுசடைமுடியம்மை.

வாலி பூசித்த தலம்.

102. திருத்தென்குரங்காடுதுறை அல்லது **ஆடுதுறை** (மாயவரம்-தஞ்சாவூர் மார்க்கம்)

ஆடுதுறை ரயில் நிலையத்திலிருந்து $\frac{3}{4}$ மைல் திருவிடைமருதூருக்குக் [34] கிழக்கு $2\frac{1}{2}$ மைல்.

சுவாமி—ஆபத்சகாயேசுரர். தேவியார்—பவளக்கொடியம்மை.

சுக்கிரீவன் பூசித்த தலம்.



103. திருக்குருகாவூர் அல்லது **திருக்காடாவூர்** (விழுப்புரம்-தஞ்சாவூர் மார்க்கம்)

சீர்காழி ரயில் நிலயத்திலிருந்து 3 மைல்

சுவாமி—வெள்ளிடையீசுரர். தேவி—காவியங்கண்ணியம்மை.

சீர்காழியிலிருந்து வந்த சுந்தரமூர்த்தி நாயனருக்கும், அவருடன் வந்த அடியார்களுக்கும் சிவபெருமான் கட்டமுதும், தண்ணீரும் கொடுத்தருளிய தலம்.

இத்தனை யாமாற்றை யறிந்திலே னெம்பெருமான்
பித்தரே யென்றும்மைப் பேசுவார் பிறரெல்லாம்
முத்தினை மணிதன்னை மாணிக்க முளைத்தெழுந்த
வித்தனே குருகாவூர் வெள்ளடை நீயன்றே.

104. திருக்குறுக்கை (விழுப்புரம்-மாயவரம் மார்க்கம்)

நீடூர் ரயில் நிலயத்திலிருந்து 5 மைல்.

சுவாமி—வீரட்டேசுரர். தேவியார்—ஞானம்பிகை.

இதற்குத் தெற்கு 3 மைல் தூரத்தில் திருமணஞ்சேரி [222] இருக்கிறது.

அஷ்ட வீரட்டங்களில் ஒன்று. காமனை யெரித்த தலம் வேதாரணிய புராணம் சபைச்சருக்கத்திற் சொல்லப்பட்ட சபைகளுள் இத்தலத்துச் சபை 'காமாங்கநாசனிசபை' அல்லது சம்புவினோதசபை, என்று கூறப்படுகிறது.

தழைத்ததோ ராத்தி யின்கீழ்த் தாபர மணலாற் கூப்பி
அழைத்தங்கே யாவின் பாலைக் கறந்துகொண் டாட்டக் கண்டு
பிழைத்ததன் றாதை தாளைப் பெருங்கொடு மழுவால் வீசக்
குழைத்ததோ ரமுத மீந்தார் குறுக்கைவீ ரட்ட னாரே.

105. திருக்குற்றாலம் (விருதுநகர்-தென்காசி மார்க்கம்)

தென்காசி ரயில் நிலயத்திலிருந்து $3\frac{1}{2}$ மைல்.

இது குறும்பலா என்றுஞ் சொல்லப்படுகிறது. குறும்பலா விருக்ஷம் இங்கு இருத்தலால் இந்த ஸ்தலத்துக்குக் குறும்பலா என்னும் பெயர் உண்டாயிற்று.

சுவாமி—குறும்பலாஈசுரர். தேவியார்—குழல்வாய்மொழியம்மை.

விஷ்ணுரூபமாயிருந்த மூர்த்தி அகஸ்தியமுநிவரால் சிவலிங்க ரூபமாகிய தலம். பஞ்ச சபைகளில் ஒன்றாகிய சித்திர சபையையுடையது. ஸ்ரீமாணிக்கவாசகர், ஸ்ரீசம்பந்தசுவாமிகள் முதலியவர்வர்களால் பாடப்பெற்ற தலம்.

சம்பந்த சுவாமிகளின் மனதைக் கவர்ந்த குரங்குகள் இப்போதும் காணப்படுகின்றன. சந்நிதிக்குப் பின்புறம் குற்றாலநாதர் அருள் வெள்ளம் போல் ஆகாயத்திலிருந்து குதித்து வரும் காட்சி நம்மை ஆனந்தப்படுத்துகிறது. அதற்குமேல் இருப்பது பொங்குமாங் கடல். அங்கிருந்து 2 மைல் குறுகிய செங்குத்தான பாதையின் வழியாகப் போனால் சண்பக அருவி இருக்கிறது போகும் வழி நெடுக அடர்த்தியாக மா, பலா, கமுகு, ஏலம், கிரும்பு முதலிய மரங்கள் பூத்துக் காய்த்து நிற்கின்றன. சண்பக அருவியினருகில் சண்பகதேவி என்ற காளி கோயிலிருக்கிறது. அதற்குமேல் 2 மைல் சென்றால் தேனருவி இருக்கிறது. பிறகு கீழுள்ள குற்றாலநாதர் கோயிலுக்குத் தென்மேற்கில் $1\frac{1}{2}$ மைல் தூரத்தில் ஐந்தருவி இருக்கிறது. அங்கும் ஸ்நானம் செய்யலாம். இந்த ஐந்தருவியும் தனித்தனியே சுமார் 10 கெஜ தூரத்திலிருந்து விழுகின்றன. பஸ், வண்டி முதலிய வசதிகள் உண்டு. ஆனி மாதம் முதல் புரட்டாசி மாதம் வரையில் அங்கு சீஸன்.

வம்பார்குன் றம் நீடுயர்சாரல் வளர்வேங்கைக்
கொம்பார்சோலைக் கோலவண்டியாழ்செய் குற்றாலம்
அம்பானெய்யோ டாடலமர்ந்தா னலர்கொன்றை
நம்பான்மேய நன்னகர்போலும் நமரங்காள்.

106. கூடலையாற்றூர் (விழுப்புரம்-திருச்சி காட்லயன் மார்க்கம்)

விருத்தாசலம் ரயில் நிலையத்திலிருந்து 12 மைல். தென் கிழக்கில் இத்தலம் திருமணிமுத்தாறு நதியும், ஜீவநதியும் கூடுமிடத்தில் இருக்கிறது. அங்கிருந்து தென்மேற்கில் ஸ்ரீமுஷ்ணம் என்னும் முக்கியமான விஷ்ணு ஸ்தலம் இருக்கிறது.

சுவாமி—நெறிகாட்டுநாயகர். தேவியார்—புரிகுழலாம்பிகை.

சுந்தரமூர்த்தி நாயனர் தெற்கே யிருந்து விருத்தாசலத்துக்குப் போகும்போது சுவாமி பிராமண வடிவமாய் அவர்முன் தோன்றி 'இந்தக் கூடலையாற்றூர் வழியாகத்தான் விருத்தாசலத்துக்குப் போகவேண்டியது' என்று சொல்லி அவரை அழைத்துவந்து பதிகம் பெற்றருளிய தலம்.

107. திருக்கேதாரம் (லக்ஸார்-டோராடூன் E.I.R.O.R. Section)

ரிஷிகேசம் ரயில் நிலையத்திலிருந்து சுமார் 100 மைல்.

இமயமலைச் சாரலிலுள்ளது. இப்போது திருக்கேதாரம் செல்லுவதற்கு சகலவிதமான வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

வழிநெடுக ஊர்கள் இருக்கின்றன. ரிஷிகேசத்திலிருந்து சகல வித வசதி செய்துகொடுக்க ஆட்களும், கம்பெனிகளும் உள்ளன.

சுவாமி—கேதாரேசுரர். தேவியார்—கேதாரகௌரியம்மை.

பிருங்கிரிஷிக்காகப் பார்வதி தேவியார் பரமசிவனைப் பூசித்து வாமபாகம் பெற்ற தலம்.

தொண்டரஞ்சு களிறும் அடக்கிச் சுரும்பார்மலர்
இண்டைகட்டி வழிபாடு செய்யு மிடமென்பரால்
வண்டுபாட மயிலாட மான்கன்று துள்ளவரிக்
கெண்டைபாயச் சுனைநீல மொட்டலருங் கேதாரமே.

108. திருக்கேதீச்சுரம் (கொழும்புத் தீவின் தலைமன்னார் பியர்-மதவாச்சி ரயில் சந்திப்பு மார்க்கம்)

திருக்கேதீச்சுரம் ரயில் நிலையத்திலிருந்து வடகிழக்கிலுள்ளது.

சுவாமி—கேதீசுரர். தேவியார்—கௌரியம்பிகை.

பிருகு முனிவர் முதலியோர் பூசித்த தலம். மாலியவான் என்னும் அசுரன் பூசித்துப் பெரும்பேறு பெற்ற தலம்.

109. கைச்சினம் (மாயவரம்-காரைக்குடி மார்க்கம்)

திருநெல்லிக்காவல் ரயில் நிலையத்திலிருந்து 3 மைல்.

சுவாமி—கைச்சினநாதேசுரர். தேவியார்—வெள்வளையம்மை.

திருணபிந்து முனிவர் பூசித்த தலம். தேவேந்திரன் பூசை செய்த திருநகர்; மணலினால் இலிங்கம் ஸ்தாபித்துப் பூஜை செய்து பின்பு அதைக் கையினாலெடுத்து அப்புறம் வைத்தபோது இந்திரனுடைய கைச்சின்னம் அதாவது கைக்குறி அதனிற் பொருந்தியது. அக்காரணத்தாற் சுவாமிக்கு கைச்சினநாதர் என்றும், தலத்துக்கு கைச்சின்னம் என்றும் பெயர் வந்தது. கைச்சின்னம் என்பது கைச்சினம் என்றாயிற்று. விரல்கள் பட்ட குறி சுவாமிமேல் இருக்கிறது. தக்ஷிணாமூர்த்தி விக்கிரகம் மெத்த நன்றாயமைந்திருக்கிறது. இந்திர தீர்த்தம் என்றும் வஜ்ர தீர்த்தம் என்றும் 2 குளங்கள் கோயிலுக்கு வடக்கிலும், தெற்கிலும் இருக்கின்றன. ஸ்தல விருக்ஷம் கோங்கிலவ மரம். அம்மரங்கள் கோயிலி லிருக்கின்றன. அந்த மரங்கள் பக்கத்தில் கர்ணிகா வனேசுரர் (கோங்கிலவு வனநாதேசுரர், என்னும் ஒரு இலிங்கம் இருக்கிறது. உற்சவ மூர்த்தி-தியாகராஜ சுவாமி-அந்த மூர்த்த மாகத்தான் இந்திரனுக்குக் காக்ஷி கொடுத்ததாம்.

110. கொடிமாடச்செங்குன்றூர் *என்பது* **திருச்செங்கோடு**
(சேலம்-ஈரோடு மார்கம்)

சங்கரிதுர்க்கம் ரயில் நிலையத்திலிருந்து **5** *மைல். சேலத்திலிருந்து பஸ் உண்டு.*

சுவாமி—அர்த்தநாரீசுரர். *தேவியார்*—பாகப்பிரியாளம்மை.

ஆலயம் மலைமேலிருக்கிறது. வழியிற் பல மண்டபங்களும் சுனைகளுமிருக்கிறது. மலையடிவாரத்தில் ஆறுமுக ஸ்வாமி தேவிமாருடன் கோயில் கொண்டிருக்கிறார். மலைமேலுள்ள ஸ்ரீசுப்பிரமணியசுவாமி சந்நிதி பிரத்தியேகமாயும் பெரிதாயுமிருக்கிறது. ஸ்வாமி தனியே இருக்கிறார். திருக்கையில் வேலுண்டு. வெண்ணிறமுடையவர். ஆதிகேசவப் பெருமாள் சந்நிதி ஒன்று ஆலயத்தில் இருக்கிறது.

மலைமேலிருந்து பார்த்தாற் காவிரியாறு தெரிகிறது. மலை சிவந்த நிறமாயிருப்பதால் திருச்செங்கோடு என்று பெயர். இம்மலைக்கு நாககிரி என்றும் பெயர். மேலை வீதியிலிருந்து பார்த்தால் மலை நாகம்போல தெரிகிறது. அர்த்தநாரீசுரர் சந்நிதி மேற்குப் பார்த்தது. அவர் பாதத்தில் ஒரூற்று இருக்கிறது.

விறன்மிண்டநாயனுருடைய ஜன்ம ஸ்தலம். முருகக் கடவுளுக்கு மிக முக்கியமான குன்றுதோருடல்களிலும் ஒன்று. திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் இங்கெழுந்தருளி யிருந்த போது பனிக்காலம்வர அந்தக்காலத்தில் உண்டாகும் நளிர்ச் சுரத்தினல் அடியார்களும் அவ்வூரார்களும் வருத்தமுறுவதைக் கண்டு, நாயனர் "அவ்வினைக்கிவ்வினை" என்னுந் திருநீலகண்டப் பதிகம் ஓதி, அந்நளிர்ச்சுரம் அவ்வூரைவிட்டு போகும்படி செய்தருளிய தலம்.

வெந்தவெண் ணீறணிந்து விரிநூறிகழ் மார்பி னல்ல
பந்தணவும் விரலா ளொருபாக மமர்ந்தருளிக்
கொந்தணவும் பொழில்சூழ் கொடிமாடச் செங்குன்றூர் நின்ற
அந்தணனைத் தொழுவா ரவல மறுப்பாரே.

111. திருக்கொடுங்குன்றம் *அல்லது* **பிரான்மலை (திருச்சி-**
காரைக்குடி மார்கம்)

காரைக்குடி ரயில் நிலையத்திலிந்து 26 **மைல். அங்கிருந்து தென்கிழக்கு 15 மைல் தூரத்தில் திருப்பத்தூர் [205] என்னும் தலம் இருக்கிறது.**

சுவாமி—கொடுங்குன்றீசுரர். *தேவி*—குயிலமிர்தநாயகியம்மை.

மகோதரருஷி, நாகராஜன் முதலியோர் பூசித்த தலம். பாடல் பெற்ற தலம் அடிவாரத்திலிருக்கிறது. மலைமேல் ஏறிச்



சுவாமி அம்மன் சந்நிதி முன்மகாமண்டபம்.



அங்கம்பூம்பாவையார் சந்நிதி.
மேலே இருக்கும் சித்திரத்தைப் பாருங்கள்.



ஸ்ரீ கபாலீச்சுரர் கிழக்கு கோபுரமும்
திருக்குளக் காட்சியும்.



அம்மையார் மயிலுருக்கொண்டு புன்னைமரத்தடியில் பூசித்த சந்நிதி.



தலம் 123.
திருக்கோலக்கா.

சம்பந்தர் பெருமானிட மிருந்து பொற்றாளம் பெற்ற தலம். ஆலயம் அழகு பொருந்தியது.

தலம் 165.
நாகப்பட்டினம்.

நீலாயதாக்ஷியம்மை சமேத காயாரோகணேசுரர் ஆலய உட்புறத் தோற்றம்.





தலம் 199.
திருப்பாதிரிப்புலியூர்.

அப்பர் சுவாமிகள் "சொற்றுணை வேதியன்" என்னும் பதிகம் பாடிக் கரையேறப் பெற்ற தலம்.

சென்ருல் நேரில் கண்டு களிக்கும் இயற்கைக் காட்சிகள் நிரம்பியது,

இதனைப் "பாரியது பறம்பு நாடு" என்பர். மேகங்கள் தூங்கும் உச்சியையுடையது. கபிலரால் பாடப்பெற்றது. திருஞானசம்பந்தரின் பாடல்பெற்ற க்ஷேத்திரம். மலைக்கோயிலில் ஒரு குடைவுக் கோட்டம் உண்டு. மங்கை பங்கர் மணக்கோலம் இரகசியமாக இருக்கும். ஒரே கல்லில் மேல்தளத்தின் உட்புறமாக அமைந்த முப்பத்து மூன்று பிரிவுகளான தேவசபையுடையது. மத்தியிலுள்ள வீரபத்திரர் விசேட சான்னித்யமுடையவர். இங்கும் ஓர் சிவாலயம் உண்டு. முருகவேளுக்கு மேற்கு நோக்கிய சந்நிதானமும், யானை வாகன இலட்சணமும் உடையது. கல்லில் சங்கிலிக் கோர்வையும், தூண்களின் இடையில் துவாரங்களின் ஊடே பந்துக்கள் உள்ளமையும் சிற்பச் சிறப்புக்கலை விளக்குவனவாம். பற்பல சுனைகளையும், குகைகளையும் ஆங்காங்கே காணலாம். இறைவருக்குத் தேனும், தினைமாவும் விசேட நைவேத்தியமாகும். காரைக்குடி-திண்டுக்கல் வழியில் சதுர்வேதமங்கலத்திலிருந்து வடக்கே 5 மைல் வண்டிப் பாதையாகவும போகலாம்.

112 கொட்டையூர் (*மாயவரம்-தஞ்சாவூர் மார்க்கம்*)

கும்பகோணம் ரயில் நிலையத்திற்கு மேற்கே 2 மைல். சுவாமிமலைக்குப் போகும் பாதையிலிருக்கிறது. கொட்டையூரிலிருந்து மேற்கே 2 மைலில் சுவாமிமலை இருக்கிறது.

சுவாமி—கோடிசுரர். *தேவியார்*—பந்தாடுநாயகியம்மை.

மார்க்கண்டேயர் முதலியோர் பூசித்த தலம். கோயில் கீழைக் கொட்டையூரிலிருக்கிறது. விநாயகர்-கோடி விநாயகர். கோடி தீர்த்தம் என்ற கிணறு ஒன்றிருக்கின்றது. திருவலஞ்சுழியில் காவிரியிலிறங்கின ஏரண்ட முனிவர் இங்கு வெளியே வந்ததாகச் சொல்லுகிறார்கள். அவருடைய திருவுருவமும் கோயிலி லிருக்கிறது. அப்பர் சுவாமிகள் இத்தலத்துடன் வலஞ்சுழியையும் சேர்த்துப் பாடியிருக்கிறார். ஊரே முன்பு ஆமணக்கங் காடாக இருந்ததாம். சுவாமி ஆமணக்கங் கொட்டைச் செடியின் கீழிருந்து தோன்றினகாரணத்தால் ஊருக்குக் கொட்டையூர் என்ற திருநாமம் உண்டாயிற்று. சோழமகாராஜனுக்கு ஒருருவிற் கோடிலிங்கமாகத் தரிசனங்கொடுத்தமையால் ஆலயத்துக்குக் கோடீச்சுரம் என்ற பெயரும் போந்தன. இலிங்கத்திற் பலாக்காய்க்கு மேலிருப்பது போலச் சிறிய உருவங்கள் இருக்கின்றன.

113. திருக்கொண்டீச்சுரம் (மாயவரம்-காரைக்குடி மார்க்கம்)

நன்னிலம் ரயில் நிலையத்திலிருந்து மேற்கே $1\frac{1}{2}$ மைல்.

சுவாமி—பசுபதீசுரர். தேவியார்—சாந்தநாயகி.

இது வில்வாரணிய க்ஷேத்திரம். காமதேனு பூசித்த ஸ்தலம். கோயில் சிறியது. கோயிலைச் சுற்றிலும் மாலை போட்டாற்போல அகழி இருக்கிறது. அதற்கு புஷ்கரணி தீர்த்தம் என்று பெயர், ஒரு காரணத்தால் அம்மை பசுவாகி சுவாமியைத் தேடிக்கொண்டு இவ்வில்வ வனத்தில் வந்து கொம்பினுல் உழுதுகொண்டு வருகையில் சுவாமியின் சிரசில் கொம்பு பட்டு இரத்தம் வர தன் பாலையே விட்டுக் காயத்தை ஆற்றிப் பின்பு வழிபட்டதாகச் சொல்லுகிறுர்கள். இலிங்கத்தின் சிரசில் அந்த வடு கீற்றுயிருக்கிறது; உருவம் சிறியது.

பாலனுய்க் கழிந்த நாளும் பனிமலர்க் கோதை மார்தம்
மேலனுய்க் கழிந்த நாளும் மெலிவொடு மூப்பு வந்து
கோலனுய்ச் சுழிந்த நாளும் குறிக்கோளி லாது கெட்டேன்
சேலுலாம் பழன வேலித் திருக்கொண்டீச் சுரத்து ளானே.

114. திருக்கொள்ளம்பூதூர் அல்லது திருக்களம்பூர் (தஞ்சாவூர்-நாகூர் மார்க்கம்.)

கொரடாச்சேரி ரயில் நிலையத்திலிருந்து வடக்கே $3\frac{3}{4}$ மைல்.

சுவாமி—வில்வாரண்ய சுவாமி. தேவியார்—சௌந்தராம்பிகை.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர் இங்கே வரும்போது ஆறு மிகப் பெருகினதால் ஓடக்காரர்கள் ஓடத்தைக் கரையிலே நிறுத்திவிட்டுப் போயிருந்ததைக் கண்டு, தாமும் தம்முடன் வந்த அடியார்களுமாக ஓடத்தில் ஏறி, ஆற்றுக்கெதிரிலே தோன்றிய இந்த திருப்பதியின்மேலே "கொட்டமே கமழும் கொள்ளம்பூதூர்" என்னுந் திருப்பதிகம் பாடவும், பரமசிவனுடைய திருவருளால் ஓடஞ் சென்று அக்கரையையடைய, நாயனுர் அடியார்களுடன் இறங்கிச்சென்று தரிசனஞ் செய்த தலம். இந்த ஐதீகம் ஐப்பசிமீ அமாவாசையில் நடத்தப்பட்டு வருகின்றது.

கொட்ட மேகமழுங் கொள்ளம் பூதூர்
நட்டம் ஆடிய நம்பனை யுள்கச்
செல்ல வுந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறருள் நம்பனே.

Q2:38.2l
N153

115. திருக்கொள்ளிக்காடு (மாயவரம்-காரைக்குடி மார்க்கம்)

ஆலத்தம்பாடி ரயில்நிலையத்திலிருந்து வடமேற்கே 6 மைல்.

சுவாமி—அக்கினீசுரர். *தேவியார்*—பஞ்சினுமெல்லடியம்மை.

சுவாமியும் அம்மனும் மிகவும் சிறு உருவங்களாயிருக்கின்றன. திருநள்ளாற்றிலிருப்பதுபோல சனிபகவான் சந்நிதியும் விசேஷமா யிருக்கிறது. மேற்குப் பார்த்த சந்நிதி. அக்கினி பூசித்த தலம். இத்தலத்திற்கு வடகிழக்கு $1\frac{3}{4}$ மைலில் திருத்தெங்கூர் [152] இருக்கிறது.

116. கோகர்ணம் (குண்டக்கல்-லோண்டா மார்க்கம்)

ஹூப்ளி ரயில் நிலையத்திலிருந்து 82 மைல். மோட்டார் வசதி உண்டு.

பம்பாய் ராஜதானியில் வடகன்னடம் ஜில்லாவில் இருக்கிறது. அரேபியன் கடற்கரையிலுள்ள மார்மகோவாவில் கப்பலேறிக் கார்வார், அங்கோலா என்னும் ஊர்கள் வழியாகத் தெற்கே சென்றாலும் இங்கு போகலாம்.

சுவாமி—மகாபலநாதர். *தேவியார்*—கோகர்ணநாயகி.

இராவணன் இலங்கையில் ஸ்தாபிக்கும்படி சிவபெருமானிடம் பெற்றுக்கொண்டுவந்த சிவலிங்கத்தை, தேவர்கள் வேண்டுகோளின்பேரில் விநாயகமூர்த்தி பெற்றுப் பிரதிஷ்டை செய்த தலம். அச்சிவலிங்கத்தை இராவணன் தன் பலங்கொண்டமட்டும் எடுக்க முயன்றும் முடியமையால் "இது மாபலலிங்கம்" என்று சொன்னான். அக்காரணத்தாற் சிவலிங்கப்பெருமானுக்கு "மாபலலிங்கேசுரர்" என்னும் பெயர் எய்தியது. சிவலிங்கம் பசுவின் காதுபோற் குழைந்து நீண்டபடியால் இந்த தலத்துக்குக் கோ கர்ணம் (பசுவின் காது) என்னும் பெயர் உண்டாயிற்று.

117. கோடி *அல்லது* **குழகர் கோயில்** (திருத்துறைப்பூண்டி-கோடிக்கரை மார்க்கம்)

அகத்தியான்பள்ளி ரயில் நிலையத்திலிருந்து தெற்கே 6 மைல்

சுவாமி—அமிர்தகடேசுரர். *தேவி*—மையார்தடங்கண்ணியம்மை.

அமுத தீர்த்தம் என்கிற கிணறு பிரகாரத்திலிருக்கிறது. சுப்பிரமணிய சுவாமி அதிக சுந்தரமாயிருக்கிறார். ஆறுமுகமும் ஒருமுகமாக இருக்கிறது.

குழகர் கோயிலுக்குத் தெற்கு 1 மைல் தூரத்தில் கோடிக் கரை கடற்றுறைப் பட்டண மிருக்கிறது.

118. திருக்கோடிகா (மாயவரம்-தஞ்சாவூர் மார்க்கம்)

நாரசிங்கன்பேட்டை ரயில் நிலயத்திலிருந்து 1 மைல்.

சுவாமி—கோடிகா ஈசுரர். **தேவியார்**—வடிவாம்பிகையம்மை.

மூன்றுகோடி ரிஷிகள் பூசித்த தலம். சிருங்க தீர்த்தம் என்னுந் திருக்குளம் கோயிலுக்கு வடக்கி லிருக்கிறது.

119. திருக்கோட்டாறு (பேரளம்-காரைக்கால் மார்க்கம்)

பாதிக்குடி ரயில் நிலயத்திலிருந்து $2\frac{1}{2}$ மைல்.

சுவாமி—ராவதேசுரர். **தேவியார்**—வண்டமர்பூங்குழலம்மை.

வெள்ளை யானை பூசித்த தலம்.

120. கோட்டூர் (நீடாமங்கலம்-மன்னார்குடி மார்க்கம்)

மன்னார்குடி ரயில் நிலயத்திலிருந்து தெற்கே 10 மைல்.

சுவாமி—கொழுந்தீசுரர். **தேவியார்**—மதுரவசனாம்பிகை.

தேவர்களும் குச்சரரிஷியும் பூசித்த தலம். மேற்குப் பார்த்த சந்நிதி. சமீபத்தில் திருக்குளமிருக்கிறது. தேவியார் சந்நிதி கிழக்குப் பார்த்தது.

121. திருக்கோணமலை (மாஹோ ஜங்ஷன்-திருக்கோணமலை மார்க்கம்)

திருக்கோணமலை ரயில் நிலயம் (சிலோனுக்கு கீழ்த் திசையிலிருக்கிறது.)

சுவாமி—கோணேசுரர். **தேவியார்**—மாதுமையாளம்மை.

இஃது இலங்கைத் தீவிலுள்ளது. தேவேந்திரன் முதலியோர் பூசித்த தலம். இந்த ஸ்தலத்துக்கு 'தக்ஷிணகைலாசம்' என்னும் பெயர் உண்டு.

122. கோயில் அல்லது **சிதம்பரம்** (விழுப்புரம்-மாயவரம் மார்க்கம்)

சிதம்பரம் ரயில் நிலயத்திலிருந்து கோயில் $\frac{3}{4}$ மைல்.

சுவாமி—திருமூலநாதர். தேவியார்—உமையம்மை.

பூலோக கயிலாயம் என்று சொல்லப்படும் மகாக்ஷேத்திரம். தரிசிக்க முத்தியளிக்கும் தலம். பதஞ்சலி வியாக்கிரபாதர்

என்னும் இருடிகளுக்காகச் சபாநாயகர் பஞ்ச சபைகளில் ஒன்ருகிய கனகசபையிலே எக்காலமும் ஆநந்ததாண்டவஞ்செய் தருளும்பதி. ''தில்லைவா ழந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்'' என்று சபாநாயகராலேயே புகழப்பட்ட பெரும் பாக்கியத்தை யுடையவர்களாகிய தில்லை மூவாயிரவர் பூசிக்குந் திவ்யக்ஷேத்திரம்.

ஸ்ரீமந் மாணிக்கவாசகஸ்வாமிகள், திருநீலகண்ட நாயனர், திருநாளைப்போவார் நாயனர், கூற்றுவ நாயனர், கோச்செங்கட் சோழ நாயனர், கணம்புல்ல நாயனர், மறைஞானசம்பந்த சிவா சாரியார், உமாபதி சிவாசாரியார் முதலிய எண்ணிறந்த அடியார் கள் முத்திபெற்ற தெய்வீகத் தலம். மணிவாசகப் பெருமான் 'திருச்சிற்றம்பலக் கோவையார்' பாடி யருளின பழம்பதி. சேர மான் பெருமாணுயனர் 'பொன் வண்ணத்தந்தாதி' பாடின திருப்பதி. சபாநாதருடைய திருவடிகளே நமக்குப் பெருந்துணை' என்று நம்பி பூசித்துவந்த அச்சேரமான் பெருமா ணுயனருக்கு அவர் பூஜை முடிவிலே சபாநாயகர் தம்முடைய திருச்சிலம் பொலி கேட்கும்படிச் செய்து வந்த திருநகர். திருக்கோவலூரி லிருந்த மெய்ப்பொருணுயனர் தாம் உயிர்விடுங்காலத்திற் சபா நாயகரைத் தியானம்பண்ண, சபாநாயகர் அவருக்குத் தோன்றி முத்தி யருளிய முதுநகர். .

அபயகுலசேகர சோழ மகாராஜாவின் காலத்திலே நம்பி யாண்டார் நம்பியால் தேவாரப் பதிகங்கள் கண்டெடுக்கப்பட்ட ஸ்தானம். அநபாய சோழ மகாராஜாவின் காலத்திலே சேக் கிழார் நாயனர் பெரிய புராணம் பாடி யரங்கேற்றிய அரும்பதி.

மற்ற எல்லா க்ஷேத்திரங்களிலுமுள்ள சிவகலைகள் அனைத் தும் அர்த்த ஜாமத்தில் தன்னிடத்தில் வந்து சேரப்பெற்ற ஒப்புயர் வில்லாத க்ஷேத்திரம். இன்னும் சொல்லுதற்கரிய அநேக மகி மைகள் பொருந்திய இணையில்லாத மஹா க்ஷேத்திரம்.

கற்ருங் கெரியோம்பிக் கலியை வாராமே
செற்ருர் வாழ்தில்லைச் சிற்றம்பல மேய
முற்ரு வெண் திங்கள் முதல்வன் பாதமே
பற்ரு நின்ருரைப் பற்ரு பாவமே.

123. திருக்கோலக்கா *அல்லது* திருத்தாளமுடையார் கோயில் (*வீழுப்புரம்-மாயவரம் மார்க்கம்*)

சீகாழி ரயில் நிலையத்திலிறங்கி $\frac{1}{2}$ *மைல்.*

சுவாமி—சத்தபுரீசுரர். *தேவியார்*—ஓசைகொடுத்தநாயகி.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் பொற்ருளம் பெற்ற தலம்.



124. திருக்கோவலூர் (விழுப்புரம்-காட்பாடி மார்க்கம்)

திருக்கோயிலூர் ரயில் நிலயத்திலிருந்து $\frac{3}{4}$ மைல்.

சுவாமி—வீரட்டேசுரர். தேவியார்—சிவாநந்தவல்லி.

பெண்ணையாற்றின் தென்கரையிலுள்ளது. இதற்கெதிரில் வடகரையில் அறையணிநல்லூர் [14] இருக்கிறது. சந்நிதி மேற்கு பார்த்தது. அஷ்ட வீரட்டத்தில் ஒன்று அந்தகாசுரனைச் சங்கரித்தருளிய தலம். மெய்ப்பொருள் நாயனாருடைய திருப்பதி

திருக்கோவலூர் 'மேலூர்' என்றும், 'கீழூர்' என்றும் இரண்டு பாகமாயிருக்கிறது. சிவாலயம் கீழூரிலுள்ளது. அம்மன கோயில் பிரத்தியேகமாயிருக்கிறது. இதற்குத் தென்மேற்கிலுள்ள மேலூரிற் பெருமாள் கோயில் இருக்கிறது.

125. திருக்கோழம்பம் : (மாயவரம்-தஞ்சாவூர் மார்க்கம்)

நாரசிங்கன்பேட்டை ரெயில் நிலயத்திலிருந்து 2-மைல்.

சுவாமி—**கோகிலேசுரர்**. தேவியார்—**சௌந்தரநாயகியம்மை.**

தேவேந்திரனுற் குயிலாய்ப் போம்படி சாபம் பெற்ற சந்தன் என்னும் வித்தியாதரன் அநேக நாள் கழித்து இங்கு வந்து பூசிப்ப அவ்வுருமாறிப் பழைய ரூபம் பெற்ற ஸ்தலம்.

கயிலை நன்மலை யாளுங் கபாலியை
மயிலி யன்மலை மாதின் மணாளனைக்
குயில்ப யில்பொழிற் கோழம்ப மேயவென்
உயிரி னைநினைந் துள்ள முருகுமே.

126. திருக்கோளிலி அல்லது **திருக்குவளை.** (மாயவரம் காரைக்குடி மார்க்கம்)

திருநெல்லிக்காவல் ரெயில் நிலயத்திலிருந்து 6 மைல்.

சுவாமி—**கோளிலிநாதேசுரர்** தேவி—**வண்டமர்பூங்குழலம்மை.**

இது சப்தவிடங்க ஸ்தலங்களில் ஒன்று. சுந்தரமூர்த்தி நாயனுர் "நீளநினைந்தடியேன்" என்னும் திருப்பதிகம்பாடி இதற்குச் சமீபத்திலுள்ள குண்டையூரிலிருந்த நெல்மலையைத் திருவாரூருக்குப் பூதகணங்களா லெடுப்பித்துக்கொண்டுபோன ஸ்தலம். பிரமன் பூசித்த தலம். பெரிய கோயில். பிரம தீர்த்தம் கோயிலுக் கெதிரிலிருக்கிறது. அகத்தியர் பூசித்த லிங்கம் பிரகாரத்திலிருக்கிறது. பீமன் பகாசூரனைச் சம்ஹரித்து அதனு

லுண்டான பிரமஹத்தியை இந்தத்தலத்திற் போக்கிக் கொண்டான். பகா சூரனுடைய உருவமும் பிரமஹத்தியின் உருவமும் முன் கோபுரத்தில் இருக்கின்றன.

திருக்கோளிலிக்கு மேற்கு 1 மைல் தூரத்தில் 'எட்டிகுடி' யென்னும் பிரபலமான சுப்பிரமணியசுவாமி க்ஷேத்திர மிருக்கிறது.

நாளாய போகாமே நஞ்சணியுங் கண்டனுக்கே
ஆளாய அன்புசெய்வோம் மடநெஞ்சே அரன் நாமம்
கேளாய்நங் கிளைகிளைக்குங் கோடுபடாத் திறம் அருளிக்
கோளாய நீக்கும் அவன் கோளிலிஎம் பெருமானே,

127. திருச்சக்கரப்பள்ளி (மாயவரம்-தஞ்சாவூர் மார்க்கம்)

ஐயம்பேட்டை ரயில் நிலையத்திலிருந்து ½ மைல்.

சுவாமி—ஆலந்துறையீசுரர். **தேவியார்**—அல்லியங்கோதை.

இந்திர குமாரனான சயந்தனும், தேவர்களும் பூசித்த தலம். விஷ்ணு பூசித்து சக்கரம் பெற்றபடியால் சக்கரப்பள்ளி எனப் பெயர் வந்ததெனத் தெரிகிறது. "வண் சக்கர மாலுறைப்பாலடிபோற்றக் கொடுத்த பள்ளி",—என்பது தேவாரம்.

128. திருச்சத்திமுத்தம் (மாயவரம்-தஞ்சாவூர் மார்க்கம்)

தாராசுரம் ரயில் நிலையத்திலிருந்து 2 மைல். பட்டீசுரம் [140] இதனுடன் சேர்ந்து தெற்கிலிருக்கிறது. இரண்டும் அடுத்தடுத்து இருக்கின்றன.

சுவாமி—சிவக்கொழுந்தீசுரர். **தேவியார்**—பெரியநாயகியம்மை.

பராசக்தி சுவாமியைத் தழுவி முத்தங் கொடுத்த தலம். அந்த உருவமும் கோயிலி லிருக்கிறது.

மட்டார் குழலி மலைமகள் பூசை மகிழ்ந்தருளும்
சிட்டா திருச்சத்தி முத்தத் துறையும் சிவக்கொழுந்தே"—

என்பது தேவாரம். "பூவா ரடிச்சுவ டென்மேற் பொறித்துவை"—"இம்மையுன் றாளென்றன் நெஞ்சத் தெழுதிவை"—என அப்பர் சுவாமிகள் வேண்டித் துதித்த தலம்.

129 சாத்தமங்கை (மாயவரம்- காரைக்குடி மார்க்கம்)

நன்னிலம் ரயில் நிலையத்திலிருந்து 7½ மைல். சாத்தமங்கைக்கு தென்மேற்கு 1மைலில் திருமருகல் [227] என்னும் தலம் இருக்கிறது.

சுவாமி—அயவந்தீசுரர். **தேவியார்**—மலர்க்கண்ணம்மை.

சாத்தமங்கையிலுள்ள ஆலயத்துக்கு அயவந்தி என்று பெயர். திருநீலநக்கநாயனருடைய தலம். இந்நாயனர் சுவாமி



தரிசனத்துக்காக மனைவியுடன் ஆலயத்துக்குச் சென்றபோது ஒரு சிலந்திப்பூச்சி சிவலிங்கத்தின்மேல் விழ, மனைவியார் அன்பு மிகுதியால் அதை வாயால் ஊதி அகற்ற, நாயனர் அப்படிச் செய்தது அநுசிதமென்றெண்ணி மனைவியாரை நிக்கிரகித்துவிட, சிவபெருமான் அவருடைய கனவில் தோன்றி அவர் மனைவியார் ஊதின இடந்தவிர மற்றயிடம் சிலந்தியின் கொப்புளமாயிருப்பதைக் காட்டி, மனைவியாருடைய அன்பை வெளிப்படுத்தி, அவரை மறுபடி நாயனருடன் சேர்த்தருளிய தலம். 'அடிகள்நக் கன்பரவ அய வந்தி அமர்ந்தவனே', 'நிறையினர் நீலநக்க னெடு மாநகரென்று தொண்ட, ரறையுமூர் சாத்தமங்கை'—என்பன தேவாரம்.

130. திருச்சாய்க்காடு *என்பது* **சாயாவனம்** (*விழுப்புரம்-மாயவரம் மார்க்கம்*)

சீர்காழி ரயில் நிலயத்திலிருந்து தென்கிழக்கு 9 மைல். வழியில் 8-வது மைலில் திருவெண்காடு [263] தலம் இருக்கிறது.

சுவாமி—சாயாவனேசுரர். **தேவியார்**—குயிலுனுநன்மொழியம்மை.

உபமன்னியருஷி பூசித்த தலம். காசிக்குச் சமானமாகச் சொல்லும் 6 க்ஷேத்திரங்களில் திருச்சாய்க்காடு ஒன்று. அம்மன் பெயர் கோஷாம்பாள் என்றும் சொல்லுகிறார்கள். கோயிலுக்கெதிரில் ஐராவத தீர்த்தம் இருக்கின்றது. கோயிலை ஒட்டித் தேர்போன்ற விமானமொன்று சக்கிரத்துடன் இருக்கின்றது. இந்திரன் இக்கோயிலை விண்ணுலகுக்கு எடுத்துச்செல்ல முயன்றனனென்பர். இயற்பகை நாயனர், அவர் மனைவி இவர்களின் உற்சவ விக்கிரகங்கள் இருக்கின்றன.

131. சிக்கல். (*தஞ்சாவூர்-நாகூர் மார்க்கம்*)

சிக்கல் ரெயில் நிலயத்திலிருந்து 2 பர்லாங் நாகபட்டணத்துக்கு மேற்கு 3-மைல்.

சுவாமி—வெண்ணெயிலிங்கேசுரர்.

தேவியார்—வேனெடுங்கண்ணியம்மை.

சுவாமி சந்நிதி கட்டுமலைமேலிருக்கிறது. தீர்த்தம் க்ஷீரபுஷ்கரணி. மல்லிகைச்செடி விசேஷம். வசிஷ்டர் தம்முடைய காமதேனுவைப் பெறும்பொருட்டுப் பூசித்த ஸ்தலம். இங்கே சிங்காரவேலவராகிய சுப்பிரமணிய சுவாமி திவ்ய சுந்தரமூர்த்தியாய் விளங்குகிறார்; அவர் சந்நிதியுங் கட்டுமலைமேற்றான் இருக்கிறது. சிங்கார வேல்வருக்கு ஆட்டுக்கடா வாகனம் ஒன்றிருக்கிறது. இது வெகு நன்றாயிருக்கிறது. காமதேனு இங்கிருந்த

தலம் 80. திருக்கழுக்குன்றம்.



மலையின்பேரிலுள்ள ஆலயத் தோற்றம்.
இங்குதான் தினசரி 2 பக்ஷிகள் வந்து
அன்னம் புசிக்கின்றன.

தலம் 193. திருப்பனந்தாள்.



நாக கன்னிகை தீர்த்தமும், ஆலய
கோபுரக் காட்சியும். கார்த்திகை மாதம்
வெள்ளிக்கிழமைகளில் மூழ்கினல்
விவாகம் கைகூடும்.

தலம் 107. திருக்கேதாரம்.



இமயமலையின் பனிமலைச் சிகரத்தில்
வீற்றிருக்கும் கைலாச நாதனின்
ஆலய அற்புதக் காட்சியை தரிசியுங்கள்.

உத்தரகோசமங்கை (ராமநாதபுரம்)

ஆலயத்தின் வெளித்தோற்றம்.
நடராஜர் சந்நிதி இங்கு விசேஷம்.

வடதிருநாகேச்சுரம்.

ஸ்ரீ நாகேச்சுரப்பெருமான் ஆலய முன் கோபுரம் (சென்னை பூவிருந்தவல்லிக்குத் தெற்கே 4 மைல், பல்லாவரம் ரயில் நிலையத்திற்கு மேற்கே 4 மைல். சேக்கிழார் பெருமானல் பிரதிஷ்டை செய்யப்பட்ட தலம்.

குன்றத்தூர்.

பெரியபுராணம் திருவாய் மலர்ந்தருளிய சேக்கிழார் பெருமான் தனி ஆலயமும், உற்சவ மூர்த்தியும். பிரதி வைகாசி பூசந்தோறும் பிரபலமான உற்சவம் நடைபெறுகின்றன.





குன்றத்தூர் மலையின்மேலுள்ள ஸ்ரீ சுப்ரமண்ய சுவாமி ஆலயத்தின் தோற்றம்.

படியால் அதன் பால்பெருகி யெங்கும் வெண்ணெயா யுறைந்திருந்தது. வசிஷ்டர் அவ்வெண்ணெயை எடுத்துச் சிவலிங்கமாக்கிப் பூசித்தார். அதனுற் சுவாமிக்கு 'வெண்ணெயிலிங்கேசுரர்,' என்று பெயருண்டாயிற்று, அந்த லிங்கத்தை வேறிடத்தில் வைக்க எடுக்கும்பொழுது அது வராமற் சிக்கிக்கொண்டபடியால் ஊருக்குச் சிக்கல என்னும் பெயர் உண்டாயிற்று. இந்த ஸ்தலத்திற் சூரசம்ஹார உற்சவம் மிகவும் விசேஷம்.

கோயிலுக்குள் வடக்குப்பக்கத்திற் கோலவாமனப் பெருமாளுடைய சந்நிதி யிருக்கிறது.

132. திரிசிராப்பள்ளி (ரயில் நிலையங்கள் இரண்டு. ஒன்று சந்திப்பு நிலையம்; ஒன்று டவுன் நிலையம். டவுன் நிலையத்திலிறங்கினுல் ஊர், கோயில் எல்லாம் ½ பர்லாங் தூரத்திலிருக்கிறது. சந்திப்பு நிலையத்திலிறங்கினுல் ஊர், கோயில் முதலியன சுமார் 6 மைல். காட் லயன் வழியாகப் போனுல்தான் டவுன் ரயில் நிலையம் வருகிறது. மெயின் லயனில் போனுல் சந்திப்பு ரயில்நிலயத்தில்தான் இறங்க வேண்டும்.

சுவாமி—தாயுமானேசுரர். தேவியார்—மட்டுவார்குழலம்மை.

பெரிய ஊர். மதுரைக் கடுத்தபடி திரிசிராப்பள்ளி என்று சொல்லலாம். மூன்று சிரஸையுடையவனுகிய 'திரிசிரன்' என்னும் அரக்கன் பூசித்தமையின் இந்த ஸ்தலத்துக்குத் 'திரிசிராப்பள்ளி' என்னும் பெயரெய்தியது. இது 'தக்ஷிண கைலாசம்' எனப்படும்.

கோயில் மலைமே லிருக்கிறது. சுவாமியிடத்தில் அன்பு மிகுந்திருந்த ஒரு மாது கருப்பமாயிருந்து பிரசவகாலத்தில் காவிரி பெருகினதால் தன் தாய் வந்து உதவப்பெருமற் சங்கடப்படும்பொழுது, ஸ்வாமி தாமே அவளுடைய தாயைப்போல் வந்து மருத்துவம் பார்த்து ஆதரித்த அருமையான ஸ்தலம். இதனுற் சுவாமிக்குத் தாயுமானவர் எனும் பெயர் வந்தது.

அழகிய தமிழ்ப் பாடல்களாற் கடவுளைப் பாடித் துதித்த தாயுமான சுவாமிகள் எழுந்தருளியிருந்த ஸ்தலம்.

மலை உச்சியில் உச்சிப்பிள்ளையார் கோயில் இருக்கிறது. அங்கிருந்து பார்த்தால் திருவானைக்கா, ஸ்ரீரங்கம் ஆகிய தலங்களின் கோபுரங்களும், காவிரியாறும், கொள்ளிடநதியும், திரிசிராப்பள்ளி முதலியவை தெரிகின்றன. டவுன் பஸ் ஓடுகிறது.

இங்கிருந்து சமீபத்திலுள்ள ஸ்ரீரங்கம், திருவானைக்கா, திருமுக்கீசுரம், பிக்ஷாண்டர்கோயில், முக்கிய சுப்ரமண்ய ஸ்தலங்களான வயலூர், விராலிமலை இன்னும் அனேக திவ்விய ஸ்தலங்களைத் தரிசிக்கலாம்.

133. சிவபுரம் (மாயவரம் - கும்பகோணம் மார்க்கம்).

கும்பகோணம் ரயில் நிலையத்திலிருந்து 2 மைல்.

சுவாமி—சிவபுரநாதர். **தேவியார்**—சிங்காரவல்லி.

விஷ்ணு வராகமாய்ப் பூசித்த ஸ்தலம்; இந்த அதிசயம் கோயில் மதிற் சுவரிற் காட்டப்பட்டிருக்கிறது. கோயிலின்முன் சண்பக விருஷம் ஒன்றிருக்கிறது.

134 சிறுகுடி (மாயவரம் - திருவாரூர் மார்க்கம்).

பேரளம் சந்திப்பு ரயில் நிலையத்திலிருந்து மேற்கே 5 மைல். வழியில் திருமீயச்சூர் [234], திருப்பாம்புரம் [200] ஆகிய இரண்டு தலங்கள் வருகின்றன.

சுவாமி—மங்களேசுரர். **தேவியார்**—மங்களநாயகி.

செவ்வாயும், கருடனும், கந்தருவர்களும் பூசித்த ஸ்தலம். கோயில் சிறிது. கோபுரமும் சிறிது.

திடமதி மதிலணி சிறுகுடி மேவிய
படமலி யரவுடை யீரே
படமலி யரவுடை யீருமைப் பணிபவர்
அடைவது மமருல கதுவே

135. திருச்சிற்றேமம் என்பது சிற்றும்பூர் (மாயவரம் - அரந்தாங்கி மார்க்கம்).

ஆலத்தம்பாடி ரயில் நிலையத்திலிருந்து 4 மைல்.

சுவாமி-பொன்வைத்தநாதேசுரர். **தேவியார்**-அகிலாண்டநாயகி.

விருக்ஷம் ஆத்தி; மிகவும் பழமையா யிருக்கிறது. வேத தீர்த்தம் கோயிலுக்கு மேற்கிலிருக்கிறது அகஸ்தியரும், தேவேந்திரனும், நாகராஜனும், பிரமாவும், வேதங்களும் பூசித்த ஸதலம். சுவாமிக்கு எட்டு திருநாமங்கள் உண்டு.

சுவாமி சந்நிதியில் தென்பக்கத்தில் ஒரு தேன்கூடு இருக்கிறது. சித்தர்கள் தேனீக்கள்போல் உருவெடுத்துவந்து பூசித்ததாகச் சொல்லுகிறார்கள். இந்தத் தேன்கூட்டுக்கும் தினம் பூஜை நடக்கிறது. கோயிலுக்கு வடக்கே திருக்குளம் இருக்கிறது. அதற்குச் சொர்ணபுஷ்கரணி என்று பெயர்.



136. திருச்சுழியல் (விருதுநகர்-தென்காசி மார்க்கம்).

விருதுநகர் ரயில் நிலையத்திலிருந்து 19 மைல். வழியில் 11-வது மைலில் அருப்புக்கோட்டை என்னும் ஊர இருக்கிறது

சுவாமி—திருமேனிநாதேசுரர். தேவியார்—துணைமாலையம்மை.

சதாநந்த முனிவர் முதலியோர் பூசித்த ஸ்தலம். பார்வதி தேவியார் தம்மைச் சிவபெருமான் மணம் புரியும்படி பூசித்த ஸ்தலம். பெரிய கோயில். மதுரை கோயில் பாணியில் அமைந்திருக்கிறது. நடேசர் விக்கிரகம் சிலாரூபமா யிருக்கிறது. கோயிலுக்குப் பெரிய நந்தவனம் ஒன்றிருக்கிறது.

137. திருச்செங்காட்டங்குடி(மாயவரம்-அரந்தாங்கி மார்கம்)

நன்னிலம் ரயில் நிலையத்திலிருந்து 6 மைல். போகும் வழியில் 4-வது மைலில் திருப்புகலூர் [203] வருகிறது. பிறகு முடிகொண்டான் ஆற்றைக் கடந்து 1 மைல் சென்றால் திருக்கண்ணபுரம். அங்கிருந்து கிழக்கே 1-மைல் தூரத்தில் திருச்செங்காட்டான்குடி. ஆக 6 மைல். வண்டி வசதி உண்டு.

சுவாமி—கணபதீச்சுரர். தேவியார்—திருக்குழலுயகியம்மை.

விநாயகமூர்த்தி கஜமுகாசுரனை சம்ஹாரம் செய்த ஸ்தலம். அவனது இரத்தம்பெருகி செங்காடாய் இருந்தமைப்பற்றி இந்த ஸ்தலத்துக்குக் திருச்செங்காட்டங்குடி என்னும் பெயர் உண்டாயிற்று. கஜமுகாசுரனைக் கொன்ற பழி நீங்க விநாயக மூர்த்தி பரமசிவனைப் பூசனைசெய்த தலம். அதனால் இங்குள்ள ஆலயத்துக்குக் கணபதீச்சுரம் என்று பெயர்.

சிறுத்தொண்டநாயனர் தனது ஒரே பிள்ளையாகிய சீராளன் என்னும் சிறுவனை வைரவவேடம் பூண்டுவந்த பரமசிவனுக்குக் கறியாக்கி அளித்தபின் அவருடைய திருவருளால் அக்குழந்தை உயிர்த்தெழுந்துவந்த-ஸ்தலம்.

பழைய திருவாத்தி விருக்ஷம் உற்சவர் சந்நிதிக்கெதிரிலிருக்கிறது. சிறுத்தொண்டர், அவர் பிள்ளை சீராளன், அவர் மனைவி சந்தனநங்கை இவர்களதுசிலா விக்கிரங்கள் பிரகாரத்திற் கீழ்ப் பக்கத்தில் உற்சவர் சந்நிதிக்கெதிரில் இருக்கின்றன. கோயிலுக்குத் தெற்கே சூரிய தீர்த்தம் இருக்கிறது.

கூரார விரைதேர்ந்து குளமூலவி வயல்வாழுந்
தாராவே மடநாராய் தமியேற்கொன் றுரையீரே
சீராளன் சிறுத்தொண்டன் செங்காட்டங் குடிமேய
பேராளன் பெருமான்றன் அருளொரு நாள் பெறலாமே.



138. திருச்செம்பொன்பள்ளி அல்லது **செம்பொன்னர் கோயில்** (மாயவரம்-தரங்கம்பாடி மார்க்கம்)

செம்பொன்னர் கோயில் ரயில் நிலையத்திலிருந்து 2 பர்லாங்.

சுவாமி—சொர்ணபுரீசுரர். தேவியார்—சுகந்தவனநாயகியம்மை.

இந்திரனும், குபரேனும் பூசித்த ஸ்தலம்.

139. திருச்சேய்ஞலூர் (மாயவரம்-தஞ்சாவூர் மார்க்கம்)

ஆடுதுறை ரயில் நிலயத்திலிருந்து 7 மைல்.

சுவாமி—சத்தியகிரீசுரர். தேவியார்—சகிதேவியம்மை.

சேய் (குமாரக்கடவுள்) தாம் உறைதற்கு நல்ல ஊர் என்று உவந்தமை கண்டு தேவர்கள் இத்தலத்திற்குச் சேய்நலூர் எனப் பெயரிட்டனர். குமாரக்கடவுள் சூரசம்ஹாரஞ் செய்ய எழுந்தருளி வந்தபோது சிவபெருமானைப் பூசித்த ஸ்தலம்.

சண்டேசுரநாயனுர் திருவவதாரஞ்செய்து முத்தி பெற்ற ஸ்தலம்.

பீரடைந்த பாலதாட்டப் பேணு தவன்றாதை
வேரடைந்து பாய்ந்ததாளை வேர்தடிந் தான்றனக்குத்
தாரடைந்த மாலே சூட்டித் தலைமை வகுத்த தென்னே
சீரடைந்த கோயில் மல்கு சேய்ஞலூர் மேயவனே.

140. திருச்சேறை என்பது **உடையார் கோயில்** (மாயவரம்-தஞ்சாவூர் மார்க்கம்)

கும்பகோணம் ரயில் நிலயத்திலிருந்து 8 மைல். போகும் வழியில் அரசிற்கரைபுத்தூர் [10] என்னும் தலமும், திருநறையூர் [61] என்னும் தலமிருக்கிறது.

சுவாமி—செந்நெறியப்பர். தேவியார்—ஞானவல்லியம்மை

தௌமியருஷி பூசித்த ஸ்தலம்.

141. திருச்சோபுரம் அல்லது **தியாகவல்லி** (விழுப்புரம்-மாயவரம் மார்க்கம்)

ஆலப்பாக்கம் ரயில் நிலயத்திலிருந்து வடகிழக்கில் 2 மைல். வழியில் படகுயேறி உப்பங்கழியைக் கடந்து மணல் வழியே செல்லவேண்டும்.

சுவாமி—சோபுரநாதேசுரர் தேவியார்—சோபுரநாயகி.

சுற்றிலும் மணற்குன்றுகள் இருக்கின்றன. கடலும் அதிக சமீபத்திலிருக்கிறது.

அகஸ்தியர் பூசித்த ஸ்தலம்,

142. திருச்சோற்றுத்துறை அல்லது **திருச்சற்றுரை** (மாய வரம்-தஞ்சாவூர் மார்க்கம்)

தஞ்சாவூர் ரயில் நிலையத்திலிருந்து 9 மைல். திருவை யாற்றுக்குப் போகும் மார்க்கத்தில் 7-மைல் சென்று திருக் கண்டியூர் போய் அங்கிருந்து தென்கிழக்காய் 2-மைல் சென்றால் இத்தலம் இருக்கிறது.

சுவாமி—ஓதவனேசுரர். தேவியார்—அன்னபூரணி.

திருச்சோற்றுத்துறை ஸப்த ஸ்தானங்களில் மூன்றாவது தலம். ஸ்வாமி, சிவபக்தனான அருளாளன் என்னும் மறையவன் பசியால் வருந்தும்போது, எடுக்க எடுக்கக் குறையாதிருக்கும்படி யான சோறு அளித்தருளிய ஸ்தலம். இந்திரன், சூரியன் முதலி யோர் பூசித்த ஸ்தலம். ஊருக்குத் தெற்கே "சோறுடையான் வாய்க்கால்" என்று ஒரு வாய்க்கால் ஓடுகிறது.

143. தண்டலை நீணெறி அல்லது **தண்டலைச்சேரி** (மாய வரம்-காரைக்குடி மார்க்கம்)

திருத்துறைப்பூண்டி சந்திப்பு ரயில் நிலையத்திலிருந்து வடக்கே 3 மைல்.

சுவாமி—நீணெறிநாதேசுரர். தேவியார்—ஞானம்பிகை.

கூர்மாவதாரங் கொண்ட விஷ்ணு அகங்கரித்துக் கடலைக் கலக்க, சிவபெருமான் அக்கூர்மத்தின் அகத்தை யடக்கி அதன் ஓட்டை யணிந்தருளிய ஸ்தலம். அரிவாட்டாய நாயனார் செந்நெ லரிசி, மாவடு, செங்கீரை முதலியவை நிவேதித்து முக்தியடைந்த ஸ்தலம். அவர் ஊராகிய கணமங்கலம் கிழக்கே அரை மைல் தூரத்திலிருக்கிறது. விருக்ஷம், குருந்தம்-பெரியமரம், இலைகளில் ஒரே இதழ் உண்டு.

144. தருமபுரம் (பேரளம்-காரைக்கால் மார்க்கம்).

காரைக்கால் ரயில் நிலையத்திலிருந்து மேற்கே 1-மைல்.

சுவாமி—யாழ்மூரிநாதேசுரர். தேவியார்—தேனமிர்தவல்லி.

திருஞானசம்பந்த சுவாமிகளோடு யாழ் வாசித்துக் கொண்டு வந்த திருநீலகண்ட யாழ்ப்பாணருடைய தாயார் பிறந்த ஊர்.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் "மாதர் மடப்பிடி" என்னும் யாழ்மூரிப்பதகம் பாடியருளிய ஸ்தலம். பிரமா, தருமராஜன் முதலியோர் பூசித்த ஸ்தலம்.

மாதர்ம டப்பிடியும் மட வன்னமு மன்னதோர்
நடை யுடைம் மலை மக டுணையென மகிழ்வர்
பூதவி னப்படைநின் றிசை பாடவு மாடுவ
ரவர் படர் சடைந் நெடு முடியதொர் புனலர்
வேதமொ டேழிசைபா டுவ ராழ்கடல் வெண்டிரை
யிரைந் நுரை கரை பொரு துவிம்மிநின் றயலே
தாதவிழ் புன்னைதயங் குமலர்ச்சிறை வண்டறை
யெழில் பொழில் குயில் பயி றருமபு ரம்பதியே.

145. திருத்தலைச்சங்காடு. (மாயவரம்-தரங்கம்பாடி மார்க்கம்)

ஆக்கூர் ரெயில் நிலையத்திலிருந்து வடக்கே 3-மைல்.

சுவாமி—சங்கருணதேசுரர். தேவியார்—சௌந்தரநாயகியம்மை.

மகாவிஷ்ணு சிவபெருமானை பூசித்துப் பாஞ்சசந்யம் என்னும் சங்கத்தைப் பெற்ற ஸ்தலம்.

தலைச்சங்காட்டுக்கு வடகிழக்கு 1 மைலில் திருவலம்புரம் [245] என்னும் தலம் இருக்கிறது. அது விஷ்ணு பூசித்து வலம்புரிச்சங்கு பெற்ற தலம்.

146. திருத்தலையாலங்காடு (தஞ்சாவூர்-நாகூர் மார்க்கம்)

கொரடாச்சேரி ரயில் நிலையத்திலிருந்து வடகிழக்கு 6 மைல். இதற்குக் கிழக்கு 3 மைலில் 'திருப்பெருவேளூர்' [217] இருக்கிறது.

சுவாமி—ஆடவல்லாசுரர். தேவியார்—திருமடந்தையம்மை.

கபிலரிஷி பூசித்த ஸ்தலம். தாருகாவனரிஷிகள் அனுப்பின முயலகன் முதுகின்மீது சிவபெருமான் நடித்தருளிய ஸ்தலம்.

147. திருந்துதேவன்குடி (மாயவரம்-தஞ்சாவூர் மார்க்கம்)

திருவிடைமருதூர் ரயில் நிலையத்திலிருந்து 5 மைல்.

சுவாமி—கற்கடகேசுரர். தேவியார்—அருமருந்தம்மை.

கோயில் வயல்களுக்கு மத்தியில் இருக்கிறது. சோயிலைச் சுற்றி ஓர் நீர்த்தேக்கம் மாலை போட்டதுபோலிருக்கிறது. திருந்துதேவன்குடி என்னும் ஊர் இப்போது இல்லை.

நண்டு பூசித்து முத்தியடைந்த ஸ்தலம். நண்டு பூஜை செய்த பாவனை ஒரு கற்றூணிற் காட்டப்பட்டிருக்கிறது. சுவாமியின்

உருவ முன் பக்கத்தில் வெட்டுண்டு யிருக்கிறது. அம்மன் சந்நிதி இரண்டு உள்ளன.

148. திலதைப்பதி அல்லது **கோயிற்பத்து** (மாயவரம்-காரைக்குடி மார்க்கம்)

பூந்தோட்டம் ரயில் நிலையத்திலிருந்து வடமேற்கே 1½ மைல். அரசிலியாற்றின் தென்கரையிலுள்ளது.

சுவாமி—முத்தீசுரர். *தேவியார்*—பொற்கொடியம்மை.

சிதலைப்பதி என்னும் ஊருக்கு ¾ மைல் தூரத்தில் கோயிலிருக்கிறது. திலதைப்பதி என்பது சிதலைப்பதி என வழங்குகிறது. கோயில் சிறிது. சந்திரன் பூசித்த ஸ்தலம். தசரத சக்கரவர்த்திக்கு இராம லக்ஷமணர்கள் திலதர்ப்பணம் செய்த ஸ்தலம்.

இங்குத் தர்ப்பணம், சிரார்த்தம் இவை செய்வது விசேஷம்.

புரவி யேழும்மணி பூண்டியங் குங்கொடித் தேரினன்
பரவி நின்றுவழி பாடுசெய் யும்பர மேட்டியூர்
விரவிஞா ழல்விரி கோங்குவேங் கைசுர புன்னைகண்
மரவமவ் வன்மல ருந்தில தைம்மதி முத்தமே.

149. திருத்தினைநகர் அல்லது **தீர்த்தனகிரி** (விழுப்புரம்-மாயவரம் மார்க்கம்).

ஆலப்பாக்கம் ரயில் நிலையத்திலிருந்து 5½ மைல்.

சுவாமி—சிவகொழுந்தீசுரர். *தேவியார்*—ஒப்பிலாநாயகி.

பள்ளன் ஒருவன் உழுதுகொண்டிருக்கும்போது சிவபெருமான் ஜங்கமர்போல் வந்து அன்னம் கேட்க அவன் தன்னூருக்குச் சென்று கொண்டுவருவதாய்ச் சொல்லிப்போனன். அவன் வருவதற்குள் சுவாமி அவன் உழுதிருந்த நிலத்தில் தினைவிளைந்து பழுத்திருக்கும்படி செய்து மறைந்து விட்டார். பள்ளனும் அவன் மனைவியும் வந்து தினை விளைந்திருக்கக் கண்டு ஆச்சரியமுற்று ஜங்கமரைக் காணுது திகைத்தனர். ஸ்வாமி இடபவாகனரூடராய் தரிசனங்கொடுத்து அவர்களைத் தம்முடைய லோகத்திற் சேர்த்தருளினர் என்பது புராணவரலாது. அதிசயமாகத் தினைவிளைந்த காரணத்தால் இத்தலத்திற்கு திருத்தினைநகர் என்னும் பெயர் உண்டாகியது. கோயில் சிறிது. கோயிலுக்கு வடக்கிலிருக்கும் தீர்த்தம் 'சாம்புவதடாகம் என்று சொல்லப்படுகிறது.

150. திருத்துருத்தி *அல்லது* **குற்ருலம்** *(மாயவரம-தஞ்சாவூர் மார்க்கம்)*

குற்ருலம் ரயில் நிலையத்திலிருந்து ½ மைல்.

சுவாமி—வேதேசுரர். *தேவியார்*—முகிழாம்பிகை,

சுந்திரமூர்த்தி ஸ்வாமிகள், சங்கிலி நாச்சியார் பொருட்டுச் செய்த சத்தியம் தவறி, திருவொற்றியூரிலிருந்து திருவாரூருக்குச் செல்ல எத்தனித்தபோது அவருடைய இரண்டு கண்களின் பார்வையை இழந்தது மல்லாமல், தேகத்திலும் கொடிய பிணி உண்டாயிற்று. ஒரு கண்ணின் பார்வையைக் காஞ்சீபுரத்திலும், மற்ெருரு கண்ணின் பார்வையைத் திருவாரூரிலும் பெற்று, திருத்துருத்தியாகிய இந்த க்ஷேத்திரத்தின் வடக்கு பாரிசத்திலுள்ள தீர்த்தத்தில் ஸ்நானம் செய்ய உடற்பிணி நீங்கப் பெற்ற தலம்.

151. திருத்துறையூர் *அல்லது* **திருத்தளூர்** *(விழுப்புரம்-மாயவரம் மார்க்கம்)*

திருத்துறையூர் ரயில் நிலையத்திலிருந்து 1½ மைல்.

சுவாமி—பசுபதீசுரர். *தேவியார்*—பூங்கோதைநாயகி.

சிவஞான சித்தியார் என்னும் சைவ சித்தாந்த சாஸ்திரத்தைச் செய்தருளிய சகலாகம பண்டிதர் என்னுங் காரணப் பெயரையுடைய அருணந்திசிவாசாரியராகிய சந்தானுசாரியார் திருவவதாரஞ் செய்து முத்திபெற்ற ஸ்தலம். மேற்கு பார்த்த சந்நிதி. அருணந்தி சிவாசாரியார் சந்நிதானமும், சுந்தரரைத் தடுத்தாட் கொண்டவர் சந்நிதானமும் கோயிலுக்கு வெளியே மேற்கே திருக்குளத்துக்கு அருகில் உள்ளன. கோயிலுக்குள் பீமன், சூரியன் இவர்கள் பூசித்த இலிங்கங்கள் உள்ளன.

152. திருத்தெங்கூர் *(மாயவரம்- காரைக்குடி மார்க்கம்)*

திருநெல்லிக்காவல் ரயில் நிலையத்திலிருந்து தென்மேற்கு ½ மைல். [175]

சுவாமி—வெள்ளிமலைநாதேசுரர். *தேவி*—பெரியநாயகியம்மை.

லக்ஷ்மியும், நவக்கிரகங்களும் பூசித்த ஸ்தலம். பிரகாரத்தில் 9 இலிங்கங்கள் இருக்கிறது. இலக்குமி பூசித்த லிங்கம் இலக்குமிக்கு எதிரிலிருக்கிறது. அம்மன் சந்நிதி தனியே யிருக்கிறது.

திருத்தெங்கூருக்குத் தென்மேற்கு 1¾ மைல் அளவில் திருக்கொள்ளிக்காடு [115] என்னும் தலம் இருக்கிறது.

தலம் 104. திருக்குறுக்கை.



ஆலயத்தின் முன்கோபுரமும், சூலதீர்த்தமும். அழகான தென்னஞ் சோலைகளின் நடுவே அமைந்திருக்கும் காட்சியைப் பாருங்கள்.

ஸ்ரீ வில்லிபுத்தூர்.

ஆண்டாள் அவதாரஞ் செய்த தலம். வானளாவிய கோபுரமும் இரதோற்சவக் காக்ஷியும் பார்ப்பவர் மனதைக் கவர்கின்றன.

தலம் 275. திருபுவனம்.



மூன்றும் குலோத்துங்கனல் கட்டப்பெற்ற ஆலயம். இங்குதான் பெருமான் சரப உருக்கொண்டு நரசிம்ஹத்தின் வலிவைக் குன்றவைத்தார்.



தேவிபட்டணம்
(நவபாஷாணம்)

ஸ்ரீ ராமர் தோஷ பரிகாரம் நீங்கும்பொருட்டு கடற்கரையில் நிர்மாணம் செய்யப்பட்ட நவக்கிரக சிலைகள்.

பாபநாசம் (அகஸ்தியர் கோயில்)



தாம்பிரபரணி ஆற்றின் கரையிலும், பொதியமலைச் சாரலிலுமுள்ள அகஸ்தியருக்கு கல்யாண காட்சி கொடுத்த தலம்.

தென்காசி (விஸ்வநாதர் ஆலயம்)

வெளிக்கோபுரம் பிளவுபட்டிருப்பதைப் பாருங்கள். இக் கோயில் சிற்பங்கள் அற்புதமானது. பராக்கிரம பாண்டியனால் கட்டப்பெற்றது.

சுசீந்திரம். (திருநெல்வேலி- கன்னியாகுமரி மார்க்கம்)



இங்கு மும்மூர்த்திகளுக்கும் சந்நிதிகளுண்டு. அற்புதச் சித்திரங்களை இங்கு காணலாம்.

திருப்புலானி (ராமநாதபுரம்) (தர்ப்பைசயனம்)



ஸ்ரீ ராமர் தர்ப்பையின்மேல் சயனம் கொண்ட தலம். சயன தரிசனம் பார்க்கத்தக்கது.

153. திருத்தெளிச்சேரி *அல்லது* **கோயிற்பத்து** *(மாயவரம்-தரங்கம்பாடி மார்க்கம்)*

பொறையார் ரோட்டு ரயில் நிலயத்திலிருந்து ½ மைல்.

சுவாமி—பார்வதீசுரர். *தேவியார்*—சத்தியம்மை.

திருஞான சம்பந்த சுவாமிகள் அடியார் திருக்கூட்டத்துடன் செல்லுகையிற், 'பரசமய கோளரிவந்தார்' என்று முத்துச் சின்னங்கள் ஊத, அதனைப் பொருத பௌத்தர்கள் வந்து தடுக்க, தேவாரத் திருமுறை யெழுதும் அடியவர்.

புத்தர் சமண்கழுக் கையர் பொய்கொளாச்
சித்தத் தவர்க டெளிந்து தேறின
வித்தக நீறணி வார்வி னைப்பகைக்
கத்திர மாவன வஞ்செ ழுத்துமே.

என்னும் பஞ்சாக்ஷரப் பதிகம் பாடி அந்தப் பௌத்தர்களின் தலைவனர் வந்த புத்தநந்தின் தலைமேல் இடிவிழும்படி செய்த ஸ்தலம். பௌத்தர்கள் மீண்டும் வேறொரு தலைவனுடன் வந்து அவ்வடியவருடன் தர்க்கஞ் செய்து தோல்வியுற்றுப் பிள்ளையாரின் அநுக்கிரஹத்தாற் சைவர்களாகிய தலம். மேற்குப் பார்த்த சந்நிதி. எதிரிற் குளமிருக்கிறது. பங்குனி 13உ முதல் 10-நாளைக்குச் சூரியனுடைய கிரஹணங்கள் ஸ்வாமியின்மேல் விழுகின்றனவாம்.

154. தென்குடித்திட்டை *என்பது* **திட்டை** *(மாயவரம்-தஞ்சாவூர் மார்க்கம்).*

திட்டை ரயில் நிலயத்திலிருந்து 1 மைல்.

சுவாமி—பசுபதீசுரர். *தேவியார்*—உலகநாயகியம்மை.

கௌதமர், ஆதிசேஷன், காமதேனு முதலியோர் பூசித்த ஸ்தலம்.

155. தேவூர் *(தஞ்சாவூர்-நாகூர் மார்க்கம்)*

கீவளூர் ரயில் நிலயத்திலிருந்து 2½ மைல்.

சுவாமி—தேவபுரீசுரர். *தேவியார்*—மதுரபாஷணியம்மை.

சுவாமி கட்டுமலைமே லிருக்கிறர். கௌதமர், பிரகஸ்பதி, இந்திரன், குபேரன் முதலியோர் பூசித்த ஸ்தலம்; கௌதமலிங்கம் மலைமேல் வடபக்கத்தில் இருக்கின்றது. கோயிலுக்குத் தென்கிழக்கில் தேவதீர்த்தம் இருக்கிறது. இவ்விடத்து ரிஷப வாகனம் வெகு அழகுடன் அமைந்திருக்கிறது.



156. திருநணா என்பது **பவானி** (திருச்சி-ஈரோடு மார்க்கம்).

ஈரோடு ரயில் நிலையத்திலிருந்து வடக்கு 9 மைல். பவானி ஆறு காவிரி நதியுடன் கூடுமிடத்தி லிருக்கிறது.

சுவாமி—சங்கமுகநாதேசுரர். தேவியார்—வேதாம்பிகை.

குபேரன், விசுவாமித்திரர், பராசரர் முதலியோர் பூசித்த ஸ்தலம். பிரகாரத்தில் இலந்தை மரங்கள் இருக்கின்றன. ஆதிகேசவப் பெருமாள் சந்நிதி கோயிலுக்குள் இருக்கிறது.

157. திருநல்லம் என்பது **கோனேரிராஜபுரம்** (மாயவரம்-தஞ்சாவூர் மார்க்கம்)

ஆடுதுறை ரயில் நிலையத்திலிருந்து 5 மைல்.

சுவாமி—உமாமஹேசுரர். தேவியார்—மங்களநாயகி.

இத்தலத்தில் நடராஜருடைய உற்சவமூர்த்தி ரொம்பவும் சுந்தரமாய் இருக்கிறது.

158. திருநல்லூர் (மாயவரம்-தஞ்சாவூர் மார்க்கம்)

சுந்தரபெருமாள் கோயில் ரயில் நிலையத்திலிருந்து தெற்கே $1\frac{1}{2}$ மைல்.

சுவாமி—கலியாணசுந்தரேசுரர். தேவியார்—கலியாணசுந்தரி.

சிவபெருமான் அப்பர் சுவாமிகளுக்குத் திருவடி சூட்டிய ஸ்தலம்.

திருநாவுக்கரசு சுவாமிகளால் மிகப் பாராட்டப்பெற்ற ஸ்தலம். சிவனடியார்களுக்குக் 'கந்தை, கீளுடை, கோவணம்' இவைகளைக் கொடுத்துவந்த அமர்நீதிநாயனரை சிவபெருமான் ஆட்கொண்டு, அவருக்கும், அவர் மனைவியாருக்கும், மைந்தனுக்கும் முத்தி தந்தருளிய ஸ்தலம். இதனைத் திருநாவுக்கரசு நாயனர் திருநல்லூர்த் திருவிருத்தத்தில் சிறப்பித்துப் பாடியுள்ளார். சுவாமி சந்நிதானம் மலைபோலுயர்ந்த இடத்தில் இருக்கிறது. கோயிலிக் கெதிரில் பெரிய தீர்த்த மொன்றிருக்கிறது. அதற்கு சப்தசாகர தீர்த்தம் என்று பெயர். சுவாமி பொன்னிறமாயிருக்கிருர். ஒரு நாளைக்கு ஐந்து வர்ணமாகத் தோன்றுகிருராம். இலிங்கத்திற் சில வடுக்களும் காணப்படுகின்றன. அகஸ்தியருக்குக் கலியாண காக்ஷி கொடுத்தருளிய ஸ்தலம். அகஸ்தியலிங்கம் சுவாமி பக்கத்திலிருக்கிறது. இந்தத் தலத்திற் சப்த ஸ்தான உற்சவம் நடந்து வருகின்றது. அமர்நீதி நாயனர் குடும்பசகித உற்சவமூர்த்தத்திலும், சிலாரூபத்திலும் ஆலயத்தில் உள்ளன.

159. திருநல்லூர்ப்பெருமணம் அல்லது **ஆச்சாள்புரம்**
(விழுப்புரம்-மாயவரம் மார்க்கம்).
கொள்ளிடம் ரயில் நிலையத்திலிருந்து கிழக்கே 3 மைல்.
கொள்ளிடக் கரையோரமாய்ப் போகவேண்டும்.

சுவாமி—சிவலோகத்தியாகேசர். தேவியார்—நங்கையுமையம்மை.

இதன் தென்கரை சூரியன் புகாதபடி அடர்ந்த சோலையை உடையது. இங்கே திருஞானசம்பந்தர் மணஞ்செய்து மோக்ஷத்திற்குச்சென்ற தலம். திருஞானசம்பந்தர் மனைவியோடு எழுந்தருளி இருக்கிறார். மனைவியார் பெயர் தோத்திரபூர்ணியம்மை. திருஞானசம்பந்த நாயனார் திருக்கலியாணம் முடிந்தவுடன் மனைவியாருடன் ஆலயத்துக்குச் சென்று அங்கே ஒரு ஜோதி தோன்ற "காதலாகி" என்னும் நமச்சிவாயத்திருப்பதிகத்தையோதி, தாமும் மனைவியாரும் அந்த ஜோதியில் தோன்றிய வாயில் வழியாய்ப் புகுந்து சிவசாயுஜ்ஜியம் அடைந்த தலம். பராசரர், பிருகு முதலிய ரிஷிகளுக்கு சிவலோகம் காட்டிய ஸ்தலம். சிவலோகத்தியாகர் சூலத்தால் உண்டான பஞ்சாக்ஷர தீர்த்தம் மிகவும் தெய்வத்தன்மை யுடையது.

கல்லூர்ப் பெருமணம் வேண்டா கழுமலம்
பல்லூர்ப் பெருமணம் பாட்டுமெய் யாய்த்தில
சொல்லூர்ப் பெருமணஞ் சூடல ரேதொண்டர்
நல்லூர்ப் பெருமணம் மேயநம் பானே.

160. திருநள்ளாறு (பேரளம்-காரைக்கால் மார்க்கம்).
திருநள்ளாறு ரயில் நிலையத்திலிருந்து $\frac{1}{2}$ மைல்.

சுவாமி—தர்ப்பாரண்யேசுரர். போகமார்த்த பூண்முலையம்மை.

திருநள்ளாறு பிரஞ்சு இலாகாவில் இருக்கின்றன. ஆலயம் ஊரின் நான்கு பெரிய வீதிகளுக்கு நடுவில் கிழக்கு நோக்கிய சந்நிதியாய் அமைந்திருக்கிறது. கிழக்கில் மட்டும் இராஜகோபுரமிருக்கிறது. இறைவர் சந்நிதி கிழக்கு முகமாயும், அம்மையார் சந்நிதி முதற் பிரகாரத்தில் சோபான மண்டபத்தில் தெற்கு முகமாயும் இருக்கிறது. சனீஸ்வர பகவான் சந்நிதி கிழக்கு முகமாய் அம்மையார் சந்நிதிக்கு முன்புறம் அமைந்துள்ளது. கர்ப்பக்கிரகத்திற்கு தென்புறமாய் நகவிடங்கத்தியாகர் மண்டபம் அமைந்துள்ளது. இத்தலத்தில் சனிபகவான் சந்நிதி மிகவும் சானித்தியம்.

முசுகுந்தச் சக்கரவர்த்தி தேவேந்திரனிடமிருந்து கொண்டு வந்த ஏழு தியாகர்களில் மூல தியாகரை திருவாரூரிலும், ஏனைய ஆறு தியாகர்களைத் திருநள்ளாறு, திருநாகைக்காரோணம், திருக்காராயில், திருக்கோளிலி, திருவாய்மூர், திருமறைக்காடு என்ற ஆறு தலங்களிலும் பிரதிட்டைசெய்து வழிபட்டார். அவ்வேழும்

சப்தவிடங்கத் தலங்க ளெனப்படும். இத்தலத்துத் தியாகர் திருநாமம் நகவிடங்கர் என்பதாகும். நடனம் உன்மத்த நடனம் எனப்படும்.

தர்ப்பாரணியேசுரர் என்னும் பெயருக்கேற்ப சுவாமியின் உருவம் தர்ப்பைக் கொழுந்துகள் சேர்ந்தார்போலிருக்கிறது. திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர் மதுரையில் சமணருடன் வாது செய்கையில் அக்கினியிலிட்டும் வேகாமலெடுத்த பச்சைத் திருப்பதிகமாகிய 'போகமார்த்த பூண்முலையாள்' என்னும் அருமைத் திருப்பதிகத்தைப் பெற்றிருக்கும் தலம்.

நளச் சக்கிரவர்த்தி பூசித்துக் கலிதோஷம் நீங்கப் பெற்ற தலம். ஊருக்கு வடமேற்கில் நள தீர்த்தம் இன்னும் பல தீர்த்தங்கள் உள்ளன. விநாயகர் பெயர் சொர்ண விநாயகர்.

திருநள்ளாற்றுக்குக் கிழக்கே 1 மைலில் 'தக்களூர்' என்னும் வைப்புத்தலம் இருக்கிறது.

போகமார்த்த பூண்முலையாள் தன்னேடும் பொன்னகலம்
பாகமார்த்த பைங்கண் வெள்ளாற்றண்ணல் பரமேட்டி
யாகமார்த்த தோலுடையன் கோவண வாடையின்மேல்
நாகமார்த்த நம்பெருமான் மேயது நள்ளாறே.

161. திருநறையூர்ச்சித்தீச்சுரம் என்பது **திருநறையூர்** (மாயவரம்-தஞ்சாவூர் மார்க்கம்).

கும்பகோணம் ரயில் நிலையத்திலிருந்து கிழக்கு 4½ மைல்.

வழியில் 4 மைலில் **அரிசிற்கரைப்புத்தூர்** (அழகார் புத்தூர்) [10] என்னும் தலம் இருக்கிறது. திருநறையூருக்குக் கிழக்கே 1 மைலில் பேணுபெருந்துறை [218]-ம் தெற்கே ½ மைலில் நாச்சியார்கோயில் என்னும் விஷ்ணு ஸ்தலமு மிருக் கிறது. அது ஆதியிற் சிவஸ்தலமாயிருந்தது. இப்போதும் சிவஸ்தலம் போலவே யிருக்கிறது.

சுவாமி—சித்தநாதேசுரர். தேவியார்—அழகாம்பிகை.

பிள்ளையார் நாமம் ஆண்டபிள்ளையார். பிரமதீர்த்தம் கோயிலுக்கு வடக்கே இருக்கிறது.

162 திருநனிபள்ளி என்பது **புஞ்சை** (மாயவரம் தரங்கம் பாடி மார்க்கம்)

செம்பொன்னர் கோயில் ரயில் நிலயத்திலிருந்து 2½ மைல்

சுவாமி—நற்றுணையப்பர். தேவியார்—பர்வதராஜபுத்திரி.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனருடைய தாயார் பிறந்த ஸ்தலம்.

163. நன்னிலம் (மாயவரம்-காரைக்குடி மார்க்கம்).

நன்னிலம் ரயில்நிலையத்திலிருந்து 3 மைல் போகும் பாதையில் $1\frac{1}{2}$ மைலில் திருக்கொண்டீச்சுரம் [113] இருக்கிறது.

சுவாமி—மதுவனேசுரர். தேவியார்—மதுவனநாயகி.

ஸ்தலத்துக்கு 'மதுவனம்' என்று பெயர். சுவாமி சந்நிதி கட்டுமலைமேலிருக்கிறது. கோயில் பெரிது. கோட்செங்கட் சோழர் திருப்பணி செய்த ஸ்தலம். "கோட்செங்கணுன் செய் கோயில், நாடிய னன்னிலத்துப் பெருங்கோயில்"—என்பது தேவாரம். சூரியன் பூசித்த ஸ்தலம்.

தேவியார் சந்நிதியும் அகத்தீசுரர் சந்நிதியும் கீழே இருக்கின்றன. கோயிலுக்கு வடக்கிற் பிரமதீர்த்தம் இருக்கிறது.

164. திருநாகேச்சுரம் (மாயவரம்-தஞ்சாவூர் மார்க்கம்).

திருநாகேச்சுரம் ரயில் நிலையத்திலிருந்து 1 மைல்.

சுவாமி—செண்பகாரணியேசுரர். தேவியார்—குன்றமுலைநாயகி.

கோயில் பெரியது. நான்கு புறமும் கோபுரங்கள் இருக்கின்றன. சண்பகாரணிய க்ஷேத்திரம். சூரிய புஷ்கரணி தீர்த்தம் உள்ளன. சந்திரன், சூரியன், ஐந்தலைநாகம் முதலியவர்கள் பூசித்த ஸ்தலம். பெரியபுராணம் திருவாய்மலர்ந்தருளிய சேக்கிழார் சுவாமிகள் மிகுந்த அன்புகொண்ட தலம். சந்நிதியில் சங்கநிதி, பதுமநிதி, மகாசாத்தா இவர்கள் விக்கிரகங்களும் இருக்கின்றன. சுந்தரமூர்த்தி சுவாமிகள் பரவைநாச்சியார் சகிதமிருக்கிருர். 'ஞாயிறுந் திங்களுங் கூடிவந்தாடு நாகேச்சுரம்',—என்பது தேவாரம்.

இவ்வூரில் விஷ்ணு தலமான உப்பிலியப்பன் கோயில் மிகவும் பிரசித்தமானவை,

சேக்கிழார் சுவாமிகள் தம்முடைய ஊராகிய சென்னைக் கடுத்த பூந்தமல்லிக்கு 4 மைல் தூரத்திலுள்ள குன்றத்தூரிலே திருக்கோயில் ஒன்று கட்டுவித்து அதற்குத் திருநாகேச்சுரம் என்று பெயரிட்டிருக்கிருர். சேக்கிழார் விக்கிரகமும் கோயிலி லிருக்கிறது. அங்கிருந்து தெற்கே $\frac{1}{2}$ மைல் தூரத்திலுள்ள நத்தம் என்று வழங்கும் அவ்வூரில் சிறிய குன்றின்மேல் சுப்ரமண்யர் ஆலயமும், கீழே சேக்கிழார் கோயிலும் உள்ளன. குன்றின் மேலிருக்கும் ஆலயத்திற்கு மின்சார விளக்குகள் போடப்பட்டிருக்கின்றன.

165. நாகைக்காரோணம் என்பது **நாகப்பட்டிணம்** (தஞ்சாவூர்-நாகூர் மார்க்கம்)

நாகப்பட்டிணம் ரயில் நிலையத்திலிருந்து $\frac{1}{2}$ மைல். ஸப்த விடங்க ஸதலங்களில் ஒன்று அதிபத்த நாயனருடைய



ஸ்தலம். சிவபெருமான் புண்டரீக மகாருஷியைக் காயத்தோடு ஆரோகணஞ் செய்து கொண்ட ஸ்தலம்.

சுவாமி—காயாரோகணேசுரர். **தேவியார்**—நீலாயதாக்ஷியம்மை.

கோயிலின் முன்னிருக்கும் விநாயகருக்கு நாகாபரண விநாயகர் என்றும், உள்ளே இருக்கும் விநாயகருக்கு மாவடிப் பிள்ளையார் என்றும் பெயர். தேவதீர்த்தம் கோயிலுக்குத் தெற்கிலும் புண்டரீக தீர்த்தம் கோயிலுக்கு மேற்கிலும் இருக்கின்றன. தியாகராஜருக் கெதிரிற் சுந்தரமூர்த்தி பரவை நாச்சியார் சகிதமிருக்கிருர். இங்கு அம்மன் சந்நிதி விசேஷம்.

166. திருநாட்டியத்தான்குடி (மாயவரம்-காரைக்குடி மார்க்கம்)

திருநாட்டியத்தான்குடி ரயில் நிலையத்திலிருந்து $\frac{3}{4}$ மைல்.

சுவாமி—ரத்தினகிரீசுரர். **தேவியார்**—மலைமங்கையம்மை.

கோயில் சிறியது. கோபுரமில்லை. கோட்புலிநாயனுருடைய ஸ்தலம் அவருடைய உருவம் கோயிலி லிருக்கிறது. "கூடா மன்னரைக் கூட்டத்து வென்ற கொடிறன் கோட்புலி சென்னி, நாடார் தொல்புகழ் நாட்டியத்தான்குடி"—என்பது தேவாரம். சுந்தரமூர்த்தி நாயனுருக்கு சுவாமி இருக்கும் இடத்தைச் சுட்டிக் காட்டியதால் விநாயகருக்குக் கைகாட்டி மூர்த்தி என்று பெயர்.

167. திருநாரையூர் (விழுப்புரம்-மாயவரம் மார்க்கம்)

சிதம்பரம் ரயில் நிலையத்திலிருந்து தென்மேற்கே 10 மைல். குமராக்ஷி என்னும் ஊர் வழியாய்ப் போக வேண்டும்.

சுவாமி—சௌந்தரேசுரர். **தேவியார்**—திரிபுரசுந்தரியம்மை.

நாரை பூசித்த ஸ்தலம்.

சிதம்பரத்திற் சேமித்து வைத்திருந்த தேவாரத் திருமுறைகளை நம்பியாண்டார் நம்பியார் மூலமாய் வெளிப்படுத்தியருளிய கருணாகரமூர்த்தியாகிய பொல்லாப்பிள்ளையார் என்னும் விநாயக மூர்த்தி யெழுந்தருளியிருக்கும் ஸ்தலம்.

168 திருநாலூர்மயானம் (மாயவரம்-தஞ்சாவூர் மார்க்கம்)

கும்பகோணம் ரயில் நிலையத்திலிருந்து $8\frac{1}{2}$ மைல்

சுவாமி—பலாசவனேசுரர். **தேவியார்**—பெரியாம்பிகை.

ஆபஸ்தம்பரிஷி பூசித்த ஸ்தலம். கோயில் சிறியது.

திருநாலூர் மயானத்துக்குத் தென்மேற்கே 1 மைலில் திருநாலூர் என்னும் ஊர் இருக்கிறது. இங்கும் ஓர் ஆலயமிருக்கிறது.

169. திருநாவலூர் என்பது **திருநாமநல்லூர்** (விழுப்புரம்-விருத்தாசலம் மார்க்கம்)

பரிக்கால் ரயில் நிலையத்திலிருந்து 2 மைல்.

சுவாமி—திருநாவலேசுரர். தேவியார்—சுந்தரநாயகியம்மை.

சுக்கிரன் பூசித்த ஸ்தலம். சுந்தரமூர்த்தி நாயனார் திருவவதாரஞ் செய்த ஸ்தலம். ஸ்ரீ வரதராஜப் பெருமாள் சந்நிதி கோயிலுக்குள் இருக்கிறது. அம்மன் சந்நிதிக்கருகில் நாவல் மரம் இருக்கிறது. கோயிலுக்கு மேற்புரம் கோமுகி தீர்த்தம் இருக்கிறது.

170. திருநின்றியூர் (விழுப்புரம்-மாயவரம் மார்க்கம்)

ஆநந்ததாண்டவபுரம் ரயில் நிலையத்திலிருந்து வடகிழக்கே 2 மைல்.

சுவாமி—மகாலக்ஷ்மீசுரர். தேவியார்—உலகநாயகி.

இலக்குமி பூசித்த ஸ்தலம்.

171. திருநீடூர் (விழுப்புரம்-மாயவரம் மார்க்கம்).

நீடூர் ரயில்நிலையத்திலிருந்து $\frac{3}{4}$ மைல். மாயவரத்திலிருந்து மேற்கே 3 மைல்.

சுவாமி—கானநிர்த்த சங்கரர். தேவியார்—அதிகாந்தியம்மை.

முனையடுவார் நாயனார் சிவனடியார்களுக்குத் திருவமுது செய்வித்து முத்திபெற்ற ஸ்தலம்.

ஊழிக்காலத்தினும் உலவாது நீடித்திருக்குந் தலமாதலின் இத்தலத்துக்கு நீடூர் என்னும் பெயர் எய்தியது. இந்திரன், சூரியன், சந்திரன், நண்டு, காளி இவர்கள் பூசித்த ஸ்தலம். இதற்கு வகுளாரணியம், மகிழாரணியம், மகிழவனம் என்று பெயர்.

172 திருநீலக்குடி அல்லது **தென்னல்குடி** (மாயவரம்-தஞ்சாவூர் மார்க்கம்)

ஆடுதுரை ரயில் நிலையத்திலிருந்து 2 மைல்.

சுவாமி—நீலகண்டேசுரர். தேவியார்—உமையம்மை.

வருணனும், தேவகன்னிகைகளும் பூசித்த ஸ்தலம்.

173. நெடுங்களம் (தஞ்சாவூர்-திருச்சிநாப்பள்ளி மார்க்கம்).

தொண்டமான் புட்டி ரயில் நிலையததிலிருந்து 3 மைல்.

சுவாமி—நித்தியசுந்தரேசுரர் தேவியார்—ஒப்பிலாநாயகியம்மை

வங்கிய சோழராஜனுக்கு அநுக்கிரகஞ் செய்த ஸ்லம்.



174. திருநெய்த்தானம் என்கிற **தில்லைஸ்தானம்** (மாய வரம்-தஞ்சாவூர் மார்க்கம்).

தஞ்சாவூர் ரயில் நிலையத்திலிருந்து 9 மைல்.

சுவாமி—நெய்யாடியப்பர். **தேவியார்**—பாலாம்பிகையம்மை.

திருவையாற்றுக்கு [50] மேற்கு 1-மைல் தூரம்.

சப்தஸ்தான க்ஷேத்திரங்களில் ஏழாவது ஸ்தலம். சரஸ்வதி பூசித்த ஸ்தலம்.

175. திருநெல்லிக்கா (மாயவரம்-காரைக்குடி மார்க்கம்).

திருநெல்லிக்காவல் ரயில் நிலையத்திலிருந்து 2 பர்லாங்.

சுவாமி—நெல்லிவனநாதேசுரர். **தேவி**—மங்களநாயகியம்மை.

சூரியன் பூசித்த ஸ்தலம். இதற்குத் திருஷ்டாந்தமாகப் பிரதி வருடமும் ஐப்பசி மாதம் கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசி முதல் 7 நாளும், மாசி மாதம் 18வ முதல் 7 நாளும், அஸ்தமனசமயத்திற் சூரியனுடைய கிரணங்கள் சுவாமிமேல் விழுகின்றன. மேற்குப் பார்த்த சந்நிதி. நெல்லி விருக்ஷம் பிரகாரத்திலிருக்கிறது. இதன் காய்கள் சுவாமிக்கு மட்டும் உபயோகப்படுகின்றன. கோயிலுக்குத் தெற்கே பிரம தீர்த்தமும், வடக்கே சூரிய தீர்த்தமும் இருக்கின்றன. பிரமன் பூசித்த ஸ்தலம்.

176. திருநெல்வாயல் என்பது **சிவபுரி** (விழுப்புரம்-மாய வரம் மார்க்கம்).

சிதம்பரம் ரயில் நிலையத்திலிருந்து தென்கிழக்கே 3 மைல்.

சுவாமி—உச்சிநாதேசுரர். **தேவியார்**—கனகாம்பிகை.

இந்தத் தலத்தில் இரண்டு ஆலயங்களிருக்கின்றன. வடக்கேயிருக்கும் ஆலயம் இத்தல ஆலயம் தெற்கே யிருக்கும் ஆலயத்திலே முன் திருக்கழிப்பாலை தலத்திலிருந்த பால்வண்ண நாத சுவாமியென்னும் சிவலிங்கப்பெருமான் வைக்கப்பட்டிருக்கின்றார். திருக்கழிப்பாலையிலிருந்த ஆலயம் கொள்ளிட நதியாற் வெள்ளத்திற் போய்விட்டது.

177. திருநெல்வாயில் அரத்துறை (விழுப்புரம் - திருச்சி (காட் லயன்) மார்க்கம்).

பெண்ணாடம் ரயில் நிலையத்திலிருந்து தென்மேற்கு 4 மைல். இது நிவா நதியின் வடகரையி லிருக்கிறது. பெண்ணாடம் தலப்பெருமையை (215) காண்க.

சுவாமி—அரத்துறைநாதர். **தேவியார்**—ஆநந்தநாயகி.

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளுக்குச் சிவபெருமான் முத்துச் சிவிகையும், முத்துக் குடையும், முத்துச் சின்னங்களும்



தலம் 122.
சிதம்பரம்-கோயில்

(மேலே) கனகசபையின் தங்க விமான காக்ஷி.

(நடுவில்) (பாண்டிய நாயகன்) ஸ்ரீ ஆறுமுக சுவாமி சந்நிதானம்.

(கீழே) சிவகங்கை தீர்த்தமும், கோபுர தரிசனமும்.









தலம் 122. சிதம்பரம்.

(மேலே) ஊருக்கு வடக்கே உள்ள தில்லை காளியம்மன் ஆலயம்.

தலம் 233. திருமாற்பேறு.

(நடுவில்) ஆலயத்தின் வெளித்தோற்றம்.

தலம் 248. திருவலம்.

கீழே) பெண்ணையாற்றின் கரையிலுள்ள ஆலயத்தின் வெளித்தோற்றமும், தேர் நிலையமும்.



கொடுத்தருளிய தலம். அருணகிரிநாத சுவாமிகள் இத்தலத்திற்குப் பாடியிருக்கிற திருப்புகழிலும்இதனைச் சிறப்பித்திருக்கிறார்.

எந்தை யீசனெம் பெருமா னேறமர் கடவுளென் றேத்திச்
சிந்தை செய்பவர்க் கல்லாற் சென்றுகை கூடுவ தன்றால்
கந்த மாமல ருந்திக் கடும்புனல் நிவாமல்கு கரைமேல்
அந்தண் சோலை நெல்வாயில் அரத்துறை அடிகள்தம் அருளே.

178. திருநெல்வெண்ணெ அல்லது **நெய்வெண்ணெ** (விழுப்புரம்-திருச்சி (காட் லயன்) மார்க்கம்).

உளுந்தூர்பேட்டை ரயில் நிலையத்திலிருந்து வடமேற்கில் 7 மைல்.

சுவாமி—வெண்ணெயப்பர். **தேவியார்**—நீலமலர்க்கண்ணம்மை.

சநகர், சநற்குமாரர் முதலியோர் பூசித்த தலம்.

179. திருநெல்வேலி (மதுரை-விருதுநகர்-மணியாச்சி திருநெல்வேலி மார்க்கம்) (மதராஸ்-திருநெல்வேலி எக்ஸ்பிரஸ்) (மதராஸ்-செங்கோட்டை மார்க்கம்)

திருநெல்வேலி சந்திப்பு ரயில் நிலையத்திலிருந்து கோயில் 1 மைல்.

சுவாமி—நெல்லையப்பர். **தேவியார்**—காந்திமதியம்மை.

ஊரின் நடுவே கோயில் அமைந்துள்ளன. பெரிய கோயில். கோபுரங்கள் உடையன. கோயிலுக்குத் தெற்கில் தாம்பிரபர்ணி ஆறு ஓடுகிறது. அவை நடுவே குறுக்குத்துறை ஸ்ரீ சுப்ரமண்ய சுவாமி ஆலயம் மிகவும் பிரசித்திபெற்றவை. நெல்லையப்பர் ஆலயத்தின் முன்கோபுரம் வானளாவி நிற்கிறது. சுவாமி சந்நிதி இரண்டு உள்ளன. ஒன்று நெல்லையப்பர். மற்றொன்று வேணுவனநாதர். சுவாமி மூங்கிலிற் றோன்றிய காரணத்தால் 'வேய்முத்தநாதர்' என வழங்குகிறது. பஞ்ச சபைகளில் ஒன்றாகிய தாம்பிர சபையை உடைய தலம். ஸ்ரீ நடராஜர் சொரூபம் நம்மை பரவசப்படுத்துகிறது. ஸ்ரீ ஆறுமுகர் சந்நிதானம் தனியே மிகவும் பிரமாதமாயிருக்கிறது. ஸ்ரீ காந்திமதி அம்மை சந்நிதானம் பெரிய தாய் பிரத்தியேகமாய் இருக்கிறது. இராவணன் கயிலையை எடுப்பதுபோன்ற விமான மண்டபம் ஒன்று பிரகாரத்தில் இருக்கிறது. மூலஸ்தானத்திற்கெதிரில் உள்ள நாற்கால் மண்டபத் தூண்களில் தட்டினால் சப்த ஸ்வரங்கள் தொனிக்கின்றன. இது மிகவும் அற்புதம். சிவபெருமான் தம்முடைய நைவேத்தியத்திற்காக வேதசருமா என்னும் பிராமணர் யாசித்துக்கொண்டு வந்து

உலர்த்தி வைத்திருந்த நெல்லை வெள்ளமடித்துப் போகா வண்ணம் வேலி கட்டிக் காத்தருளியபடியால் இத்தலத்துக்கு திருநெல்வேலி எனப்பெயர் வந்தது. அகஸ்தியர், பிரமா, விஷ்ணு முதலியோர் பூசித்த தலம். ஆலயத்துள் திருக்குளமிருக்கிறது.

இங்கிருந்துதான் திருச்செந்தூருக்குப் போகவேண்டும். 38 மைல்.

வெடிதரு தலையினர் வேனல்வெள் ளேற்றினர் விரிசடையர்
பொடியணி மார்பினர் புலியத ளாடையர் பொங்கரவர்
வடிவுடை மங்கையோர் பங்கினர் மாதரை மையல்செய்வார்
செடிபடு பொழிலணி திருநெல் வேலியுறை செல்வர் தாமே.

180. பட்டீச்சுரம் (மாயவரம்- தஞ்சாவூர் மார்க்கம்).

தாராசுரம் ரயில் நிலையத்திலிருந்து 2 மைல். கும்ப கோணத்துக்கு [97] தென்மேற்கு 4-மைல். பெரிய கோபுரம் கற்சிற்பங்கள் தூண்களில் மிகவும் அழகாக உள்ளன.

சுவாமி—பட்டீசுரர். **தேவியார்**—பல்வளைநாயகியம்மை.

காமதேனுவின் புத்திரிகள் நால்வரிற் பட்டி என்பவள் பூசித்ததால் பட்டீசுரம் எனப் பெயர் வந்தது. கோயில் பெரியது. சிவபெருமான் திருஞானசம்பந்தருக்கு வெயில் வெப்பந் தணிக் கும்பொருட்டு ஒரு பூதத்தைக் கொண்டு முத்துப் பந்தர் உண் டாக்கிய தலம். கோயிலுக்குள் ஞான தீர்த்தமும், அதன் தென் கரையில் தலவிருக்ஷமாகிய வன்னியும் இருக்கின்றன. ஸ்ரீ ராம ருக்கு சாயை ஹத்தி தோஷம் தீர்த்த தலம். மார்கழி அமாவாசை தினம் இந்த ஐதீகம் நடக்கிறது. கோயிலில் நந்திகளெல்லாம் சம்பந்த சுவாமிகள் வெளியிலிருந்து தரிசனம் செய்யும்பொருட்டு சற்று விலகியிருக்கின்றன. முதலில் இருக்கும் நந்தி பெரியது. நல்ல வேலைப்பாடுள்ளது. பட்டீச்சுரத்திற்குத் தெற்கே 1 பர்லாங்கு தூரத்தில் திருமலைராயன் ஆறு ஓடுகிறது. ஆலயத்துள் திருக்குளம் இருக்கிறது. பெரிய ஊர்.

இத்தலத்திற்கு வடக்கில் வேறொரு வீதியில் திருச்சத்தி முத்தம் [128] என்னுந் தலம் இருக்கிறது.

181. திருப்பந்தணைநல்லூர் என்பது **பந்தநல்லூர்** (மாயவரம்-தஞ்சாவூர் மார்க்கம்).

குற்றாலம் ரயில் நிலையத்திலிருந்து வடமேற்கே 6 மைல்.

சுவாமி—பசுபதீசுரர். **தேவியார்**—காம்பனதோளியம்மை.

தேவ கன்னிகைகளும், காமதேனுவும் பூசித்த ஸ்தலம்.

182. திருப்பயற்றூர் என்பது **திருப்பயற்றங்குடி** (மாயவரம்-காரைக்குடி மார்க்கம்).

விற்குடி ரயில் நிலையத்திலிருந்து வடகிழக்கில் 4 மைல்.

சுவாமி—திருப்பயறீசுரர். தேவியார்—காவியங்கண்ணியம்மை.

பைரவரிஷி பூசித்த ஸ்தலம்.

183. திருப்பரங்குன்றம் (மதுரை-மணியாச்சி மார்க்கம்).

திருப்பரங்குன்றம் ரயில் நிலையத்திலிருந்து 2 பர்லாங் மதுரையிலிருந்து 4 மைல். பஸ் உண்டு.

சுவாமி—பரங்கிநாதேசுரர். தேவியார்—ஆவுடைநாயகி.

மலையின் அடிவாரத்தில் கோயில். கோயில் பெரியது. மலையைக் குடைந்து ஆலயம் நிர்மானம் செய்யப்பட்டிருக்கிறது. முருகக்கடவுளுக்கு முக்கியமான ஆறு படைவீடுகளி லொன்று. தெய்வயானை திருக்கல்யாணமான தலம். சரவணப் பொய்கை கோயிலுக்குக் கிழக்கே இருக்கிறது. கிரி பிரதக்ஷனம் செய்ய ½ மணி நேரமாகும். மலைமேற் 'காசிதீர்த்தம்' என்ெருரு பொய்கை இருக்கிறது.

184. திருப்பராய்த்துறை (திருச்சி-ஈரோடு மார்க்கம்).

எழுமனூர் ரயில் நிலையத்திலிருந்து வடமேற்கே 1½ மைல்.

சுவாமி-பராய்த்துறைநாதேசுரர் பொன்மயிலாம்பிகையம்மை.

இந்திரன், குபேரன், சப்தரிஷிகள் இவர்கள் பூசித்த தலம். இங்கே ராமகிருஷ்ண ஆசிரமம் ஒன்று இருக்கிறது.

185. பரிதிநியமம் என்பது **பரித்தியப்பர்கோயில்** (மாயவரம்-தஞ்சாவூர் மார்க்கம்)

தஞ்சாவூர் ரயில்நிலையத்திலிருந்து தென்கிழக்கு 10 மைல்.

சுவாமி—பரிதியப்பேசுரர். தேவியார்—மங்களநாயகி.

பரிதி (சூரியன்) பூசித்த ஸ்தலம்.

186. திருப்பருப்பதம் என்பது **ஸ்ரீசைலம்** (குண்டக்கல்-மசூலிப்பட்டணம் மார்க்கம்).

நந்தியால் ரயில்நிலையத்திலிருந்து 68 மைல். இங்கிருந்து ஆத்மகூர் வரை 32 மைல் பஸ்ஸில் போகலாம். அங்கிருந்து

26 மைல் பெத்த செருவுக்கு வண்டியில் போகலாம். பிறகு 10 மைல் கால்நடையாகவோ, அல்லது டோலி, குதிரை சவாரி முதலியவற்றிலோ போகலாம். இங்கு சிவராத்திரி விசேஷம்.

சுவாமி—பருப்பதநாதர். தேவியார்—பருப்பதநாயகி.

நந்திதேவர் பர்வத வடிவமாகிச் சிவபெருமானைத் தாங்கிக் கொண்டிருக்கும் ஸ்தலம். 12 ஜோதிர் இலிங்கத்தில் இவரொருவர். இயற்கைக் காட்சிகள் நிறைந்த தலம். கோயில் பெரிது. பெரிய மதில்களை உடையது. கோயிலுக்குச் சற்று தூரத்தில் பள்ளத் தாக்கில் கிருஷ்ணா நதி ஓடுகிறது. சாப்பாடு, பஸ் வசதி உண்டு. கஷ்டமான யாத்திரை.

187. திருப்பழனம் (மாயவரம்-தஞ்சாவூர் மார்க்கம்).

தஞ்சாவூர் ரயில் நிலையத்திலிருந்து கிழக்கே 10 மைல்.

வழியில் 8-வது மைலில் திருவையாறு [50] இருக்கிறது.

சுவாமி—ஆபத்சகாயேசுரர். தேவியார்—பெரியநாயகியம்மை.

அப்பூதியடிகளின் திறத்தினை அப்பர் சுவாமிகள் சிறப்பிக்கப் பெற்ற தேவாரப் பதிகத்தைக் கொண்ட தலம். விஷ்ணு (வேணு கோபால சுவாமி) சந்நிதி ஒன்றிருக்கிறது. இத்தலத்துக்குக் கதலிவனம் என்றும் ஒரு பெயர் உண்டு, இதற்குச் சமீபத்தி லுள்ள திங்களூரில் அப்பூதியடி நாயனுருடைய பிள்ளை விஷந் தீண்டி இறக்க, அப்பர் சுவாமிகள் அதை 'ஒன்று கொலாம்' என்னும் திருப்பதிகம் பாடி எழுப்பி யருளினர். திங்களூர் சந்திரன் பூசித்த தலம். சந்திரனுடைய கிரணங்கள் பங்குனி, புரட்டாசி இந்த 2 மாதங்களிற் பௌர்ணமியிலும் அதற்கு முன் பின் ஆகிய 2 தினங்களிலும் சுவாமிமேற் படுகின்றவனும்.

வேதமோதி வெண்ணூல்பூண்டு வெள்ளையெருதேறிப்
பூதஞ்சூழப் பொலியவருவார் புலியினுரிதோலார்
நாதாஎனவும் நக்காஎனவும் நம்பாஎனநின்று
பாதந்தொழுவார் பாவந்தீர்ப்பார் பழனநகராரே.

188. திருப்பழுவூர் (விழுப்புரம் - திருச்சி (காட் லையன்) மார்க்கம்).

கள்ளகம் ரயில் நிலையத்திலிருந்து வடகிழக்கே 4 மைல்.

சுவாமி—வடமூலநாதேசுரர். தேவியார்—அருந்தவநாயகியம்மை.

பரசுராமர் தன் தாயைக் கொன்ற பழி நீங்கப் பூசித்த தலம். அவருடைய உருவம் முன் வாயிலில் இருக்கின்றது.

189. பழையாறைவடதளி (மாயவரம்-தஞ்சாவூர் மார்க்கம்).

தாராசுரம் ரயில் நிலையத்திலிருந்து $1\frac{1}{2}$ மைல்.

இது பழையாறை என்றும் வடதளி என்றும் இரண்டு ஸ்தலங்களாக இருக்கின்றது. வடதளியிற் சுவாமி பெயர்-தர்ம புரீசுரர். தேவியார்-விமலநாயகி. இந்த ஸ்தலம் காமதேனுவின் புத்திரியாகிய விமலி என்பவளாற் பூசிக்கப்பட்டது. ஆலயம் ஒரு மேட்டின்மேலிருக்கிறது. இங்கு சுவாமி அம்மை தவிர வேறு விக்கிரகம் ஒன்றும் இல்லை. இவ்வாலயத்துக்குச் சமீபத்தில் துறையூர்-சிவப்பிரகாச சுவாமிகளுடைய சமாதிக் கோயில் ஒன்றிருக்கிறது.

பழையாறை-சந்திரன் பூசித்த ஸ்தலம். அமர்நீதி நாயனர் வாழ்ந்திருந்த பதி.

காமதேனுவின் புத்திரிகளுட் பட்டி பூசித்தது பட்டீச்சுரம்; விமலி பூசித்தது பழையாரை வடதளி;சபளி; பூசித்தது திருமேற் றளி-(கைலாச நாதர் - சபளநாயகி). நந்தினி பூசித்தது முழையூர் (பரசுநாதேசுரர்-ஞானம்பிகை).

190. பள்ளியின்முக்கூடல் (மாயவரம்-காரைக்குடி மார்க்கம்).

விற்குடி ரயில் நிலையத்திலிருந்து $1\frac{1}{2}$ மைல்.

சுவாமி-முக்கோணநாதேசுரர். தேவி-மைம்மேவுகண்ணியம்மை.

கோயில் சிறியது. திருக்குளம் கோயிலுக் கெதிரிலிருக்கிறது.

191. திருப்புகலூர் என்பது **பரசலூர்** (மாயவரம்-தரங்கம் பாடி மார்க்கம்).

செம்பொன்னர் கோயில் ரயில் நிலையத்திலிருந்து $1\frac{1}{2}$ மைல்.

சுவாமி—வீரட்டேசுரர். தேவியார்—இளங்கொடியம்மை.

இந்த ஊருக்குச் சென்றால் போதும். சென்றவர்கள் பாவத் தையெல்லாம் இறைவன் பறித்துக்கொள்வாராம். பெருமானுக்கு எவ்வளவு கருணை பாருங்கள். தாரகனல் உண்டாகிய பயத்தை தேவர்கள் பறிகொடுத்ததும் இங்குதானும். மற்றொரு சிறப்பும் உண்டு இதற்கு. அதுதான் தட்சயாகம் நடைபெற்ற இடமாக விளங்குவது. அட்டவீர தலங்களில் இதுதான் "மாமன் பறியல்" என்று முதலாவதாக எண்ணப்படுகின்றன. பெருமானை மருமகனுகப் பெறும் பாக்கியம் பெற்று அவரை மதி யாமல் தக்கன் யாகம் செய்யும்பொழுது விஷ்ணு, பிரமன், இந் திரன் முதலிய தேவர்களும் வந்து கலந்துகொண்டார்கள். அப்

போது வீரபத்திரக் கடவுள் தோன்றி தக்கன் தலை தடிந்து, யாகத்தையும் அழித்தார். அந்த வீரபத்திர மூர்த்தியை இன்றும் இங்கு காணலாம்.

தக்கன் யாகம் நடத்திய இடம் இதுதான் என்பதற்குக் கோயிலின் தென்பாகத்திலுள்ள தீர்த்தம் சான்றாகும். அத் தீர்த்தம் கரிக்குளம் என்ற பெயரால் இன்றும் வழங்குகிறது. கோடைகாலத்தில் சென்று குளத்தைத் தோண்டிப் பார்த்தால் தோண்டத்தோண்டக் கரியாகவே இருப்பதைக் காணலாம். இது இப்போது பரசலூர் என வழங்குகிறது.

192. வன்பார்த்தான் பனங்காட்டூர் *அல்லது* **திருப்பனங் காடு** (*செங்கல்பட்டு-அரக்கோணம் மார்க்கம்*)

காஞ்சீபுரம் ரயில் நிலையத்திலிருந்து 9 மைல்.

சுவாமி—பனங்காட்டீசுரர். *தேவியார்*—அமிர்தவல்லியம்மை.

இந்த ஆலயத்தில் இரண்டு சந்நிதிகள் இருக்கின்றன. தெற்கிலிருப்பது அகஸ்தியர் பூசித்தது. சுவாமி-தாளபுரீசுரர்; தேவியார்-ஸ்தூலகோமளபதாம்பாள். வடக்கிலிருப்பது புலஸ்தியர் பூசித்தது. சுவாமி-கிருபாநாதேசுரர்; தேவியார்-கிருபா நாயகி; ஜடாகங்கை-தீர்த்தம்.

193. திருப்பனந்தாள் (*மாயவரம்-தஞ்சாவூர் மார்க்கம்*).

ஆடுதுறை ரயில் நிலையத்திலிருநது 6 மைல். கும்ப கோணம், குற்றாலம் ரயில் நிலையத்திலிருந்து பஸ் வசதியுண்டு.

சுவாமி—சடையப்பேசுரர். *தேவியார்*—பெரியநாயகியம்மை.

கோயில் பெரியது. கோபுரங்களும் பெரியன. தாடகை யென்னும் ஒருமாதின் அன்புக்காகச் சாய்ந்திருந்த சிவலிங்கப் பெருமானை யானை, சேனை முதலியவைகள் கயிற்றைக் கட்டி இழுத்தும் நிமிராமற்போகவே, குங்குலியக்கலய நாயனார் அக் கயிற்றைத் தம்முடைய கழுத்திற்கட்டி யிழுத்தவுடன் அவருடைய அன்புக்காக நிமிர்ந்தருளிய ஸ்தலம். பிரகாரத்தில் 2 ஆண் பனைமரங்கள் இருக்கின்றன.

194. திருப்பனையூர் (*மாயவரம்-தஞ்சாவூர் மார்க்கம்*).

நன்னிலம் ரயில் நிலையத்திலிருந்து $1\frac{1}{2}$ மைல். இத்தலத்துக்கு வடக்கே 3 மைலில் திருப்புகலூரும் [203], தென்மேற்கு $1\frac{1}{2}$ மைலில் திருவீழிமிழலையும் [261] இருக்கின்றன.

சுவாமி—சௌந்தரியநாதர். *தேவியார்*—பெரியநாயகியம்மை

சிவபெருமான் திருக்கூத்தோடு சுந்தரமூர்த்தி நாயனருக்குக் காட்சி கொடுத்தருள, அவர் 'மாடமாளிகை' என்னுந் திருப்பதிகம் பாடித் துதித்த தலம். அமிர்தபுஷ்கரணித் தீர்த்தம் கோயிலுக் கெதிரிலிருக்கிறது. கோயிலுக்கு உட்பிரகாரத்தில் பனைவிருக்ஷம் இரண்டு இருக்கின்றன. பராசர முனிவர் பூஜை செய்த தலம். கரிகால்சோழன் வளர்ந்த இடமாம். அவனுக்கு பிள்ளையார் துணையிருந்தாராம். அதனால் பிள்ளையாருக்குத் 'துணையிருந்த பிள்ளையார்' என்று பெயர்.

195. திருப்பாசூர் (சென்னை-அரக்கோணம் மார்க்கம்)

திருவள்ளூர் ரயில் நிலையத்திலிருந்து $4\frac{1}{2}$ மைல். பஸ் வசதி உண்டு. கோயில் பார்வைக்கு கோட்டைக்குள் இருக்கிற பாணியில் தெரிகிறது.

சுவாமி—பாசூர்நாதேசுரர். தேவியார்—பசுபதிநாயகியம்மை.

சிவபெருமான் ஒரு மூங்கிலடியில் தோன்றியருளிய ஸ்தலம். சமணர்கள், கரிகால் சோழனுக்கு எதிரியான ஒரு குறும்பராஜனுக்கு உதவியாக, ஒரு பெரும்பாம்பை குடத்தில்விட்டு சோழனிடம் அனுப்ப, அச்சோழனுக்கு உதவியாகச் சிவபெருமான் எடுத்து ஆட்டியருளிய ஸ்தலம்.

196. திருப்பாச்சிலாச்சிராமம் என்பது **திருவாசி** (விழுப்புரம்-திருச்சி (காட்லயன்) மார்க்கம்).

பிக்ஷாண்டார்கோயில் ரயில் நிலையத்திலிருந்து 2 மைல். திருவானைக்காவல் ஆலயத்திலிருந்து வடமேற்கே 3 மைல்.

சுவாமி—மாற்றறிவரதர். தேவியார்—பாலசௌந்தரி.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் கொல்லிமழவன் என்னும் அரசனுடைய குமாரத்திக்கு முயலகன் என்னும் வியாதியைத் தீர்த்தருளிய ஸ்தலம். தாமிரபரணி தீர்த்தம் அம்மன் சந்நிதிக்கெதிரில் இருக்கிறது. நடராஜர்-சர்ப்ப நடன மூர்த்தி. அவர் பாதத்தின் கீழ் சர்ப்ப உருவம் காண்கின்றன.

197. திருப்பாண்டிக்கொடுமுடி என்கிற **கொடுமுடி** (திருச்சி-ஈரோடு மார்க்கம்).

கொடுமுடி ரயில் நிலையத்திலிருந்து 2 பர்லாங்.

சுவாமி—கொடுமுடிநாதேசுரர். தேவியார்—பண்மொழிநாயகி.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் நமச்சிவாயத் திருப்பதிகம் பாடியருளிய ஸ்தலம். காவிரி நதிக் கரையிலுள்ளது. இதனைத்

'திரிமூர்த்தி ஸ்தலம்' எனலாம். கோயில் பெரியது. ஸ்ரீரங்கநாதர் சந்நிதி பிரத்தியேகமாகக் கோயிலுக்குள் இருக்கிறது.

மற்றுப்பற்றெனக் கின்றிநின்றிருப் பாதமேமனம் பாவித்தேன்
பெற்றலும்பிறந் தேனினிப்பிற வாததன்மைவந் தெய்தினேன்
கற்றவர்தொழு தேத்துஞ்சீர்க்கறை யூரிற்பாண்டிக் கொடுமுடி
நற்றவாவுனை நான்மறக்கினுஞ் சொல்லுநா நமச்சிவாயவே.

198 பாதாளீச்சுரம் என்கிற **பாமணி** (நீடாமங்கலம்-மன்னார்குடி மார்க்கம்)

மன்னார்குடி ரயில் நிலையத்திலிருந்து 1 மைல்.

சுவாமி—சர்ப்பபுரீசுரர். தேவியார்—அமிர்தநாயகி.

பதஞ்சலிபோலப் பாம்புருவள்ள தனஞ்சயரிஷி பூசித்த ஸ்தலம். அம்முனிவருடைய உருவம் கோயிலிலிருக்கிறது. சுவாமிக்கு இரண்டு திருமுகங்கள் உள்ளன.

199. திருப்பாதிரிப்புலியூர் (விழுப்புரம்-மாயவரம் மார்க்கம்)

கடலூர் N.T. ரயில் நிலையத்திலிருந்து 2 பர்லாங். கெடில நதிக் கரையிலிருக்கிறது. சந்நிதி வீதியில் ஞானியார் மடம் இருக்கிறது.

சுவாமி—பாடலேசுரர். தேவியார்—பெரியநாயகியம்மை.

வியாக்கிரபாதர் பூசித்தமையின் இது வடபுலியூர் எனவும் சொல்லப்படும். முடக்காலுள்ள முயல் ரூபத்தைச் சாபத்தினாற் பெற்ற மங்கணர் என்னும் முனிவர் அவ்வுரு நீங்கப் பெற்ற தலம். திருநாவுக்கரசு நாயனாரைச் சமணர்கள் கற்றூணிற் கட்டிக் கடலிற்றள்ளிவிட, அவர் "சொற்றுணை வேதியன்" என்னும் நமச்சிவாயத் திருப்பதிகத்தை யோதிக் கரையேறப்பெற்ற ஸ்தலம். அந்த இடம் "கரையேறவிட்ட குப்பம்" என்று நாளைக்கும் சொல்லப்படுகிறது. ஆலயத்திற்குள் பாதிரி விருக்ஷ மிருக்கிறது. அதற்குத்தகடுகள் மேலே சாத்திருக்கிறார்கள். பெரிய கோயில். பெரிய கோபுரம் உண்டு.

200 திருப்பாம்புரம் (மாயவரம்-காரைக்குடி மார்க்கம்).

பேரளம் ரயில் நிலையத்திலிருந்து மேற்கே $4\frac{1}{2}$ மைல். வழியில் 1-வது மைலில் மீயச்சூர் [234] என்னும் தலமிருக்கிறது.

சுவாமி—பாம்புரேசுரர். தேவியார்—வண்டார்பூங்குழலியம்மை.

நாகராஜன் பூஜை செய்த ஸ்தலம்; நாகராஜாவின் மூலவிக்கிரகமும், உற்சவ விக்கிரகம் இரண்டும் இருக்கின்றன.

தலம் 56. காஞ்சீபுரம்.



ஏகாம்பரநாதர் சந்நிதி யின் முன் மகா மண்டபம்.



காஞ்சி காமாக்ஷியம் மன் ஆலயத்தின் உட்புறத் தோற்றம்.



காஞ்சி கச்சபேஸ் வரர் ஆலயத்தின் உட்புறத் தோற் றம்.

தலம் 240. தென் திருமுல்லைவாயல் (அம்பத்தூர்)





மேலே)
சுவாமி அம்மன்
கோபுரக் காட்சி
சோழக் கட்டடம்

(நடுவே)
பதினாறு கால்
மண்டபமும்,
முன் கோபுரமும்

தலம் 126.
திருக்குவளை
(திருக்கோளிலி)

அவனிவிடங்கப் பெரு
மான் ஆலய உட்
புறத் தோற்றம்.



201. திருப்பாலைத்துறை (மாயவரம்-தஞ்சாவூர் மார்க்கம்).
பாபநாசம் ரயில் நிலையத்திலிருந்து வடகிழக்கே 1 மைல். பாபநாசத்துக்கு மேற்கே ½ மைலில் 108 சிவாலயம் என்னும் தலம் இருக்கிறது.

சுவாமி—பாலைவனநாதேசுரர். *தேவி*—தவளவெண்ணகையம்மை.

சிவபெருமான் தாருகாவனருஷிகள் அனுப்பிய புலியை யுரித்துத் தரித்தருளிய ஸ்தலம். அம்மையார் சந்நிதி பிரத்தியேகமாய்த் தென்னண்டை இருக்கிறது.

202. திருப்பாற்றுறை (விழுப்புரம்-திருச்சி காட் லயன் மார்க்கம்).
ஸ்ரீரங்கம் ரயில் நிலையத்திலிருந்து 5 மைல்.

சுவாமி—மூலநாதேசுரர். **தேவியார்**—மேகலாம்பிகை.

மார்க்கண்டருஷி பூசிக்கும்பொழுது அபிஷேகத்துக்குப் பசும்பால் கிடையாமல் வருந்த சிவபெருமான் பால் பெருகும்படி அநுக்கிரகித்த ஸ்தலம்.

203. திருப்புகலூர் (மாயவரம்-காரைக்குடி மார்க்கம்).
நன்னிலம் ரயில் நிலையத்திலிருந்து கிழக்கே 4 மைல்.

சுவாமி—அக்கினீசுரர். **தேவியார்**—கருந்தாழ்குழலியம்மை.

அக்கினி பூசித்த ஸ்தலம். பெரிய கோயில். பெரிய கோபுரம். தென்பக்கந் தவிர மற்ற பக்கங்களில் எல்லாம் கருங்கல்லினற் கட்டிய அகழி இருக்கிறது. சுவாமியின் (கோணப்பிரானுடைய) உருவம் சற்று சாய்ந்திருக்கிறது. சந்திரசேகர் சந்நிதி விசேஷம். அதற்கு நேராக அக்கினிபகவான் உருவம் தெரிகிறது.

திருநாவுக்கரசு நாயனர் முத்திபெற்ற ஸ்தலம். வாதாபி கணபதிக்குப் பக்கத்தில் அப்பர் சுவாமிகள் திருவுருவம் இருக்கிறது. முன்பிரகாரத்திற் கீழ்ப்பக்கத்திற் சுவாமி சிங்கரூபமாய் அப்பரை விழுங்குகிறபாவனை சிலையிற் காட்டப்பட்டிருக்கிறது. திருப்புகலூர் வர்த்தமானீச்சுரம் இவ்வாலயத்துக்குள் இருக்கிறது. சுவாமிக்குப் பலவித புஷ்பமாலை கட்டிக்கொடுத்து திருத்தொண்டு செய்துவந்த முருக நாயனருடைய ஸ்தலம். சுந்தரமூர்த்தி நாயனர் நித்திரை செய்யும்போது தலையின்கீழ் வைத்துக் கொண்டிருந்த செங்கற்களெல்லாம் செம்பொற்கற்களாயிருக்கக் கண்டு திருப்பதிகம் பாடி சுவாமியைத் துதிசெய்த ஸ்தலம்.

தம்மையேபுகழ்ந் திச்சைபேசினுஞ் சார்வினுந்தொண்டர் தருகிலாப்
பொய்மையாளரைப் பாடாதேயெந்தை புகலூர்பாடுமின் புலவீர்காள்
இம்மையேதருஞ் சோறுங்கூறையு மேத்தலாமிடர் கெடலுமாம்
அம்மையே சிவலோகமாள்வதற் கியாதுமையுற வில்லையே.

204. திருப்புகலூர் வர்த்தமானீச்சுரம் (மாயவரம்-காரைக்குடி மார்க்கம்).

நன்னிலம் ரயில் நிலயத்திலிருந்து 4 மைல். இவ்வாலயம் [203] திருப்புகலூர் ஆலய வடக்கு பிரகாரத்தில் இருக்கிறது.

சுவாமி—வர்த்தமானேசுரர். தேவியார்—கருந்தாழ்குழலியம்மை.

வர்த்தமானேசுரர் மூலலிங்கமாகிய அக்கினீசுரருக்கு அடுத்த வட பக்கத்தில் இருக்கிறார். வர்த்தமானேசுரர் சந்நிதியில் முருக நாயனார் திருவுருவம் இருக்கிறது.

205. திருப்புத்தூர் (மாயவரம்-காரைக்குடி மார்க்கம்).

காரைக்குடி ரயில் நிலயத்திலிருந்து காரைக்குடி-திண்டுக்கல் பாதையில் 15 மைல். பஸ் வசதி உண்டு.

சுவாமி—திருத்தளிநாதர். தேவியார்—சிவகாமியம்மை.

லக்ஷ்மி பூஜை செய்த தலம். சபாபதி விக்கிரகமும், சிவகாமியம்மன் விக்கிரகமும் சிலையிலிருக்கின்றன. விஷ்ணுவுக்கும் ஒரு சந்நிதி இருக்கின்றது. பெரிய கோயில்.

திருஞானசம்பந்தரால் பாடப்பெற்றது. அப்பர் சுவாமிகளின் திருத்தாண்டகமும் பெற்றது. பெரிய ஊரணியுண்டு. அதன் பெயர் திருத்தளி (ஸ்ரீ தளி). தலவிருக்ஷம் கொன்றை. இப்புனித விருக்ஷத்தின்கீழ் அகத்திய முனிவர் பூசித்த இலிங்கம் உண்டு. இங்கு இக்கோயிலை வைரவர் கோயில் என்றால்தான் அனைவருக்கும் புரியும். மேற்கு நோக்கிய யோகபைரவர் சந்நிதானம் விசேட சான்னித்யமுள்ளது. தனிக்கோயில் வைரவருக்கு உண்டு. வைரவர் அர்த்த ஜாம பூசனையில் எவரும் அநுமதிக்கப் பெறமாட்டார்கள். வாசனைப் பூசியவர்கள் இவர் சந்நிதானத்திற்குப் போகலாகாது. உடன் மயக்கம் வந்துவிடும். அவருக்குப் புனுகு சாத்தவேண்டும்.

206. திருப்புள்ளமங்கை அல்லது பசுபதிகோயில் (மாயவரம்-தஞ்சாவூர் மார்க்கம்).

பசுபதிகோயில் ரயில் நிலயத்திலிருந்து கிழக்கே கோயில் $\frac{1}{2}$ மைல்.

சுவாமி—ஆலந்தரித்தாசுரர். தேவியார்—அல்லியங்கோதை.

தேவர்கள் அமுதம் கடைந்தபோது உண்டான விஷத்தை சிவபெருமான் உண்டு திருமிடற்றில் அடக்கியருளிய ஸ்தலம்.

207. புள்ளிருக்குவேளூர் *அல்லது* **வைத்தீசுரன்கோயில்**

வைத்தீச்சுரன்கோயில் ரயில் நிலையத்திலிருந்து **கோயில் 1 மைல்.**

சுவாமி—வைத்தியநாதேசுரர். **தேவியார்**—தையல்நாயகி.

பெரிய கோயில். அழகிய பெரிய கோபுரங்களை உடையது. இங்கே உள்ள தெய்வங்கள் கலிகாலத்திலும் கண்கண்ட தெய்வங்களாகக்—கருத்து நிறைவேற்றி வைக்கும் கருணைக்கடவுளாக இருப்பதால் எல்லா சந்நிதிகளுக்கும் மிக்க விசேஷம் உண்டு. "தீராத வல்வினைநோய் தீர்த்தருள்வான்" என்று தேவாரங்கள் போற்றுகின்றன.

தையல்நாயகி அம்மை சித்தாமிருதத் தீர்த்தத்தில் தோய்ந்து வருகின்ற தென்றற் காற்றை அநுபவித்துக்கொண்டு கருணைத் திருக்குறிப்போடு வீற்றிருக்கின்றார். இங்கே பேய் பிசாசு பிடித்தவர்கள் வந்தால் தாமாக ஆடத் தொடங்கிவிடுகிறார்கள்.

முத்துக்குமாரர் சந்நிதி விசேஷம். பிறவிநோய் தீர்த்து வைக்கும் பெருமானுக்கும், மனநோய் தீர்க்கும் அம்மைக்கும் அவதரித்த பிள்ளை கலிநோய் தீர்க்கும் கந்தன். இங்கு இவருக்குக் கார்த்திகைதோறும் மகாபிஷேகம் நடைபெறும். அதுபோது பக்தர்கள் பன்னீர், பால் முதலியவைகளை வெள்ளி அண்டாக்களில் கொண்டுவந்து நிரப்புவார்கள். செல்வமுத்துக்குமாரர் அபிஷேகம் கொண்டருளியபின் அவற்றை வாங்கி உட்கொள்வார்கள். இது ஒரு அற்புதமான கண்கொள்ளாத காட்சி. பச்சைக் கற்பூரமும் குங்குமப்பூவும் சமனெடையாகச் சந்தனத்தில் கலந்து செல்வ முத்துக்குமாரர் திருவடியில் சாத்துவது வழக்கம்.

சித்தாமிர்த தீர்த்தத்தில் தவளையே இல்லாதது தனிச்சிறப்பு. அங்கசந்தான தீர்த்தத்தின் மண்ணை சுக்கிலபக்ஷத்தில் நல்ல நேரத்தில் எடுத்துப் புதுப் பாத்திரத்தில் வைத்துக்கொள்வார்கள். சடாயு குண்டத்திலுள்ள விபூதியும் அதனோடு கலப்பார்கள். சித்தாமிர்தத் தீர்த்தத்தைச் சேர்த்துப் பிசைவார்கள். முத்துக்குமாரசுவாமிச் சந்நிதியிலுள்ள குழியம்மியில் போட்டுப் பஞ்சாக்ஷரத்தைக் கூறிக்கொண்டு ஆயிரத்தெட்டு தடவை அரைப்பார்கள். கடுகளவாக உருட்டிக் காயவைத்து தையல்நாயகியின் திருவடிகளில் வைத்து அருச்சித்து அளிப்பது வழக்கம். இது தான் திருச்சாந்துருண்டை என வழங்குகிறது.

இங்கே சீதையைத் தேடித் தென்னிலங்கை சென்ற ஸ்ரீராமன் சடாயு பக்ஷிக்கு தகனக்கிரியை நடத்திய தலம். சடாயு, சம்பாதி

பறவைகளும், இருக்கு வேதமும், முருகனும் பூசித்த தலம். ஆதலால் தேவாரத்தில் இத்தலம் புள்ளிருக்குவேளூர் எனக் குறிக்கப் பெறுகிறது. கோபுர வாசலில் பெரிய வேப்பமரம் ஒன்றிருக்கிறது.

கள்ளார்ந்த பூங்கொன்றை மதமத்தங் கதிர்மதியம்
உள்ளார்ந்த சடைமுடியெம் பெருமானு ருறையுமிடங்
தள்ளாய சம்பாதி சடாயென்பார் தாமிருவர்
புள்ளானுர்க் கரையனிடம் புள்ளிருக்கு வேளூரே.

208. திருப்புறம்பயம் (மாயவரம்-தஞ்சாவூர் மார்க்கம்).

கும்பகோணம் ரயில்நிலையத்திலிருந்து $4\frac{1}{2}$ மைல். போகும் பாதையில் திருஇன்னம்பர் [42] என்னும் தலம் வருகிறது. புறம்பயத்திற்குத் தெற்கே மண்ணியாறும் வடக்கே கொள்ளிடமும் ஓடுகிறது.

சுவாமி—சாக்ஷிநாதேசுரர். தேவியார்—கரும்பன்னசொல்லம்மை.

பிரளயத்துக்குப் புறம்பாய் இருந்தமையாற் புறம்பயம் என்று பெயர் உண்டாயிற்று. ஒரு வணிக கன்னிகைக்குக் குறித்திருந்த புருஷன் பாம்பு கடித்து இறக்க, அவனைத் திருஞான சம்பந்த சுவாமிகள் எழுப்பியருளிய ஸ்தலம். செட்டிப் பெண்ணுக்குச் சாக்ஷி சொன்ன காரணத்தாற் சுவாமிக்குச் சாக்ஷிநாதர் என்றும், புன்னைவனநாதர் என்றும் பெயர். புன்னைமரம் இருக்கிறது. விநாயகர் வெண்மை நிறம்; பிரளயங்காத்த பிள்ளையார் என்று பெயர். கோயிலுக்குக் கீழ்ப்புறத்தில் திருக்குளமிருக்கிறது. அதன் கரைமேல் ஒரு தக்ஷிணாமூர்த்தி சந்நிதியிருக்கிறது. கோயிலுக்கு விறகு கொண்டுவந்த ஒரு நீசனுக்கு சுவாமி தக்ஷிணாமூர்த்தி ரூபமாய் வெளிப்பட்டு அநுக்கிரகம் செய்த தலம்.

209. புறவார்பனங்காட்டூர் என்பது **பனையபுறம்** (செங்கல்பட்டு-விழுப்புரம் மார்க்கம்).

முண்டியாம்பாக்கம் ரயில்நிலையத்திலிருந்து $1\frac{1}{2}$ மைல்.

சுவாமி—பனங்காட்டீசுரர். தேவியார்—புறவாம்பிகை.

இத்தலத்திற் ஒவ்வொரு வருஷமும் சித்திரை மாதம் 1 தேதி முதல் 7 தேதி வரையில் ஒவ்வொரு நாள் காலையிலும் சூரியன் உதயமாகும்போது அதன் கிரணம் முதலிற் சுவாமிமேலும் பின்பு தேவியார்மேலும் விழுகின்றது.

சுவாமி சிபிச் சக்கரவர்த்திக்குத் தரிசனங் கொடுத்தருளிய ஸ்தலம்.

210. திருப்புனவாயில் (மாயவரம்-காரைக்குடி மார்க்கம்).

அறந்தாங்கி ரயில் நிலயத்திலிருந்து 28 **மைல்.** *போகும் வழியில் 8-வது மைலில் திருப்பெருந்துறை (ஆவிடையார் கோவில்) இருக்கிறது.*

திரு ஆடானை [19] *என்னும் ஸ்தலத்திலிருந்தும் போக லாம். வடக்கே 12 மைல்.*

சுவாமி—பழம்பதிநாதேசுரர். *தேவியார்*—கருணைநாயகியம்மை.

இத்தலத்திற்குப் பழம்பதி, விருத்தபுரி எனப் பெயர்.

"பத்தர் தாம்பலர் பாடிநின் ருடும் பழம்பதி
பொத்தி லாங்தைகள் பாட்டருப் புனவாயிலே"—தேவாரம்.

கற்குன்றுந் தூறுங் கடுவெளியுங் கடற்கானல் வாய்ப் புற்கென்று தோன்றிடு மெம்பெருமான் புனவாயிலே" என்றபடி இன்றும் காணலாகும். கோயில் பெரிது. நான்கு வேதங்களும் பூசித்த ஸ்தலம். நந்தியும், மூலலிங்கமும், ஆவிடையாரும் அதிக பெரிதாய் இருக்கிறது. சுவாமிக்கு 3 முழ வஸ்திரமும், ஆவிடை யாருக்கு 30 முழ வஸ்திரமும் சாற்றுகிறார்கள். ஆகவே 'மூன்று முழமும் ஒரு சுற்று, முப்பது முழமும் ஒரு சுற்று' என்று சொல் லும் பழமொழி இத்தலத்து சுவாமியைப் பற்றித்தான். லக்ஷ்மிதீர்த்தமும், பிரமதீர்த்தமுங் கோயிலுக்கெதிரிலிருக்கின்றன. பாண்டி 14 தலமும் திருப்புனவாயிலிலேயே இருப்பதாகக் கூறு கிறார்கள். ஊருக்குத் தெற்கில் பாம்பாறு (சரப்பநதி) ஓடுகிறது.

211. திருப்புன்கூர் (விழுப்புரம்-மாயவரம் மார்க்கம்)

வைத்தீசுரன்கோயில் [207] *ரயில் நிலயத்திலிருந்து மேற்கு 2 மைல்.*

சுவாமி—சிவலோகநாதர். *தேவியார்*—சொக்கநாயகியம்மை.

சுவாமி தமக்கு முன்னிருந்த நந்திதேவரை திருநாளைப் போவார் (நந்தனார்) நேரே தரிசித்து வணங்கும்பொருட்டு சற்று விலகியிருக்கும்படிச் செய்தருளிய ஸ்தலம்.

கலிக்காம நாயனாருடைய வாசஸ்தானமாகிய திருப்பெரு மங்கலம் திருப்புன்கூருக்குச் சமீபத்திலிருக்கிறது. சுந்தரமூர்த்தி நாயனாரும் ஏயர்கோன் கலிக்காம நாயனாரும் நண்புள்ளவர்க ளான பின்பு இருவருமாகச் சென்று வணங்கிய ஸ்தலம். கலிக்காம நாயனார் அநேக திருப்பணிகள் செய்த ஸ்தலம். அவர் பொருட்டுச் சிவபெருமான் ஈராறுவேலி இறுமுறை கொண்டு மழையின்றி உயிர்கள் வருந்திய காலத்து மழைபெய்வித்து உலகை உய்வித்த ஸ்தலம். நந்தனாருடைய சிலை உருவம் வெளிப் பிரகாரத்திற் கோபுரத்திற்கருகில் இருக்கின்றது.

212. திருப்பூந்துருத்தி (மாயவரம்-தஞ்சாவூர் மார்க்கம்)

தஞ்சாவூர் ரயில் நிலையத்திலிருந்து 8 மைல்.

வடக்கே 6 மைல் சென்று திருக்கண்டியூர் [68] சென்று, அங்கிருந்து மேற்கு 2 மைல். ஆக 8 மைல். இங்கிருந்து வடக்கு 1 மைலில் திருநெய்த்தனம் [174] என்னும் தலம் இருக்கிறது.

சுவாமி—புஷ்பவனநாதேசுரர். *தேவி*—அழகாலமர்ந்தநாயகி.

சோழராஜா துருத்தியை வைத்துப் பூசிக்கச் செய்ததனால் திருப்பூந்துருத்தி என்று பெயர் வந்ததாம். பட்டீச்சுரத்தைப் போல நந்திகள் இங்கும் விலகி இருக்கின்றன. முதலிலிருக்கும் நந்தி பெரிதாயும், அழகாயும் இருக்கிறது. அவை திருஞான சம்பந்த சுவாமிகளுக்காக விலகினவாம். அப்பர் சுவாமிகள் ஒரு திரு மடங்கட்டுவித்து திருத்தாண்டகம், திரு அங்கமாலை முதலிய திருப்பதிகங்கள் பாடிய ஸ்தலம். பாண்டி நாட்டுக்குச் சென்று சமணரை வென்று திரும்பி வந்த திருஞான சம்பந்தர், அப்பர் சுவாமிகள் இங்கிருப்பதைக் கேள்வியுற்று வந்து அவருடன் சில காலம் தங்கிய ஸ்தலம். சப்த ஸ்தானங்களில் ஆறுவது ஸ்தானம். தேவேந்திரனும், காசிபரும் பூசித்த ஸ்தலம்.

213. திருப்பூவணம் (மதுரை-மானமதுரை மார்க்கம்)

திருப்பூவனம் ரயில் நிலையத்திலிருந்து 2 பர்லாங். மதுரைக்குக் கிழக்கு 12 மைல்.

சுவாமி—பூவணநாதேசுரர். *தேவியார்*—மின்னனையாளம்மை.

பொன்னனையாள் என்னும் தாசிக்காக சுவாமி சித்தராயெழுந்தருளி வந்து இரசவாதஞ் செய்துகொடுத்த பொன்னைக் கொண்டு அவள் சுவாமியின் திருவுருவஞ் செய்வித்து மகிழ்ந்த ஸ்தலம். தமிழ்நாட்டு மூவேந்தராகிய 'தென்னர், சேரர், சோழர்' ஆகிய இவர்கள் பூசித்து வணங்கின ஸ்தலம். பிரமன் பூசித்த ஸ்தலம். கோயில் மண்டப வேலைகள், கொடுங்கைகள் முதலியன திருப்பெருந்துறையிலுள்ள பாணியில் இருக்கின்றன். நடராஜர்-சிலாவிக்ரகம்.

214. திருப்பூவனூர் (தஞ்சாவூர்-நாகூர் மார்க்கம்)

நீடாமங்கலம் ரயில் நிலையத்திலிருந்து தென்மேற்கே 2 மைல்.

சுவாமி—புஷ்பவனேசுரர். *தேவியார்*—கற்பகவல்லியம்மை.

இத்தலம் பாமணி ஆற்றின் மேல்கரையில் இருக்கிறது.

சுகமுனி புஷ்பவனம் வைத்து சுவாமியைப் பூசித்துமுத்தி பெற்ற ஸ்தலம்.

215. பெண்ணுகடம் (திருக்கடந்தைநகர்) (விருத்தாஜலம்-திருச்சி (காட்லயன்) மார்க்கம்)

பெண்ணுடம் ரயில் நிலையத்திலிருந்து 1 மைல். விருத்தாசலத்துக்குத் தென்மேற்கு 11 மைல்.

சுவாமி—சுடர்க்கொழுந்தீசர், தேவியார்—கடந்தைநாயகி.

தேவகன்னியர், காமதேனு, வெள்ளையானை இவர்கள் பூசித்தபடியாற் பெண்ணுகடம் என்று பெயர் வந்தது. இந்தத் தலத்திலுள்ள ஆலயத்துக்குத் **தூங்கானை மாடம்** என்று பெயர், கலிக்கம்ப நாயனருடைய ஸ்தலம். அப்பர் சுவாமிகள் "பொன்னர் திருவடிக் கொன்றுண்டு விண்ணப்பம்" என்னுந் திருப்பதிகம் பாடித் தம்முடைய தோளின்மேற் சூலக்குறியும், இடபக்குறியும் பொறித்தருளப் பெற்ற ஸ்தலம்.

216. திருப்பெரும்புலியூர் (மாயவரம்-தஞ்சாவூர் மார்க்கம்)

தஞ்சாவூர் ரயில் நிலையத்திலிருந்து 10 மைல். திருவையாற்றுக்கு [50] மேற்கு 2 மைல். வழியில் 4-வது மைலில் திருநெய்த்தானம் [174] இருக்கிறது.

சுவாமி—வியாக்கிரபுரீசுரர். தேவியார்—சௌந்தரநாயகி.

வியாக்கிரபாதருஷி பூசித்த ஸ்தலம். சுவாமி யிருக்கும் இடத்திலுள்ள கற்கள் தாமரைபோல் வட்டமாய்க் போடப்பட்டிருக்கின்றன.

பிறைவள ரும்மிடிச் சென்னிப் பெரும்புலி யூர்ப்பெரு மானை
நறைவள ரும்பொழிற் காழி நற்றமிழ் ஞானசம் பந்தன்
மறைவள ருந்தமிழ் மாலை வல்லவர் தந்துயர் நீங்கி
நிறைவளர் நெஞ்சின ராகி நீடுல கத்திருப் பாரே.

217. பெருவேளூர் என்பது **காட்டூர் ஐயன்பேட்டை** (தஞ்சாவூர்-நாகூர் மார்க்கம்)

கொரடாச்சேரி ரயில் நிலையத்திலிருந்து $8\frac{1}{2}$ மைல். தலையாலங்காட்டிலிருந்து [146] கிழக்கு $2\frac{1}{2}$ மைல்.

சுவாமி—பிரியாஈசுரர். தேவியார்—மின்னனையாளம்மை.

கௌதமருஷி முதலியோர் பூசித்த ஸ்தலம்.

218. பேணுபெருந்துறை (மாயவரம்-தஞ்சாவூர் மார்க்கம்)

கும்பகோணம் ரயில் நிலையத்திலிருந்து தென்கிழக்கில் $5\frac{1}{2}$ மைல். திருநறையூருக்குக [161] கிழக்கு 1 மைல்.

சுவாமி—சிவாநந்தேசுரர், தேவியார்—மலையரசியம்மை.

சிவசக்தி, பிரமன் முதலியோர் பூசித்த ஸ்தலம். சுப்பிரமணிய சுவாமிக்கு மூகத்தன்மை நீங்கிய ஸ்தலம். மங்கள தீர்த்தமும், வன்னி விருக்ஷமும் கோயிலுக்கெதிரி லிருக்கின்றன.

219. பேரெயில் என்னும் **ஓகைப்பேரையூர்** (தஞ்சாவூர்-நாகூர் மார்க்கம்)

குழிக்கரை ரயில் நிலையத்திலிருந்து $4\frac{1}{2}$ மைல்.

சுவாமி—ஜகதீசுரர். **தேவியார்**—ஜகந்நாயகி.

ஊருக்குத் தெற்கே $\frac{1}{4}$ மைல் தூரத்தில் வெள்ளையாறு ஓடுகிறது. கோயிலுக்கெதிரிற் கீழ்ப்பக்கத்தில் அக்கினி தீர்த்தம் இருக்கிறது. கோயில் சிறிது. சபாபதி விக்கிரகம் வெகு சுந்தரமாய் இருக்கிறது.

220. திருப்பைஞ்ஞீலி (விருத்தாஜலம்-திருச்சி மார்க்கம்).

பிக்ஷாண்டார் கோயில் ரயில் நிலையத்திலிருந்து 3 மைல்

சுவாமி—நீலகண்டேசுர். **தேவியார்**—விசாலாக்ஷியம்மை.

பசியினால் வருத்தமுற்று வந்த அப்பர் சுவாமிகளுக்குச் சிவபெருமான் கட்டமுது கொடுத்தருளிய தடாகமும், தோட்டமும் இத்தலத்துக்குத் தெற்கே மைல் $\frac{3}{4}$ தூரத்திலிருக்கின்றது. பைஞ்ஞீலி என்றால் பசியவாழை என்று பொருள். இவ்வாழை கோயிலி லிருக்கிறது. இதை ஸ்வாமிக்குத்தான் உபயோகிக்கிறார்கள்.

221. திருமங்கலக்குடி (மாயவரம்-தஞ்சாவூர் மார்க்கம்)

ஆடுதுறை ரயில் நிலையத்திலிருந்து $1\frac{1}{2}$ மைல்.

சுவாமி—பிராணவரதேசுரர். **தேவியார்**—மங்களநாயகி

மாகாளி, சூரியன், விஷ்ணு, பிரமன், அகஸ்தியர் இவர்கள் பூசித்த ஸ்தலம். கோயிலுக்கெதிரில் திருக்குளமிருக்கிறது.

அரசனிடத்தில் பொக்கிஷதாரராய் இருந்த சிவபக்தர் ஒருவர் அரசனுடைய பணத்தைக் கொண்டு ஆலயத் திருப்பணி செய்ததை அரசன் தெரிந்து அவரை அழைப்பிக்க, அவர் அரசனது ஆக்ஞைக்கு ஆளாகாமல் உயிர் துறந்துவிட்டார்; அரசன் அவருடைய சரீரத்தைத் திருமங்கலக்குடிக்கு அப்பாற் கொண்டு போகும்படி கட்டளையிட்டார்; அந்த சரீரம் திருவியலூருக்கு [256] வர, அவர் மனைவியார், இறைவன், இறைவியை வேண்டிக் கொள்ளத் திருமங்கலக்குடியில் வீற்றிருந்தருளும் மங்களநாயகியாரின் திருவருளால் அவர் உயிர்த்தெழுந்த தலம்.



பின்புறம் தெரியும் குமரிக் கோயிலும், கடற்கரையின் ஸ்நான கட்டத்தில் அருகிலுள்ள பதினறுகால் மண்டபக் காட்சியும்.

கன்யா குமரி.

புன்சிரிப்பும், குளிர்ந்த பார்வையும்காண ஒரு கையில் அட்சரமாலே தொங்க ஒரு கை ஊறு ஹஸ்தமாகத் தவக்கோலத்தில் நிற்கும் குமரியின் காக்ஷியைக் கண்டு தரிசியுங்கள்.

நாகர்கோயில்

(மேலே) பாருங்கள். இவ்வாலயத்தின் முன் துவார பாலகர்களுக்குப் பதில் சர்ப்பங்கள்தான் காட்சியளிக்கின்றன இது திராவிடர் பூசித்த ஆலயம்.



தலம் 111. பிரான்மலே (கொடுக்குன்றம்)

(கீழே) மலேயடிவாரத்திலுள்ள ஆலய காட்சியும், அதற்கடுத்துள்ள மலே மேலுள்ள மண்டபக் காட்சியும்.



தலம் 276. தஞ்சாவூர்

(மேலே) பிரஹதீஸ்வரர் ஆலய உட்புறத் தோற்றம். நடுவில் தெரியும் மண்டபத்தில்தான் நந்தி வீற்றிருக்கின்றார்.

(நடு) கோபுரவாயலில் நின்று பார்த்தால் தெரியும் காட்சி. நந்தியை பாருங்கள். எவ்வளவு கம்பீரமாக வீற்றிருக்கின்றார்.





தலம் 50. திருவையாறு.

பஞ்சநதீசுரர் ஆலயமும், சூர்ய புஷ்கரணி தீர்த்தமும். குறுமுனி இத் தீர்த்தத்தில் மூழ்கிக் கயிலையை யடைந்தார்.

222. திருமணஞ்சேரி (மாயவரம்-கும்பகோணம் மார்க்கம்)

குற்றாலம் ரயில் நிலையத்திலிருந்து 2¾ மைல். போகும் வழியிலும், அருகாமையிலும் திருவேள்விக்குடி [271], எதிர்கொள்ளுபாடி [46] முதலிய தலங்கள் உள்ளன.

சுவாமி—அருள்வள்ளநாயகர். *தேவி*—யாழின்மொழியம்மை.

மன்மதன் பூசித்த ஸ்தலம். வைசிய குலத்திற் பிறந்த நங்கை நாத்திகளிருவரும் ஒருங்கே கர்ப்பமுற்றபோது, அவர்கள் தமக்குப் பிறக்கும் குழந்தைகளை ஒருவர்க்கொருவர் சம்பந்தஞ்செய்து கொள்ளுகிறதென்று உறுதிசெய்து கொண்டார்கள். பின்பு ஒருத்தி பெற்றது ஆமையாய் இருந்தபடியால், மற்றவள் தன் பெண்ணைக் கொடேன் என்று சொன்னாள். அந்த ஆமை சிவபெருமானைப் பூசித்து, அவரால், அப்பெண்ணை மணஞ் செய்யப்பெற்று, ஆமையுரு நீங்கி இத்தலத்தில் மானிட வுருவம் பெற்றது.

223. திருமண்ணிப்படிக்கரை என்பது **இலுப்பைப்பட்டு** (விழுப்புரம்-மாயவரம் மார்க்கம்)

வைத்தீசுரன் கோயில் ரயில் நிலையத்திலிருந்து 6 மைல். போகும் வழியில் திருப்புன்கூர் [211], திருவாளொளிபுற்றூர் [253] முதலிய தலங்கள் இருக்கின்றன.

சுவாமி—நீலகண்டேசுரர். *தேவியார்*—அமிர்தகரவல்லியம்மை.

சிவபெருமான் ஆலகால விஷத்தை யருந்தியபோது, உமா தேவியார் அவருடைய கண்டத்தைப் பிடிக்க, அவர் அவ்விஷக் கரையைத் தமது கண்டத்திற் காட்டியருளிய தலம்.

224. திருமயிலாடுதுறை என்பது **மாயவரம்** (மாயவரம்-தரங்கம்பாடி மார்க்கம்).

மாயவரம் டவுன் ரயில் நிலையத்திலிருந்து கோயில் 2 பர்லாங். மாயவரம் சந்திப்பு ரயில் நிலையத்தி லிறங்கினால் கோயில் கிழக்கே 2 மைல் தூரத்திலுள்ளது. காவிரியின் தென் கரையி லிருக்கிறது.

சுவாமி—மாயூரநாதேசுரர். *தேவியார்*—அபயாம்பிகை.

"ஆயிரமானாலும் மாயூரமாகாது" என்பது நமது முன்னோர் பழமொழி. "மயில் வடிவொடு வந்து நம்மைப் பூசிக்க, நாம் அப்பொழுது அங்கு மயிலாக வருவோம்" என்று இறைவன் ஒருகாலத்தில் உமைக்கு சொல்ல, அம்மையும் அப்படியே மயிலாக வர, தாமும் மயிலுருக்கொண்டு இங்கு வந்து பூசித்து வழிபட்டனர். அதனால் வந்த பெயர்தான் மாயூரம் என்பது. இப்பெருமான் கௌரிதாண்டவம் செய்து தேவர்களுக்கு அருள்பாலித்தார். இந்த க்ஷேத்திரத்திற் காவிரி நதியில் துலா மாசமாகிய ஐப்பசி மாதத்

திற் செய்யும் ஸ்நாநம் மிகவும் விசேஷம். இங்கு முருகப்பெருமான் சந்நிதி விசேஷம். கந்தர் சஷ்டி திருவிழா மிக்க விமரிசையாக நடக்கிறது.

மாயவரம் துலாஸ்நான கட்டத்திற்கு வடக்கே 1 மைலில் "வள்ளலார் கோயில்" ஆலயத்திலுள்ள தக்ஷிணாமூர்த்தி சந்நிதி விசேஷம். ஒருகாலத்தில் நந்திதேவர், நாமல்லவா பெருமானுக்கு வாகனமாயிருந்து சுமக்கிறோம் என்று கர்வம்கொள்ள, அக்கருத்தறிந்த பெருமான் தமது திருச்சடையின் நுனி ஒன்றை முதுகிலிடவே, சுமக்க முடியாமல் வருந்தி, பிழை பொறுத்தருள வேண்டினார். பெருமானும் ஞானோபதேசம் செய்தார். நந்திமீது பெருமான் யோகாசனத்தில் ஞானமுத்திரையுடன் வீற்றிருருக்கும் திருக்கோலத்தை இங்கு காணலாம். பிரகாரத்தில் வௌவால் நத்தி மண்டபத்தில் குருமூர்த்தி சந்நிதி இருக்கிறது.

காவியின் இடபதீர்த்தக் கரையில் துலாக் கட்டத்தில் விசுவநாதர் ஆலயம் இருக்கிறது. காசி செல்ல முடியாதவர்கள் இங்கு ரிஷபதீர்த்தத்தில் மூழ்கிச் சிரார்த்தம் செய்வது விசேஷம். இவ்வாலயத்திலுள்ள துண்டி விநாயகரையும், பயிரவரைரும் தரிசிக்கலாம். கோயிலின் முகப்பு மண்டபத்தில் உயர்ந்த இடத்தில் பாலதண்டாயுதபாணி காட்சியளிக்கிறார். இவ்வுருவம் கண்டு களிக்கத்தக்கது.

225. மயிலாப்பூர் (மதராஸ் எழும்பூர்).

எழும்பூர் ரயில் நிலையத்திலிருந்து தெற்கே 4 மைல்.

சுவாமி—கபாலீச்சுரர். **தேவியார்**—கற்பகவல்லியம்மை.

கோயில் பெரிது. பெரிய கோபுரம் உடையது. பெரிய கோபுரம், நவராத்திரி கொலு மண்டபம் முதலியவைகளில் அதிக சித்ரவேலைப்பாடுகளமைந்த சிற்பங்கள் உள்ளன. மேற்கு பார்த்த சந்நிதி. அம்பிகை தெற்கு நோக்கியவண்ண மிருக்கிறார். வெள்ளிக்கிழமைகளில் கற்பகாம்பாள் சந்நிதி மிகவும் விசேஷம். பார்வதி அம்மையார் மயிலுருக்கொண்டு புன்னை விருக்ஷத்தின் கீழ்ப் பரமனைப் பூசை செய்த தலம். திருஞானசம்பந்த சுவாமிகள் பூம்பாவைத் திருப்பதிகம்பாடி, சிவபக்தராகிய சிவநேச செட்டியார் அருமைப் புதல்வியைப் பாம்பு கடித்து இறந்து நகனமான எலும்பைப் பெண்ணுருவாக்கிய தலம். மேற்குப் பிரகாரத்தில் பூம்பாவை சந்நிதி இருக்கிறது. வடக்கு பிரகாரத்தில் புன்னை விருக்ஷத்தின்கீழ் அம்மையார் மயிலாயிருந்து பூஜை செய்த ஆலயம் இருக்கிறது. தெற்குப் பிரகாரத்தில் சுப்ரமண்ய சுவாமி சந்நிதானம் பிரத்யேகம். மிகவும் சாநித்திய முடையவர். அங்கு வாயிலார் நாயனார் திருவவதாரஞ் செய்த தலமாகையால் வடக்கு



நோக்கிய வண்ணம் கோயில் கொண்டெழுந்தருளியுள்ளார். மேற்கு சந்நிதிக் கெதிரில் பெரிய திருக்குள மிருக்கிறது. இங்கு பங்குனி மாதத்தில் திருவிழா உண்டு.

திருக்குறளாசிரியர் தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனுர் ஆலயம் கபாலீசுரர் கோயிலுக்கு வடபால் ½ மைல் தூரத்தி லுள்ளது. ஆலயம் சமீபத்தில் பழுதுபார்த்து இருக்கிறது. தெய்வப்புலமைத் திருவள்ளுவர், வாசுகி அம்மையார் முதலிய விக்கிரகங்கள் சிலா ரூபத்திலும், உற்சவ மூர்த்தமாயும் இருக் கின்றன.

226. திருமயேந்திரப்பள்ளி என்பது **கோயிலடிப்பாளையம்** (விழுப்புரம்-மாயவரம் மார்க்கம்).

கொள்ளிடம் ரயில் நிலையத்திலிருந்து 7 மைல். வழியில் ஆச்சாள்புரம் [159] என்னும் தலம் இருக்கிறது.

சுவாமி—திருமேனியழகர். தேவியார்—வடிவாம்பிகை.

சந்திரன், சூரியன், பிரமன், இந்திரன் இவர்கள் பூசித்த தலம்.

227. திருமருகல் (மாயவரம்-காரைக்குடி மார்க்கம்).

நன்னிலம் ரயில் நிலையத்திலிருந்து கிழக்கே 6 மைல். வழியில் திருப்புகலூர் [203] என்னும் தலமிருக்கிறது. திருமருகலுக்கு வடகிழக்கு 1 மைலில் சாத்தமங்கை [129] என்னும் தலம் இருக்கிறது.

சுவாமி—மாணிக்கவண்ணேசுரர். தேவி—வண்டுவார்குழலம்மை.

விஷம் தீண்டி யிறந்த செட்டிப்பிள்ளையைத் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனுர் உயிர்ப்பித்துக் கொடுத்த தலம். கிழக்குப் பார்த்த சந்நிதி. எதிரில் திருக்குளமிருக்கிறது. அம்மன் சந்நி திக்கு நேரே "விஷந்தீர்த்த பிள்ளையார்" வீற்றிருக்கிருர்.

228. திருமழபாடி என்பது **திருமல்லாடி** (விழுப்புரம்-திருச்சி (காட் லயன்) மார்க்கம்).

புள்ளம்பாடி ரயில் நிலையத்திலிருந்து கிழக்கே 12 மைல். திருவையாற்றிலிருந்து மேற்கே 3 மைல். வழியில் கொள்ளிட நதி ஓடுகிறது.

சுவாமி—வஜ்ரஸ்தம்பேசுரர். தேவியார்—அழகாம்பிகை.

திருமாலும், தேவேந்திரனும் பூசித்த தலம்.

இந்தத் தலத்திற் பங்குனி மாதத்தில் நந்திதேவருக்குத் திருக் கலியாணம் நடக்கிறது. அப்போது திருவையாற்றிலிருந்து பஞ்சநதீசுரரும், நந்திதேவரும் வருகிறூர்கள். கணபதி-சுந்தர கணபதி. சோமாஸ்கந்த மூர்த்தி சிலேயிலிருக்கிறது. ஸ்தல விருக்ஷமாகிய பனைமரம் பிரகாரத்திலிருக்கிறது.

229. திருமறைக்காடு என்பது **வேதாரணியம்** (திருத்துரை பூண்டி-கோடிக்கரை மார்க்கம்).

வேதாரண்யம் ரயில் நிலேயத்திலிருந்து $\frac{1}{2}$ மைல். பெரிய கோயில். சுவாமி சந்நிதி, அம்மன் சந்நிதி தனித்தனியே இருக்கிறது. கடலோரத்தி லிருக்கிறது.

சுவாமி—வேதாரண்யேசுரர். தேவி—யாழைப்பழித்தமொழியம்மை.

சப்த விடங்க ஸ்தலங்களி லொன்று. தியாகராஜருக் கெதிரிற் சுந்தரர் பரவையாருடன் இருக்கிறூர். வேதங்கள் பூசித்துத் திருக் காப்புச்செய்த கதவைத் திருநாவுக்கரசு சுவாமிகளும், திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகளும் முறையே திறக்கவும், அடைக்கவும் பாடியருளிய ஸ்தலம்.

சேரமான் பெருமாணுயனுர் சுந்தரமூர்த்தி நாயனுருடன் சென்று சுவாமி தரிசனஞ் செய்து பணிந்த ஸ்தலம். சுவாமிக்குப் பின்பக்கத்திற் சுவாமியும், அம்மையும் கலியாணகோலமாய் நிற்கிறூர்கள். தக்ஷிணுமூர்த்திக்கு நான்கு திருமுகங்களிருக் கின்றன. ஸ்தல விநாயகர்-சிந்தாமணி கணபதி. வெளிப் பிர காரத்தில் வீரஹத்தி விநாயகர் சந்நிதி இருக்கிறது. இந்தத் தலத்தில் துர்க்கை யம்மையும் மிக பிரபலம். பெரிய திருக்குளம் இருக்கிறது. சந்நிதிக்கு எதிரில் இருக்கும் கடலுக்கு "வேத தீர்த்தம்" என்று பெயர்.

ஆலயத்துள்ள தீப நெய்யை ஓர் எலி வந்து உண்ணும் பொழுது அச்சுடர் அதன் மூக்கிற் பட்டது. அப்போது அது தன் மூக்கை எடுத்துக்கொள்ள, தீபம் பிரகாசமா யெரிந்தது. தீபம் மங்கும்படியான சமயத்து எலி யிப்படிச் செய்தமையாற் சுவாமி அதற்கு மூவுலகை ஆளும்படி பேருள் புரிந்தார். அதன்படி எலி மறுபிறப்பில் மாவலிச் சக்கிரவர்த்தியாய்ப் பிறந்து அரசாண்டார். "வேதாரண்யம் விளக்கழகு" என்பது பழமொழி.

230. மாகறல் (செங்கல்பட்டு-அரக்கோணம் மார்க்கம்)

காஞ்சீபுரம் [56] ரயில் நிலேயத்திலிருந்து 10 மைல். பஸ் வசதி உண்டு.

சுவாமி—அகத்தீசுரர். தேவியார்—புவனநாயகி.

தேவேந்திரன் பூசித்த ஸ்தலம். இத்தலத்தில் பிள்ளைவரம் வேண்டுபவர் அங்கபிரதக்ஷிணஞ் செய்கிறார்கள். இங்கு சோம வார தரிசனம் மிகவும் விசேஷம். அக்கினி மூலையில் அக்கினி தீர்த்தம் இருக்கிறது. இது முக்கியம். இத்தலத்தருகில் சேயாறு ஓடுகிறது.

231. திருமாணிகுழி (விழுப்புரம்-மாயவரம் மார்க்சம்)
நெல்லிக்குப்பம் ரயில் நிலையத்திலிருந்து $3\frac{1}{2}$ மைல்.

சுவாமி—மாணிக்கவரதேசுரர். தேவியார்-மாணிக்கவல்லியம்மை.

கெடிலநதியின் தென்கரையில் இருக்கிறது. எப்பொழுதும் சுவாமி தேவியாருடன் இருப்பதாக சதாகாலமும் திரையிடப் பட்டிருக்கிறது. திரையில் ஏகாதச ருத்திரர்களுள், பீமருத்திரர் உருவம் இருக்கிறது. இவருக்குத்தான் முதலில் தீபாராதனை நடக்கிறது. பிறகு திரையை நீக்கி லிங்கத்திற்கு தீபாராதனை நடக்கிறது.

விஷ்ணு வாமனாவதாரஞ் செய்தபொழுது சிவபெருமானைப் பூசித்த ஸ்தலம்.

232. திருமாந்துறை என்பது **வடகரை மாந்துறை** (விழுப் புரம்-திருச்சி காட்லயன் மார்க்கம்)
லால்குடி ரயில் நிலையத்திலிருந்து மேற்கு 2 மைல். பிக்ஷாண்டார் கோயில் ரயில் நிலையத்திலிருந்து வடகிழக்கு 3 மைல்.

சுவாமி—ஆம்ரவனேசுரர். தேவியார்—அழகாலுயர்ந்தஅம்மை.

கண்ணுவ முனிவர் பூசித்த ஸ்தலம்.

233. திருமாற்பேறு (செங்கல்பட்டு-அரக்கோணம் மார்க்கம்)
பள்ளூர் ரயில் நிலையத்திலிருந்து 2 மைல்.

சுவாமி—மால்வணங்கீசுரர். தேவியார்—கருணைநாயகி.

குபன் என்னும் அரசனுக்காக மகாவிஷ்ணு ததீசி முனிவருடன் போர்செய்யத், தமது சக்கிரம் அம்முனிவருடைய வஜ்ர சரீரத்திற் பட்டு வாய் மடிந்துவிட்டபடியால் வேறு சக்கிரம் பெறயோசித்து, ஜலந்தரனைக்கொன்ற சக்கிரம் சிவபெருமானிடம் இருப்பதை பெற இங்கே சிவபெருமானைப் பிரதிதினமும் ஆயிரந்தாமரை மலர்களால் அர்ச்சித்து வந்தார். பரமசிவன் அவருடைய பக்தியை சோதிக்க ஒருநாள் ஒரு மலரை மறைத்தருள, ஒரு திருநாமத் துக்குத் தாமரைமலர் குறைவுபடுதலைக்கண்டு தமது கண்ணையே எடுத்து சாத்திப் பூஜையை நிறைவேற்றினார். அப்போது பரமசிவன் பிரசன்னமாகி மகாவிஷ்ணுவுக்குச் 'சுதரிசனம்'

என்னும் சக்கிரத்தையும், கண்ணேயிழந்து அர்ச்சித்தகாரணத்தால் 'மதுமாக்ஷன்' என்னுங் பெயரையுங் கொடுத்தருளி, இத்தலத்தில் பிறந்தவர்க்கும், தரிசித்தவர்க்கும் முத்தியளிக்கவேண்டுமென்று மகாவிஷ்ணு கேட்டுக்கொண்டபடி அநுக்கிரகஞ் செய்தருளினர். சோமனும் பூசித்த ஸ்தலம். நந்திகேசுரர் நின்றகோலமாய் இருக்கிருர். சுவாமிக்கு எதிரில் விஷ்ணுமூர்த்தி கூப்பிய கரத்துடன் நின்ற கோலமாய் இருக்கிருர். திடுக்குளம் வெளியில் கீழைக் கோபுரத்தருகில் இருக்கிறது. ஸ்தல விருஷம்—வில்வம் கோயிலுக்குள் இருக்கிறது. சுவாமி தீண்டாத் திருமேனி; அவருக்குக் குவளை சாத்தி அபிஷேகம் நடக்கிறது.

234 திருமீயச்சூர் (*மாயவரம்-காரைக்குடி மார்க்கத்திலுள்ள பேரளம் சந்திப்பு ரயில் நிலையம்*)

பேரளம் சந்திப்பு ரயில் நிலையத்திலிருந்து ½ மைல்.

சுவாமி—முயற்சிநாதேசுரர். **தேவியார்**—சௌந்தரநாயகி.

பெரிய கோபுரம். கிழக்குப் பார்த்த சந்நிதி. சூரியன் பூசித்த ஸ்தலம். சூரியன், சுவாமியையும், தேவியாரையும் யானைமேல் வைத்துப் பூஜைசெய்தானும். கோயில் விமானம் யானை உட்கார்ந்திருப்பதுபோலிருக்கிறது. தேவியாரும் உட்கார்ந்தவண்ணமாயிருக்கிருர்.

235. திருமீயச்சூர் இளங்கோயில் (*மாயவரம்-காரைக்குடி மார்க்கத்திலுள்ள பேரளம் சந்திப்பு ரயில் நிலையம்*).

சுவாமி—சகலபுவனேசுரர். **தேவியார்**—மேகலாம்பிகையம்மை.

இது மீயச்சூர் [234] ஆலயத்திலுள்ள சுவாமி சந்நிதிக்குப் பக்கத்தில் வடபுறமாயிருக்கிறது. ஆலயம் சிறியது. காளி பூசித்த தலம்.

236. திருமுண்டீச்சுரம் என்பது **கிராமம்** (*விழுப்புரம்-விருத்தாசலம் மார்க்கம்*).

திருவெண்ணெய்நல்லூர் ரோட் ரயில் நிலையத்திலிருந்து ¾ மைல்.

சுவாமி—முண்டீசுரர். **தேவியார்**—கானர்குழலியம்மை.

பிரமாவும், தேவேந்திரனும் பூசித்த தலம். கோயில் சிறிது. கோபுரம் இல்லை.

237. திருமுதுகுன்றம் என்பது **விருத்தாசலம்** (விழுப்புரம்-திருச்சி (காட் லயன்) மார்க்கம்).

விருத்தாசலம் ரயில் நிலையத்திலிருந்து 1½ மைல்.

சுவாமி—பழமலைநாதர். *தேவியார்*—பெரியநாயகி.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் பரவையாரின் பொருட்டுப் பொன் தரும்படி சுவாமியை வேண்டின தலம். கோயில் பெரியது. ஐந்து பெரிய கோபுரங்களுடையது. மணிமுத்தா நதி ஆலயத்திற்கு எதிரில் வடக்கு-தெற்காக ஓடுகிறது. ஆலயத்தின் உட்பிரகாரத்தில் வன்னி விருக்ஷம் இருக்கிறது. விருத்தாம்பாள் சந்நிதி முதல் பிரகாரத்தில் இருக்கிறது. உட்பிரகாரத்தில் பாலாம்பாள் சந்நிதியும் இருக்கிறது. மணிமுத்தா நதிக்கரையில் ஸ்தல விநாயகர் சந்நிதி பிரத்தியேகம். நதிக்கரையில் படித்துறைகள் அமைக்கப்பட்டுள்ளன. கோயிலும், நதியும் பார்ப்பவர் மனதைக் கவர்கின்றன

விருத்தகாசி என்று சொல்லப்படும் விசேஷமான தலம். இங்கு உயிர்விடும் அனைவருக்கும் பார்வதி தேவியார் தமது வஸ்திரத்தினால் வீசி இளைப்பாற்ற, சிவபெருமான் பஞ்சாக்ஷரோபதேசம் செய்து அவர்களைக் கடாக்ஷித்தருளும் அரும் பதியாதலால் காசியினுஞ் சிறந்ததென இச்சிறப்பைக் கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் கந்தபுராண வழிநடைப் படலத்தில் கூறுகின்றார்.

விழுப்புரம், கடலூர், சிதம்பரம், திருக்கோயிலூர் இன்னும் பல ஊர்களிலிருந்தும் பஸ் வருகிறது.

238. திருமுருகன்பூண்டி (ஈரோடு-கோயமுத்தூர் மார்க்கம்).

திருப்பூர் ரயில் நிலையத்திலிருந்து 5 மைல். இங்கிருந்து அவிநாசி [12] என்னும் தலம் 3 மைல்.

சுவாமி—முருகநாதேசுரர். *தேவியார்*—முயங்குபூண்முலையம்மை.

முருகக்கடவுள் பூசித்த தலம். சேரமான் பெருமாணயனார் கொடுத்த திரவியங்களைப் பெற்றுக்கொண்டு சுந்தரமூர்த்தி நாயனார் திருவாரூருக்குச் செல்லுகையில் சுவாமி, பூதர்களை வேடவர்களாக்கி அனுப்பி அத்திரவியங்களைப் பறிக்கச் செய்து, பின்பு நாயனார் பதிகம் பாடித் துதிக்க, அவைகளை மீண்டுங் கொடுத்தருளிய தலம். பொன்னைப் பறிகொடுத்து முகம் வாடிய சுந்தரர் உருவமும், இழந்த பொன்னை மீண்டும் பெற்ற அவருடைய உருவமும் கோயில் வாசலிலுள்ளன.

கோயிலுக்கு வெளியில் பிள்ளையார் கோயில் ஒன்றிருக்கிறது. அதற்கெதிரில் ஒரு பாறையில் சிறுகுழி ஒன்றிருக்கிறது. அதில் 12 வருஷத்திற் கொருதரம் ஜலம் பொங்குவதாகச் சொல்லுகிறார்கள். அவிநாசிக்குப் போகும் பாதையில் 2 பர்லாங் தூரத்தில் "கூப்பிடு பிள்ளையார்" ஆலயம் இருக்கிறது. அவர் சுந்தரருக்கு இறைவன் இருக்கும் இடத்தைக் கூவென்று கூவி காட்டிய விநாயகர்.

239. வடதிருமுல்லைவாயில் (சென்னை - அரக்கோணம் மார்க்கம்).

அம்பத்தூர் ரயில் நிலையத்திலிருந்து வடக்கே 2 மைல்.

சுவாமி—மாசிலாமணீசுரர். *தேவியார்*—கொடியிடைநாயகி.

பெரிய கோயில். பெரிய கோபுரமுண்டு. சுவாமி தீண்டாத் திருமேனி. சுவாமிக்கு எப்போதும் சந்தன காப்பிட்டிருக்கிறது. இங்கிருக்கும் நந்திதேவர் தொண்டைமான் சக்கிரவர்த்தியோடு யுத்தத்திற்குத் துணைபோனதாகச் சொல்லுகிறார்கள். சுவாமி சந்நிதியில் இரண்டு எருக்கந்தூண்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. சுப்பிரமணிய சுவாமி பூசித்த தலம். தொண்டைமான் சக்கிரவர்த்தி அநுக்கிரகம் பெற்ற திருப்பதி. இங்கே இருக்கும் நந்தி துவஜஸ்தம்பத்தைப் பார்த்த பாணியில் வீற்றிருக்கிறது. ரிஷப உற்சவ விக்கிரகம் இருக்கிறது. கோயிலுக்குத் தெற்கே பச்சையம்மன் கோயிலுண்டு. அம்மன் சக்தி வாய்ந்தது. பிரசித்தம்.

240. தென்திருமுல்லைவாயில் (விழுப்புரம்-மாயவரம் மார்க்கம்).

சீர்காழி ரயில் நிலையத்திலிருந்து 8 மைல். இத்தலம் கடலோரத்தி லுள்ளது.

சுவாமி—முல்லைவனநாதர். *தேவியார்*—கோதையம்மை.

தேவேந்திரனும், சுதர்மனும் பூசித்த தலம்.

241. திருமுக்கீச்சுரம் என்பது உறையூர் (திருச்சி-ஈரோடு மார்க்கம்).

திருச்சி கோட்டை ரயில் நிலையத்திலிருந்து 1 மைல்.

சுவாமி—பஞ்சவர்ணேசுரர். *தேவியார்*—காந்திமதியம்மை.

பிரமன் வந்து பூசிக்கும்பொழுது சிவபெருமான் வேளைக்கொரு வர்ணமாக வீற்றிருக்கக் கண்டு அவருக்குப் பஞ்சவர்ண நாதேசுரர் என்று பெயர் கொடுத்த ஸ்தலம். புகழ்ச்சோழ நாயனாருடைய ஸ்தலம். மூவேந்தரும் சேர்ந்து தொழுத திருப்பதி. இங்கு உதங்க முனிவருக்கு ஐந்து காலங்களில் ஐந்து வர்ணமாகச்

தலம் 5. திருஅதிகை.



கெடில நதிக்கரையில் வீற்றிருக்கும்
ஸ்ரீ வீரட்டானேசுரர் ஆலய கோபுரம்.
திரிபுரசம்ஹாரம் செய்த தலம்.

சங்கரநயினார்கோயில்

கோமதி அம்மன் சந்நிதி விசேஷம்
ஆடித் தபசு உற்சவம் முக்கியம்.
கோபுர தரிசனம் செய்யுங்கள்.

தலம் 110. திருச்செங்கோடு.

மலையின்மேலுள்ள ஆலயத்தின்
கோபுரமும் முன் மண்டபமும்.



மலைக்குப்போகும் படிக்கட்டுகள்.
படிக்கட்டுகளுக்குப் பக்கத்தில்
நாகம்போல் தெரிகிறது பாருங்கள்.



தலம் 150. திருத்துருத்தி.
(குத்தாலம்)

கோபுரத்தின் பக்கத்தில் தெரியும் மரம்தான் உத்தாலமரம். அதை வேறெங்கும் காண முடியாது. ஆகையால் உத்தாலம் குத்தாலமாய் மாறிவிட்டது. இவ்வாலயத்துக்கு கல்யாண ஆலயம் என்று பெயர்.

தலம் 191.
திருப்பறியலூர்
பரசலூர்

ஆலய உள் தோற்றம். தக்கன் யாகம்நடத்திய தலம். இப்போதும் இத்தலத்தின் குளத்தை கோடை காலத்தில் தோண்டிப் பார்த்தால் தோண்டத் தோண்டக் கரியாகவே இருக்குமாம்.





தலம் 63.
திருக்கடையூர்.

இயமனை உதைத்து மார்க்கண்டனுக்கு வரமருளிய தலம். அபிராமிகண்கண்ட தெய்வம். இதோ தெரியும் அமிர்தபுஷ்கரணி தீர்த்தம் கீழ் கோபுரத்தின் உட்புறமாக இருக்கிறது.

சிவபெருமான் காட்சி கொடுத்தருளினராம். யானையைக் கோழி வென்றமையால் இத்தலத்துக்குக் கோழியூர் என்னும் பெயர் உண்டாயிற்று. சூரவாதித்தன் என்னும் சோழனுற் சீர்திருத்தப் பட்டு ஆலயம் முதலியன அமைக்கப்பெற்றனவாம்.

242. திருவக்கரை *(விழுப்புரம்-புதுச்சேரி மார்க்கம்).*

புதுச்சேரி ரயில் நிலையத்திலிருந்து 13 மைல்.

சுவாமி—சந்திரசேகரேசுரர். *தேவியார்*—வடிவாம்பிகை.

வக்கிராசூரன் பூசித்த ஸ்தலம்.

243. வடுகூர் *என்பது* **ஆண்டார்கோயில்** *(விழுப்புரம்-புதுச்சேரி மார்க்கம்).*

சின்னபாபு சமுத்திரம் ரயில் நிலையத்திற்கு மேற்கே 2 மைல்.

சுவாமி—வடுகேசுரர். *தேவியார்*—வடுவகிர்க்கண்ணம்மை.

வடுகனுகிய வைரவர் பூசித்தத் தலம்.

இந்த ஸ்தலத்துக்குத் தென்மேற்கு 1-மைல் தூரத்தில் திருத் துறையூர் [151] இருக்கிறது.

244. திருவலஞ்சுழி *(மாயவரம்-தஞ்சாவூர் மார்க்கம்)*

சுவாமிமலை ரயில் நிலையத்திலிருந்து 2 பர்லாங்.

சுவாமி—கற்பகநாதேசுரர். *தேவியார்*—பெரியநாயகி.

தேவேந்திரன் பூசித்த ஸ்தலம். தலத்துக்கு வடக்கில் அரச லாறு ஓடுகிறது. கோயில் பெரியது. விநாயகர்-வெள்ளை விநாயகர். அமுதம் கடைந்த காலத்தில் இவ்விநாயகரைப் பூசித்ததால் அமுதம் திரண்டதாயும், தேவேந்திரன் இந்த விநாயகரை பூசித்த தாயும், அவன் திருவலஞ்சுழிக்கு வந்தகாலத்தில் இவ்விநாயகர் அந்தத்தலத்தில் நின்றுவிட்டதாக சொல்லுகிறுர்கள். பிரமோற் சவம் விநாயகருக்கு நடக்கின்றன. விநாயகரை தீண்டக் கூடாதாம். விநாயகர் மண்டபம் மிகவும் சிற்பவேலைப்பாடுடைய தாக இருக்கிறது. காவிரிபிலத்திற் சென்றுவிட்டதாயும் அது வெளிப்படு நிமித்தம் ஏரண்டமுனிவர் தம்மைப் பலியாகக் கொடுத்த பின்பு காவிரி மேலேவந்து வலமாகச் சுழித்துக் கொண்டு சென்றீ அக்காரணத்தால் ஊருக்குத் திருவலஞ்சுழி என பெயரெய்தியது. ஏரண்ட முனிவருடைய உருவமும் கோயிலி லிருக்கிறது. அவருக்குப் பின்பக்கத்தில் வலஞ்சுழி நாதர் அல்லது தக்ஷிணவர்த்தர் என்னும் சிவலிங்கப்பெருமான் வீற்றிருக்கின்ருர்.



245. திருவலம்புரம் என்பது **பெரும்பள்ளம்** (விழுப்புரம்-மாயவரம் மார்க்கம்)

சீர்காழி ரயில் நிலையத்திலிருந்து $8\frac{1}{2}$ மைல்.

சுவாமி—வலம்புரிநாதேசுரர். **தேவியார்**—வடுவகிர்க்கண்ணம்மை.

விஷ்ணு பூசித்து வலம்புரிச் சங்கு பெற்ற ஸ்தலம். திருஞான சம்பந்தசுவாமிகளுடன் அப்பர் சுவாமிகள் தலங்கள் தோறுந் தரிசித்துச் சென்றபோழுது சிவபெருமான் அப்பர் சுவாமிகளைத் தாமே இத்தலத்துக்கு வரவழைத்துச் தரிசனந்தந்த ஸ்தலம்.

246. திருவலிதாயம் என்பது **பாடி** (சென்னை சென்ட்ரல்-அரக்கோணம் மார்க்கம்)

கொரட்டூர் ரயில் நிலையத்திலிருந்து $\frac{1}{2}$ மைல். சென்னையிலிருந்தும் பஸ் போகிறது.

சுவாமி—வலிதாயநாதர். **தேவியார்**—தாயம்மை.

பாரத்துவாஜர், பிருஹஸ்பதி, அநுமார் முதலியோர் பூசித்த ஸ்தலம். அதிலுள்ள கிணற்றுத் தண்ணீர் நன்றாயிருக்கிறது. கோயிலை சமீபத்தில் புதுப்பித்திருக்கிறார்கள்.

247. வலிவலம் (மாயமரம்-காரைக்குடி மார்க்கம்)

திருநாட்டியத்தான்குடி ரயில் நிலையத்திலிருந்து $5\frac{1}{2}$ மைல்.

சுவாமி—மனத்துணைநாதேசுரர். **தேவியார்**—வாளையங்கண்ணி.

சூரியனும், காரணருஷியும், கரிக்குருவியும் பூசித்த ஸ்தலம். சுவாமி சந்நிதி கட்டுமலைமேலிருக்கிறது. கோயிலைச் சுற்றி மாலையிட்டது போல ஓடை இருக்கிறது.

248. திருவல்லம் (அரக்கோணம்-காட்பாடி மார்க்கம்)

திருவலம் ரயில் நிலையத்திலிருந்து $1\frac{1}{2}$ மைல். பொன்னை ஆற்றின் மேற்கரையி லிருக்கிறது.

சுவாமி—வல்லநாதேசுரர். **தேவியார்**—வல்லாம்பிகையம்மை.

பெரிய கோயில். கோபுரங்கள் உள்ளன. நவக்கிரகங்களும், வல்லாளனென்னும் அரசனும் பூசித்த ஸ்தலம்.

இவ்வூரிலிருந்து வள்ளிமலைக்கு 6 மைல். பஸ் போகிறது. சுப்ரமண்ய சுவாமி க்ஷேத்திரம் மலையின்மேல் இருக்கிறது. மலைக்குப் போக அழகான படிகள் இருக்கின்றன. வள்ளியை

மணம்புரிந்த தலம். மலையின்பேரில் அநேக அதிசயங்களை காணலாம். இயற்கை காட்சிகள், நம்மை ஆனந்தப்படுத்துகின்றன. மேலே சுனைகளும், ஆயலோட்டின மண்டபங்களும், யானை உருவம் கல்லிலும், மஞ்சள்நீர் சுனை முதலியன உண்டு. மலையின்கீழ் திருக்குளமிருக்கிறது.

249. திருவன்னியூர் (மாயவரம்-காரைக்குடி மார்க்கம்).
பூந்தோட்டம் ரயில் நிலையத்திலிருந்து 7 மைல்.

சுவாமி—அக்கினீசுரர். தேவியார்—பார்வதியம்மை.

அக்கினி பூசித்த தலம். கோயில் சிறியது.

250. திருவாஞ்சியம் (மாயவரம்-காரைக்குடி மார்க்கம்).

நன்னிலம் ரயில் நிலையத்திலிருந்து மேற்கே 6½ மைல். போகும் வழியில் 1½ மைல் தூரத்தில் திருக்கொண்டீச்சுரமும் [113], அப்பால் 1½ மைல் தூரத்தில் நன்னிலமும் [163] இருக்கின்றன.

சுவாமி—வாஞ்சிலிங்கேசுரர். தேவியார்—மங்களநாயகி.

கோயில் பெரியது. திருவாஞ்சியம் புத்தாறு நதியின் வட கரையிலிருக்கிறது. விஷ்ணுமூர்த்தி சிவபெருமானைப் பூசித்து தம்மை விட்டுப் பிரிந்துபோன லக்ஷிமியை யடைந்த தலம். திருவாஞ்சியம்—திருவை (விஷ்ணு) வாஞ்சித்த இடம். சந்தன விருக்ஷம் பிரகாரத்திலிருக்கிறது. குப்தகங்கை தீர்த்தம் கோயிலுக்கு வடக்கே இருக்கிறது. கார்த்திகைமீ ஞாயிற்றுக்கிழமைகளில் இத்தீர்த்தத்தில் ஸ்நானம் செய்வது விசேஷம். திருவாஞ்சியம் மிகவும் விசேஷமான ஸ்தலம். இங்கு இறப்பவர்களுக்கு இயமவாதனை இல்லையாம். கோயிலில் இயமனுக்கு ஒரு சந்நிதி இருக்கிறது. காசிக்குச் சமானமாக சொல்லப்படும் தென்னாட்டு ஸ்தலங்கள் ஆறினுள் ஒன்று.

251. வாட்போக்கி என்பது **இரத்தினகிரி** (திருச்சி-ஈரோடு மார்க்கம்).

குழித்தலை ரயில் நிலையத்திலிருந்து 5 மைல். போகும் பாதையில் 2-வது மைலில் திருக்கடம்பந்துறை [61] என்னும் தலமிருக்கிறது.

சுவாமி—இரத்தினகிரீசுரர். தேவியார்—கரும்பார்குழலம்மை.

கோயில் மலைமேலிருக்கிறது. ஆரிய ராஜனால் வெட்டுப்பட்ட வாட்குறி இலிங்கத்தில் தெரிகின்றன. 12 வருஷத்துக் கொரு

முறை இடிபூஜை நடக்கிறது. இம்மலையை காகம் அணுக்முடியாத மலை என்கிறார்கள். இந்திரன், சயந்தன், வாயு, ஆதித்தன், ஆதிசேடன், அகத்தியர் முதலியோர் பூசித்த ஸ்தலம். ஆரிய தேசத் தரசன் மாணிக்கம் வேண்டி சகல தலங்களும் சென்று கிடைக்காமல் இங்குவர, சிவபெருமான் ஒரு நீர்த்தொட்டியைக் காட்டி, அதை காவிரி ஜலத்தினல் நிரப்பும்படிச் சொல்ல, அவ்வாறு செய்தும் அத்தொட்டி நிறையாமலிருக்க அரசன் கோபங்கொண்டு உடைவாளையுருவி வீச, சிவபெருமான் அவ்வாளைப் போக்கிவிட்டு இரத்தினத்தைக் காண்பித்தருளினர். அரசன் அதை விரும்பாது சிவபணிவிடை ஒன்றையே செய்து முத்தி பெற்ற தலம். சிவபெருமான் வாளைப் போக்கிவிட்டபடியால் இத்தலத்துக்குத் திருவாட்போக்கி யென்னும் பெயர் உண்டாயிற்று. இத்தலத்தில் அகஸ்தியர் நடுப்பகல் தரிசனம் பெற்றபடியால் இங்கு மத்தியான தரிசனம் விசேஷம். சுவாமிக்கு மத்தியானசுந்தரர் என்று பெயர். இங்கு இந்திரனல் உண்டாக்கப்பட்ட வேப்ப விருக்ஷத்தையும், இரத்தினகிரீசரைத் தரிசித்துத் திரும்பும்போது வீரப்பெருமாளெனும் வீரவாகுவையும் தரிசித்தல் நன்று.

252. திருவாய்மூர் (மாயவரம்-காரைக்குடி மார்க்கம்).

திருநெல்லிக்காவல் ரயில் நிலையத்திலிருந்து 8 மைல். போகும் வழியில் எட்டிக்குடி என்னும் பிரபல சுப்ரமணிய சுவாமி தலம் உள்ளன.

சுவாமி—வாய்மூர்நாதேசுரர். **தேவி**—பாலினுநன்மொழியம்மை.

சப்தவிடங்க ஸ்தலங்களுள் ஒன்று. சூரியன் பூசித்த தலம். கோயில் கிழக்குப் பார்த்தது. எதிரிற் சூரியதீர்த்தம் இருக்கிறது. திருநாவுக்கரசு நாயனர் வேதாரணியத்திலிருந்த பொழுது பரமசிவன் அவருக்குத் தோன்றி திருவாய்மூருக்கு வரும்படிக் கட்டளையிட, அப்படியே அவர் இங்கு வர, அவருடன் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனரும் வர, இருவருங் கூடி தரிசித்த ஸ்தலம்.

253. திருவாளொளிபுற்றூர் (விழுப்புரம்-மாயவரம் மார்கம்)

வைத்தீசுரன் கோயில் ரயில் நிலையத்திலிருந்து மேற்கு 5 மைல். போகும் பாதையில் 2-வது மைலில் திருப்புன்கூர் [211] என்னும் தலம் இருக்கிறது.

சுவாமி-மாணிக்கவண்ணேசுரர். **தேவி**—வண்டார்பூங்குழலம்மை.

விஷ்ணுமூர்த்தி மாணிக்கத்தை வைத்துப் பூசித்த ஸ்தலம். அதனல் ஸ்தலத்துக்கு அரதனபுரம் எனவும் பெயருண்டு. வண்டு



பூசித்த ஸ்தலம். சுவாமி விஜயனுடைய கைவாளை ஒரு புற்றில் ஒளித்து வைத்த ஸ்தலம். அக்காரணத்தால் வாள் ஒளி புற்றூர் என்னும் பெயர் வந்தது.

254. திருவான்மியூர் (மதராஸ்)

மைலாப்பூரிலிருந்து தெற்கே 3 மைல்.

சுவாமி—மருந்தீசுரர். *தேவியார்*—திரிபுரசுந்தரியம்மை.

கோயில் பெரியது. கடலுக்கருகாமையில் கோயில் இருக்கிறது. கீழண்டை பக்கம் திருக்குள மிருக்கிறது. வான்மீகருஷி பூசித்த ஸ்தலம். சுவாமி பால் நிறமான சுயம்பு மூர்த்தி. இலிங்கம் சற்று வடபால் சாய்ந்திருக்கிறது. காமதேனு பால் சொரிந்து அபிஷேகித்தபோது குளம்பின் வடுபட்டதுபோல் சுவாமியின் மேல் தெரிகிறது. மேற்குப் பார்த்த சந்நிதி மேலண்டை மாடவீதியில் வான்மீகர் சந்நிதி இருக்கிறது. இங்கு பிரதி பருவந்தோறும் வான்மீகருக்கு நடன தரிசனந் தருகிறார்.

ஆலயத்திற்கு வடபால் 2 பர்லாங் அளவில் ஆனந்தமும், அமைதியுமுள்ள கருணைக் கடலோரத்தில் ஸ்ரீ பாம்பன் குமரகுரு தாச சுவாமியின் சமாதியும், மடாலயமும் இருக்கின்றன. பெரிய கட்டிடம். வருடந்தோறும் குருபூஜை நடக்கின்றன.

255. விஜயமங்கை (மாயவரம்-தஞ்சாவூர் மார்க்கம்)

சுந்தரபெருமாள் கோயில் ரயில் நிலையத்திலிருந்து 4 மைல்.

சுவாமி—விஜயநாதேசுரர். *தேவியார்*—மங்கைநாயகி.

விஜயனாகிய அருச்சுனன் தவஞ்செய்து பாசுபதாஸ்திரம் பெற்ற ஸ்தலம். சிறிய ஊர். சிறிய கோயில்.

110946

256. திருவியலூர் (மாயவரம்-தஞ்சாவூர் மார்க்கம்)

திருவிடைமருதூர் ரயில் நிலையத்திலிருந்து 2½ மைல்.

சுவாமி—யோகாநந்தேசுரர். *தேவியார்*—சௌந்தரநாயகி.

திருமங்கலக்குடியில் [221] திருப்பணி செய்து இறந்து போன ஒரு அடியாரை இந்த ஸ்தலத்துக்குக் கொண்டு வரும் பொழுது அவர் திருமங்கலக்குடி தேவியாருடைய திருவருளால் உயிர்த்தெழுந்த ஸ்தலம்.

257. விளநகர் (விழுப்புரம்-மாயவரம் மார்க்கம்).

மாயவரம் சந்திப்பு ரயில் நிலையத்திலிருந்து கிழக்கே 5 மைல்.

சுவாமி—துறைகாட்டுவள்ளலார். தேவி—வேயுறுதோளியம்மை.

அருள்வித்தன் என்னும் அடியார் சுவாமிக்காக புஷ்பக் கூடையை யெடுத்துக்கொண்டு ஆற்றில் வரும் சமயம் வெள்ளம் வர அவ்வடியார் பூக்கூடையை விடாது சிவபெருமானையே தியானிக்க அவர்பால் அன்புகொண்டு அடியாரைக் கரையேற விட்டு, ஞானோபதேசஞ் செய்தருளிய தலம். இக்காரணத்தால் சுவாமிக்குத் துறைகாட்டு வள்ளல் நாதேசுரர் என்னும் பெயர் உண்டாயிற்று.

258. விளமர் (மாயவரம்-காரைக்குடி மார்க்கம்).

திருவாரூர் ரயில் நிலையத்திலிருந்து 2 மைல். ஓடம் போக்கி யாற்றின் தென்கரையிலிருக்கிறது.

சுவாமி—வியாக்ரபாதேசுரர். தேவி—யாழினுமென்மொழியம்மை.

பதஞ்சலி மகாமுநிவர் பூசித்த தலம். பதஞ்சலி, வியாக்கிர பாதர் இவர்களுடைய விக்கிரகங்கள் கோயிலி லிருக்கின்றன. கோயிலுக்கெதிரில் அக்கினி தீர்த்தம் உள்ளன.

259. திருவிற்குடி (மாயவரம்-காரைக்குடி மார்க்கம்).

விற்குடி ரயில் நிலையத்திலிருந்து 1¼ மைல்.

சுவாமி—வீரட்டானேசுரர். தேவியார்—ஏலவார்குழலி.

அஷ்ட வீரட்டங்களில் ஒன்று. சலந்தராசுரனைச் சங்கரித்த ஸ்தலம்.

260. திருவிற்கோலம் என்பது **கூவம்** (சென்னை - அரக் கோணம மார்க்கம்).

கூவத்திற்கு சென்னையிலிருந்து பஸ் வசதியுண்டு. கடம் பத்தூர் ரயில நிலையத்திலிருநது 6 மைல். இலம்பையங்கோட் டூர் [41] என்னும் தலம் இதற்குச் சமீபத்திலிருக்கிறது.

சுவாமி—திரிபுராந்தகேசுரர். தேவியார்—திரிபுராந்தகியம்மை.

சுவாமி தீண்டாத் திருமேனி. திரிபுரமெரித்தமூர்த்தி திருக் கையில் விற்கோலமாகத் தங்கிய தலம். கோயிலுக்குக் கிழக்கில் திருக்குள மிருக்கிறது.

261. திருவீழிமிழலை (மாயவரம்-காரைக்குடி மார்க்கம்).

பூந்தோட்டம் ரயில் நிலையத்திலிருந்து 6 மைல்.

சுவாமி—வீழியழகேசுரர். தேவியார்—சுந்தரகுஜாம்பிகையம்மை.

பெரிய கோபுரம். ஊரெங்கும் வீழிச்செடிகள் நிறைந்திருப்பதால் திருவீழிமிழலை என்னும் பெயர் வந்தது. கோயிலுக்கெதிரில் ஒரு பெரிய குளம் இருக்கிறது. மூல லிங்கத்துக்குப் பின்னல் பூர்வதி பரமேசுரர் உருவங்கள் இருக்கின்றன. சக்கரம் வேண்டித் திருமால் பூஜை செய்யும்போது ஒருநாள் ஒரு புஷ்பம் குறைபட, திருமால் தனது கண்ணையே எடுத்து சாத்திச் சக்கரம் பெற்ற ஸ்தலம்.

முதற்பிரகாரத்திலுள்ள நூற்றுக்கால்மண்டபத்தின் கற்றூண்களின்மேல் வளைவுகளும், சிற்பங்களும், மிக அருமையாக இருக்கின்றது. வடக்கு வீதியில் கீழைக் கோடியிற் சம்பந்த ஸ்வாமி கோயிலும், மேலைக் கோடியில் அப்பர் ஸ்வாமி கோயிலும் இருக்கிறது. கலியாண கோலமாயுள்ள மூர்த்தியின் பாதத்தில் விஷ்ணு தனது கண்ணைப்பறித்து அருச்சித்த குறியிருக்கிறது. உற்சவமூர்த்தியின் வலப் பாதத்தின் மேலே திருமாலின் கண்ணும், கீழே சக்கரமும் இருக்கின்றன. ஸ்வாமி வீற்றிருக்கும் இடம் விண்ணிழி விமானம் என்று சொல்லப்படுகிறது.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனரும், திருநாவுக்கரசு நாயனரும் இந்தத் தலத்திலெழுந்தருளி யிருந்தபோது பஞ்சமுண்டாக அவ்விருவர்களுக்கும் சிவபிரான் படிக்காசு கொடுத்தருளி, அவர்கள் மூலமாக அடியார்களுக் கமுதளித்த அரும்பதி. அங்ஙனம் படிக்காசு வைத்த பலிபீடங்கள் கிழக்கிலும், மேற்கிலும் இருக்கின்றன. மேற்கே இருக்கும் பலிபீடத்திற் கருகில் படிக்காசுப் பிள்ளையார் வீற்றிருக்கிறர். அவருக் கருகில் அப்பர், சம்பந்தர்களுடைய விக்கிரகங்கள் இருக்கின்றன. ஸ்வாமி தாம் ஸ்ரீகாழியிலிருக்கும் திருக்கோலத்தைத் திருஞானசம்பந்தருக்கு இங்குள்ள விண்ணிழி விமானத்திலே காட்டியருளினர்.

262. வெஞ்சமாக்கூடல் (திருச்சி-ஈரோடு மார்க்கம்)

கரூர் ரயில் நிலையத்திலிருந்து 15 மைல்.

சுவாமி—விகிர்தநாதேசுரர். **தேவியார்**—விகிர்தநாயகி.

வெஞ்சன் என்னும் அசுரன் பூசித்த ஸ்தலம்.

263. திருவெண்காடு (மாயவரம்-விழுப்புரம் மார்க்கம்)

சீர்காழி ரயில் நிலையத்திலிருந்து 8 மைல்.

சுவாமி—சுவேதாரணியேசுரர். **தேவியார்**—பிரமவித்தியாநாயகி.

பெரிய கோயில். வெளிப்பிரகாரத்தில் அக்கினி தீர்த்தமும், தெற்குப் பிரகாரத்திற் சூரிய தீர்த்தமும், வடக்குப் பிரகாரத்தில்

அம்மன் கோயில் தீர்த்தம் என வழங்கும் சந்திர தீர்த்தமும் இருக்கின்றன. உட்பிரகாரத்தில் அகோர வீரபத்திரமூர்த்தி சந்நிதியும், நடராஜர் சந்நிதியும் உள்ளன. அகோரமூர்த்தி கையிற் சூலத்துடன் தெற்கு நோக்கி வீற்றிருக்கின்றார்; ஞாயிற்றுக்கிழமை இரவு தரிசனம் விசேஷம்; எதிரிற் காளி சந்நிதி யிருக்கின்றது. நடராஜர் சந்நிதி சிதம்பரத்தைப் போலவே அமைந்து பிரபலமா யிருக்கின்றது.

இத் தலத்திற் மூன்று தீர்த்தங்களும், மூன்று மூர்த்திகளும், மூன்று விருக்ஷங்களும் விசேஷ மென்கிறார்கள். விருக்ஷங்களிற் கொன்றையும், ஆலும் இருக்கின்றன. மற்றொன்று இன்னதெனத் தெரியவில்லை.

வெள்ளை யானை பூஜைசெய்து முக்தி பெற்ற ஸ்தலம். தேவேந்திரன் வழிபட்டுப் பூசித்த ஸ்தலம். மேற்சொன்ன மூன்று குளங்களில் ஸ்நானஞ் செய்வோர்க்கு நினைத்த காரியம் தப்பாது சித்தியாகும் என்பது வாக்கு.

264. திருவெண்டுறை (நீடாமங்கலம்-மன்னார்குடி மார்க்கம்)

மன்னார்குடி ரயில் நிலையத்திலிருந்து 6 மைல். (மன்னார்குடி என்பதுதான் ராஜமன்னார் கோயில்)

சுவாமி-வெண்டுறைநாதேசுரர். தேவி-வேனெடுங்கண்ணியம்மை.

கோயில் பெரிது. கோயிலுக்கு வடபுறம் ஒரு பெரிய குளம் இருக்கிறது.

பிருங்கிருஷி வண்டுருபமாய் அர்த்தநாரீசரருடைய உருவத்தைத் தொளைத்துச் சென்று சுவாமியை மட்டும் பிரதக்ஷிணம் செய்தார். அதனால் ரீங்கார சப்தம் கருப்பக்கிரகச் சுவரில் இன்றைக்குங் கேட்கிற தென்பர். வித்தியாதரர் முதலியோர் பூசித்த ஸ்தலம்.

265. திருவெண்ணி என்பது கோயில் வெண்ணி (தஞ்சாவூர்-நாகூர் மார்க்கம்)

கோயில்வெண்ணி ரயில் நிலையத்திலிருந்து ½ மைல்.

சுவாமி—இக்ஷுபுரீசுரர். தேவியார்—அழகியநாயகி.

சுவாமி கருப்பங்கழிகளை ஒன்றாய்ச் சேர்த்து வைத்தால் எப்படி இருக்குமோ அப்படி யிருக்கின்றார். சுயம்புமூர்த்தி. இவ்வாலயத்து விக்கிரகங்கள் அதிக சுந்தரமா யிருக்கின்றன. தேவியார் விக்கிரகம் எல்லாவற்றினும் அழகாயிருக்கின்றது.

தலம் 34. திருவிடைமருதூர்.



ஆலயத்தின் உள் தோற்றம். இங்குதான் பிரமஹத்தி கோபுர வாயிலுக்கு பக்கத்தில் ஒரு மூலையில் பதுங்கி இருக்கிறது. பெரிய ஆலயம்.

தலம் 207. திருப்புள்ளிருக்குவேளூர் (வைத்தீசுரன்கோயில்).



கிழக்கு கோபுர தரிசனமும், சித்தாமிர்த தீர்த்தமும். நடுவிலுள்ள நீராழி மண்டபத்தின் அமைப்பைப் பாருங்கள். இத்தீர்த்தத்தில் மூழ்கினால் சகல பிணிகளும் தீரும்.



மேற்கு கோபுரமும், சித்தாமிர்த தீர்த்தத்தில் தோய்ந்துவரும் தென்றற்காற்றை அநுபவித்துக் கொண்டிருக்கும் தையல்நாயகி அம்மையார் சந்நிதான தரிசனம்.

திருவல்லிக்கேணி (சென்னை).



ஸ்ரீ பார்த்தசாரதி ஆலய முழுத்தோற்றம்.
கிழக்கு கோபுரமும், எதிரிலுள்ள
திருக்குளமும்.

ஆலயத்தின் முன் மகாமண்டப
மும், நாற்கால் மண்டபக்
காக்ஷியும்.

திருப்பதி.

மலையின் பேரில் முன்னுள்ள
கோபுரவாயிலின் காட்சி.
இதுதான் முதல் நாம்
பார்க்கும் காட்சி.



சந்நிதானத்தின் முன்கோபுர
தரிசனமும், ஆயிரங்கால்
மண்டபமும், நாற்கால்
மண்டபம் முதலிய காட்சி
யும்.

266. திருவெண்ணெய்நல்லூர் (*விழுப்புரம்-விருத்தாசல மார்க்கம்*)

திருவெண்ணெய்நல்லூர் ரோட் ரயில்நிலையத்திலிருந்து 4 மைல்.

சுவாமி—தடுத்தாட்கொண்டேசுரர். *தேவி*—வேற்கண்ணியம்மை.

இத்தல ஆலயத்துக்குத் 'திருவருட்டுறை' யென்று பெயர். சிவபெருமான் சுந்தரமூர்த்தி சுவாமிகளைத் தடுத்தாட்கொண்ட மூர்த்தி. மெய்கண்ட தேவரென்னும் காரணப்பெயருடைய சுவேதவனப் பெருமாளாகிய சந்தானுசாரியார் வீற்றிருந்தருளிய ஸ்தலம். இதற்குச் சமீபத்திலுள்ள புத்தூரில் சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குத் திருமணமாகுஞ் சமயத்திற் சிவபெருமான் ஒரு விருத்தப் பிராமண வேடந்தாங்கி, வந்து தடுக்க, மணந்தவிர்ந்த படியால் அவ்வூர் 'மணந்தவிர்ந்தபுத்தூர்' எனப் பெயர் வந்தது. இவ்வூர் திருவெண்ணெய்நல்லூருக்குப் போகும் வழியில் பண்ணுருட்டிக்கு மேற்கே 4 மைலி லிருக்கிறது. இதுவன்றி, 'தடுத்தாட்கொண்டவூர்' என்றும் ஒரு கிராமம் திருவெண்ணெய் நல்லூருக்குக் கிழக்கே 1½ மைலி லிருக்கிறது.

267. திருவெண்பாக்கம் (*மதராஸ்-அரக்கோணம் மார்க்கம்*)

திருவள்ளூர் ரயில்நிலையத்திலிருந்து 7 மைல்.

சுவாமி—வெண்பாக்கநாதேசுரர். *தேவி*—கனிவாய்மொழியம்மை.

சுந்தரமூர்த்தி நாயனுர் சங்கிலி நாச்சியாருக்குச் செய்த பிரமாணத்தை மீறி திருவொற்றியூரிலிருந்து புறப்பட்டு வருகையில், கண்ணின் பார்வை குறைய இத்தல சிவபெருமானைத் துதித்து ஊன்றுகோல் பெற்ற தலம். இங்கு சுந்தரர் ஊன்றுகோலுடன் காட்சி யளிக்கிறுர்.

268. திருவேட்களம் (*விழுப்புரம் மாயவரம் மார்க்கம்*).

சிதம்பரம் ரயில் நிலயத்திற்குக் கிழக்கே 1 மைல்.

சுவாமி—பாசுபதேசுரர். *தேவியார்*—நல்லநாயகி.

திருஞானசம்பந்தர் இத்தலத்தில் தங்கி சிதம்பரம் போய் சபாநாயகரைத் தரிசித்துவந்த ஸ்தலம். அருச்சுனனுக்குப் பாசுபதாஸ்திரம் கொடுத்த தலம். பாசுபதாஸ்திரம் கையிலேந்திய உற்சவ விக்கிரகமும், அருச்சுனனுடைய உற்சவ விக்கிரகமும் கோயிலிலிருக்கிறது.



269. திருவேட்டக்குடி (*பேரளம்-காரைக்கால் மார்க்கம்*).
காரைக்கால் ரயில் நிலையத்திலிருந்து 5¼ மைல்.

சுவாமி—திருமேனியழகேசர். **தேவியார்**—சாந்தநாயகி.

அருச்சுனன் தபசு செய்துகொண்டிருக்கும்போது சிவபெருமான் வேடரூபமாக வந்து காட்சி கொடுத்த தலம்.

270. திருவேதிகுடி (*மாயவரம்-தஞ்சாவூர் மார்க்கம்*).
திட்டை ரயில் நிலையத்திலிருந்து 3 மைல்.

சுவாமி—வேதபுரீசுரர். **தேவியார்**—மங்கையர்க்கரசி.

திருவேதிகுடி சப்த ஸ்தானங்களில் 4-வது ஸ்தலம். சுவாமி வாழை மடுவில் உற்பத்தியானவர். வாழைமடுநாதர் என்று பெயர். பிள்ளையாருக்கு வேதப் பிள்ளையார் என்று பெயர். வேதங்கள் பூசித்த தலம்.

271. திருவேள்விக்குடி (*மாயவரம்-தஞ்சாவூர் மார்க்கம்*).
குத்தாலம் ரயில் நிலையத்திலிருந்து 2 மைல்.

சுவாமி—கலியாணசுந்தரேசுரர். **தேவியார்**—பரிமளசுகந்தநாயகி.

ஓர் அரசன் மணம்புரிய நிச்சயித்திருந்த பெண்ணை, மணம் நிறைவேறுமுன், அவள் தாய் தந்தையர் இறக்கவே, அவள் சுற்றத்தார் மணம் செய்துகொடுக்க மறுக்க, அரசன் சிவபெருமானை நோக்கித் தவஞ்செய்ய, சிவபெருமான் அப்பெண்ணை ஒரு பூதத்தின் மூலமாய்க்கொண்டு வந்து அரசனுக்குத் திருமணவேள்வி செய்தருளிய ஸ்தலம்.

272. திருவேற்காடு (*சென்ட்ரல்-அரக்கோணம் மார்க்கம்*).
ஆவடி ரயில் நிலையத்திலிருந்து தெற்கே 3¾ மைல். சென்னையிலிருந்து பஸ் போகிறது.

சுவாமி—வேற்காட்டீசுரர். **தேவியார்**—வேற்கண்ணியம்மை.

மூர்க்கநாயனுர் திருவவதாரஞ்செய்த ஸ்தலம். சிவபெருமான் அகஸ்தியருக்கு மணக்கோல தரிசனங் கொடுத்தருளிய ஸ்தலம்.

273. வைகன்மாடக்கோயில் *என்பது* **வைகல்** (*மாயவரம்-தஞ்சாவூர் மார்க்கம்*)

ஆடுதுறை ரயில் நிலையத்திலிருந்து 4 மைல்.

சுவாமி—வைகனுதேசுரர். **தேவியார்**—வைகலாம்பிகை.

'வைகல் என்பதற்குத் தென்மேற்கு ½ மைல் தூரத்தில் 'மாடக்கோயில்' இருக்கின்றது. இரண்டிடங்களிலும் கோயில்கள் உள்ளன. இவ்வாலயம் கோச்செங்கட்சோழரால் கட்டப்பட்ட மாடக்கோயில்களுள் ஒன்று.

274. திருவைகாவூர் (மாயவரம்-தஞ்சாவூர் மார்க்கம்)

சுந்தரப்பெருமாள் கோயில் ரயில் நிலையத்திலிருந்து 5 மைல்.

சுவாமி—வில்வவனேசுரர். *தேவியார்*—வளைக்கைநாயகியம்மை.

வில்வவன க்ஷேத்திரம். இத்தலத்தில் சிவராத்திரி முக்கியம். இங்கு ஒருகாலத்தில் சிவராத்திரி தினத்தன்று ஒரு வேடன் புலிக்குப் பயந்து வில்வமரத்தில் ஏறினன். கீழே சிவலிங்கம் இருப்பது அவனுக்குத் தெரியாது. அவன் ஏறும் மார்க்கத்தில் இருந்த வில்வப் பத்திரங்களைப் பறித்துக் கீழே போட்டான். அது சுவாமியின்மேல் விழவும், அன்று சிவராத்திரியானதால் சுவாமி அவனுக்கு அநுக்கிரகஞ் செய்தருளினர். இந்த அதிசயம் கோயிலிற் காட்டப்பட்டிருக்கிறது. கோயிலுக்கெதிரில் இயம தீர்த்தம் இருக்கிறது. கோயிலில் துவாரபாலகர்கள் இல்லை. ஆறுமுக சுவாமி அதிசுந்தரமா யிருக்கிருர். இவ்வாலயத்திலுள்ள நந்திகளெல்லாம் திரும்பியிருக்கின்றது.

275. திருபுவனம் (மாயவரம்-தஞ்சாவூர் மார்க்கம்)

திருவிடைமருதூர் ரயில் நிலையத்திலிருந்து மேற்கே 2 மைல்.

ஆலயம் மூன்ரும் குலோத்துங்கன் காலத்தில் நிறுவியது. சரப க்ஷேத்திரம். கோயில் பெரிது. தஞ்சாவூர் பெரிய கோவில் கோபுரத்தைப்போல் சுவாமி கர்ப்ப கிரகத்தின் மேலேயே அடி முதல், மேல் வரையில் எல்லாம் கருங்கற்களினுல் அதிநுட்ப மான சிறந்த சிற்பங்களுடன் நம் தமிழ் நாட்டின் புகழினைக் காட்டிக் கொண்டு கோபுரம் காட்சி யளிக்கிறது. கோபுரத்தினுள் எழுந்தருளியிருப்பவர் கம்பகரேஸ்வரர். இத்தலத்தில் சுப்ரமண்ய சுவாமி சந்நிதி சாந்நித்யமாக விளங்குகிறது. திரிபுராதிகள் பூசித்து திரிபுரங்களை பெற்ற தலம். வரகுண பாண்டியனுக்கு பிரமக்ஷத்தியால் ஏற்பட்ட நடுக்கம் நீங்கிய தலம்

நரசிம்மமூர்த்தி இரணியனைக் கொன்றதும் இரத்த வெறியில் மயங்கினுர். அவர் செய்த அட்டகாசத்தால் உலகமே நடுங்கியது. நடுங்கியவர்கள், நடுக்கம் தீர்த்த பெருமானை வணங்கினர். துன்பம் தீர்த்தருளும் பெருமான் சரப உருவம் கொண்டார். சரபத்தைக் கண்டவுடன் நரசிம்மத்தின் வலி குன்றியது. அருணகிரிநாதரால் திருப்புகழ் பாடப்பெற்ற ஸ்தலம்.

276. ராஜராஜேஸ்வரம் என்பது தஞ்சை பெரிய கோயில் (மாயவரம்-தஞ்சாவூர் மார்க்கம்).

தஞ்சாவூர் சந்திப்பு ரயில் நிலையத்திலிருந்து கோயில் 1 மைல்.

சுவாமி—பிரஹதீச்சுரர். தேவியார்—பிரஹதாம்பாள்.

இப்பெரிய கோயில் பதினேரும் நூற்றுண்டில் சிவகங்கை சிறுகோட்டையின் தென்பகுதியில் இராஜ ராஜசோழனல் கட்டப் பெற்றது. இங்கு சுப்ரமணிய சுவாமி சந்நிதானம் மிகவும் பிர சித்தம். தென்னுட்டில் பொதுவாக பெரிய கோபுரம் மூலத் தானத்திற்கு எதிரே தனியாக அமைந்திருக்கிறது. ஆனுல் இவ் வாலயத்தில் மூலத்தானத்தின் மேலேயே 216 அடி உயரமுள்ள கோபுரம் அமையப்பெற்றிருக்கிறது. கோபுரம் யாவும் கருங் கற்களாலேயே ஆனவை. கோபுரத்தின் மேல் மூடப்பெற்ற கருங்கல் 25 சதுரஅடி உள்ளவை, அவைகளில் நான்கு மூலைக்கும் 8 நந்திகள் உள்ளன. அவை 7 அடி நீளமும் 5½அடி அகலமும் கொண்டவை. கோயிலுக்கு முன் அகழியிருக்கிறது. அகழியைக் கடந்து, பின் மூன்று கோபுர வாயிலையும் கடந்து உள் சென்றுல் 500 அடி நீளமும், 250 அடி அகலமும் உடைய பெரிய வாசலிருக்கிறது. அவற்றின் நடுவே பன்னிரண்டடி உயர மும், பதினுறு அடி நீளமும் கொண்ட பெரிய நந்தி, உயரமான மண்டபத்தில் கம்பீரமான தோற்றத்துடன் வீற்றிருக்கிறது. கர்ப்ப கிரகத்தின் வாயிலிலுள்ள துவார பாலகர்கள் உயரம் சுமார் 18 அடி உயரமும், 8 அடி அகலமும் கொண்டதாக உள்ளதால் பார்ப்பவர் மனதைத் திடுக்கிடச் செய்கிறது. ஆலயத்தி லிருக்கும் சிவலிங்கப்பெருமான் உருவம் அமைப்பதற்கு நருமதை ஆற்றின் கரையிலுள்ள கரும்பாறையிற் செதுக்கிக் கொண்டு வந்தனர் எனக் கூறுகின்றர். பெருமான் உருவம் மிகப்பெரியது. ஆலயத்திலுள்ள எல்லா சிற்பங்களும், உருவங்களும் பெரியதா கவேயிருக்கின்றன. ஆலயத்தின் தென்பக்கத்தில் காவிரியாற்றின் ஒரு கிளை நதி ஓடுகிறது. பெரிய ஊர். இங்கே எல்லா வசதி களும் உண்டு. இங்கிருந்து பல திசைகட்கும் பஸ் போகிறது.

உ

செந்தில் வேலவன் திருவடி துணை.





பேரா தரிக்கும் அடியவர்தம் பிறப்பை யொழித்துப் பெருவாழ்வும்
பேறுங் கொடுக்கவரும் பிள்ளைப்பெருமா னென்னும் பேராளா
சேரா நிருதர் குலகலகா சேவற் கொடியாய்த் திருச்செந்தூர்த்
தேவா தேவர் சிறைமீட்ட செல்வா வென்றுன் திருமுகத்தைப்
பாரா மகிழ்ந்து முலைத்தாயர் பரவிப் புகழ்ந்து விருப்புடன்
அப்பா வாவாவென் றுனைப்போற்றப் பரிந்து மகிழ்ந்து வரவழைத்
வாரா திருக்க வழக்குண்டோ வடிவேல் முருகா வருகவே [தால்
வளருங் களபக் குரும்பைமுலை வள்ளி கணவா வருக வருகவே.

திருப்பரங்குன்றம் (முதற் படைவீடு)

சந்நிதிவீதியிலிருந்து தெரியும் கோபுர தரிசனமும், பின்புறமுள்ள மலையும்.



ஆலயத்தின் முன் மகா மண்டபம், சிற்பங்கள் மிக அழகாக அமைந்துள்ளன.



மலையடிவாரத்திலுள்ள சரவணப் பொய்கையும். நக்கீரர் சந்நிதியும்.

ஆறு படைவீடுகளும் திருப்புகழ் பாடல்பெற்ற ஸ்ரீ முருகன் ஸ்தலங்களும்.

1. திருப்பரங்குன்றம் (மதுரை-மானாமதுரை மார்க்கம்)

திருப்பரங்குன்றம் ரயில் நிலையத்திலிருந்து $\frac{1}{2}$ மைல். மதுரையிலிருந்து 4 மைல். அடிக்கடி பஸ் போகிறது. சென்னையிலிருந்து 349 மைல்.

கோயில் பெரியது. ஆறு படைவீடுகளுள் முதற்படைவீடு. சண்முகருக்கு முக்கியமான க்ஷேத்திரம். பெரிய கோபுரமுடையது. ஆலயம் மலையடிவாரத்தில் பாறைகளைத் துளைத்து நிர்மாணம் செய்யப்பட்டிருக்கிறது. கோயிலுக்கு முன்பாக உள்ள மண்டபக் காட்சியையும், கோபுரக் காட்சியையும், அதற்குமேல் தெரியும் மலைக் காட்சியையும், ஆலயத்தின் சந்நிதான வீதியில் நின்று பார்த்தால் அக்காட்சி ஆனந்தமாய் இருக்கிறது. சந்நிதி முகப்பு மண்டபத்திலிருந்து சுவாமி மூலஸ்தானம் வரையில் படிக்கட்டுகள் அமைத்திருப்பது, ஒரு மாடியில் ஏறிப் போவதுபோல் இருக்கிறது. வீதிக்கும், சுவாமியிருக்கும் மூலஸ்தானத்திற்கும் ஏறக்குறைய 20 அடி உயரமிருக்கும்.

இச்சந்நிதானத்தில் தினசரி நடைபெறும் ஆறு கால பூஜைக்கும் சண்முகருடைய வேலுக்குத்தான் அபிஷேகம் நடைபெறுகிறது. சூரபத்மனின் போர் முடிந்ததும், தேவேந்திரன் தன் மகளாகிய தெய்வயானையை ஸ்ரீ முருகப்பெருமானுக்குத் திருமணஞ் செய்து கொடுத்தருளிய ஸ்தலம். அக்காரணத்தால் சகல தேவர்களும், சிவபெருமானும், பார்வதிதேவியாரும் வந்து கண்டு களித்த தலம். நக்கீரர், அருணகிரியார் முதலியோர்களால் பாடப்பெற்றது. இங்கு தைப்பூசத் திருநாள் மிகவும் விசேஷம். பால் அபிஷேகம் பார்ப்பவர் மனதைப் பரவசப்படுத்தும். உற்சவ விக்ரகம் அதிக சுந்தரமாய் இருக்கிறது. சரவணப் பொய்கையும் இன்னும் அநேக பெரிய திருக்குளங்களும் உள்ளன. மலையின் மேல் ஒரு சுனை இருக்கிறது. அதில் மீன்கள் பலவிதமான வர்ணங்களில் காணப்படுகின்றன. இங்கு கிரிப்பிரதக்ஷணம் செய்வது மிகவும் விசேஷம். இத்தலத்தில் மச்சமுனி என்னும் சித்தர் சமாதி அடைந்திருக்கிறார்.

2. திருச்செந்தூர் என்பது திருச்சீரலைவாய் (திருநெல்வேலி-திருச்செந்தூர் மார்க்கம்).

திருநெல்வேலியிலிருந்து 38 மைல். திருச்செந்தூர் ரயில் நிலையத்திலிருந்து $1\frac{1}{2}$ மைல். சென்னையிலிருந்து 443 மைல்.

ஷண்முகரின் தனிச் சிறப்புடைய முக்கியமான தலம். ஆறு படைவீடுகளுள் 2-வது படைவீடு. கோயில் பெரியது. பெரிய கோபுரங்களையுடையது. ஆலயம் கடற்கரையின் அருகில் அமைந்திருக்கிறது. கடலிலே உயர்ந்தெழுகின்ற அலைகள் எப்பொழுதும் கீழ்க்கோபுர வாசல் சுவற்றின்மேல் மோதிக்கொண்டே இருக்கின்றன. ஆலயம் சமீப காலத்திற் புதுப்பித்திருக்கிறது.

நாம் ரயில் நிலையத்திலிருந்து $\frac{1}{2}$ மைல் சென்றதும் கடை வீதியிலிருந்து வீதி நெடுக பந்தல் அமைந்திருக்கிறது. பிறகு தூண்டுகை விநாயகர் ஆலயத்திலிருந்து 2 பர்லாங் தூரம் மண்டபங்கள் காட்சியளிக்கின்றன. இதன் வாயிலாக நாம் செல்ல வேண்டும். பிறகு சந்நிதானத்தின் வெளிப் பிரகாரத்தை அடைகிறோம். அப்பிரகாரத்தின் நாற்புறமுள்ள நடைபாதைகள் சிமிண்ட் போட்டு தளவரிசை செய்யப்பட்டுள்ளன. மேலேயும் மங்களூர் ஓடுகளால் மூடி, சூரியனுடைய கிரணங்கள் பக்தர்களின்மேல் விழாமலும், காலில் கடல் மணலின் வெப்பம் சூடேறாமலும் இருப்பதற்காக இப்படிச் செய்யப்பட்டிருக்கிறது. இவைகளைக் கடந்து சென்றதும் ஷண்முகர் சந்நிதானத்தின் "சண்முக விலாசம்" என்னும் மண்டபத்தை அடைகிறோம். ஆ! அங்கு என்ன ஆனந்தம். ஒருபுறம் கருணைக்கடலின் ஆரவாரங்களும், கடற்காற்றும்! மறுபுறம் வடக்கு நோக்கினால் "என்னுடைய சந்நிதியை எப்பொழுது அடைகின்றார்களோ அப்பொழுதே மானிடர் பவக்கடலின் கரையை அடைந்தவராவர்" என்று விளக்கிக்கொண்டு கடற்கரையிலே தெற்கு நோக்கியவண்ணம் ஸ்ரீ ஷண்முகப் பெருமான் ஆறுமுகங்களோடும், பன்னிரண்டு கரங்களோடும் மயில்மீதமர்ந்து வீற்றிருக்கின்ற காட்சி நம்மை மெய்மறக்கச் செய்கின்றது.

"உள்ளத் துயரை ஒழித்தருளாய் ஒரு கோடி முத்தம் தெள்ளிக் கொழிக்குங் கடற்செந்தில் மேவிய சேவகனே" என்று அருணகிரியார் திருவகுப்பில் என்ன அழகாகக் கூறியிருக்கின்றார்.

சண்முக விலாச மண்டபத்தைக் கடந்து 2-ம் பிரகாரத்திற்குச் சென்றதும் அங்கே தெற்கு நோக்கியவண்ணம் அமர்ந்த சண் முகர் தரிசனமும், கிழக்கு நோக்கியவண்ணம் வீற்றிருக்கும் ஸ்ரீ சுப்ரமண்யர் சந்நிதானத்தின் தரிசனமும், அவருக்கு வடபால் வீற்றிருக்கும் செந்தில் நாயகர் தரிசனமும், நம்மைப் பரவசப் படுத்துகின்றன. ஸ்ரீ சுப்ரமண்யர் சந்நிதானத்தின் தென்பாரிசத் திலும், வடபாரிசத்திலும் வள்ளி, தேவசேனை சந்நிதிகள் தனித் தனியே இருக்கின்றன. இச் சந்நிதிகள் சலவைக் கற்களால் செய்யப்பட்டிருக்கின்றன. முதற் பிரகாரத்தின் வடக்குப் பக்கத் தில் பெருமாள் சந்நிதி இருக்கிறது. கோயிலுக்குப் பின்புறம் மேற்கே பெரிய கோபுரம் இருக்கிறது. கீழைக் கோபுரம் சிறியது. இச்சந்நிதானத்தில் விபூதி பிரசாதம் பன்னீர் இலைகளில் வைத்து வழங்கப்படுகிறது.

சண்முக விலாச மண்டபத்திற்குத் தெற்கே 1 பர்லாங் தூரத்தில் நாழிக்கிணறு என்று ஒரு தீர்த்தம் இருக்கிறது. இக்கிணறு ஒரு தெய்வீகச் சக்தியால் அமையப் பெற்றது. 14 அடி அளவுள்ள அக்கிணற்றில் ஒருபுறம் மட்டும் குடிக்கும் தண்ணீராக வற்றாமல் வந்துகொண்டிருக்கிறது. மற்ற இடமெல்லாம் உப்பு நீர். எல்லோரும் பயமின்றி 34 படிக்கட்டுகள் கொண்ட கிணற்றில் கீழிறங்கி ஸ்நானம் செய்யலாம். இக் கிணற்றில் இறங்க நீந்தத் தெரிந்திருக்கவேண்டிய அவசியமில்லை. ஆண், பெண் அனைவரும் இரவிலும்கூட இறங்கி ஸ்நானம் செய்யலாம். கோயில் வெளிப் பிரகாரத்துக்கு வடபால் 1 பர்லாங் தூரத்தில் கடற்கரையோரம் இயற்கையாய் அமையப்பெற்ற வள்ளிக்குகை யொன்றிருக்கிறது. அங்கு ஏறக்குறைய 25 அடி பூமி மட்டத் துக்குக் கீழ் அம்மன் உருவம் இருக்கிறது. படிக்கட்டுகள் உள் ளன. போய் தரிசிக்கலாம். கோயிலுக்குப் பக்கத்தில் தேவஸ் தான சத்திரம் இருக்கிறது. தங்குவதற்கு வசதிகள் உண்டு.

3. திருவாவினன்குடி என்பது பழநி அடிவாரம்

(திண்டுக்கல்-கோயம்புத்தூர் மார்க்கம்)

பழநி ரயில் நிலயத்திலிருந்து 1½ மைல். பழனி ஸ்தலம் மலைமேலிருக்கிறது. சென்னையிலிருந்து திண்டுக்கல் வழியாக 344 மைல். பழனி மலையின் படிகள் 748.

இத்தலம் ஷண்முகப் பெருமானுக்குரிய ஆறுபடை வீடுகளுள் மூன்ருவதாகிய தலம். நக்கீரரால் பாடப்பெற்ற திருவாவினன்குடி என்னும் தலம் மலையடிவாரத்தி லிருக்கிறது. சண்முகநதி இங்கிருந்து சுமார் 3 மைல் தூரத்திலுள்ளது. அடிவாரத்திலுள்ள சரவணப் பொய்கையில் ஸ்நானம் செய்ய ஜலத்திற்கு காசு வாங்கிக் கொண்டு கொடுக்கிருர்கள். தவிர இங்கே கூட்டமும் அதிகம். ஆகையால சற்று தூரத்திலுள்ள இடும்பன் குளத்திற்குப் போனல் சௌகரியமாக ஸ்நானம் செய்துவரலாம்.

அடிவாரத்திலுள்ள திருவாவினன்குடி க்ஷேத்திரம் இலக்ஷமி, காமதேனு, சூரியன் இவர்கள் மூவரும் ஒரே இடத்தில் குடியாக வசித்து பெருமானைத் தினந்தோறும் நறுமலர்தூவி அர்ச்சித்து பூஜை செய்தபடியால் (திரு-ஆ-இனன்-குடி) எனப் பெயர் எய்தியது.

மலையின்மேலுள்ள பழநி க்ஷேத்திரம் மிகவும் விசேஷமானது. பெரிய கோயில். இதன் மீதுள்ள கோயிலும், சுற்றுப்பிரகாரத்திலுள்ள மண்டபங்கள், மயில்வாகனக் குறடுகள், சிற்ருலயங்கள், சிற்பங்கள் முதலியன பார்ப்பவர் மனதைப் பரவசப்படுத்துகிறது. இம்மலையின் வழிநெடுகிலும் மண்டபங்கள் இருக்கின்றன. சுத்தமான படித்துறைகள். போகும் வழியில் இடும்பன் கோயில் இருக்கிறது. இடும்பன் சூரபத்மாதிகளுக்கு ஆயுதத் தொழிலைப் பயிற்றுவிக்கும் ஆசிரியனுக விளங்கினுன். அப்போது ஷண்முகப் பெருமானுக்கும்—சூரபத்மனுக்கும் போர் ஏற்படவே, இவன் மனம் புழுங்கி இப்போரில்நாம் தலையிடலாகாதெனத் தன் மனைவியோடு மறைந்து மாற்றுரு கொண்டு பொதிகை மலைச்சாரலில் முனிவர்களோடு வாசஞ்செய்துவருநாளில், ஒருநாள் அகஸ்திய முனிவர், தாம் முன்னே இமயமலைச் சாரலில் பூஜைசெய்த சத்திகிரி, சிவகிரி

திருச்செந்தூர் (2-வது படைவீடு)



செந்தில் வேலவன் ஆலய முழுத் தோற்றம். கடற் கரையினின்று தெரியும் காட்சி.

ஆலயத்தின் முன் தோன்றும் கடற்கரை யிலுள்ள சண்முக விலாச மண்டபம்.





கிழக்கு கோபுரமும், கடற்கரையும், கடற் கரையினின்றும் அலைகள் மோதும் காட்சி.



திருச்செந்தூர் கடற்கரை
யிலுள்ள வள்ளிக்குகை

திருவாவினன்குடி (பழனி)
(3-வது படைவீடு)

(நடுவில்) பழனிமலையின் மேலுள்ள தண்ட பாணித் தெய்வத்தின் கோபுர தரிசன மும், மயில்மண்டபக் காட்சியும்.

(கீழே) பழனிமலைக் காட்சியும், மலையடி வாரத்திலுள்ள திருவாவினன்குடி ஆலய முழுத் தோற்றமும்.



ஆகிய இரண்டு மலைகளைக் கொண்டுவருவதற்குப் போய்க்கொண் டிருந்தார். இதனையறிந்த இடும்பன், முனிவர்முன் தோன்றி, தன் விருத்தாந்தங்களை உரைக்க, சிவகிரி, சத்திகிரி என்னும் மலைகளைக் கொண்டுவரக் கட்டளையிட்டார். இவன், அவர் கட்டளைப்படி எடுத்துக் கொண்டு இவ்விடம் வரும்போது, கை, கால் சோர்வு, நாவறட்சி ஏற்பட உடனே இரண்டு பக்கம் இரண்டு மலைகளையும் வைத்து காவடிபோல் இருந்ததைக் கீழே வைத்துவிட்டு சிரமபரி காரம் செய்துகொண்டபின், தூக்கினல் தூக்கமுடியவில்லை. பிறகு மேலே பார்க்க, சிறுகுழந்தை வடிவில் முருகன் இருப்பதைப் பார்த்தும், உணராது தன்னுடைய முழுபலத்தால் தூக்கினன். உடனே ஷண்முகர் தன் வேலாயுதத்தால் வீழ்த்தினர். பின்பு அவன் மனைவியின் வேண்டுகோளால் உயிர்ப்பித்தான். ஆதலால் இவ்வாலயம் அமைந்ததாகப் புராண வரலாறு.

ஒருகாலத்தில் நாரதருக்குத் தன் பிதாவாகிய பிரமா கொடுத்த மாதுளங்கனி ஒன்றை இறைவனிடம் கொடுக்கப் பக்கத்திலிருந்த கணபதியும், புள்ளிமயிலோனும் ஏககாலத்தில் கேட்க, "எவர் இவ்வுலகை முதலாவதாக வலம் வருகிறர்களோ அவர்களுக்குத் தான் இப்பழம்" என்றுர். உடனே கணபதி பெருமானைச் சுற்றி விட்டு பழம் பெற்றுக்கொண்டார். விநாயகருக்கு பழம் கிட்டவே, சண்முகர் தவக்கோலம் கொண்டு பழனியிலமர்ந்தார். இதனை யறிந்த அம்மையும், அப்பரும், அருமைக் குமாரரைக் கோபந் தணியச்செய்துப் 'பழநி' எனப் பெயரிட்டனரென்று முன்னோர் வாக்கு. இப்போது பிரசித்தமாயும், கண்கண்ட தெய்வமாயும், கலியுக வரதனுகவும் விளங்கும் தண்டபாணித் தெய்வம் போகர் என்னும் சித்தரால் நவ பாஷாணத்தால் செய்து பிரதிஷ்டை செய்யப்பட்டதென்று கூறுகின்றனர்.

இவருக்கு சதா அபிஷேகம் நடந்தவண்ணமிருக்கிறது. இங்கு பஞ்சாமிர்தம், விபூதி அபிஷேகங்கள் விசேஷம். காவடிகள் வந்தவண்ண மிருக்கின்றன. பழநி மலையை 48 நாள் காலை, மாலை சுற்றினல் சகலபிணிகளும் தீரும். இம்மலையில் சஞ்சீவிப் பச்சிலைகள் இருப்பதாகச் சொல்லுகிறுர்கள். இவ்வாலயத்தில்

பண்டாரங்களின் பார்வையில் பூஜை நடந்து வருகிறது. வரதமா நதி மலைக்குத் தென்பக்கத்தில் 1 மைல் தூரத்தி லிருக்கிறது. அங்கிருந்துதான் பழநி ஆண்டவர் பூஜைக்குத் தீர்த்தம் எடுத்துச் செல்கிறார்கள். இங்குப் பயமின்றி ஸ்நானம் செய்யலாம். படித் துறைகள் உள்ளன. மலையின்மேல் சாப்பாடு வசதி உண்டு. அடிவாரத்தில் யாத்திரீகர்கள் தங்குவதற்கு அநேக சத்திரங்கள் இருக்கின்றன. பெரிய ஊர். இத்தலத்தில் போகர் என்னும் சித்தர் சமாதி யடைந்திருக்கிறார்.

4. சுவாமிமலை என்பது திருவேரகம் (மாயவரம்-தஞ்சாவூர் மார்க்கம்).

சுவாமிமலை ரயில்நிலையத்திலிருந்து தென்மேற்கே ¾ மைல் தூரத்திலுள்ளது. காவிரியாற்றின் தென்கரையில் இருக்கிறது.

சுப்ரமண்ய சுவாமியின் 4-வது படைவீடு. சிவனுக்கு உபதேசம் செய்தருளிய தலம். 64 படிகளுக்குமேல் கோயில் கொண்டெழுந்தருளியுள்ளார். கீழ்க்கோயிலில் சுவாமி சந்நிதானமும், அம்மன் சந்நிதானமும் கொண்டுள்ளன. மலையின் மேல் பழநியிலுள்ள தண்டபாணித் தெய்வத்தைப்போலவே பால் மணம் மாறாப் பாலகன் வடிவமாய் மூலஸ்தானத்தில் வீற்றிருக்கும் காட்சியும், விபூதி அபிஷேகக் காட்சியும், நம்மை யறியாமலே மெய்மறக்கச் செய்கின்றது. குருநாதன் வடிவம் பார்க்கத்தக்கது. இவ்வாலயத்தின்கீழ் இறைவன் சந்நிதானமும், மேலே குருநாதன் சந்நிதானமும் இருப்பதின் அமைப்பிலேயே 'ஓம்' எனும் பிரணவத்துக்குப் பொருள் கூறிய சுவாமிநாதன் தலமென விளங்குகிறது. உற்சவ மூர்த்தியாகிய சுப்ரமண்ய சுவாமி வள்ளி, தேவசேனா சமேதராய் எழுந்தருளி யிருக்கிறார். அருணகிரிநாதரால் பாடப்பெற்ற தலம்.

5. திருத்தணி (அரக்கோணம்-ரேணிகுண்டா மார்க்கம்).

திருத்தணி ரயில் நிலையத்திலிருந்து மலையடிவாரம் மேற்கில் 1-மைல். சென்னையிலிருந்து பஸ்ஸும் போகிறது.

குன்றுதோறாடல் எனப்படும் ஸ்ரீ முருகன் சந்நிதானங்கள் பலவற்றுள் இச்சன்னிதானத்தில் வீற்றிருக்கும் தணிகைநாதன்

தனிச்சிறப்பு உடையவர். மலையடிவாரத்தில் பெரிய திருக்குளம் இருக்கிறது. ஆலயம் மலையின்மேல் இருக்கிறது. 365 அழகான படிக்கட்டுகள் உள்ளன, மலைக்குப் போகும் வழியில் அநேக சத்திரங்களும், நீர்ச்சுனைகளும், அழகிய சிற்பங்கள் கொண்ட மண்டபங்களும், மின்சார விளக்குகளும் காணப்படுகின்றன. மலையின்மேல் வெளிபிரகாரங்களும், உட்பிரகாரங்களும் கொண்ட தோர் பெரிய கோயில். மூலஸ்தானத்தில் வள்ளி, தேவசேனு சமேதராய் " குறவாணர் குன்றி லுறைபேதை கொண்டு " ஸ்ரீ தணிகைநாதன் வீற்றிருக்கின்ருர். தலத்தின் பெயருக் கேற்றபடி புன்முறுவல் கொண்ட தணிந்த முகத்துடன் வள்ளிமணுளனுய் நிற்கும் காட்சியைப் பார்க்கும்போது நாம் அடுத்து இன்னது செய்வதெனத் தோன்ருமல் அப்படியே நிற்கச் செய்கின்றது. தணிகைநாதனின் பெருமையே பெருமை. வள்ளி, தேவசேனு சந்நிதானங்கள் தனித்தனியே உண்டு. பிரமன் பூசித்த தலம். மலையின்மேல் நீர்ச்சுனை இருக்கிறது. அதிலும் ஸ்நானம் செய்யலாம்.

திருத்தணிகை ரயில் நிலையத்திற்குக் கிழக்கே நாரசங்குப்பத்திற்குப் போகும் பாதையில் கால் மைல் தூரத்தில் நந்தியாற்றங் கரையில் ஸ்ரீ ஆறுமுக சுவாமி ஆலயம் இருக்கிறது. அகஸ்தியரால் பூசிக்கப் பெற்ற தலம். விசேஷமான சந்நிதி. இங்கே பெருமான் ஆறுமுகமும் பன்னிரண்டு கரங்களோடும், மயில் மீதமர்ந்து, ஆனந்தமும், அமைதியும் ஒருங்கேயுள்ள இத்தலத்தின் தரிசனம் நம்மை ஆனந்தக் கடலிலாழ்த்துகிறது.

6. வள்ளிமலை (அரக்கோணம்-காட்பாடி மார்க்கம்).

திருவலம் ரயில் நிலையத்திலிருந்து 8 மைல். பஸ் மார்க்கமாய்ப் போகவேண்டுமானல் சென்னையிலிருந்து குடியாத்தம் போகும் மார்க்கத்தில் திருவலம் (கோயிலுக்கு அருகாமை) பொன்னையாற்றின் மேற்கரையில் இறங்கி பிறகு சித்தூர் போகும் பஸ்ஸில் ஏறினல் 6 மைல். காலையில் 5 மணிக்குப் புறப்பட்டால் மாலை 7 மணிக்கு வந்துவிடலாம்.

புள்ளிமானைத் தேடிவந்து, வள்ளிக்கொடி நாயகியை, கானகத்தில் கைபிடித்த, கந்தவடிவேலனுடைய தலம். இத்தலம் சுப்ரமணிய சுவாமியின் குன்றுதோருடலாகிய தலங்களுள்

ஒன்று. மலையின்கீழ் அழகான திருக்குள மிருக்கிறது. அடிவாரத்திலும் கோயில் இருக்கிறது. அங்குதான் உற்சவ மூர்த்தி இருக்கிறார். உற்சவங்கள், தேர்த் திருவிழா முதலியன அடிவாரத்தில் நடக்கின்றது. சத்திரங்கள் அநேகம் இருக்கிறது. இத்தலத்தில் மயில்கள் அதிகம். மலையின்மேலேறுவதற்குப் படிக்கட்டுகள் அழகாகவும், சுத்தமாகவும் அமைக்கப்பட்டிருக்கிறது. மலையின்மேல் ஆலயம் இயற்கையாக அமையப்பெற்றிருக்கிறது. சுவாமி மூலஸ்தானம் இருக்குமிடம் ஒரு குகை போல் இருக்கிறது. கோயில் மண்டபம், கல் அடித்து மூடாமல் இயற்கையாகவே பெரிய பெரிய பாறைகளால் மூடப்பெற்றிருக்கிறது. கோயிலினுள் சில இடங்களில் நின்றால் 4 அடி உயரமும், 6 அடி உயரமும், சில இடங்களில் 3 அடி உயரத்திலும் மூடப்பெற்றிருக்கிறது. புள்ளிமயிலேறும் வள்ளிமணாளன், வள்ளி தேவசேனா சமேதராய்க் காட்சியளிக்கிறார். சுந்தரமான தோற்றம். ஒரு பெரிய பாறையின்மேல் கோபுரம் அமைந்திருக்கிறது. மலையின்மீதுள்ள இயற்கைக் காட்சிகளும், ஆங்காங்கே தெரியும் எழு நாற்கால் மண்டபங்களும், வள்ளி தினைப்புனம் காத்தது, மஞ்சள் நீர் சுனை, சுப்ரமண்யர் கூப்பிட்டபோது விநாயகர் யானையாக வந்தது கல்லாக இருக்கிறது. மலையின் மேலேயே கோயிலுக்கு 1 மைல் தூரத்தில் வள்ளிமலை சுவாமி சமாதியும். இன்னும் அநேக இயற்கைக் காக்ஷிகளும் காணத் தகுந்த ஆசிரமம் இருக்கிறது.

7. விராலிமலை (திருச்சி-திண்டுக்கல் மார்க்கம்).

கொளத்தூர ரயில் நிலையத்திலிருந்து 7 மைல். திருச்சியிலிருந்து பஸ் வசதி உண்டு. 18 மைல்.

முருகனுடைய படைவீடுகளில் குன்றுதோறாடல் என்பது ஒன்று. ஆகவே எங்கெங்கு முருகன் மலைகளில் கோயில் கொண்டெழுந்தருளி யிருக்கிறாரோ அவைகளைக் குன்றுதோறாடல் என்பது கருத்து. இத்தலத்தில் முருகன் ஆறுமுகங்களோடு மலைமீதமர்ந்திருக்கிறார். மலையின்மீது ஏறுவதற்கு அழகான படிகள் இருக்கின்றன. பெரிய கோயில். கோபுரம் உள்ளன இங்கே தைப்பூசத்திலும், பங்குனி உத்திரத்திலும் விசேஷ

திருவேரகம்—சுவாமிமலை (4-வது படைவீடு)



கிழக்கு கோபுர வாயிலும்
முன்மகா மண்டபக்
காக்ஷியும். இச்சந்நி
தானத்தின் அமைப்பே
ஒரு தனி.

ஆலயத்தின் வடபால்
உள்ள உள்தோற்றம்
மேலே தெரியும் சந்நி
தானத்தில்தான் குரு
நாதன் வீற்றிருக்கின்
றார். கீழுள்ள ஆலயத்
தில் பெருமான் வீற்
றிருக்கின்றார்.





வடக்கு கோபுரவாயில்.
இவ்வாலயத்தில் கீழே
சுவாமியும், மேலே குரு
நாதனும் இருக்கிறார்
கள். தகப்பன் சாமி
அல்லவா. என்ன
காட்சி பாருங்கள்.

குன்றுதோருடல் (5-வது படைவீடு)

திருத்தணி.



மலையின்பேரில் உள்ள
ஸ்ரீ தணிகைநாதன்
ஆலய தரிசனம்.



ஸ்ரீ தணிகைநாதன் ஆலய முன்
கோபுர வாயிலும், படியேறும்
காட்சியும்.

மலைக்குப்போகும் வழியி
லுள்ள அழகிய மகா
மண்டபம்

உற்சவம் நடைபெறுகிறது. சுப்ரமண்ய சுவாமி உருவம் அதி சுந்தரமாய் இருக்கிறது. சுனை ஒன்று இருக்கிறது. ஆனல் உள்ளே போவதற்கு அச்சமாய் இருக்கிறது. ஸ்ரீ அருணகிரி நாதரால் பாடப் பெற்ற ஸ்தலம். இத்தலத்தில் இயற்கை அழகைக் கண்டு களிக்கலாம். இங்கு மயில்கள் அதிகமாக இருக் கின்றன. மலையின் அடிவாரத்தில் பெரிய திருக்குள மிருக்கிறது. இங்கு வேங்கை அடி என்று வழங்கும் இடத்தில் முருகன் வேங்கையைத் தன் வேலாயுதத்தால் குத்திக் கொன்றதாக முன்னோர் வாக்கு.

8. குன்றக்குடி (திருச்சி-காரைக்குடி மார்க்கம்).

காரைக்குடி ரயில் நிலையத்திலிருந்து மேற்கே 7 மைல். எத்திசையிலிருந்தும் பஸ் வசதி உண்டு.

இளமையே கோலமாய், அழகே உருவமாய், கருணையே வடி வமாய், வான் பழித்திம் மண்புகுந்து, நம்மை ஆட்கொள்ளும் ஆறுமுகப் பெருமானின் குன்றுதோறுடல் என்னும் தலங்களி லொன்று குன்றக்குடி. ஆலயம் ஊருக்கு நடுவில் மலையின்மேல் அமைந்திருக்கிறது. இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு ஒன்று மலைக்கோயிலென்றும், மற்றொன்று கீழ்க்கோயிலென்றும் அமைக்கப் பெற்றிருக்கின்றன. மலைக்கோயிலில் ஸ்ரீ முருகப் பெருமான் ஆறுமுகங்களோடு மயில்மேலமர்ந்து இருபுறத்திலும் தனித்தனியே மயில் வாகனத்தில் வள்ளி, தேவசேனா சமேதராய் "ஈராறுகண்ணினின்றும்கருணைமழை பொழிவோனாய், ஈராறு தடந் தோள்களாலும், அடியார்க்கு நேரு மின்னல்களைப் போக்குவதற் கானப் படைகளை யேந்தியவனாய்", கிழக்கு நோக்கியவண்ணம் வீற்றிருக்கின்றார். சந்நிதிக்குத் தென்புறம் அலங்கார மண்டபத் தில் உற்சவமூர்த்தி எழுந்தருளியிருக்கிறார். மற்றும் பிரகாரத்தில் சுவாமி, அம்மன், இன்னும் அநேக சந்நிதானங்கள் இருக்கின் றன. மலையடிவாரத்தின் தென்மேற்குத் திசையில் கீழ்க்கோயில் உள்ளன. அங்கு சுவாமி, அம்மன் சந்நிதி இருக்கிறது. கோயி லின் பெரும்பகுதி மலையைக் குடைந்து அமைக்கப் பெற்றது. இங்குள்ள சிற்பங்கள் காணத் தக்கவை. மிக அருமையான வேலைப்பாடுகளுடையது. மயில் பேறுபெற்ற தலம். இத்தலத்

தின் நுழைவாயில் மயில் தோகை வடிவமாக இருக்கிறது. இங்கிருக்கும் விநாயகருக்கு தோகையடி விநாயகர் என்று பெயர். இத்தலத்தில் கிருஷ்ண பகவான், வசிஷ்டர், விஸ்வாமித்திரர், நாரதர், நான்முகன், கருடன், தேவேந்திரன், சூரியன், மன்மதன், பாண்டவர், மயில், இடும்பன் முதலியோர் பூசித்துப் பற்பல பேறுகளைப் பெற்ற தலம். ஸ்ரீ அருணகிரிநாதர் பாடல் பெற்ற தலம். இங்கு தைப்பூசத் திருவிழா, பங்குனி உத்திரத் திருவிழா முதலியன விசேஷம். மலையடிவாரத்தில் தென்மேற்கில் சரவணப் பொய்கையும், மலையின் மேற்றிசையில் பாண்டவர் தீர்த்தமும், இன்னும் அநேக தீர்த்தங்களும் உள்ளன.

9. மயிலம் (செங்கல்பட்டு-விழுப்புரம் மார்க்கம்).

மயிலம் ரயில் நிலையத்திலிருந்து தென்கிழக்கே 2 மைல். திண்டிவனம்-புதுச்சேரி பஸ் மார்க்கத்தாலும் போகலாம்.

இத்தலம் சுப்ரமண்ய சுவாமியின் குன்றுதோருடல் ஸ்தலங்களிலொன்று. கோயில் மலையின் மேலிருக்கிறது. பெரிய கோபுரமிருக்கிறது. சுப்ரமண்ய சுவாமி மூலஸ்தானத்தில் வள்ளி தேவசேனா சமேதராய் வீற்றிருக்கின்றார். மலையின்மேலேயே வீதிபுறப்பாடு, தேர்த் திருவிழா முதலியன நடப்பதற்குப் பாதைகள், வீதிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இச்சந்நிதானத்தில் சுப்ரமண்ய சுவாமி திருவுருவங்கள் அதிசுந்தரமாய் இருக்கிறது. இங்குக் கிருத்திகை தினங்களில் ஏராளமான பக்தர்கள் வருகிறார்கள். மலையடிவாரத்தில் தமிழ்ப் பாடசாலை இருக்கிறது. தமிழ் வித்வான் படிப்பிற்காகச் சில மாணவர்கள் வாசிக்கின்றார்கள்.

10. பழமுதிர்சோலை என்பது **அழகர்கோயில்** (மதுரை).

மதுரை ரயில் நிலையத்திலிருந்து 12 மைல். பஸ் வசதி உண்டு.

பழமுதிர்சோலை என்னும் பெயருக்கேற்றபடி தென்னஞ் சோலைகளும், அனேக மரஞ்செடிகளும், மலைச்சாரலும், நீர்வீழ்ச்சியும் காண்பதால்தான் குளுமையும், அழகும் பொருந்திய பெயரை அமைத்தனர்போலும். பெரிய கோபுர முண்டு. பெரிய கோயில். ஷண்முகப்பெருமானின் ஆறுவது படை வீடு. அருணகிரிநாதர்,

நக்கீரர் ஆகியோரால் பாடப்பெற்ற ஸ்தலம். இக்கோயிலின் கற்சிற்பங்கள் மிகவும் வேலைப்பாடுடன் காணப்படுகின்றன. இப்போது இவ்வாலயம் விஷ்ணு ஸ்தலமாய் இருக்கிறது. மூலஸ்தானத்தில் நாச்சியார் சமேதராய் பெருமான் காட்சியளிக்கிறார். கள்ளழகர் கோயில் என்றால்தான் அனைவருக்கும் தெரியும். மலைச்சாரலில் அமைந்திருக்கிறது. கோயிலிலிருந்து சற்றுத் தூரத்தில் நீர்வீழ்ச்சி இருக்கிறது. அங்கு சென்று ஸ்நானம் செய்யலாம். கோயில் பெரிய கோபுரத்துக்குமுன் 18-ம் படி கருப்பண்ணசாமி கோயில் இருக்கிறது. எப்போதும் கதவு தாளிட்டிருக்கிறது. மூடியிருக்கும் கதவுக்குத்தான் சந்தனம், புஷ்பம் முதலியன சாற்றுகிறார்கள். நைவேத்தியம், பழம், தேங்காய் முதலியன வைத்துத் தீபாராதனை நடக்கிறது. இங்கு பேய், பிசாசு பிடித்தவர்கள் வந்தால் தாமாக ஆடி நிவர்த்தியாகிறது. மற்றும் அநேக பிரார்த்தனைகள் இங்கு நடக்கின்றன. இங்கு குரங்குகள் அதிகம்.

11. எட்டிகுடி (மாயவரம்-காரைக்குடி மார்க்கம்)

திருநெல்லிக்கா ரயில் நிலையத்திலிருந்து கிழக்கே 7 மைல். திருத்துறைப்பூண்டி- நாகப்பட்டிணம் பஸ் பாதையில் சீராவட்டம் பாலத்திலிருந்து மேற்கே 2 மைல். திருவிழாக் காலங்களில் ஊருக்கு நேரே பஸ் போகிறது.

ஸ்ரீ முருகனது சாந்நித்தியம் தெற்றென விளங்கும் தலங்களுள் ஒன்று எட்டிகுடி. வணிக மன்னனுக்கு ‘எட்டி’ என்ற பெயருண்டு. அதாவது செட்டியிற் சிறந்த ஒருவனை ‘எட்டி’ என்று அழைப்பதுண்டு. முருகபிரானுக்கு ‘செட்டி’ என்றதோர் திருநாமமுண்டு. சிறப்புற்ற செட்டியாகிய ‘எட்டி’ குடியிருக்கும் தலம் ‘எட்டிகுடி’ எனப் பெயர்பெற்றது. இத்தலத்தில் ஸ்ரீ முருகனது சந்நிதானம் பிரசித்தம். உற்சவ மூர்த்தியாகிய சிங்கார வேலவர், வச்சிராயுதம் தாங்கிய கோலத்தோடு அடியார்களுக்குக் காட்சியளிக்கின்றார். ஸ்ரீ ஆனந்தவல்லி சமேதராய் ஸ்ரீ சௌந்தரேஸ்வரர் கோயில் கொண்டெழுந்தருளியுள்ளார். இங்கு சித்ரா பருவத் திருவிழா பிரபலம். அப்போது பாற்காவடிகளும், விபூதிக் காவடிகளும் ஏராளமாக வருகின்றன. இத்தலத்தில் வால்மீக முனிவர் சமாதிநிலை அடைந்திருக்கிறார். ஸ்ரீ அருணகிரிநாதர்

இத்தல சுப்ரமண்ய சுவாமியின் மகிமையைப்பற்றி அநேக திருப்புகழ் பாடியுள்ளார். இங்கு நான்கு மாடவீதிகளிலும், கோயிலைச் சுற்றிலும் அநேக சத்திரங்கள் உள்ளன. பெரிய ஊர்.

12. வயலூர் (திருச்சினாப்பள்ளி டவுன்).

திருச்சியிலிருந்து மேற்கே 6 மைல். பஸ் போகிறது.

சுப்ரமண்ய சுவாமியின் பிரசித்தி பெற்ற ஸ்தலம். பெரிய கோபுரம் இருக்கிறது. சரவணத் தீர்த்தம் என்னும் திருக்குள மிருக்கிறது. கோயிலுக்குள் சுவாமி, அம்மன் சந்நிதானங்கள் முதலிலிருக்கிறது. சுவாமி சந்நிதிக்குப் பின்புறமாகத்தான் ஸ்ரீ சுப்ரமண்ய சுவாமி சந்நிதி இருக்கிறது, மூலஸ்தானத்தில் வள்ளி, தேவசேனா சமேதராய் ஸ்ரீ முருகப்பெருமான் காட்சியளிக்கின்றார். சுவாமிமலையில் இருப்பதைப்போல் பெருமான் சந்நிதிக்கு மேலல்லாமல் இங்கு சுவாமிக்குப் பின்புறமாக மறைந்து நிற்கும் பாவனையில் காணப்படுகின்றார். குமாரக் கடவுள் தலங்கள் தோறும் பற்பலவிதத் தோற்றத்தில் காட்சியளிப்பது இயற்கைதானே.

13. திருப்போரூர் (சென்னை-செங்கல்பட்டு மார்க்கம்).

செங்கல்பட்டு ரயில் நிலையத்திலிருந்து வடகிழக்கு 16 மைல்.

சென்னையிலிருந்து திருவான்மியூர், பார்ப்பான்சாவடி வழியாய் பஸ் மார்க்கம் 27 மைல். வண்டலூர் வழியாய் பஸ் மார்க்கம் 36 மைலுள்ளது.

இச்சந்நிதியில் பெண்பனையடியில் சுயம்பு மூர்த்தியாய் ஸ்ரீ முருகப்பெருமான் விளங்குகின்றார். அவருக்குப் புனுகு சட்டம் சாத்துவது தவிர அபிஷேகம் நடப்பதில்லை. அதற்கடுத்து வள்ளி, தேவசேனா சமேதராய் ஸ்ரீ சுப்ரமண்ய சுவாமி வீற்றிருக்கின்றார். இத்திருக்கோயில் புராதன ஆலயம் எனப்படுகின்றன. இடைநடுவில் ஆலயம் ஜீர்ணோர்த்தாரண மாகியபடியால் சுமார் 350 வருஷங்களுக்கு முன்னால் ஸ்ரீமத் சிதம்பர சுவாமிகள் அவர்களால் புதுப்பிக்கப்பட்டது. பெரிய ஆலயம், கோயிலுக்குத் தென்பாரிசத்தில் சரவணப் பொய்கை எனப்படும் பெரிய திருக்



குன்றக்குடி.

மலைமேலுள்ள ஆலயத் தோற்றமும், கடைவீதிகளும். அடிவாரத்திலிருந்து மேல் வரையில் அநேக சிற்பங்களும், மலையைக் குடைந்து நிறுவப்பட்ட ஆலயமும் காண்பவர் மனதைக் கவருகின்றன.

பழமுதிர்சோலை—அழகர்கோயில் (6-வது பீடைவீடு)



(நடுவே) பெரிய கோபுரத்துக்குமுன் 18-ம் படி கருப்பண்ணன் சந்நிதானம். மிகவும் பிரசித்தம். இக்கோபுரம் எப்போதும் மூடப்பட்டிருக்கும்

(கீழே) மலைச்சாரலில் கோயில் கொண்டுள்ள அழகர் கோயில். இங்கு சிற்பங்கள் காணத் தக்கவை. பெருமாள் நாச்சியார் சகிதம் காட்சியளிக்கிறார். ஆலயத்தின் அழகை பாருங்கள். முருகன் திருவிளையாடல்களில் பெருமாளாக காட்சியளிக்கும் தலம்.





விராலிமலை.

ஸ்ரீ சிவசுப்ரமண்ய சுவாமி, மலையின் பேரிலுள்ள ஆலய தரிசனம். கோபுரம் எவ்வளவு கம்பீரமாக காட்சியளிக்கின்றன பாருங்கள்.

வள்ளிமலை.

மலையின் மேலுள்ள ஸ்ரீ சுப்ரமண்ய சுவாமி ஆலய மயில் மண்டபமும், துவஜஸ்தம்பம் முதலிய காட்சி. கோயிலுக்கு மேல் பாருங்கள்- எவ்வளவு பெரிய மலைக் கற்களால் மூடப்பெற்றிருக்கின்றன இது இயற்கையாக அமைந்த ஆலயமென்று சொல்லலாம்.





மலையின் பேரிலுள்ள பிரம்மாண்டமான பாறையின்மேல் தெய்வ சக்தியால் நிற்கும் கோபுரக் காட்சி. வள்ளி மணாளனை சென்று தரிசியுங்கள்.

குளமிருக்கிறது. ஆலயத்துள் சர்வாத்திய மண்டபம் அருமையான கற்சிற்பங்களுடைய தூண்கள் பொருத்திக் கட்டப்பட்டிருக்கின்றது. இத்தலத்தின் பெயருக்கேற்ப அத்தூண்களில் பொருத்தியிருக்கும் நவவீரர்களின் சிற்பங்கள் குதிரையின்மீது, கையிலே கத்தியும், கேடயமுமுள்ளவர்களாகக் காணப்படுகின்றூர்கள். நான்கு மாடவீதிகளிலும் அநேக சத்திரங்கள் உள்ளன. கிழக்குப் பார்த்த சந்நிதி. பெரிய கோபுரம் உண்டு. மாசி மாதம் உற்சவம் விசேஷம். கோயிலுக்கு மேற்புரம் சிறு குன்றின்மேல் கைலாசநாதர் ஆலயம் உள்ளது. ஆலயத்திற்கு வடபால் 2 பர்லாங் தூரத்தில் கண்ணுப்பேட்டை என்னுமிடத்தில் ஸ்ரீமத் சிதம்பர சுவாமிகள் ஒடுக்க அறையும், அவர் சமாதியும், இன்னும் அவருக்குப் பின்வந்த 10-சுவாமிகள் சமாதிகளும் அவ்விடமிருக்கின்றன. அங்கு ஸ்ரீ வேம்படி விநாயகர் ஆலயம் மிகப் பிரசித்தம். ஸ்ரீமத் சிதம்பர சுவாமிகள் மடாலயத்திற் கெதிரில் வேலாயுத தீர்த்தம் இருக்கிறது.

14. திருப்பதி (***சென்னையிலிருந்து ரேணிகுண்டா போய் அங்கிருந்து பாகாலா போகும் மார்க்கத்தில் திருப்பதி ரயில் நிலையம் இருக்கிறது. சென்னையிலிருந்து 90 மைல். சென்னையிலிருந்து நேரே பஸ் போகிறது. ரயில் நிலையத்திலிருந்து கோவிந்தராஜப்பெருமாள் சந்நிதி ஏறக்குறைய ½ மைல். அங்கிருந்து மலை அடிவாரம் 1 மைல் தூரத்திலிருக்கிறது. பிறகு மலையை நடந்து செல்வதானுல் மேல் திருப்பதி 7 மைல். பஸ் மூலமாய் மேலே போக 12 மைல்கள் உள்ளன.***

திருப்பதி பெரிய ஊர். ரயில் நிலையத்திலிருந்து இறங்கினதும் எதிரிலேயே தேவஸ்தான சத்திரம் இருக்கிறது. அங்கே தங்குவதற்கு சகல வசதிகளும் உண்டு. கீழ்திருப்பதியில் கோவிந்தராஜப் பெருமாள் க்ஷேத்திரம் விசேஷம். பிறகு திருமலைக்கு நடந்தும், பஸ் மூலமாகவும் செல்லலாம். வழியில் இயற்கைக் காட்சிகளையும், நீர் அருவிகளையும், பள்ளத்தாக்குகளையும், இன்னும் அநேக காட்சிகளையும் கண்டு களிக்கலாம். மலைமேல் உள்ள கோயில் பெரிய நிலப்பரப்புள்ள சமவெளியில் அமைந்துள்ளது. வெங்கடாசலபதியின் தரிசனமும், கோயிலின் காட்சியும் நாம் அனைவரும் கண்டு களிக்க வேண்டிய தலம், பெரிய தேவஸ்தானம். பல தேசங்களிலிருந்தும், பல ஊர்களிலிருந்தும் யாத்திரிகர்கள் தினம் 2000 பக்தர்களுக்குக் குறையாமல் வந்துகொண்டும், போய்க்கொண்டும் இருக்கின்றனர். மலையின்பேரில் சந்திர புஷ்கரணி தீர்த்தம் உள்ளன. அநேக மன்னர்களால் போஷிக்கப்பட்டும், ஸ்ரீமத் அருணகிரிநாதரால் பாடல்பெற்ற தலம்.

ஆழ்வாராதிகளால் மங்களாசாசனம் செய்யப்பட்ட தலம். இவ்வாலயம் ஸ்ரீ ராமாநுஜரால் பிரதிஷ்டை செய்யப்பட்டதாகப் புராண வரலாறு.

15. ஆயக்குடி (கணக்கன்பாடி ரயில் நிலையத்திலிருந்து 2 மைல்).

16. ஆமூர் (பண்ணுருட்டி ரயில் நிலையத்திலிருந்து 6 மைல்).

17. இடைக்கழி (திருக்கடையூர் ரயில் நிலையத்திலிருந்து 3 மைல்).

18. இஞ்சிக்குடி (பூந்தோட்டம் ரயில் நிலையத்திலிருந்து $1\frac{3}{4}$ மைல்).

19. இலஞ்சி (தென்காசி ரயில் நிலையத்திலிருந்து 2 மைல்).

20. ஊதிமலை (சங்கரநயனார் கோயில் ரயில் நிலையத்திலிருந்து 20 மைல்).

21. எண்கண் (குழிக்கரை ரயில் நிலையத்திலிருந்து வடக்கே 4 மைல்).

22. கந்தனூர் (கொட்டையூர் ரயில் நிலையத்திலிருந்து 3 மைல்).

23. கந்தங்குடி (அம்பகரத்தூர் ரயில் நிலையத்திலிருந்து 3 மைல்).

24. கழுகுமலை (நல்லாட்டின்புத்தூர் ரயில் நிலையத்திலிருந்து 7 மைல்).

25. பேரூர் (கோயம்புத்தூர் ரயில் நிலையத்திலிருந்து 3 மைல்).

விசேஷ ஸ்தலங்கள்.

26. திருப்பெருந்துறை என்பது **ஆவுடையார்கோயில்** (மாயவரம்-காரைக்குடி மார்க்கம்).

அரந்தாங்கி ரயில் நிலையத்திலிருந்து தென்கிழக்கே 8 மைல். பஸ் போகிறது.

பெரிய கோயில். சிவபெருமான் கணநாதருடன் குருந்தை நிழற்றின்கீழ் குருமூர்த்தமாக எழுந்தருளி மாணிக்கவாசகப் பெருமானுக்கு ஞானோபதேசம் தந்தருளிய தலம். இங்கே பத்து

நாள் (ரதோற்சவத்துடன்) பிரம்மோற்சவம் ஆனி, மார்கழி மாதங்களில் மாணிக்க வாசகருக்கே நடைபெறுகிறது. மாணிக்க வாசகப் பெருமான், குதிரை வாங்கிவர அரசன் கொடுத்த பொன்னை திருப்பெருந்துறையுறையும் பெருமானின் ஆலயத் திருப்பணிக்கே அத்தனையும் செலவு செய்துவிட்டு, இறைவன் அருளால் நரியைப் பரியாக்கிக் கொண்டு போகவும், பிறகு பெருமான் குதிரைச் சேவகனுக வந்து மாணிக்கவாசகப் பெருமானைத் தடுத்தாட்கொண்டார். கோயிலில் சிற்பங்களும், மண்டபக் கொடுங்கைகள் முதலியன பார்க்கத் தக்கவை. கோயிலுக்கு எதிரில் அக்கினி தீர்த்தமிருக்கிறது. இவ்வாலயத்தில் தரிசிப்போருக்குப் பாதோதகப் பிரசாதம் கொடுக்கப்படுகிறது. அது என்னவென்ருல் மணிவாசகப் பெருமானுக்கு ஞானதீக்ஷை செய்தது போல் வரும் அடியார்கட்கும் தீக்ஷை புரியும் பாவனை. அடியார்கள் தங்குவதற்கு அநேக சத்திரங்கள் உள்ளன.

27. பாபநாசம் என்பது **பொதியமலை** (மணியாச்சி-தென்காசி மார்க்கம்).

அம்பாசமுத்திரம் ரயில் நிலையத்திலிருந்து மேற்கே 7 மைல். பஸ் போகிறது. சகல வசதிகளும் உண்டு.

சென்னையிலிருந்து மதுரை-விருதுநகர்-மணியாச்சி-திருநெல்வேலி-அம்பாசமுத்திரம் வரை 465 மைல்.

பெரிய கோபுரமிருக்கிறது. பெரிய கோயில். ஆற்றிற்குப் படித்துரைகள் அமைத்துக் குளிப்பதற்கு வசதியாக இருக்கிறது.

தாம்பிரபரணி ஆற்றின் கரையிலிருக்கிறது. இயற்கைக் காட்சிகள் நிறைந்து பொதிய மலைச்சாரலில் அமையப்பெற்ற அகத்தியர் தவச்சாலை என்று சொல்லலாம். இங்கு செந்தமிழ்ப் பரமாச்சாரியரான அகஸ்திய மாமுனிவருக்கு திருக்கல்யாண கோலக் காட்சி தந்தருளிய ஸ்தலம், தீர்த்தம் தாம்பிரபரணி. சுவாமியும், அம்மையாரும் நீர்விளையாடுங்கால் அம்மையார் குங்குமம் கலந்ததால் தீர்த்தம் சிவந்து தாமிரநிறமானதால் இந்நதி தாமிரபரணி எனப்பெயர் பெற்றது. சித்திரை மாத முதற் தேதியில் திருமணக் காட்சி உற்சவம் விசேஷம். இங்கு அருவியில் மீன்கள் பெரியனவாகவும், சிறியனவாகவும் நூற்றுக்கணக்கில் நாம் குளிக்கும் சமீபத்தில் 1-அடி தூரத்தில் நீந்தி விளையாடுகின்றன. இது பார்ப்பதற்கு அற்புதமான காட்சியாக இருக்கும். அம்மீன்கள் நம்மைக்கண்டு அஞ்சுவதுமில்லை. இங்கிருந்து அணைக்கட்டிற்கு மலையின்பேரில் பஸ் போகிறது. போகும் வழிகளில் வானளாவிய மலைகளும், மரங்களும், பள்ளத்தாக்குகளும் பசும்புற்களும் பார்ப்பதற்கு ஆனந்த

மாய் இருக்கிறது. மலைமேலிருந்து 3 குழாய்கள் வழியாய் தண்ணீரை கீழுக்குக் கொண்டுவந்து அவைகளினின்று மின்சார உற்பத்தி செய்கிறார்கள்.

28. உத்தரகோசமங்கை (மானாமதுரை - இராமேஸ்வரம் மார்க்கம்). இராமநாதபுரம் ரயில் நிலயத்திலிருந்து தென்மேற்கே 5 மைல்.

ஸ்ரீ நடராஜப் பெருமான் சந்நிதானம் விசேஷம்.

29. திருப்புல்லாணி என்பது **தர்பை சயனம்** (மானாமதுரை-இராமேஸ்வரம் மார்க்கம்). இராமநாதபுரம் ரயில் நிலயத்திலிருந்து தெற்கே 5 மைல்.

இங்கு ராமபிரரன் சேது கட்டுவதற்கு ஆரம்பமாகும்போது தர்ப்பையைப் படுக்கையாக விரித்து சயனங்கொண்ட தலம், இராமேஸ்வரம் போகிறவர்கள் இத்தல ஸ்ரீராமபிரான் தரிசனம் செய்வது விசேஷம். பெரிய கோயில். பிரசித்தி பெற்ற தலம், ஆலயத்துள் பிரவேசித்ததும் ஒருவித மணம் வீசுகிறது.

30. தேவிபட்டணம் என்பது **நவபாஷாணம்** (மானாமதுரை-இராமேஸ்வரம் மார்க்கம்). ராமநாதபுரம் ரயில் நிலயத்திலிருந்து வட கிழக்கே 10 மைல்.

இத்தலம் கடற்கரையில் ஜலத்திலேயே இருக்கிறது. ராமர் நவகிரஹ பூசை செய்து தோஷ பரிகாரம் நிவர்த்தியான தலம். இங்கே 9 கிரகங்கள் ஜலத்தில் நிர்மாணம் செய்யப்பட்டிருக்கிறது. காலையிலிருந்து பகல் சுமார் 12 மணி வரையில்தான் நாம் பூசை செய்ய சிலைகள் தெரியும். பிறகு பகல் நேரத்தில் ஜலத்தால் மூழ்கி சிலைகள் தெரியாது. மறுபடியும் எப்போதும் போல் மறு நாள் காலையில்தான் சிலைகள் இருக்கும் இடம் ஜலம் வற்றி இருக்கும். இங்கு போய் நவகிரக பூசை செய்வது நலம்.

31. கன்யாகுமரி (திருநெல்வேலியிலிருந்து தெற்கே பஸ் மார்க்கமாய் 40 மைல்).

சென்னையிலிருந்து திருநெல்வேலி மெயின் லயன் வழியாய் 443 மைல். அங்கிருந்து பஸ் 40 மைல். ஆக 484 மைல்கள். போகும் மார்க்கத்தில் நாகர்கோயில், சுசீந்திரம் முதலிய தலங்கள் இருக்கின்றன. இறங்கி தரிசனம் செய்துவிட்டு மறு பஸ்ஸுக்குப் போகலாம்.

எட்டிக்குடி.

ஸ்ரீ சுப்ரமண்ய சுவாமி ஆலயமும், எதிரிலுள்ள திருக்குளத் தோற்றமும். சித்ரா பௌர்ணமித் திருவிழா இங்கு விசேஷம்.



திருவள்ளுவர் ஆலயம் (திருமயிலாப்பூர், சென்னை).



ஆலய முன்கோபுரத்தின் மேலுள்ள சிற்பங்கள். தாங்கள் நேரில் பார்த்தால் அதன் தத்துவார்த்தங்களை அறியலாம்.

திருவள்ளுவர் சந்நிதானத்தின் உட்தோற்றம். மேலே பாருங்கள். விமானத்தில் சங்கப்புலவர்களுக்கு மேல் நடுநாயகமாய் வீற்றிருக்கும் தெய்வப் புலமை திருவள்ளுவரை.



ஸ்ரீமத் பாம்பன் குமர குருதாச சுவாமிகள் திருவான்மியூரைச் சார்ந்தமயூரபுரத்தில் கடற்கரை அருகாமையில் அமைதியும், ஆனந்தமும் நிறையப்பெற்ற இடத்தில் சமாதியமர்ந்த சந்நிதானத்தின் தோற்றம்.

திருவொற்றியூர் ஆலயத்திற்குக் கிழக்கே நேரடிச் சிவனைச் சிந்தித்து கருணைக் கடலோரத்தில் வீற்றிருக்கும் பட்டினத்தார் சமாதியமர்ந்த சந்நிதானத்தின் வெளித் தோற்றம்.



அருட்பெருஞ் ஜோதி, தனிப்பெருங் கருணை ஸ்ரீமத் இராமலிங்க சுவாமிகள் வடலூர் ரயில் நிலையத்திற்கு 1 மைல் தூரத்தில் சமாதியமர்ந்த சந்நிதானத்தின் வெளித் தோற்றம் இவ்வாலயத்தின் தோற்றமே ஒரு தனிச் சிறப்பு.

குமரி அம்மன் ஆலயம் கடற்கரைக்கு அருகாமையில் சுமார் 1 பர்லாங் தூரத்தில் உள்ளன. கோயிலுக்குக் கோபுரம் கிடையாது. ஏறக்குறைய சற்று பெரிய கோயில். ஆலயம் மிகவும் அழகாக இருக்கிறது. குமரி அம்மையின் முகப்பொலிவும். குளிர்ந்த பார்வையும், புன்சிரிப்புடன், தேஜோமயமாய் நவரத்னங்களாலும், வைரங்காளாலும் அலங்காரம் செய்யப்பட்டு வீற்றிருக்கும் காட்சி பார்க்கத்தக்கது. கடற்கரையில் 16 கால் மண்டபம் உள்ளன. அங்கு நின்று கிழக்கு உதிக்கும், மேற்கு அஸ்தமனமாகும் சூரியனின் இரண்டு காட்சிகளையும் ஒரே இடத்தில் காணலாம். அங்கு ஸ்நானம் செய்வதற்கு அநேக கட்டங்கள் இருக்கின்றன. அதற்குத் தகுந்த பந்தோபஸ்தான திட்டங்கள் செய்யப்பட்டிருக்கிறது. பயமில்லாமல் ஸ்நானம் செய்யலாம். கோயிலுக்குப் பக்கத்தில் குடும்ப சமேதராயும், தனியாயும் தங்குவதற்கு சர்க்காரால் நடத்தப்படும் பெரிய சத்திரம் இருக்கிறது. இன்னும் அநேக விடுதிகளும், ஹோட்டல்களும் உள்ளன. இங்கே மூன்று கடல்களும் கூடுகின்றன. கடற்கரையிலுள்ள கடற் சிற்பிகள், புளியங்கொட்டை பருமன் முதல் கடுகுவரை தனித் தனியே கொழித்திருக்கின்றன. சில இடங்களில் மணல் மெருகு தீட்டிய பச்சரிசி போலும், சில இடங்களில் மிளகாய்த் தூள் போல் பரந்தும் காணப்படுகின்றன. இவைகளெல்லாம் குமரியை மணந்துகொள்ள தாணுமாலய பெருமான் இங்கு வந்துகொண்டிருக்கும்போது பொழுதுவிடிந்துவிடவே சுசீந்திரத்திலேயே தங்கி விட்டபடியால் மேற்சொன்ன பொருள்களை கடலிலெறிந்துவிட்டதாகவும் அவை இப்படி இருக்கிறதென்று சொல்லுகிறார்கள். இங்கிருந்து திருவனந்தபுரம் போக வசதிகள் இருக்கின்றன: பஸ் போகிறது. ஸ்பெஷல் கார்கள் போகின்றன.

32. ஸ்ரீ வில்லிபுத்தூர் - கோதை பிறந்த ஊர் (விருதுநகர்-தென்காசி மார்க்கம்).

ஸ்ரீ வில்லிபுத்தூர் ரயில் நிலையத்திலிருந்து கோயில் 1 மைல். சென்னையிலிருந்து—ஸ்ரீ வில்லிபுத்தூர் போக செங்கல்பட்டு மாயவரம், தஞ்சாவூர், திருச்சி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர் வழியாக 398 மைல்.

பெரிய கோபுரமுண்டு. பெரிய ஆலயம். பெரியாழ்வார் ஆலயம் தனியே இருக்கிறது. ஆண்டாள் ஆலயம்தான் இங்குப் பிரசித்தம். மார்கழி, ஆடி மாதங்களில் விசேஷ உற்சவங்கள் நடைபெறுகின்றன. ஆண்டாள் சந்நிதியின்மேல் விமான கோபுர சிற்பங்கள் காணத்தக்கவை. கோயில் ஒரு தனிச் சிறப்புடையதாக அமைந்திருக்கிறது. பெரிய தெப்பக்குளம் இருக்கிறது. இக்

கோயிலில் ரதம் பெரியது. யாத்திரீகர்கள் தங்குவதற்கு அநேக சத்திரங்கள் உள்ளன. பல திசைகளிலிருந்தும் பஸ் வசதி உண்டு.

33. திருவல்லிக்கேணி (*ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமாள் கோயில்) சென்னை எழும்பூர் ரயில் நிலயத்திலிருந்து தெற்கே 3 மைல்.*

பெரிய கோபுரம். பெரிய ஆலயம். ஆழ்வாராதிகளால் மங்களாஸாசனம் பெற்ற திவ்விய தலம். இத்தலத்தில் ஐந்து சந்நிதிகளுண்டு. ஸ்ரீ பார்த்தசாரதி சுவாமி சந்நிதி கிழக்கு நோக்கியும், ஸ்ரீ நரசிம்ம சுவாமி சந்நிதி மேற்கு நோக்கியுமுள்ளன. கிழக்கேயுள்ள பெரிய கோபுரத்திற்கெதிரில் திருக்குளமிருக்கிறது. சித்திரை மாதத்தில் பெரிய திருவிழா நடைபெறுகிறது. ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமாள் அமைப்பைப்போல் வேறெங்கும் காண முடியாது. சென்னைக்கே நடுநாயகமாய் விளங்கும் இவ்வாலயமும், பெருமாளும் ஒரு தனிச்சிறப்பென்றே சொல்லலாம்.

34. மயூரபுரம் (*திருவான்மியூர், சென்னை*)

சென்னையின் தென்பகுதியாய் விளங்கும் திருவான்மியூர் ஆலயத்துக்கு வடக்கே அரை மைல் தூரத்தில் சமாதியமர்ந்திருக்கும் ஸ்ரீமத் பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் அவர்கள் அருணகிரிநாதரைப் போலவே முருகனையே பாடி அநுபூதி பெற்றவர். இவர் இளமையிலேயே முருகன் பக்தி பூண்டு தவம், சாந்தம், சீலம் முதலிய நற்குணங்கள் பொருந்தியவர். இவர் தன் 72-வது வயதில் ஒரு நாள் குதிரை வண்டி மோதி சுவாமிகள் கீழே விழுந்துவிட்டார், பின்னர் வண்டியின் சக்கரம் காலின்மேல் ஏறி கால் எலும்பு முறிந்துவிட்டது. உடனே ஜெனரல் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகப்பட்டார். அங்கு டாக்டர்கள் பார்த்து இவருக்கு எலும்பு கூடுவது கஷ்டமென்று சொல்லிவிட்டனர். பிறகு நெறியுடன் ஷண்முக கவசம் பாராயணம் செய்ய, பதினோராம் நாள் சுவாமிகளின் முறிந்த

கால் இருவேல்களினால் பொருத்தப்பட்டு கூடுவது தோன்றிற்று. சுவாமிகள் முருகன் திருவருளால் யாதொரு சிகிச்சை இல்லாமலேயே தமது முறிந்த காலைப் பொருத்தி நடக்கலானார். இவ்வதிசயத்தை உலகத்தாரறிய சுவாமிகள் மார்கழி மாதத்தில் மாயூரவாகன சேவை நடத்தலானார். அவர் சமாதியமர்ந்த பின்பும் நடந்து வருகிறது. அவர் அத்திசையில் சமாதியடைந்த பின் இன்று அவ்விடங்கள் பெரிய மாடமாளிகைகளாகத் திகழ்கின்றன.

35. திருவள்ளுவர் ஆலயம் (திருமைலாப்பூர், சென்னை)

தெய்வப்புலமைத் திருவள்ளுவர் ஆலயம் ஸ்ரீ கபாலீச்சுரர் ஆலயத்துக்கு வடபால் ½ மைல் தூரத்திலிருக்கிறது. ஆலயம் பெரிதாக இருக்கிறது. இன்னும் சில காலங்களில் பெரிய ஆலயமாகத் திகழும். மூலஸ்தானத்தில் திருவள்ளுவர் சிலாரூபமாய் இருக்கிறார். வாசுகி அம்மையார் சமேதராய் திருவள்ளுவர் உற்சவ மூர்த்தி இருக்கிறது. கோயிலைச் சுற்றிலும் சோலைகள் காணப்படுகின்றன.

36. பட்டினத்தார் ஆலயம் (*திருவொற்றியூர், சென்னை*).

பட்டினத்தார் ஆலயம் திருவொற்றியூர் ஆலயத்துக்குக் கிழக்கே ½ மைல் தூரத்தில் இருக்கிறது. கிழக்குப் பார்த்த சந்நிதி. ஆலயம் இருக்குமிடம் அடர்ந்த சோலைகளின் நடுவே குளிர்ந்த நிழலில் இருக்கிறது. வெள்ளிக்கிழமைகளில் அன்பர்கள் தரிசனார்த்தம் செய்ய விசேஷமாக வருகிறார்கள். வெளியூர்களிலிருந்தும் தரிசனம் செய்து போகிறார்கள்.

சென்னைக்குத் தெற்கே பாம்பன் குமரகுருதாச சுவாமியும் நடுவே தெய்வப்புலமைத் திருவள்ளுவரும், வடக்கே பட்டினத்தார் சந்நிதானங்கள் அமையப்பெற்றது ஒரு தனிச் சிறப்பென்று சொல்லலாம்.



சித்தர்கள் சமாதியமர்ந்த ஸ்தலங்கள்.

ஆதிகாலந் தொடங்கி நம் நாட்டில் சித்தர்களும், முனிவர்களும் அரிய சாதனங்களையும், சித்துக்களையும் இப்போதும் செய்துகொண்டிருக்கிறார்கள். ஸ்ரீ தாயுமான சுவாமிகளும், சித்தர்கணங்களைப் பற்றித் தாம் திருவாய்மலர்ந்தருளிய நூலில் மிகவும் புகழ்படக் கூறியிருக்கின்றார். அதற்குத் திருஷ்டாந்தமாக இப்போதும் சித்தர்களின் சமாதிநிலை ஸ்தலங்கள் தனிச் சிறப்புடன், விசேஷமான புண்ணிய ஸ்தலங்களாக விளங்கிக் கொண்டிருக்கின்றன. அவையாவன :

	ஸ்தலங்கள் :		சித்தர்கள் :
1.	சேதுவில்	...	பதஞ்சலி முனிவர்
2.	அனந்தசயனம் என்பது (திருவனந்தபுரம்)	...	கும்ப முனிவர்
3.	மதுரை	...	சுந்தரானந்த தேவர்
4.	அழகர்கோயில்	...	இராம தேவர்
5.	திருப்பரங்குன்றம்	...	மச்ச முனிவர்
6.	பழநி	...	போகர்
7.	ஸ்ரீரங்கம்	...	சட்ட முனிவர்
8.	கரூர்	...	கரூர்த் தேவர்
9.	திருவாரூர்	...	கமல முனிவர்
10.	எட்டிகுடி	...	வான்மீகர்
11.	மாயவரம்	...	குதம்பை சித்தர்
12.	வைத்தீஸ்வரன்கோயில்	...	தன்வந்தரி
13.	சிதம்பரம்	...	திருமூலர்
14.	திருவண்ணாமலை	...	இடைக்காட்டு சித்தர்
15	விருத்தாசலம்	...	பாம்பாட்டி சித்தர்
16.	திருப்பதி	...	கொங்கணவர்
17.	பேரூர்	...	கோரக்கர்
18.	காசி	...	நந்தீசர்



பொது விவரங்கள்.

போகர்—18 பாஷாக்கியானி—மாபெருங் ககன சித்தர். சீனம், ஆங்கிலம் முதலிய தேசங்களுக்கு சென்று குருமூர்த்தமாயிருந்து கருவி, யந்திர சித்திகளை உபதேசித்தருளியவர்.

புசுண்டர்—பிரளய காலங்களில் அவிட்ட நக்ஷத்திர பதவியிலிருந்து மக்களுக்குத் துணைபுரிபவர்.

யூகிமுனி—மூலிகைகளோடு கலந்துரவாடும் சித்தி மிகவும் பெற்றவர். மூலிகையின் பிரயோகத்தால் கருநிறகாக்கையை வெண்ணிறமாக்கிக் காட்டியவர்.

இராம தேவர்—மாபெரும் குளிகை சித்தர். மக்கா மாநகரஞ் சென்று அரபி பாஷையில் வாத வயித்திய சித்திகளை உபதேசித்து யாகோப் என்னும் பெயரால் புகழப்பெற்றவர்.

கோரக்கரும்-அல்லமா தேவரும் ஒரு நிலக்களசித்தர்கள். கூடு விட்டு கூடுபாயும் சித்தியில் வல்லுனர்.

—o—

சித்தர் விவரண வாழ்த்துரை

(வேல் முருக. சித்தன் ப. சு. லோகநாதன்)

மூர்த்தி-தலம்-தீர்த்தம் இம்மூன்றும் முறைப்படி அமைந்துள்ள தலங்களுக்கு க்ஷேத்திரங்களென்று பெரியோர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். மூர்த்தி சுயம்புவாயும்; தலம் தவநிலைக்குறித்தானதாயும்; தீர்த்தம் நோய் தீர்க்கும் செயலுள்ளதாயும் அமைந்திருப்பது அவற்றிற்குரிய யிலக்கணங்கள். இவ்விலக்கணவமைப்புகள் பழுதுபடாதபடி பாதுகாப்பதற்குரிய சிலர் முத்தீயினையும் முப்போதுமோம்புதலான வேள்விக்கடனைத்தவருது செய்துவரும் தீக்ஷதர் என்னும் புண்ணியப் புருடர்கள்.

மூர்த்திக்குரிய நிலை குரு, லிங்க, சங்கமம். சித்தரென்னும் தெய்வ நிலைச் செல்வர்கள் இம்மூன்றுயுந் தோன்றுவார்கள். இவர்கள் பஞ்சகருத்தாக்களது சிருஷ்டியின் மூலமாய் வெளிவருபவர்களல்லர். இறைவனது மானத சிருஷ்டியால் தோன்றுபவர்கள். இவர்களது புண்ணிய மிகுதியே இவ்வாறு தோற்றுவதற்குரித்தாவது. இவர்கள் செயலாற்றும் திட்டத்திற்குரிய சத்திகளனைத்தும் இறைவனது ஆணைப்படிப் பெற்றுள்ளவர்கள். பிரளய காலங்களில் நக்ஷத்திர மண்டலங்களில் வீற்றிருப்பதும், ஆகாய கமனம் செய்வதும் இவர்களுக்கு உரிமைத் துணைக் கருவிகள்.

ஜீவகோடிகளைத் தடுத்தாட்கொள்ளும் நிலையில் மலநீக்கத் துணைக் கருவிகளாக சித்தரிடத்திலுதயமாகும் சித்திகள் :—(i)பிரவதிக சித்து முதலாக அடக்குமதி சித்து யீருக 64 சித்திகள்.

(ii) யோகநிலை போத முயர்ச்சியின்போது உதயமாகும் சித்திகள் அணிமா முதலாக-வசித்துவம் யீருக 8 சித்திகள்.

(iii) முத்திநிலைக்குரிய சிவதீட்சை சத்தி தீட்சை முதிர்ச்சியில், மந்திர சித்தி முதலாக ஞானசித்தி யீருக அனுபவ அனுக்கிரக சித்திகள் 25.

(iv) சச்சிதானந்த மய பரிபூரண நிலை போதமாகும்போது உதயமாகும் சித்திகள் வசியம் (8) முதலாக மாரணம் 8 ஈருக 64 சித்திகள். சாபானுக்கிரகங்கள் இவற்றிலோர்பால் பட்டப் பகுதிகள்.

சிருஷ்டியின் ஆரம்பத்தில் தரிசனமான ஒப்புயர்வற்ற தனிப் பெருஞ் சித்தர் அறுமுகச்சிவனார்.

இவருபதேசித்தருளிய மூர்த்திகள் சிவபெருமான், இந்திராதி தேவர்கள்-அகத்தியர்-சனகனாதி முனிவோர்கள் - வியாசராதி - அதிகார புருடர்கள்-வசிட்டராதி தபசிகள்-இருக்காதி வேதபாரகர்கள்-நாரதராதி யிருடிகள் ஸ்ரீராமர், கிருஷ்ணர் முதலாய பரமாத்மாக்கள்-குமரகுருபரராதி மடாதிபதிகள்.

சித்தி நிலைக்கு வழியடைப்பா யிருப்பவை மன வாக்கு காய மாபெரும் அசுத்தங்கள்.

சித்தரிருக்குமிடம் சிவலோகமென்பது திருமூலர் திருமந்திர திருவாக்கு.

சித்த பற்றற்றவர்கள் யாவரும் முத்தி நிலைக்குரித்தாய சித்தர்களே என்பதும், இவர்களைப்பற்றுவது மக்கட்குரிய புண்ணிய நிலையென்பதும்—

“பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு”

என்ற—தமிழ் தெய்வ மறையிலுள்ள விதிவாக்கு.

மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினற்கு பருபரமே குருவாய் தரிசனந்தந்து, ஓர் வார்த்தை சொல்லித் தடுத்தாட்கொள்ளுமென்பது தாயுமானவர் தெய்வத்திருவாக்கில் கண்ட முடிவு.

இவ்வளவு பெருமைவாய்ந்த க்ஷேத்திரங்களை வினைதீர தரிசித்து முக்திநிலைசெல்வர்களாய் நாம்வாழ்வதற்கு அறுமுகத் தெய்வத் திருவருள் துணைபுரிக

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.

———

அநுபந்தம்.

பஞ்ச பூத ஸ்தலங்கள்.

1. திருவாரூர் அல்லது காஞ்சீபுரம் (பிருதிவி) மண்.
2. திருவண்ணாமலை (தேயு) தீ.
3. திருவானைக்கா (அப்பு) நீர்
4. திருக்காளத்தி (வாயு) காற்று
5. சிதம்பரம் (ஆகாயம்) வெளி

பஞ்ச சபைகள்,

1. திருவாலங்காடு .... இரத்தின சபை
2. சிதம்பரம் .... கனக சபை
3. மதுரை .... ரஜத சபை
4. திருநெல்வேலி .... தாமிர சபை
5. திருக்குற்றாலம் .... சித்திர சபை

தக்ஷிண கைலாசம்.

1. திருக்காளத்தி, 2. திருச்சிராப்பள்ளி, 3. திருக்கோகர்ணம்.

முக்தி தரும் ஸ்தலங்கள்.

1. மதுரா, 4. காஞ்சி, 7. துவாரகை.
2. மாயா, (பூரி) 5. அவந்திகா.
3. காசி, 6. அயோத்தி,

அஷ்ட வீரட்டங்கள்.

1. திருக்கண்டியூர் .... பிரமன் சிரங் கொய்தது
2. திருக்கோவலூர் .... அந்தகாசுரனை சங்கரித்தது
3. திருஅதிகை .... திரிபுரத்தை எரித்தது
4. திருப்பறியலூர் .... தக்கன் சிரங் கொய்தது
5. திருவிற்குடி .... சலந்தராசுரனை சங்கரித்தது
6. வழுவூர் (வைப்புதலம்) யானையை உறித்தது
7. திருக்குறுக்கை .... காமனை எரித்தது
8. திருக்கடவூர் .... எமனை உதைத்தது

சப்த விடங்கள்.

1. திருவாரூர் .... வீதி விடங்கர் - அசபா நடனம்
2. திருநள்ளாறு .... நகவிடங்கர் - உன்மத்தநடனம்
3. திருநாகைக் [காரோணம் .... சுந்தர விடங்கர் - பாராவார தரங்க நடனம், வீசி நடனம்
4. திருக்காறுயில் .... ஆதி விடங்கர்-குக்குட நடனம்
5. திருக்கோளிலி .... அவனி விடங்கர்-பிருங்கநடனம்
6. திருவாய்மூர் .... நீல விடங்கர் - கமல நடனம்
7. திருமறைக்காடு .... புவனி விடங்கர் - ஹஸ்தபாத நடனம்

22:38.21
N53

சப்த ஸ்தான க்ஷேத்திரங்கள்

1. திருவையாறு
2. திருப்பழனம்
3. திருச்சோற்றுத்துரை
4. திருவேதிக்குடி
5. திருக்கண்டியூர்
6. திருப்பூந்துருத்தி
7. திருநெய்தானம்

காசிக்குச் சமானமாகச் சொல்லப்படும் ஸ்தலங்கள்.

1. திருவெண்காடு
2. திருவையாறு
3. மாயவரம்
4. திருவிடைமருதூர்
5. திருச்சாய்க்காடு
6. திருவாஞ்சியம்

தீர்த்தங்களில் ஸ்நானம் செய்வதினாலுண்டாகும் பலன்கள்.

1. கங்கா நதி :—மாசி மாதத்தில் சூரியன் கும்ப ராசியிலிருக்கையில் சிரார்த்தமாவது, பிண்ட தானமாவது, பித்ரு மாத்ரு வமிசங்களுக்குக் கொடுத்தல், கோடி குலத்திற்குத் தர்ப்பணஞ் செய்து மோக்ஷத்திற்குச் சேர்த்ததற்கு ஒப்பாகும்.

2. நர்மதா நதி:—மார்கழி மாதத்தில் குரு தனுர் லக்கினத்திற் சேர்ந்திருக்கையில் ஸ்நானம் செய்தால் விஷ்ணு பதவி கிடைக்கும்.

3. கோதாவரி நதி:—பிரமஹத்தி, கோஹத்தி முதலிய மஹாபாதகங்களையுமொழித்து உருத்திர லோகத்தை கொடுக்கும்.

4. கிருஷ்ணவேணி நதி :—பங்குனி மாதத்தில் குருவுஞ் சூரியனும் மீன லக்கினத்தில் இருக்கையில் ஸ்நானம் செய்தால் எல்லாப் பாவங்களும் நீங்கி, விஷ்ணு பதமளிக்கும். புண்ணிய பலனுண்டாகும்.

5 துங்கபத்திரை நதி:—பிரமலோகத்தைக் கொடுக்கும்.

6. காவேரி நதி :—கார்த்திகை மாதத்திற் குரு விருச்சிகத்துடன் சேர்ந்திருக்கையில் ஸ்நானம் செய்தால் எல்லா விருப்பங்களும் கைகூடும். இந்நதி திரங்களில் வசிப்பவர்களுக்குச் சுவர்க்க லோகமும், பிரம லோகமும், விஷ்ணு லோகமும் உண்டாகும்.

7. தாமிரபரணி நதி 8. வேகவதி நதி :—பிரம பதவியைக் கொடுக்கும்.

TAMIL NADU ARCHIVES LIBRARY
No.
110946
MADRAS-600 008



6.A
9-101